# கமலாஸநி.

**KAMALASANI.**

ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

T. S. தியாகராஜ ஞானியார் பத்திராதிபர்.    T. S. Thiyagaraja Gnaniyar EDITOR.

புத்தகம் 3 | திருவாரூர் ஆனந்தவருஷ மார்கழிமீ | சஞ்சிகை 1

VOL 3 | JANUARY 1915. | No. 1.


## * தாயுமானாரும், அவரது கொள்கையும்.

வாயுமாணவ மலமும் மறுப்பிறப்புள் தொறவறத்தான் மாறவீசி
ஆயும் வேதாகமத்தின் அருள்வலியாற் சிவஞான ஆழிமூழ்கி
பாயுமால் விடைப்பரமன் இருவியலும் பார்த்துணர்ந்து பக்திஞென்றுள்
தாயுமானவன்றன் இருசரணமலர்ச்சிரம தணிற்றரித்து வாழ்வாம்.

புராதன மெய்ச் சிவஞானபோதமெனுஞ் சித்தாந்தப்பொருள் யாவும்
தராசுமுனையா நிறுவிச்சாயாமல் அனுபவத்திற் றமிழைப்பாடி
பரான சிவமயமாகிப் பரஞானத்தனிமை நெறிப்பரிமேலேறி
நிராமய தேயத்தேகி நிறைதாயுமானவனை நினைந்து வெல்வாம்.

ஈண்டு வணக்கங்கூறிய பாசுரங்களினாலே ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகள், சுத்தாத்வைதமென்று பெரியோர்களால் மேன்மையாகக் கொள்ளப்பட்ட சுத்த சைவ சித்தாந்தியே என்பது அறிவுடையார் பலரும் அறியும் விஷயமே. தாயுமான சுவாமிகள் சுத்த சைவ சித்தாந்தியாய் ஸ்வாநுபவம் வாய்ந்த பெரியோராதலின், இதரமதக் கோட்பாடுகளை மறுக்காது எம்மதத்தினரும் ஸ்வாமிகளது திருப்பாடல்களைத் தம்மதத்திற்கேற்பப் பொருள் கொண்டு போற்றுமாறு அருளிச் செய்வாராயினர். ஈண்டு ஸ்வாமிகளது ஸ்தூலசரீர ஜனனபரம்பரையைக்கொண்டும், ஞானோபதேசாசாரிய பரம்பரையைக்கொண்டும், ஸ்வாமிகள் அருளியுள்ள குருமரபின் வணக்கப் பாசுரங்களைக்கொண்டும், ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்துள்ள திருப்பாடல்களில் திரு

---

* இஃது [illegible] இந்துமதாபிமானசங்க வருடோத்ஸவத்தில் வாசிக்கப்பட்டது.

162013

நெறித்தமிழ் வேதமோதிய பாசுரங்கள் மேற் கோள்களாக வருதல் பற்றியும் பாடல்களின் உள்ளுறைப் பொருள்களைக் கொண்டும் ஸ்வாமிகள் புனிதமெனும் அத்துவித சுத்த சைவ சித்தாந்தியே என்பது விளக்கப்பெறும்.

முதற்கண் ஸ்வாமிகளது ஸ்தூல சரீர ஜனன பரம்பரையைச் சரித்திரமெழுதப் புகுந்தார் பலரும், வேதாரண்யத்தில் வேளாளர் மரபில் சிவஸ்தல விசாரணை செய்துவந்த உழுவித்துண்போராகிய கேடிலியப்ப பிள்ளையின் த்விதீய குமாரராக அவதரித்தவர்கள் என்று மாத்திரம் கூறியருளினார்களேயன்றி ஏனைய விபரங்களைக்காட்டாது விடுத்தமைக்குக் காரணமறியேன். ஸ்வாமிகள் திருமறைக்காட்டில் வேதாமிர்த தீர்த்தத்திற்குப்போகும் மார்க்கங்களில் இப்போதும் அவர் ஞாதி பரம்பரையினராயும் சிவஸ்தல விசாரணையுடையவராயும் இருக்கும் ஸ்ரீமான், அப்பாக்குட்டியாபிள்ளையவர்கள் கிரகமே இவர்களது புராதன இருப்பிடமாகும். இது வெற்றுரையன்று. ஆனால் அதன் ஆதாரங்கள்பல இப்போதும் மேற்கூறிய பிள்ளையவர்களிடமிருக்கின்றன. அவை அச்சிடப்பெறாத தாயுமானவர் புராணம் செப்புப்பட்டயம் முதலியவற்றால் நன்கு விளங்கும்.

சுவாமிகள் மரபினர் பரம்பரைச் சுத்த சைவர்களாயிருத்தலின், சுவாமிகளும் சுத்த சைவர் என்பது தெற்றென விளங்குகின்றது. சுவாமிகளது தேக பிதாவின் பெயரின் சொற்பொருளை ஆராயுமிடத்தும் ஸ்வாமிகளடைந்த உயர்ந்த ஞானங்களுக்கு ஹேதுவாகக் காணப்படுகின்றது.

எங்ஙனமெனில் கேடிலியாகிய சுவாமிகளுக்கு அப்பன் எனவும், கேடிலியாகிய அப்பனுக்குச் சுவாமிகள் அவதாரம் செய்தாரென்பதும் பெறப்படும். கேடிலியாகிய சுவாமிகள் என்றது உலகத்தில் எடுத்த சரீரத்து பெந்த பாசங்களிலகப்படாது சிவப்பேற்றையடைந்தும், நம்மனோர் நன்மையடைவதற்கு ஹேதுவாகிய திருப்பாடல்களையருளிச்செய்தும் விளங்கினமையாம். இத்தகைய அருமை வாய்ந்த சுவாமிகளையும் சுவாமிகளது பாடல்களையும் யாவரும் போற்றுவது காண்க.



“மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னுஞ்சொல்” என்ற குறளுக்கு ஒப்ப முடிந்துளது. அப்பனுக்குக் கேடிலியென்னுஞ் சொற்றொடரை அடையாகக் கொடுத்திருப்பது இப்பெரியோரைப் புதல்வராகப்பெறும் பூர்வ புண்ணிய விசேடமுடையார் என்பதாம். இத்தவப்பெரியாரைத் தம் அருமைப் புதல்வராகக்கொண்டு உலகு உஜ்ஜீவிக்கச் செய்வாரென்று வருங்கால நிலைமையை முன்னரே யாவருமெளிதிலறிதற்பொருட்டே இவரது முன்னோர்கள் இவருக்கு இப்பெயரிட்டு வழங்கினர் போலும். சுவாமிகளது மரபு வேளாளர்களுள் உழுவித்துண்போர் என்றது சுத்த சைவரென்னுஞ் சிறப்பைக்குறிக்கும். வேளாளருக்குப் பிள்ளை என்னும் காரணம் காரண ஆகுபெயரெனக் கொள்க.

இறைவனிடத்து இருநாழிகை நெல் பெற்ற காமாக்ஷி அம்மையார் அதனை விருத்தி செய்தற்குரியார் இவ்வேளாளரே யெனக்கொண்டு, பிள்ளையென்றழைத்தமையால் வந்ததெனக் காரணங்கொள்க. அது “உள்ளங் குழைந்தாய் உழவாற் பெருக்க விதைப்பிள்ளையெனக் கூயுதவப் பேணுங்கை” என்று கம்பரியற்றிய திருக்கை வழக்கநூற்பாசுரத்தாலறியலாம்.

இனி ஞானாசாரிய பரம்பரையைப்பற்றி எடுத்துக்கொள்ளுமிடத்து மந்தர குருவே யோக தந்தர குருவே, மூலன் மரபில் வரு மௌன குருவே என்று சுவாமிகள் கூறியிருக்கின்ற குரு வணக்கத்தில் பிரயோகமிருப்பதால் திருமூலநாயனார் மரபில் வந்த மௌனகுருதேசிகர் என்பவர் ஸ்வாமிகளது ஆசாரியர்களெனக் கூறுகின்றார்கள் ஒரு சாரார்.

மற்றோர் சாரார் ஸ்வாமிகள் நீண்டகாலம் வசித்த திரிசிராமலையிலுள்ள மௌனகுரு மடம் தற்காலம் திருக்கைலாய பரம்பரை தருமபுர வாதீனத்துட்பட்டிருப்பதாலும், குரு மரபு சொல்லவந்த விடத்து கல்லாலடிக்கீழரசாம் ஸ்ரீ கண்ட பரமசிவன் முதல், சனற் குமாரர் பரம்பரையிலுள்ள மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர்களுக்கு வணக்கங் கூறியதன்

பிறகு மௌனகுரு வணக்கங் கூறியிருப்பதாலும் மூலனென்னுஞ் சொல்லுக்குச் சிவபெருமானே எனப்பொருள்கொண்டு, தருமபுர வாதீனத்தில் எழுந்தருளியிருந்த மௌனகுருவென்றும், சொர்க்கபுரம் ஆதீனம் ஆதிகுரு மூர்த்தமாகிய அழகிய திருச்சிற்றம்பல தேசிக ஸ்வாமிகளுக்கு உபதேசித்தது ஷ மௌனகுரு மூர்த்திகளாய் இருப்பதுகொண்டு, இருவர் காலமும் ஒன்றெனக்கொண்டும், சனற்குமார பரம்பரை என்பது தருமபுர ஆதீனத்துக்குரித்தெனக்கொண்டு வழங்குவதாலும் சுவாமிகளுக்கு உபதேசஞ்செய்த மௌனகுருவை தருமபுர வாதீனஞ்சேர்ந்த பெரியோர் என்று கொண்டு கூறுவார்களுமுண்டு. இதற்கு இன்னும் போதிய பண்டை நூல்கொண்டு ஆராய்ச்சி செய்து முடிபு கூறவேண்டியிருத்தலின் ஈண்டு முடிபொன்றுங்கூறாது, இவர் இவ்விரு வகையில் எவ்வகையினராயிருப்பினும் ஸ்வாமிகளது ஆசிரியர் சுத்த சைவ சித்தாந்தியே என்பது மட்டும் கூறுவாம்.

முனி ஸ்வாமிகளது பாசுரங்களில் தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்கள் பிரயோகித்திருத்தலை அறிஞருரை கண்ணியில் "இரு நிலனாய்த்தீயாகி என்ற திருப்பாட்டில் பொருள் நிலையைக் கண்டறிந்து பேச்சறுவதெந் நாளோ" என்பது முதலாகப் பல பாசுரங்கள்மேற் கோள்களாகக்காட்டியும், மெய்கண்ட சாத்திரத்தில் ஒன்றாகிய இருபா இருபஃதிலுள்ள "உற்றவர் பெற்றவர் சுற்றவர் முற்றும் என்ற பரிசயத்தைப் பிறிதொன்றிலாசையின்றிப்பெற்றிருந்தேன் என்ற நெறியுடையான் சொல்லின் நிலைநிற்கும் நாள் எந்நாளோ" எனக்கூறியிருத்தலானும், மௌனகுரு வணக்கத்தில் ஐந்து வகையாகின்ற என்னும் பாசுரத்தில் "சிந்தையற நில்லென்று சும்மாவிருத்தி" என்றது முதலாக ஆரம்பித்து "எந்தை வடவாற் பரமகுரு வாழ்க வாழ்வருளிய நந்திமரபு வாழ்க" என்று கூறி முடிவில் "வீறு சிவஞான நெறி மௌனோபதேச குருவே" என்று கூறியிருத்தலால் சிவஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த சாத்திரத்தையுபதேசித்திருப்பதாகத் தொனிப்பதாலும் நமது ஸ்வாமிகள் சைவ சித்தாந்தியே என்று விளங்குறது.



இனி ஸ்வாமிகளது பாசுரங்களில் உள்ளுறைப்பொருள் சில காட்டி நிறுவுவேன். "பன்முகச் சமய நெறி படைத்தவரும்" என்ற செய்யுளில் யாங்களே கடவுள் என்ற பாதகத்தவரும் என்று மாயாவாதிகளைக்கண்டித்தும் வாத தர்க்கமிடு படிற்றறும் தலைவணங்கிட வேறுசில மதத்தினர்களைக்கண்டித்தும் தன் முகத்தினுயிர் வரவழைக்கும் எமதருமனும் பகடு மேய்க்கியாய்த்தனியிருப்ப என்றதனால், யாவரையும் அடக்கு மாற்றல் பெற்ற எமனையும் அடக்கும் ஆற்றலைக்குறிப்பிடுதலால் அது முற்றறிவுடைய முழுமுதற் கடவுளாகிய, சுத்த சிவத்துக்கேயுள்ளதென்பதும் "வடநீழலூடு வளர் சனகாதி முனிவோர் கடம்சொன்மயக்கமதுதீர, அங்கைகொடு மோனஞான முணர்த்திய என்றதால்" சிவஞான போத உபதேச முனிவர்களுக்கு அருளிய சைவ சித்தாந்த மரபின் முறையைக் கூறியிருப்பதாலும், சுத்த நித்தவருள் வியப்பதாக உள சோமசேகரக்ருபாலுவாய் "தென் முகத்தின் முகமாயிருந்த கொலு எம்முகத்தினும் வணங்குவேன்" என்றதனால், சிவபெருமானது அகண்ட பரிபூரண, சுத்த ஷாட்குண்ணிய ஸ்வரூப லக்ஷணங்களை, சைவாகம முறைப்படி கூறியிருப்பது, முதலிய பல அரிய உள்ளுறைப்பொருள்களாலும் சைவ சித்தாந்தியே என்று விளங்கா நின்றது.

பின்னும் ஸ்வாமிகள் குரு மரபு வணக்கத்து "பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித மெய்கண்ட நாதனருள் மேவுநாள் என்னாளோ" என்ற பாசுரத்துள் புனிதமெனு மத்துவிதம் என்று சுத்த சைவ சித்தாந்தத்தைக் கூறியிருப்பதால் உய்த்துணர்வார்க்குச் சைவ சித்தாந்தியே என்பது பெறப்படும்.

இன்னும் பல அரிய விஷயங்களுமுள்ளன. ஆனால் அவையெல்லாம் ஏகாக்ர மனத்துடன் நின்றவிடத்துத் திருவருளுணர்ந்த உணரும் விஷயமாம்.

அவ்வாறாயினும் சில விஷயங்கள் திருவருளுணர்த்த அடியேனது சிற்றறிவுக்கெட்டியதால், அதனையீண்டு தெரிவிக்கின் அறிவுடையார் அங்கீகரிப்பார்களென்பதுகோறிநிறுத்துவேன்.

"சிதம்பர ரகசியத்தை ஆராயுமிடத்து ஆகாரபுவன மின்பாகாரகமாக" என்ற பாசுரத்திலும், அனந்தபத உயிர் கடோறும், உயிரா யென்றும்" என்ற பாசுரத்திலும் "பேறனைத்தும் அணுவெலவேயுதறித்தள்ள என்ற பாசுரத்தும்" பதியுண்மையினையும், அப்பதி உயிர்களோடு இரண்டறக்கலந்துள்ள தன்மையினையும் விளக்கப்பட்டுள்ளன.

இன்னும் "வந்தெனுடல் பொருள் ஆவி" மூன்றுள் தன் கைவசமெனவே என்ற பாசுரத்தில் ஆன்ம இலக்கணத்தை விரிவாய்க்கூறி இருக்கிறது காண்க. "ஒருவனவன்"என்ற பாசுரத்துள், அருளுடைய பரமென்றே அன்றுதானே யானுளன் என்று, முனக்கே ஆணவாதிப் பெருகு வினைக்கட்டென்றும் என்னுற் காட்டிப்பேசியதன்றே. அருள்நூல் பேசிற்றென்றே என்பதால், பசுபதி பாசமாகிய, திரிபதார்த்த நிச்சயம் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது "இல்லை யில்லை என்னினென்றுமில்லதல்ல" என்னும் பாசுரத்துள் சைவசித்தாந்தப்படி முத்தியிலும், மும்முதலும் உண்டென்பதை வலியுறுத்துவதற்கு வீடுபேற்றிலும் சுத்தமாயை யுண்டென்பதைத் தெரிவிக்கின்றது.

"சைவசமயமே சமயம் வேறுபடுஞ் சமயமெல்லாம்" இயல்பென்றும் முதற் குறியுடைய பாசுரங்கள் சைவசமயத்தின் பெருமையைத் தெளிவாயுணர்த்துகின்றன.

"தேன்பலிற்று என்னும் பாசுரமுதல் அல்லலான் தொழில் படைத்தே என்றவரை சிவனே கடவுள் என்பதை வலியுறுத்துகின்றது. மேற்போந்த செய்யுட்களாலே, சைவசித்தாந்தத்தினுண்மையினை திரிபதார்த்த நிச்சயத்தினும், எல்லாச் சமயங்கட்கும் தாயகமாய் விளங்கும், சைவ சமயமே மெய்ச் சமயமெனக் கூறியவாற்றானும், முத்தியிலும் மும்முதலுண்டென மொழிந்தமையானும் இனிது விளக்கியுள்ளார்கள்.

இவைகளினாலே இவர் சைவசிததாந்தியே என்பது விளங்குகிறது.

முடிவுரையாக எண்டெடுத்துக் கொண்டது "தாயுமானவரும், அவரது கொள்கையும் என்பதும், ஸ்வாமிகளது சரித்திர



வாரர்ய்ச்சியில் வேதாரண்யத்திலே வேளாளருள் உழுவித்துண்போர் குலத்துள் அவதாரம் செய்தவர்கள் என்பதும், ஸ்வாமிகளுக்கு உப்தேசிக்கப்பட்டது. சிவக்ஞான சித்தியார் என்பதும் ஸ்வாமிகளது ஆச்சார்ய பரம்பரை புனிதமெனும் அத்துவித மெய்கண்டார் வழித்தோன்றலான மௌனகுரு வென்பதும், ஸ்வாமிகள் அனுட்டித்த மார்க்கம், சுத்தசைவ சித்தாந்தமே என்பதும் பிறவுந்தெற்றன விளங்கலின் ஸ்வாமிகள் சுத்த சைவ சித்தாந்தியே என்பதை எனது சிற்றறிவுக்கெட்டியமட்டுங் கூறினேன், அறிவுடையார் அவரவர்களது ஆற்றலுக்கேற்றவாறு அங்கீகரிக்க விரும்புகிறேன்.

பத்திராதிபர்.

---

## * இறப்பதற்கா பிறந்திருப்பது?

(அக நோக்கு.)

"மரிப்பதற்கென்று நீ பிறந்திருப்பாயா? அங்ஙனமாயின் இப்பிறவியின் காரணம் பயனற்றதென்றும் பொழுதுபோக்கென்றும், எண்ணப்படல் வேண்டும்" (புத்தர்)

காணப்படுகிற ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு விதமாக, ஒன்றைப்போல மற்றொன்றிராமல், ஆக்கப்பட்டிருப்பது நம்மநுபவமாம்.

ஓர் மரத்தினோர் கிளையின், ஓர் பாகத்தில் ஓர் இணுக்கிலுறும், ஓர் இலையைப்போன்று, இவ்வுலகத்திலுள்ள அதே வகுப்புள்ள மரங்களின், ஓரிலைகூட உற்றுநோக்கின் இராதென்பது ஒஷதி சாஸ்திரிகளின் அநுபவப் பிரமாணமாம்.

பற்பல விதமாய் வகுக்கப்பெற்ற பற்பல தோற்றப்பொருள்கள், அவ்வவற்றின் தோற்றத்தையுணருமாறு, பற்பல பாகுபாடுகளுடன், குணபேதங்களாய் இயற்கையமைப்பில் விளக்க முறுகின்றன.

* தமிழ்ப் பண்டிதர் பிரசங்கமாரி சொர்னம் பிள்ளையவர்களால் எழுதப்பட்டுவரும் "சொர்ன மொழிகள்" என்னும் சிறு நூலின் ஓர் பகுதியின் ஓர் பிரிவு.

இயல்பாகவே, இந்நுட்பம் அறியவேண்டுமென்று மனிதனது, முன்னேற்றத்தினுக்குரிய நோக்கங்கள் தூண்டுகின்றன.

தோற்றப்பட்ட எப்பொருள்களும் அவற்றின் நன்மையைக்குறித்து சிருஷ்டிக்கப் பட்டிருக்கவேண்டும். அல்லது அவற்றின் காரணமாயிருப்பது எதுவோ அதன் நன்மைக்கென்று சிருஷ்டிக்கப்பட்டிருக்கவேண்டும்; இது பிரகிருத மனோதத்துவ நூலாரின் ஒப்பிய கொள்கையாம்.

சிறிய சட்டிவம் தன்னைச் செய்தவனது நன்மையைக் குறித்து உண்டு பண்ணப்பட்டிருப்பதும், அகம் புறம் உற்று நோக்கும், தன்மை வாய்ந்த மனிதன் தன் நன்மைக்கென்றே உண்டு பண்ணப்பட்டிருப்பதும் உணரத்தக்கதாகும்

நிலைபெற்ற உண்மையான இன்பம் அடையவே நாம் தோன்றியிருக்கிறோம். ஓ இராகுல! இதை உணர்வாயாக! (புத்தர்)

வியாபாரஞ் செய்யும் வணிகனொருவனது பிரதிநிதியானவன், அவ்வணிகனது பொருளைக் கண்காணித்து அவன் வியாபார வரவு செலவை நடத்தக் கடமைப்பட்டவனேயன்றி, அதில் விளையும் ஆக்க அழிவுகளை அநுபவிக்கக் கடமைப்பட்டவனல்லன். இது உலக வியல்பு. ஒருக்கால் அப்பொருள்களை தனதென்றே அப்பிரதிநிதி நினைத்து, அதை நடத்திவரினும், உண்மையில் அதன் ஆக்க அழிவுகள் அவனுக்குரிய என்பது சொன்மாத்திரையேயன்றி செய்கையில் அவனுடையதாகாமல், அத்தலைவனுடையதாகின்றன.

அவ்வாறு உலகில் இயங்கியல் பொருளாகிய நாம் ஓர் இறைவனால் உண்டு பண்ணப்பட்டு, அவன் விதி வழியொழுகக்கடமைப்பட்டவராயிருப்பின், அதன் பயனாக உலகவொழுக்கத்தில் விளையும், ஆக்க அழிவுகள் நம்முடையவாகாமல் இருக்கவேண்டும். ஏன்? ஓர் தலைவனின் விதி வழியொழுகும், உரிமையைப் பெற்றவரை, ஓர் வினையின் பயன், (அவர் தலைவனை அணுகாது) சென்றடைதல் ஒவ்வாதாகும். அங்ஙனமாயின் அது நம்மநுபவ முதிர்ச்சிக்கும் நன்மை தீமையின் பயனுக்கும் ஏற்பப்பெறுதல் பயனற்றதாகும்.

ஆயின் உலக இயற்கையில் இவ்வியல் மாறுதலடைகின்றது. அது நம்மவர் அநுபவமே ஆதலின் மற்றோர் நியாயம் பற்றிப் புகுவாம். "உனக்குத்தலைவன் நீயே மற்றப்படி எவர் உனக்குத் தலைவனாக இருக்கமுடியும்" என்பது. (தர்மபதம் புத்தர்)



இதனால் நமது ஆக்க அழிவுகளுக்கு நாமே காரணர் என்பது தெற்றெனப் புலப்படும் ஒவ்வொன்றும் நம்மால் நமது நன்மைக்கென்றே பிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உனக்கு நீயே மித்திரு; உனக்கு நீயே சத்துரு; ஏன் மற்றவர் உனக்கு இயற்றும் தன்மையராவர். (கீதை)

மனிதன் பராதீனப்பட்டவனல்லன்........சுயாதீன முள்ளவன், தன் சுயாதீன மனதைச் செலுத்தித் தன் கருமங்களைத் தானே ஒழுங்கு பெறச் செய்விக்கக்கூடும் (ஸ்மைஸ்)

இதனால் நீ நன்னெறியைக் கைப்பற்றி அதன் வழியொழுகுதலே முதலாவதான கடமை என்று உணர்; எண்ணிய முயற்சிக்கின் சிந்திப்பதற்குத் தடையாது மில்லை. எண்ணிய எண்ணியாங் கெய்துப (குறள்) நிற்க, உலக இயல்பில் எவரும் எவ்விதமாயாவது இன்பம் அடையவேண்டும் எனவும், துன்பம் அடையப்படாதெனவும் விரும்புவது மறுக்கத்தகாத உண்மையே யாதலின், இன்பம் எதனால் உண்டாகலாம்? நன்னெறி யுன்னி அவ்வழி யொழுகின், அதன் பயனாக நன்மை தோன்றி அதன் காரியமாய் இன்பம் விளைகின்றது. தீ நெறி யுன்னி அவ்வாறே யொழுகின், தீமை தோன்றி அதன் காரியமாய் துன்பம் விளைகின்றது.

அற்றாயின், சில முதலில் நன்மையாய்த்தோன்றி, யிறுதியில் துன்பத்தையே விளைவிக்கின்றது. சில முதலில் தீமையைப் போறறோன்றி இன்பத்தை யிறுதியில் அளிக்கின்றனவே இதன் காரணம் என்ன?

துன்பமும் இன்பமும் ஓர் தோற்றத்தினால் நிதானிக்கத் தக்கனவல்ல; அவை வினையின் பயனைப் பொறுத்து நிற்கின்றன; அவற்றை வைத்தே முதலில் தோன்றியவற்றை நிதானிக்கவேண்டும். உண்மை உணர்வும் இதுவே (பித்தாகிரஸ்)

இதனால் தோற்றத்தில் நேர்மையாக நின்று நேர் வழியாக இயங்கும் அம்பு, அதன் பயனை நோக்கி நன்மையன்றெனத் தீர்மானிக்கத்தக்கதென்றும், தோற்றத்தில் நேர்மையல்லாமல் தோற்றும் வீணை அதன் பயனை நோக்கி நன்மையன்றெனத் தீர்மானிக்கத்தக்கதன்றென்றும், பகுத்துக்காண்டல் நீதிநூலோர் முறையாகும்.

இதனால் ஓர் பொருளின் உண்மையையறிந்து அதற்கு முயர்ச்சித்தலொழிய, என்றும் அழியாத இன்பமானது, வினையின் பயனாக விளையும், நன்மையினின்றும் எழமாட்டா

தென்பது நன்கு புலனாகும். உண்மையை அறியாவிட்டது துன்பமே அனுபவிக்கவேண்டுமென்பதும் தெரியலாகும்.

ஆதலின் நன்னெறி முயலல் நங்கடமையாகின்றது. ஆயின் உலக இயற்கையானது, அவனவன் உள்ளப் பாங்கினுக்கேற்ப, விரும்பிய வண்ணம் செய்து வைப்பதில் எவர்க்கும் கட்டுணையும் ஐயமின்றாம். ஆதலால் தனக்குத்தானே தீமையைப்பயக்கும் வினையை முன்னரே தடுத்துக்கொள்ளல் வேண்டும்.

"என்னைத்தவிர வேறொன்றும் எனக்குத் தீங்கு பயவாது; என்னிடமுள்ள தீங்கை என்னுடன் நிகழ்விக்கின்றேன்; என் சொந்தக் குற்றத்தாலன்றி பிறவாற்றால் நான் ஒருக்காலும் துன்பமடையேன்" என்ற மகானாகிய "செண்ட் பெர்நாட்" என்பவர் கூற்றே தக்க சான்றாகும்.

நெறி சான்றாகும் உள்ளம் ஒழுங்காயின் இறுதியில் பெறப்படுவது வெற்றியே; அதுவே பூணும் ஆபரணம்.

எவ்விதம் இருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேனோ அவ்விதம் இருக்கிறேன் (பைபில்)

இது நிற்க, வினைப்பயனை முன்னுணர்தல் நம்மால் இயலாத காரியமாயிருக்கின்றதே! நன்மைக்கென்ற தீர்மான புத்தியுடன் நினைத்து ஒன்றையியற்றினும், அதற்கு நேர் விரோதமாகப் பயன் விளைவதாகின்றது. இது ஒவ்வொருவரும் அவரவரே உலக இயற்கையில் தினமும் கண் கூடாகக்கண்டது.

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும் (ஔவை)

அங்ஙனமாயின், எங்ஙனம் ஒன்று மற்றொன்றாக மாறுதலடைவது? ஒரு வினையின் பயன் அவ்வினைத்தொடக்கத்தில் தோற்றுமாறு எங்ஙனம்?

இன்பமும் துன்பமும் ஒரே பொக்கிஷத்திலிருந்து வருவதல்ல; அடைபவன் ஒருவனே; அவன் மனச்சான்று இரண்டினும் ஒரே இயல்பாய்த்தோன்றுவதை நீ யுணருக; அதுவே உனக்கு ஊன்றுகோல் (பிளாட்டோ)

பின்னும் மற்றோர் காரணமும் ஆராய்வோம்; நன்மையின் பயன் அவ்வினையின் முடிவில்தான் உணரப்படுகிறது; அதன் முன் உணர்தல் எற்றினுக்கு? நேர்மையைச்செய்யின் அகத்தில் சந்தோஷமும். திருப்தியும் எப்பொழுதும் ஒரே மாதிரியாய் நிகழ்கின்றன.



மனதிற்கு நன்மையன்றெனத்தெரிந்ததை ஒருவன் அறிந்தும், இயற்றற்கு இசைந்தும், முடிவில் அவ்வினையின் பயன் நன்மையாகவே தோன்றினும், அதைச்செய்தவன் இருதயத்தில் அதைப்பற்றிய உண்மையான மகிழ்ச்சி உண்டாகின்றதா? பிறர்தான் அப்பயனைப்பற்றியும், அவன் பற்றிய நெறியைப் பற்றியும், எவ்விதம் மதிப்பிடுவர்? மனச்சான்றினுக்கு நேர்மையானதைச்செய்து, முடிவில் அதன் பயன் கெடுதியாய் முடியினும், மற்றோர் "இவன் உயர்ந்ததை உள்ளி கடிந்ததை ஓரீஇ இதைப்புரிந்தான்" என்று செய்தானைப் பழிக்காது, அவன் நேர்மைக்கு வியந்து கொண்டாடுவதுடன், அவனுக்கும் தன் மனசில் ஒருவித குதூகலமும், மனதில் பதைபதைப்பின்மையும் தோன்றுதல அநுபவசித்தமே.

"கடிந்த செய்தார்க்கு அவை தாம் முடிந்தாலும் பீழை தரும்" (குறள்)

இதனால் வல்லாததைச்செய்து ஆக்கம்பெற்றும், உண்மையான சந்தோஷமும் மதிப்பும்பெற இயலாதிருக்கிறான் என்பது புலனாகின்றது.

அவன் மன நேர்மையைப்பற்றியதே அவன் உண்மையான இன்பம். அவ்வின்பத்தினால் மனமகிழ்ச்சியுண்டாகின்றது. திருப்தியினால் சாந்தியடைகிறான்.

பரிபூரணமான மன மகிழ்ச்சியும், சந்தோஷமும், சாந்தியுமே இப்பிறவியில் நாம் அடையும் பயன்; சந்தோஷமில்லாதவன், மகா துக்கமுற்றவன்; பரிதபிக்கத்தக்கவன் (புத்தர்)

அதுமட்டோ? பிறர் பழிச்சொல் கூறுவது எதை நோக்கி? பொறியின்மை யார்க்கும் பழியன்றே.

இந்தப்பழியை நீக்கி விடுவதற்கே நன்னெறி வேண்டுவது; அதைக்கைப்பிடித்தலே வீட்டின்பத்தின் பேற்றைப் பெறுவதற்குச் சாதனமாகின்றது.

நேர்மையற்றதைச் செய்பவன் அதன் பயனைச்சுமப்பான். நேர்மையுற்றதும் அங்ஙனம். உன்னை நம்பி ஒன்றைக் கைகொள்ளுதலே இவற்றின் காரணமாம்; தன்னை நம்பி உணர்ந்து ஒன்றைப் பார்ப்பதே மனச்சாக்ஷியை மேலுக்கு விடுதற்கு தக்க உபாயமாகும். தன்னைத் தானென நம்பாதவன் இயற்கையில் மனிதனல்லன்; நன்னெறியினுடைய அடிச்சுவடையும்

பற்றாத பாவியாகின்றனன்; முதலில் "உன்னையே நீ நம்பாதொழியின் மற்றவர் உன்னை எங்ஙனம் நம்புவர்? உன்னை மதிப்பிடுவதும் எங்ஙனம்"? (ஸ்மைஸ்)

உன்னை நம்பி உணர்ந்து நீ பிறந்திருக்கும் உண்மையின் நிலையைத்தேடு. அது எளிதில் சித்திக்கும் "கூப்பிடுங்கள் கேட்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்" (பைபில்)

நீ பிறந்திருப்பது சஞ்சலப்பட்டு துன்பமெய்துவதற்கல்ல; "உண்மையான மனசந்தோஷத்தையடையும் பொருட்டும், அதற்கு முதல் காரணமாகிய தூய்மையைக் கைக்கொண்டு அதன்வழி உயர் நிலையடைதற் பொருட்டுமேயாம்" (புத்தர்)

அத்தூய்மை உன் மனக்கிளர்ச்சியின் பரிபக்குவமாம்.

தீயவழியில் கிளர்ச்சியுண்டாதலும் இயற்கையாதலின், அது கடைபோகாது, ஒன்றுடனொன்றெதிர்த்த சம்பவம் வாய்ந்த, "ஆட்டுக்கடா போன்று ஒன்றுடனொன்று பட்டொழிகின்றது; "அதன் பயன் அதன் தலையில் இருக்கிறது" (எபிக்டெட்ஸ்)

ஆனால் நேர்மையானதற்கோ; தக்க உபபலன்கள் இயற்கையில பல இடங்களினின்றும் பற்பலவிதமாய் வந்து இணைகின்றன; முடிவிலும் மட்டற்ற பேரானந்தம் விளைகின்றது. அதுவும் உன்னாலேயே உண்டு பண்ணப்பட்ட நல்லூக்கமே.

பெருமையும் சிறுமையும் தான்தர வருமாதலின், மேன்மையடைவதற்கு உன்னை நம்பி இறங்குவதே முதற்படி; உன் மனம் இருபாற் கவர்வுற்று, இடையூசலாடி, யொருபார் யாது நிற்பின், அந்நிலைக்கும் உனக்கும் வெகுதூரமென்பதை நீ உணர்.

முன் கூறியவாறு மனக்கிளர்ச்சியே சித்தப்பண்பை உண்டாக்கவல்லது; சித்தப்பண்பே மேனிலைக்கும் ஏற்றும் கருவி.

கல்வி ஞானமும், கல்வி உணர்ச்சியும் இதற்குப் பயன்படமாட்டாது.

கல்வியுணர்ச்சியன்று நாம் வேண்டுவது நல்ல ஒழுக்கமே; நன் மனமேயன்றி மூளை பலமன்று; பகுத்தறிவால் பண்பட்ட மன அடக்கம் பொறுமை இவையன்றி யூகமன்று (ஸ்மைஸ்)



சித்தப்பண்பின் முதிர்ச்சியினால் யாவர்மாட்டும் கருணை, எதிலும் சத்தியம், எப்பொழுதும் சாந்தம் இவை சித்திக்கின்றன.

நீ எதிர்பார்த்த படியேப் பற்பல மாறுதலினின்றும், மேனோக்கி உயர்ந்த படியையடைந்த உத்தமனாகின்றாய்.

இதில்தான் சகலவித சித்தியும், மனோ உல்லாசச் செய்கைகளும், சாந்தியாக வேண்டியதற்குத் தக்க திருப்தியும் விளைக்கின்றன.

விளக்கினிடத்து நாம் வேண்டுமென்று எதிர் பார்த்தது ஒளி ஒன்றே. ஆயின் அத்துடன் சூடும் அபின்னமாய் இணைந்து தோற்றுவதுபோல், சகல சித்திகளும் சாந்தத்தினால் உண்டாகின்றன.

நாம், நினைத்தவை நினைத்தபடியே நிறைவேற வேண்டுமென்று ஆரம்பத்தில் விரும்பிய நிலை இப்பொழுதுதான் பலிதமாயிற்று.

பின் நாம் பல்லாண்டு ஜீவித்திருக்கவேண்டினும் அதுவும் முற்றுப் பெருகின்றது. தன்னுள்ளே தன்னை முற்றிலும் உணர்ந்து கண்டவன் அடைவதற்கு எது இடையூறு?

ஆயின் இதில் பலவித கஷ்டங்கள், வினை முற்றுப்பெறு முன்னர் தோன்றுவதனால், எதிர் பார்ப்பதற்கதிகமாய் அமைந்து துக்கம் உண்டாகின்றதே! இதன் காரணம் என்ன?

இஃதொருவிதப் போலித் தோற்றமேயாகும்; அத்துடன் கஷ்டமடைபவனை துக்கப்படுகின்றவனென்றெண்ணலாமா? கூடாதாம்; என்ன?

பகலில் தன் மெய் வருந்தத்தலையில் கடுஞ்சுமைகொண்டு போந்த ஓர் கூலியாளனுக்கு, அச்சுமையைப்பற்றிக் கஷ்டமுண்டாகின்றதேயன்றி மனதில் துக்கமுண்டாகின்றதில்லை; ஆனால் சந்தோஷமே அதற்கு மாறாக உண்டாகிறது:-ஏன்? குறிப்பிட்ட இடத்திற்கு தன் தலைச்சுமையைச் சேர்த்தவுடன் தான் எதிர் பார்த்ததற்கு இரண்டத்தனை கூலி தருவதாகச்சொல்லிய அச்சுமைக்கு உரியானது உடைமையாளனின் வார்த்தையை நினைத்து இடைக்கிடை தோன்றும் களிப்பினால்

மெய்யானது கஷ்டப்படலாம் வருத்த முறுவதனால்; ஆனால் மெய் வருத்தம் துக்கத்திற்குக் காரணம் இல்லை; இயற்

கையில் நேரும் கஷ்டத்தினால் மனப்பண்பு உண்டாதலே அதுவே, சுடச்சுட ஒளிவிடும் பொன்போன்று அகத்தை உண்மையான களிப்பால் துலக்கஞ் செய்விக்கின்றது. ஆகையால் கஷ்டமே இதற்குச்சாதனமும் ஆகின்றது.

ஆனால் தீயவைகளுக்கோ முற்கூறியதற்கு மாறான சந்தர்ப்பங்கள் ஆரம்பத்திலேயே தோன்றி முடிவில் தீமையான பயனையே அநுபவிக்கும்படி செய்விக்கும்.

“பாபத்தின் சம்பளமே மரணம்” (பைபில்)

பாவம் தீமையின் பயனாக விளைந்ததாம்; போக்கொடு வரவற்ற மற்ற நிலையடைவதற்கு நாம் பிறந்திருக்கிறோமாகையால் இயன்றவரை தீமையை ஒருவுதல் நன்மை.

“உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்”
“உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ” (குறள்)

அகநோக்கு முற்றிற்று.

[ புறநோக்கும் அகப்புறநோக்கும் பின்வரும் ]
தொடரும்

நச்சினார்க்கினியன்.

---

## சரளா மோகனசுந்தரி அல்லது
## மூன்று சகோதரிகள்.
(தொடர்ச்சி)

கற்பகத்துக்கு இரண்டாயிரம் ரூபாவும், அவளுடைய மூன்று புத்திரிகளுக்கும் தனித்தனியே இரண்டாயிரம் ரூபாவும் சிவானந்தம்பிள்ளை எழுதிவைத்துவிட்டே இறந்துபோனார். ஆனாலும் அந்தச்சொத்து அவர்களுக்குப்போதாதென்றும் இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்றும் குமாரசாமிபிள்ளைக்கு எண்ணம். இருந்தாலும் என்னசெய்வார் பாவம்! உயிலோ அவருடைய பேரப்பிள்ளையின் பேரால் எழுதப்பட்டிருக்கிறது. இவருக்குச்சொத்துக்களின் வருமானத்தைச் செலவுசெய்ய பாத்தியமுண்டேதவிர அவைகளைத் தம்மிஷ்டப்படி விநியோகிக்கப்பாத்தியமில்லை. தம்முடைய குமாரன் சிங்காரம்பிள்ளை பி. ஏ., பி. எல். பரீக்ஷை கொடுத்து வக்கீல் உத்தியோகஞ்செய்கிறபடியாலும், அதில் நல்ல வருமானம் வருகிறதென்றும் தம் புத்திரனுக்கு அதிகசொத்துவேண்டிய அவசியமில்லையென்று குமாரசாமிபிள்ளை கருதினார். மேலும் சிங்காரம்பிள்ளைக்குத்தன் பெண்ஜாதி மூலமாய்க் கிடைத்த சொத்து சுமார்



பதினாயிரம் ரூபாவுக்குமேல் இருக்கிறது. அவர் இங்கிலீஷ் படித்து பி. ஏ., பி. எல். பாஸ்கொடுத்திருப்பதால் பின்னொருகாலத்தில் கோர்ட்டுக்கு வரும் ஜீவராஜிகளிடமிருந்து அவர் நன்றாய்க்கறக்கக்கூடுமென்று நினைத்து ஆடுதுறை ஆனந்தத் தாண்டவப்பிள்ளை அவரைத் தன்மகளுக்குக்கணவனாகப்பதினாயிரம் ரூபா கொடுத்து வாங்கினார். ஆதலால் புத்திரனைப்பற்றிய கவலை குமாரசுவாமிப்பிள்ளைக்குக் கிடையாது தன்னுடைய இளையமனைவி கற்பகத்தைப்பற்றியும், அவளுடைய மூன்று புத்திரிகளைப்பற்றியுந்தான் அவருக்குக் கவலை அதிகம். இருந்தபோதிலும் மனதைத்திடப்படுத்திக்கொண்டு குடும்பச்செலவை மிகவும் சுருக்கிச் செட்டாய்க் குடித்தனம் செய்துவந்தார். இரண்டொரு வருஷங்களில் கையில் சிறிது பொருளும் சேர்ந்தது.

சிவானந்தம்பிள்ளை இறந்துபோன கொஞ்சநாள் கழித்து சிங்காரம் தம்முடைய மனைவி சகிதம் வக்கீல் உத்தியோகம் செய்வதற்காக மதுரைக்குப் போய்விட்டபடியால் சீர்காழியில் குமாரசுவாமிபிள்ளை படாடோபமாய் வீண் செலவு செய்யவேண்டியு அவசியமில்லாதிருந்தது. வழக்கம்போலவே குமரசுவாமிபிள்ளை அதிகாலையில் எழுந்து வயல்வெளியைச் சுற்றிப்பார்க்கச்சென்றவர் அன்றுதினம் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது ஏதோ ஓர் வகை மயக்கமாயிருக்கிறதென்று சொல்லிக் கீழே படுத்தார். அன்றே ஜுரம் கண்டது. இரண்டொரு நாளில் நோய் அதிகரித்தது. மதுரையிலிருக்கும் சிங்காரம் பிள்ளைக்கு ஆள் அனுப்பினார்கள். சிங்காரம்பிள்ளை மட்டும் புறப்பட்டு சீர்காழி வந்து சேர்ந்தார். குமாரசுவாமிபிள்ளைக்கு இனி பிழைக்கக்கூடுமென்னும் நம்பிக்கை போய்விட்டது. தன் புத்திரனுடைய கையைப்பிடித்துக்கொண்டு “நீ உன்னுடைய சிறியதாயார் கற்பகத்தையும் உன்னுடைய மூன்று சகோதரிகளையும் இனி வைத்துக் காப்பாற்றவேண்டும். அவர்களுக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுக்கவேண்டும். அவர்களைக்கண்கலங்கும்படி விட்டுவிடக்கூடாது இதுதான் நீ எனக்குச்செய்யவேண்டிய உபகாரம். நான் சொன்னபடியே செய்வதாக எனக்குச் சத்தியஞ் செய்துகொடு” என்று பரிவுடன் கேட்டார்.

அந்தியகாலத்தில் தம்முடைய தகப்பனார் மனதை சஞ்சலத்துக்கு உள்ளாக்கலாகாதென நினைத்துச் சிங்காரம் பிள்ளையும் அப்படியே சத்தியஞ்செய்து கொடுத்தார். சத்தியம்வாங்கிக்கொண்டபின்புதான் குமாரசுவாமிபிள்ளையின் சீவன் பிரிந்தது. சிங்காரம் பிள்ளை மிகவும் தயாளமான மனதுடையவர். தகப்பனார் வார்த்தையைத் தட்டமாட்டார். மேலும் தன்னுடைய சகோதரிகள் செல்வமாகவே வளர்ந்து வந்தபடியால் இனிமேல் அவர்கள் கண்ணைக் கசக்காமலிருக்கும்படியாகக்

கொஞ்சம் சொத்துகள் கொடுக்கவேண்டுமென நினைத்தார். தகப்பனார் இறந்த துக்கம் அவர்களுக்குத்தோன்றாதபடி என்னென்ன செய்யக் கூடுமோ அவைகளை எல்லாம செய்வதாகத் தீர்மானித்தார். தன்னுடைய மாற்றாந்தாய்க்கும் அவளுடைய மூன்று புத்திரிகளுக்கும் தனித் தனியே ஆயிரம் ரூபாய் கொடுக்கிறதெனத் தனக்குள்ளேயே முடிவுசெய்துகொண்டார்.

குமாரசாமிபிள்ளை இறந்துபோன அன்று தினம் மதுரையிலிருந்து குணவதி வரமுடியாமற் போனபோதிலும், அவள் தன் கைக்குழந்தை சகிதம் கருமாதிக்கு சீர்காழி வந்து சேர்ந்தாள்.

---

## இரண்டாம் அதிகாரம்.

## குணவதியின் மந்திரோபதேசம்.

"பெண்களைப்படைத்து நமனையும் ஏன் படைத்தாய்" என்று சொல்லப்படும் பழமொழி குணவதியை உத்தேசித்துத்தான இருக்க வேண்டும். இவளுக்குப் பெயர்மட்டும் குணவதி! ஆனால் இவளுடைய குணாதிசயங்களைப்பற்றிச சொல்லப்புகுந்தால் இதைப் படிப்பவர்கள் சிம்ம சொப்பனங் கண்டவர்களைப்போல் நடுங்குவார்கள். இவளுடைய குணத்துக்கும் இவள் கணவனாகிய சிதம்பரம் பிள்ளையின் குணத்துக்கும். இருளுக்கும் பகலுக்கும் எவ்வளவு வித்தியாசமுண்டோ அவ்வளவு வித்தியாசம் உண்டு. வானத்துக்கும் பூமிக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம் இவருடைய குணத்துக்கும் அவளுடைய குணத்துக்கும் என்று சொல்லலாம். சிதம்பரம் பிள்ளை மிகவும் தருமசிந்தை யுடையவர். குணவதியோ அறுத்த விரலுக்குச் சுண்ணாம்பு கொடுக்க மனமில்லாத அவ்வளவு தயாள குணமுடையவள். சிதம்பரம் பிள்ளை பேசுவது இரண்டாம் பேருக்குத் தெரியாது. இந்த புண்ணியவதி வாயைத்திறந்தால் எரிமலைகள் வாயைத்திறந்தது போலத்தான்! குணவதி சாதாரணமாய்ப் பேசினாலே பூமி நடுங்கும்; அண்டை அயலார் பூகம்பம் உண்டாகி விட்டதோ என்று அஞ்சுவார்கள்! அவளுக்குக்கோபம் வந்து விட்டாலோ............இதைவாசிக்கிற நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்! குணவதியின் நடைக்கு டில்லி மட்டத்தின் நடைகூட சமமாகாது! இவளுடைய குணத்தைப்பற்றி அதிகம் சொல்லுவானேன்? பொறாமைப் பொக்கிஷம், அபத்தக்களஞ்சியம், அகங்காரக்கோட்டை, செருக்குக்கு

(தொடரும்)

நாகை, ஸி. கோபாலகிருஷ்ண பிள்ளை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஞான சம்பந்த குருவே நம:

திருவாரூர்

# ஸ்ரீ சேதுபதி புத்தகசாலையின்

## முதல் வருட அறிக்கைப் பத்திரம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

பொன்னாட்டினு மிக்க நன்னாடெனப் புகழப்பெற்றதும், சோழ வளநாட்டிற் கணித்தாய்போன்று விளங்குவதும், விராட் புருடனுக்கு மூலாதார க்ஷேத்திரமானதும், பிறந்தவர் பிறவாப் பெரும்பதியாயுள்ளதும். ஸ்ரீ தியாகராஜப்பெருமான் சுந்தரனது பைந்தமிழ்ப்பாமாலைக் காவலுற்று, பரவையாருடலைத் தணிக்க நள்ளிரவில் இருமுறை தூது சென்றதுமாகிய, இவ்வாரூர் மாநகரின்கண், பேராற்றலும் பெருங்கருணையுமுடைய சிவபெருமான் திருவருட்டுணையால் 1913-ம் ஆண்டு மார்ச்சுமீ 15௳ ஸ்திரவார தினத்தன்று நாகை ஸ்ரீமான், ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள் விருப்பப்படி, டிஸ்டிரிக்ட்டு முன்சீப் மிஸ்டர் வி. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்களால் திறந்து, ஸ்தாபிக்கப்பெற்றதாகும். இச் சேதுபதி புத்தகசாலை. இனி மேற்போந்தமன்னர்திருநாமத்தால் இதனை ஸ்தாபிக்கக்காரணமென்னையெனின்,

மாநிலம் புரக்கும் மன்னர் சிகாமணியாய் உலகத்தவர்க்கு ஞான சூரியன் போன்று விளங்கி, தமது ஜீவிய காலத்து, இந்நிலவுலகத்தின் கண்ணே, தமது பிரசங்கவாயிலாய், மானிடர்களின் அஞ்ஞான இருளை ஒட்டி மெய்ஞ்ஞானச்சுடர் நாட்டிப் பிரகாசித்த பாஸ்கர சேதுபதி மகாராஜா வள்ளற் பெருந்தகையாரிடத்து, தமிழ் மக்களும், முக்கியமாய் ஸ்தாபகரான ஸ்ரீமான், ஜி. சதாசிவம் பிள்ளையவர்களும் வைத்துள்ள அபிமானத்தையும் நன்றியையும் நிலை நிறுத்தற் பொருட்டேயாம். இப் புத்தகசாலையின் முதல் வருட விழாவை இன்று நடத்தும்படி திருவருள் செய்த ஸ்ரீ தியாகப்பெருமானது அருட் பெருக்கத்தை நினைக்குந்தோறும், கழிபேருவகை பயப்பதாகும்.

இம்முதலா மாண்டு விழாவைக்கொண்டாடி மகிழ்தற்கு, இருவகைச் செல்வத்துள்ளும் சிறப்புற்று விளங்கும், ஸ்ரீமான், கோபாலசாமி ரெகுநாத ராஜாளியாரவர்களும் சைவப்பரிபாலன கர்த்தராய் விளங்கும், ஸ்ரீமான், நல்லசாமி பிள்ளையவர்களும் அக்கிராசனம் வகிக்கும் சீர்த்தி செப்பற்பாற்றோ? எங்கள் வேண்டுகோட்கிணங்கி, அபிமானிகளும், வித்வத் சிகாமணிகளும், பிரபுக்களும், பற்பல சங்கப்பிரதிநிதிகளும் விஜயம்செய்து இன்று இம்மகா சபையில் கூடப் பெற்றுள்ள காட்சியானது மிக்க மாக்ஷி நிறைந்ததேயாகும்.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த மகா சபையின் சமூகத்தின் முன்பு, நமது புத்தகசாலையின் முதலா மாண்டு வரலாறுகளைக் கூறுதலாகிய எனது கடமையைத் தொடங்குகின்றேன்.

**புத்தகசாலையின் நோக்கம்:**—தக்கார் தகவிலார் முதல் யாவரும் எளிதில் படித்துப் பயன்பெற வேண்டுமென்பது.

**படித்தவர்களின்தொகை:**—இவ்வருடத்தில் அதிகமில்லையென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. காரணம் சொந்த கட்டடமில்லாமையே.

**புஸ்தகங்களின் எண்ணிக்கை:**—ஆரம்பத்தில் மிகச் சொற்பமானும், காரியதரிசியின் விடாமுயற்சியால், நூற்றுக்கணக்கான புஸ்தகங்கள் சேகரிக்கப் பெற்றிருக்கின்றன.

## நன்றி கூறுதல்.

நாகை நீலலோசனி, பாண்டியன், வைசியமித்திரன், லோகரஞ்சனி, வித்தியாபாநு, சென்னை வியாபாரி, வைத்திய கலாநிதி, செந்தமிழ்ச் செல்வி, யதார்த்தவசனி, முதலிய பத்திரிகைகளை, அதனதனதிபர் அன்போடிப் புத்தகசாலைக்கனுப்பியும், இதன் சம்பந்தமாயுள்ள, விண்ணப் பங்களையும், விளம்பரங்களையும், இலவசமாய்ப் பிரசுரித்தும் வருகிற பெருந்தன்மைக்கு நன்றி கூறுகிறோம்.

## பிரார்த்தனை.

இப்புத்தகசாலையினிவ்வாண்டு விழா நண்பர்களால், வேண்டும் பொருளுதவி செய்யப்பெற்று நிறைவேறுகிறதானாலும், என்றும் இவ்வாறே நடைபெறச்செய்து ஸ்ரீ சிவபெருமானது கிருபைக்குப் பாத்திராக வேண்டுமென்று எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.



## வாழ்த்து.

சமயமுந்தருமமும், பாஷையும் புத்தகசாலையும், வளர்ந்தோங்கும் படி யருள்புரிந்து, செங்கோலோச்சும் நமது மகா மாக்ஷிமை தங்கிய ஐந்தாம் சார்ஜ் சக்கிரவர்த்தியவர்களும் மேரி மகாராணிப்பெருமாட்டியவர்களும், எங்கள் வேண்டுகோட்கிணங்கி அன்போடு அக்கிராசனம் வகித்துள்ள, ஸ்ரீமான் கோபாலசாமி ரெகுநாத ராஜாளியார் அவர்களும், ஸ்ரீமான், நல்லசாமி பிள்ளையவர்களும், நமது புத்தகசாலையில் நீங்காத பேரன்புடையவர்களும், இவ்வாண்டு விழா இத்தனை வைபவமாய் நடைபெறும்படி வேண்டு முதவிகள் புரிந்துள்ளவருமான மிஸ்டர் பாவா வைத்தியலிங்க முதலியாரவர்களும், இம்மகா சபையில் அரிய பெரிய விஷயங்களை உபந்நியாஸிக்க ஒப்புக்கொண்டுள்ள வித்வத் சிகாமணிகளும் உபசாரணைச் சங்கத்தாரவர்களும் அதன் தலைமையை வகித்த மிஸ்டர் முன்ஸீப் சுப்பராவ் பந்தலுகாரு அவர்களும், இந்நகர் வாசிகள் முதலான மற்றும் அபிமானிகளும், சாக்ஷாத் முழுமுதற் கடவுளது அருட் பெருங் கருணைக்குரியராய் வாழ, அப்பரம் பொருளது திருவருளை மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

மழை வழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வளமெங்கும் பிறங்குக
தழைக வஞ்செழுத்தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவ பகராவே.

திருவாரூர், 20-3-14. } டி. எஸ். தியாகராஜ ஞானியார்,
காரியதரிசி.

## ஸ்ரீ சேதுபதி புத்தகசாலையின் வருஷோத்ஸவ வரவு செலவு கணக்கு.

நன்கொடை வரவு

| | | | |
|---|---|---|---|
| மகா-ா-ஸ்ரீ அரித்துவாரமங்கலம் வி. கோபாலசாமி ரெகுநாத ராஜாளியாரவர்கள் | 25 | 0 | 0 |
| ,, கானாடுகாத்தான் எஸ். ஆர். எம். எம். சி. டி. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் | 25 | 0 | 0 |
| ,, மூலங்குடி கோபால கிருஷ்ணய்யரவர்கள் | 20 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| மகா-ா-ஸ்ரீ | எஸ். எம். ஆர். எம். ராமலிங்கம்பிள்ளை அவர்கள் | 15 | 0 | 0 |
| ,, | பழயவலம் பி. கே. சுப்பய்யரவர்கள் | 14 | 0 | 0 |
| ,, | திருவாவடுதுறை மஹா ஸந்நிதானமவர்கள் | 12 | 0 | 0 |
| ,, | வேலங்குடி ரெத்தினம் பிள்ளை அவர்கள் | 11 | 4 | 0 |
| ,, | சாட்டியக்குடி கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்கள் | 10 | 0 | 0 |
| ,, | பாவா. வயித்திலிங்க முதலியாரவர்கள் | 10 | 0 | 0 |
| ,, | காவாலகுடி தியாகராஜ முதலியாரவர்கள் | 10 | 0 | 0 |
| ,, | வலிவலம் எம். கந்தசாமி தேசிகரவர்கள் | 7 | 0 | 0 |
| ,, | பழயனூர் சந்தான கோபாலசாமி உடையாரவர்கள் | 7 | 0 | 0 |
| ,, | மதுரை திருஞானசம்மந்த சுவாமிகள் | 5 | 0 | 0 |
| ,, | வலிவலம் எஸ். சோமசுந்தர செட்டியாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | நாகப்பட்டணம் அ. மு. முத்துச்செட்டியார் அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | ஷையூர் முனிசாமி முதலியார் அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | கீழ்வளூர் அருணசல முதலியாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | கொங்கராயநல்லூர் சிதம்பரம் பிள்ளை அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | அம்பல் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | ஆந்தகுடி ராமய்யர் அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | சென்னபட்டணம் ஐகோர்ட்டு வக்கீல் முத்தையா முதலியாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | திருவாரூர் வீராசாமி நாயுடு அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | மலைக்கோட்டை நெல்லியப்பத்தம்பிரானவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | திருவாரூர் வக்கீல் திருவேங்கிட முதலியாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | பல்லவரம் கிருஷ்ணசாமிருவவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | விஜயபுரம் குப்புசாமி அய்யரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | திருவாரூர் ப. நாருயணசாமி முதலியாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | ஷையூர் டி. பி. சுப்பையாமுதலியாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | ஷையூர் டி. கே. ராமசாமி நாயுடுகாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | மானலூர் வெங்கிட்டருயலு நாயுடுகாரவர்கள் | 3 | 0 | 0 |
| ,, | நாகை முத்துக்காயாரோகணஞ்செட்டியாரவர்கள் | 3 | 0 | 0 |
| ,, | நாகூர் டாக்கர் குமரசாமிச செட்டியாரவர்கள் | 3 | 0 | 0 |
| ,, | காவாலகுடி வெங்கிடாசல முதலியாரவர்கள் | 3 | 0 | 0 |
| ,, | திருவாரூர் கல்யாணசுந்தர முதலியாரவர்கள் | 3 | 0 | 0 |
| ,, | நாகை சாமிநாத பிள்ளை அவர்கள் | 3 | 0 | 0 |
| ,, | திருவாரூர் வக்கீல் மகாதேவய்யர் அவர்கள் | 3 | 0 | 0 |
| ,, | ஷை கே. வீராசாமி அய்யர் அவர்கள் | 3 | 0 | 0 |
| ,, | நாகை அ மு. பொன்னுசாமிச்செட்டியாரவர்கள் | 2 | 0 | 0 |



| | | | | |
|---|---|---|---|---|
| மகா-ா-ஸ்ரீ | ஷை எம். ஜி. ஆர். மாணிக்கம்பிள்ளை அவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | ஷை சு. முருகைய பிள்ளை அவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | வெளிப்பாளையம் சண்முகசுந்தரமுதலியாரவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | ஷை மு. நாருயணசாமி முதலியாரவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | திருவாரூர் வக்கீல் சாம்பசிவய்யர் அவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | ஷை வி. கோதண்டருமய்யர் அவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | ஷை வடக்குச்சேத்தி கி. மு. கோபால கிருஷ்ணபிள்ளை அவாகள் | 2 | 0 | 0 |
| ,, | வாழக்கரை பொன்னுசாமி முதலியார் அவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | ராவ்சாகேப் எஸ்எம்.தியாகருஜமுதலியாரவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | முசக்குளம் நடருஜபிள்ளை அவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | திருவாரூர் ஜவுளி சாமிநாதமுதலியார் அவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | இஞ்சினீர் விசுவநாத சாஸ்திரியள் அவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | ரிவிவர் ஜி. சாம்பசிவய்யர் அவர்கள் | 2 | 0 | 0 |
| ,, | தேவூர் சாமிநாதமுதலியார் ,, | 2 | 0 | 0 |
| ,, | திருவாரூர் டி. மாடி வெங்கிட்டருமய்யர் | 2 | 0 | 0 |
| ,, | வேணுகோபாலய்யர் ,, | 2 | 0 | 0 |
| ,, | ரெத்தின முதலியார் ,, | 2 | 0 | 0 |
| ,, | கா. ராமச்சந்திரம் பிள்ளை ,, | 2 | 0 | 0 |
| ,, | எம்: கல்யாணசுந்தர முதலியார் ,, | 2 | 0 | 0 |
| ,, | வக்கீல் பி. சாமிநாதய்யர் ,, | 2 | 0 | 0 |
| ,, | வை. கு. சுப்பய்யர் ,, | 1 | 8 | 0 |
| ,, | நாகை எஸ். டி. எம். சிதம்பரம் பிள்ளை | 2 | 0 | 0 |
| ,, | மூங்கிக்குடி கண்ணுசாமி அய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | திருவாரூர் டி. கிருஷ்ணய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | வக்கீல் எஸ். பி. வெங்கிட்டராமய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | மணக்கால் முத்துரெத்தின முதலியார் | 1 | 0 | 0 |
| ,, | திருவாரூர் விசுவநாத பிள்ளை ,, | 1 | 0 | 0 |
| ,, | வை. கு. முத்துவய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | ஷை எஸ். சங்கரய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | ஷை ஆர். கிருஷ்ணய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | எஸ். ஏ. அனந்தராமய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | ஆர். முத்துவய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | பி. கிருஷ்ணய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | பி. வயித்திநாதய்யர் ,, | 1 | 0 | 0 |
| ,, | வக்கீல் அகோரப்பய்யர் ,, | 1 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| மகா-ா--ா ஸ்ரீ போஸ்ட்மாஸ்டர் எஸ். நடேசய்யர் அவர்கள் | | 1 | 0 | 0 |
| ,, வாத்தியார் சிங்காரவேலுப்பண்டாரம் | | 1 | 0 | 0 |
| ,, எம். இராமசாமி அய்யர் | ,, | 1 | 0 | 0 |
| ,, ஆர். சீனிவாசய்யர் | ,, | 1 | 0 | 0 |
| ,, வயித்திஞத தேசிகர் | ,, | 1 | 0 | 0 |
| ,, ரெத்தினவேல் செட்டியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, எஸ். விசுவனுதய்யர் | ,, | 1 | 0 | 0 |
| ,, ஆர். வெங்கிட்டராமய்யர் | ,, | 1 | 0 | 0 |
| ,, வக்கீல் எம். இராமநாதய்யர் | ,, | 1 | 0 | 0 |
| ,, எஸ். சுந்தரேசய்யர் | ,, | 1 | 0 | 0 |
| ,, அலிவலம் குப்புசாமி அய்யர் | ,, | 0 | 8 | 0 |
| ,, எம். குப்புசாமி அய்யர் | ,, | 0 | 8 | 0 |
| ,, எஸ். சோமசுந்திரம் பிள்ளை | ,, | 0 | 8 | 0 |
| ,, டி. பி. விசுவநாதய்யர் | ,, | 0 | 8 | 0 |
| ,, எஸ். சுப்பிரமணிய அய்யர் | ,, | 0 | 8 | 0 |
| ,, எல். சட்டயப் பிள்ளை | ,, | 0 | 8 | 0 |
| ,, ராமசாமி அய்யர் | ,, | 0 | 8 | 0 |
| ,, எஸ். கோபாலய்யர் | ,, | 0 | 8 | 0 |
| ஆக நன்கொடை வரவு ரூ. | | 347 | 12 | 0 |

கடன் வரவு.

| | | | |
|---|---|---|---|
| டி. எஸ். தியாகராஜ ஞானியார் வரவு | 9 | 5 | 6 |
| வக்கீல் திருவேங்கிடமுதலியார் அவர்கள் | 19 | 0 | 0 |
| வாணிய தம்புசாமி செட்டியார் ,, | 5 | 2 | 6 |
| எட்வர்ட் பிரஸ் | 11 | 5 | 0 |
| பெங்களூர் ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் | 3 | 8 | 0 |
| கும்பகோணம் வி. எஸ். ராமசாமிய்யங்கார் அவர்கள் | 3 | 10 | 0 |
| ஆகக் கடன் வரவு ரூ. | 51 | 15 | 0 |
| ஆக மொத்த வரவு ரூ. | 399 | 11 | 0 |



## செலவு விபரம்.

| | | | |
|---|---|---|---|
| லைபரெரிக்கு வாங்கிய இங்கிலீஷ் சிவஞான சித்தியார் 1. ஸ்டடீஸ் அண்ட் சைவ சித்தாந்தம் 1. ஆக புஸ்தகம் 2 இ | 6 | 0 | 0 |
| இதர பழய புத்தகங்களின் பயிண்டிங் சார்ஜ் | 3 | 0 | 0 |
| கண்ணுடி பீரோ 1-இ | 24 | 3 | 9 |
| வருஷோத்ஸவத்துக்கு வந்த உபந்நியாசகர்களுடையவும் வித்வான்களுடையவும் வகையருவும் சம்பாவனை ரயில் சார்ஜ் | 76 | 5 | 6 |
| பணம் வசூல் செய்யப் போய்வர ரயில் சார்ஜ் படிச்செலவு | 31 | 10 | 9 |
| ரயிலடியிலிருந்து வந்த வண்டிகளின் சத்தம் | 5 | 9 | 9 |
| ஸ்டேஷனரி செலவு | 9 | 8 | 0 |
| பிரிண்டிங் சார்ஜ் | 20 | 5 | 0 |
| தந்தி தபால் செலவு | 19 | 3 | 6 |
| மலைப்புழம் விலை 1500-இ | 8 | 5 | 0 |
| சந்தனம் வெத்திலை வகையரு | 3 | 14 | 6 |
| புஷ்பம் | 11 | 0 | 0 |
| பன்னீர் பெட்டி 1-இ | 0 | 8 | 0 |
| கியாஸ் லைட் 12-இ | 12 | 0 | 0 |
| பந்தல்போட செலவு | 5 | 11 | 6 |
| அரிசி கலம் 3 மரக்கால் 4-இ | 20 | 0 | 0 |
| சாதம்கொட்ட கிழிவு காபி வடிக்கட்ட துண்டு உள்பட | 2 | 0 | 0 |
| மளிகை சாமான் கொள்முதல் | 51 | 3 | 3 |
| கறிகாய் வகையரு | 10 | 7 | 3 |
| விறகு மணு 25-இ | 5 | 8 | 0 |
| சமையல் செய்த பிராமணபிள்ளை சம்பளம் | 28 | 4 | 0 |
| நாட்டு நெய் சேர் 20-இ | 10 | 0 | 0 |
| பால் சேர் 289-இ | 9 | 0 | 6 |
| சில்லரைச்செலவு ஆள்கூலி வகையரு | 12 | 1 | 9 |
| ஆகச்செலவு ரூ. | 385 | 14 | 0 |

## வசக்கட்டு பத்து.

| | | | |
|---|---|---|---|
| வக்கீல் மிஸ்டர் டீ. கே. இராமசாமிநாயுகொரு அவர்கள் வசம் | 5 | 0 | 0 |
| நாகை ஸ்காட்டிஷ் பிரான்சு பிரஸ் வசம் | 5 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| மகா-ா-ா-ஸ்ரீ ரெத்தினம்பிள்ளை அவர்கள் வசம் | 3 | 13 | 0 |
| ஆக வசக்கட்டு ரூ. | 13 | 13 | 0 |
| ஆக இனம் 2-இ ரூ. | 399 | 11 | 0 |

குறிப்பு:-1914ஹு மார்ச்சுமீ 31உ வரையிலுள்ள வரவு செலவு கணக்கு இது இதற்குப்பிந்தியுள்ள வரவு செலவுகணக்கு இரண்டாவது வருட அறிக்கைப் பத்திரத்தில் வெளியிடப்படும்.

### சாமான்கள் வரவு.

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை மகா சந்நிதானமவர்களால் இலைக்கட்டு 1 வாழைக்காய் 200
வலிவலம் சோமசுந்திர செட்டியாரவர்களால் தேங்காய் 25
வக்கீல் மகா-ா-ஸ்ரீ திருவேங்கிடமுதலியார் அவர்களால் தயிர் மரக்கால் 24

வருடோத்ஸவம் முடிந்த பிறகு அடியிற்கண்ட கனவான்களிடமிருந்து அடியிற்கண்ட விபரப்படிக்குள்ள தொகை வந்திருக்கிறது. இது இரண்டாவது வருட அறிக்கைப்பத்திரத்தில் அந்தக் கணக்கோடு சேர்த்து செலவு விபரம் வெளியிடப்பெறும்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமான் டிஸ்டிரிக்டு முன்ஸீப் சுப்பராவ் அவர்கள் | 5 | 0 | 0 |
| கொடவிளாகம் சோமசுந்தரம் பிள்ளையவர்கள் | 5 | 0 | 0 |
| நெல்லையப்ப தம்பிரான் ஸ்வாமியவர்கள் | 5 | 0 | 0 |
| பழயவலம் இராமனுதய்யரவர்கள் | 2 | 0 | 0 |
| டி. ருத்திராபதி பிள்ளையவர்கள் | 2 | 0 | 0 |
| புலிவலம் சுப்பய்யா பிள்ளையவர்கள் | 1 | 0 | 0 |
| ஆக ரூ. | 20 | 0 | 0 |

ஸ்ரீ சேதுபதி புத்தகசாலை
திருவாரூர்
31—3—14.

T. S. Thiagaraja Gnaniyar,
General Secratary.

உ

# கமலாஸனி.
# Kamalasani.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம் 3. { 1915ஹு பிப்ரவரிமீ } சஞ்சிகை 2.

OFFICE OF THE REGISTRAR 11 FEB 1915 MADRAS.

## * பெரிய புராண ஆராய்ச்சி.

பெரிய புராண ஆராய்ச்சி என்பது பெரிய புராணத்திலேயுள்ள அருமையான விஷயங்களை ஆராய்தல் என்பதும், பெரியபுராணமென்ற சொற்றொடர்மொழியை ஆராய்தல் என்பதும் பொருத்தமாம். ஈண்டு இவ்விரு விஷயங்களையும் ஆராய்தலே நமது நோக்கம். முதற்கண் பெரிய புராணத்திலேயுள்ள விஷயங்களை ஆராய்வோம். பெரிய புராணம் என்னும் நூல் பரமசிவனது அருட் பத்தி ஞான நெறியிற் சென்ற மகா வித்தகர்களான, உண்மை நாயனார்களது கருமம் ஞானம் அருள் ஒழுக்கம், இவை முதலியவைகளைச் சரித்திரத்தில் வைத்து உணர்த்தும் திருவருட் காவியமாம். இதில் அகம் புறம் என்ற இருதிறத்துப் பதினெற்றிணை வழக்கும், மனுமுதலிய பெரியோர்கள் வகுத்த வருணாஸ்ரம வழக்கும், புறநெறிச் சமயப் பூர்வ பக்கவழக்கும், அகநெறிச்சமய ஆசார வழக்கும் உண்மைச்சரியைகிரியை யோக ஞான வழக்கும். குருலிங்க சங்கமங்களை வழிபடும் மார்க்கங்களைப்போதிக்கும் வழக்கு முதலிய எல்லா விஷயங்களையும் தன்னுள்ளடக்கிப் பிரகாசமும் நுட்பமும் திட்பமும் உடையதாய் தனக்குவமைவேறொன்றின்றி விளங்கும் அருநூலாய் ஸ்ரீ சேக்கிழார் பெருமானால் நடராஜப்பெருமான் திருவருளை முன்னிட்டு அருளப்பட்டதோர் மகா காவியமாகும்.

* பழயனூர் பார்க்கவகுலசங்க வருடோத்ஸவத்தில் வாசிக்கப்பட்டது.

இது இப்பெருமைகளையெல்லாம் உடையதாய்ச் சிறப்படைந்து விளங்குதல் பற்றி இதனைச் சிதம்பர க்ஷேத்திரத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமானது சன்னிதானத்திற்கேட்ட சோழர்பிரானாகிய, அநபாயச்சோழமகாராஜன் இஃது அருண்மொழியென்று கொண்டு இதனையியற்றிய சேக்கிழார்க்கு அருண்மொழித்தேவர் என்னும் சிறப்புப்பெயர் கொடுத்து சமயாசாரியர் முதலியவர்கள் அருளிய பதினொரு திருமுறைகளோடு ஒன்றெனச்சேர்த்து, பன்னிரண்டாந் திருமுறையெனப் போற்றினான். இது தொடக்கமுதல் நமி நந்தியடிகள் புராணமீறாகவொரு காண்டமாகவும், ஆளுடைய பிள்ளையார் புராணம் முதலாக வெள்ளையானைச் சருக்கமீறாக ஒரு காண்டமாகவும் வகுக்கப்பட்டு இரண்டு காண்டங்களையுடையதாகும். இது பதின்மூன்று சருக்கங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 4253 செய்யுட்களாகவும் இயற்றப்பட்டுள்ளது. இதில் அந்தணர் மரபில் அவதரித்த நாயன்மார்கள் புராணம் பன்னிரண்டு, சிவமறையோர் (குருக்கள்) மரபில் அவதரித்த நாயன்மார் சரித்திரம் இரண்டு, மாமாத்திர வேதியர் (இக்காலத்து மாத்துவர் என்று வழங்கப்பெறும்) மரபிலவதரித்த நாயன்மார் புராணம் ஒன்று, முடிமன்னர் மரபில் அவதரித்த நாயனார் புராணம் ஆறு, குறுநிலமன்னர் மரபினில் அவதரித்த நாயன்மார் புராணம் ஐந்து, வணிகர்மரபில் வந்தவதரித்த நாயன்மார் புராணம் ஐந்து, வேளாளர் மரபில் வந்தவதரித்த நாயன்மார் புராணம் பதின்மூன்று, இடையர் மரபில் அவதரித்த நாயன்மார்புராணம் இரண்டு, சாலியர், குயவர், செக்கார், பரதவர், சான்றார், வண்ணார், சிலைமறவர், நீசர், பாணர் முதலிய மரபுகளில் வந்தவதரித்த நாயன்மார் புராணங்கள் ஓரொன்று; திருமரபு குறித்துரையாத நாயன்மார் புராணம் பதின்மூன்று திருக்கூட்டந்தன்னில் திருப்பதியறிந்த நாயன்மார் புராணம் இரண்டு, திருப்பேரறிந்த நாயன்மார் புராணம் ஒன்று, திருமரபறிந்த நாயன்மார் புராணம் இரண்டு, திருமரபு தெரியாத நாயன்மார் புராணம் ஏழு, பேரறியாத நாயன்மார் புராணம் எட்டு, இறுதியிலக்கங்கண்ட நாயன்மார் புராணம் ஒன்று, எண் இத்தனையென்றறியாத புராணம் எட்டு, திருத்தொண்



டத்தொகையில் சொல்லப்பட்ட நாயன்மார்களுள் குருவருளால் மோட்சத்தையடைந்தவர்கள் திருஞானசம்பந்த சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் முதற் பதினொருவர். சிவலிங்க வழிபாட்டால் மோட்சமடைந்தவர்கள் எறிபத்தர் கலையர் முதல்முப்பதின்மர். திருவேடவழிபாட்டால் மோட்சமடைந்தவர்கள் திருநீலகண்டர் இயற்பகையார் முதலாகப் பத்தொன்பதின்மர். இனி திருத்தொண்டத்தொகையுட் போந்த அறுபது தனித்திருப்பேர் புராணங்களோடு அத்திருத் தொண்டத்தொகை தந்தருளிய நம்பியாரூரர் அவர் தந்தையார் சடையனார் அவர் தாயார் இசைஞானியார்தம்மையுங்கூட்ட தனித்திருப்பேர்புராணம் அறுபத்து மூன்றாமாறும், அவ்வறுபத்துமூன்று புராணங்களோடு திருக்கூட்டப்புராணம் ஒன்பதும் கூட்டப் புராணம் முழுத்தொகை எழுபத்திரண்டாமாறும் கண்டுகொள்க.

இனி உமாபதி சிவாசாரியர் பெரிய புராண மகிமை வரலாறெல்லாம் இனிது நனி விளங்குமாறு திருத்தொண்டர் புராண வரலாறு எனப்பெயர் தந்து ஒரு நூல் இயற்றியருளினார். உமாபதி சிவாசாரியார் அதுவேயுமன்றி திருத்தொண்டர் சரித்திர மெளிதலறியும்பொருட்டுத் திருத்தொண்டர் புராண சாரமெனவும் ஓர் நூல் இயற்றியருளினார்.

சிவஞான யோகிகள் இத்திருத்தொண்டர் திருநாமங்களைப் பத்தியோடு என்றும் பாராயணஞ் செய்வோருக்கு உபகாரமாகத் திருத்தொண்டர் திருநாமக்கோவையென கலிவெண்பாவால் ஒரு நூலியற்றியருளினார். திருத்தொண்டத்தொகையினையும் இத்திருத்தொண்டர் திருநாமக்கோவையினையும் மந்திரமாகக்கொண்டு பத்தியோடு நித்தலும் பாராயணஞ்செய்வோர் கைதவமும் புல்லறிவும் கற்பனையும் மையலுந்தீர்ந்து அத்துவிதானந்த அகண்ட பரிபூரணத்து நித்தியமாக வாழ்தல் ஓர் தலைபரம்.

திருத்தொண்டர் திருநாம பாராயண வழிபாட்டிற்கு திருத்தொண்டத்தொகையே அளவைதாகவும், சிவஞானயோ

கிகள் அவர் திருநாமக்கோவை வேறு செய்தது ஏதன் பொருட்டெனின், திருத்தொண்டத்தொகையுள் அத்திருத்தொண்டத்தொகையைத் திருவாய்மலர்ந்தருளிய சமயாசாரியரான திருநாவலூரர் பெருமானாரும், அவர் தந்தை தாயாராகிய சடையனார் இசைஞானியாரென்பாரும், அடங்காமையின் அவர்தந்திருநாமபாராயணமும் உடனெய்தல் வேண்டிச் சிவஞான யோகிகள் திருத்தொண்டர் திருநாமக்கோவையென்று வேறோர் தனி நூல் அருளிச்செய்தாரென்க.

இனித்திருமுறைகண்டபுராணம் அறுபான்மும்மை நாயன்மார் பரிபூரண மெய்திய திருநட்சத்திரக்கோவை திருப்பதிகம்பெற்ற திருக்கோவை திருப்பதிகக்கோவையென்பன திருமுறையாராய்ச்சிக்கு இன்றியமையாத நூல்களாம். இவையருளிச்செய்த பெரியார் திருநாமம் வெளிப்படவில்லை. இவையருளிச் செய்தாரும் உமாபதி சிவாசாரியாரே என்பாரும் உளர்.

இப்பெரியபுராணத்துக்கு ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் இயற்றிச்செய்த திருத்தொண்டத்தொகையும் பதினொராம் திருமுறையிலுள்ள நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியாகியவகையும் ஸ்ரீ நடராஜப்பெருமானது திருவருள் உணர்த்துதல் ஆகிய மூன்றையே முதல் நூல்களாகக் கொள்ளல்வேண்டும்.

இப்பெரியபுராண சரித்திரத்தை வடமொழியில் உபமந்நியு மகரிஷியாலும் அகஸ்திய மகரிஷியாலும் பக்த விலாஸங்களாக இயற்றப்பட்டிருக்கின்றது. சரித்திர விஷயங்களில் உற்று நோக்குமிடத்து சிற்சில வேறுபாடுகள் உண்டென்று இருமொழியிலும் வல்ல வித்வான்களிற் சிலர் கூறுவர்.

பெரியபுராணத்துத் திருமலைச்சிறப்பில்,

"அன்னதன் திருத்தாழ்வரை யின்னிடத்
தின்ன தன்மைய னென்றறி யாச்சிவன்
றன்னை யேயுணர்ந் தார்வந் தழைக்கின்ற
வுன்ன ருஞ்சீ ருபமன் னியமுனி."



என்றுகூறியிருக்கின்ற விச்செய்யுளின் "உன்னருஞ்சீருபமன்னியமுனி" என்ற ஈற்றடிமுதல் சில செய்யுட்களில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளது பூர்வ ஜன்ம சரித்திரமும், பூலோக ஜன்மசரித்திரமும் உபமன்னியுமுனிவரால் மற்றரிஷிகளுக்குக் கூறினதாக ஸ்ரீ சேக்கிழார் பெருமானாலேயே சொல்லப்பட்டிருப்பதால் உபமன்னிய பக்தவிலாஸத்தின் மொழிபெயர்ப்பு இப்பெரிய புராணம் என்று கூறுவாரும் உண்டு. என்னே! அவர் தங்கூற்று! இக்காலத்தில் அச்சிட்டு வழங்கப்பெறும் உபமன்னிய பக்தவிலாஸத்தையும் பெரிய புராணத்தையும் உற்றாராயுமிடத்து சரித்திர சம்பந்தங்களுள் பல பேதங்கள் காணப்பெறுவதால் அங்ஙனம் கொள்வதற்கு ஒரு சிறிது மிடமின்று.

இனி இரண்டாவதாய்க் கூறியுள்ள பெரியபுராணம்என்ற சொற்றொடர் மொழியாராய்ச்சியிற் சிறிது செல்வாம். இந்நூலுக்கு வேறுபெயர்கள் எத்தனையோ இடுதற்குப்பொருத்தமாயிருக்க அவையனைத்தையுமொழித்து பெரியபுராணம் என்னும் பெயர் வந்ததற்குக் காரணத்தையுற்று நோக்குவாம். இந்நூலையருளிச்செய்த ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளே "எடுக்குமாக்கதை" என்று பிரயோகித்திருப்பதாலும் உலகத்தில் பெரியது கேட்கில் எரிதவழ்வேலோய் "பெரிது பெரிது புவனம் பெரிது என்று தொடங்கி தொண்டர் தம் பெருமையைச்சொல்லவும் பெரிதே" என்று கூறப்பெற்றிருத்தலாலும், இந்நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்னும் மற்றொரு பெயரிருத்தலாலும் பொருத்தமேயென்க. எவ்வாறெனின் இப்புராணத்துள்ளடங்கிய நாயன்மார்களனைவரும் பரம கருணாநிதியாகிய சிவபெருமானது அருட்பெருங்கருணைக்கிடுபட்டு உண்மையடியார்களாய் சிவானுபூதிச்செல்வர்களாய் சிறந்துவிளங்கும் பெருமையை உலகத்தாருக்குப் போதிக்கும் பெருமைவாய்ந்த பத்திநூலாய் விளங்குவதொன்றே போதிய சான்றாம்.

அன்றியும், இப்புராணத்தையருளிச்செய்த ஸ்ரீ சேக்கிழார் பெருமான் மனுநீதிகண்ட புராணத்து "இனையவகை

அறநெறியில் எண்ணிறந்தோர்க்கருள்புரிந்து" என்ற செய்யுளில் "முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேல் புனையுமுறை நம்மளவிற் புகலலாந்தகைமையதோ" என்று பிரயோகித்திருப்பதும் காணக்கிடக்கின்றது. ஆனால் இது திருவாரூரைக் குறித்திருப்பதால் ஈண்டுபமானமாகக் கொள்ளத் தகுமோ வென்றையுறின் தகுமென்பதைக் காட்டுவாம்.

திருத்தொண்டத் தொகையருள முதலெடுப்பைத் திருவாய் மலர்ந்தருளியது திருவாரூராகவும் அத்திருத்தொண்டத் தொகையே இப்பெரியபுராணத்திற்கு முதனூலென்று கொள்ளும்போது மேலேகாட்டிய திருஷ்டாந்தத்திற்குப் பொருத்தமென்பாம்.

அது அன்றியும் பெரிய புராணம் என்ற சொல்லானது பெரியர் - புராணம் பெரியபுராணம் என்று ஈறு குறைந்திருப்பதற்கு அடியிற்கண்ட நன்னூற் சூத்திரம் அத்தாட்சியாம். "பொதுப்பெயருயர்திணைப்பெயர்கள் ஈற்றுமெய் வலிவரின் இயல்பாம், ஆவி, யரமுன்வன்மைமிகா சில விகாரமாமுயர்திணை"

அதுவன்றியும் அச்சிவபெருமானது திருவடிநிழலையடைதற்கு வேதாகம இதிகாசங்களிலே கூறப்பட்டதாகிய சரியை கிரியை யோகஞான பக்திமார்க்க வழிபாடின்றியும் எல்லா விஷயங்களையும் எல்லாமதத்தையும் எல்லாவிதக்கோட்பாட்டையும் அநுட்டித்தார்க்கும் வீடருளிய பெருங்காதையைத் தன்னுள்ளடக்கி நிற்றலின் பெரியபுராணம் என்பது பொருத்தமாம். உதாரணமாகச் சாக்கிய நாயனார் முதலியோரது சரிதையை ஞாபகப்படுத்துவாம்.

இனி இவையனைத்தையும் இம்மட்டோடு நிறுத்தி இப்புராணத்துள்ளடங்கிய வொரு நாயன்மாரது சரித்திரத்தை



யின்டாராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டு ஸ்ரீ சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்ற சொற்செறிவு, பொருட் பொலிவு சமயோசிதமாய்ப் பலபொருள்குறித்த, ஒரு சொல்லமைத்தல், பாபகரமான சொற்களைப் பிரயோகியாது விடுத்தல் முதலியசிலவற்றைக் காட்டி விஷயத்தை முடிப்பாம்.

(வரும்) பத்திராதிபர்.

## பொன்மணியில் ஓர் பாகம்.

(கோயில்களின் உபயோகங்கள்.)

பூமிதேவிக்கு முகம்போன்ற தேயம் நாம் வசிக்கும் தேயமாகிய இந்தியா தேயம். அதில் வசிப்பவர்களில் பெரும்பான்மையோர் ஹிந்துக்கள் அவர்களில் பெரும் பான்மையோர். விக்கிரகங்களை வணங்கி அதின் மூலமாய் உண்மை ஞானத்தைத்தெளிந்து பெரும்பயன்பெற்ற புனிதர்கள். அவர்களுக்குச் சாப்பாடு எவ்வளவு முக்கியமோ அவ்வளவே அவர்களுக்குக் கோயில்களும் முக்கியமாம். கோயில்கள் இந்துக்களாகிய நமக்குமாத்திரமல்லாது மற்ற எம்மதஸ்தர்களுக்கும் முக்கியமே. அதையுத்தேசித்தே பாட்டியாகிய ஔவையாரும் கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாமென்று விளம்பியிருக்கிறார். ஆனால் ஹிந்துக்களின் கோயில்களோ வணங்குபவர்களின் நாகரீகத்தின்படியும் ஆசாரத்தின்படியும் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒருவன் அந்தணனாயின் சிவன்கோவில், பெருமாள் கோவிலென்றும், மற்றைய மூன்று குலத்தாருக்கு மேற்சொல்லிய தெய்வங்களுடன் வீரன் சாமுண்டி முதலிய மற்றைய தேவதைகளும் சேர்த்து அவரவர்களின் ஆலயங்களில் வணங்கப்படும். நீசன் முதலிய தாழ்ந்த ஜாதியானுக்கு சிவன் விஷ்ணுவென்றால் ஒன்றும் தெரியாது. இந்துக்களே இரண்டு பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். சைவர்களென்றும் வைஷ்ணவர்களென்றும் இரு பங்கினர். இவ்விரு வகுப்பினர்களுக்கும் சமயாசாரியர்கள் உளர். அவர்

மூட ஜனங்களோடு எவ்வளவு கஷ்டப்பட்டார்கள்? எவ்வளவு துஷ்டர்களிடமிருந்து வசவு பெற்றார்கள்? எவ்வளவு அபூர்வமானச் செயல்களைச் செய்திருக்கிறார்கள்? இவர்கள் இயற்றிய நூற்கள் எவ்வளவு? இவர்களால் மோக்ஷத்திற்கனுப்பப்பட்ட பாபிகள் எவ்வளவுபேர்? இத்தேசத்தில் அவர்கள் போகாத இடம் உண்டா? பிரசங்கம் செய்யாத இடம் உண்டா? அவர்கள் சீர் திருத்திய மத விஷயமான சட்டங்களின்படியே நாம் இப்பொழுது நடக்கின்றோம். இப்பவும் அவர்களுடைய பரம்பரை சிஷ்யர்களாய் அநேகம்பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆங்கிலேய கவர்மெண்டார் அளித்திருக்கும் மரியாதைகள் அநேகம். இப்பவும் மத விஷயமாய் ஏதாவது சந்தேகமேற்படுமாயின் அவர்களிடம் சென்றுதான் அந்த சந்தேகங்களை நிவர்த்திசெய்து கொள்வார்கள். அவர்கள் ஜெகத்குருவென்று சொல்லப்படுவார்கள். அவர்கள் தேவதா அம்சமெனக் கருதப்படுவார்கள். அவர்கள் தங்கள் சமயத்திற்கேற்ற அருமையான நூற்களைக்கசடறக்கற்று அழிவே எப்பொழுதுமில்லாத மோக்ஷவீட்டை அடைவதற்கு ஆதாரமான மந்திரங்களை மற்ற மாந்தர்களுக்குப்புகட்டி சிவன்கோயிலிலோ பெருமாள் கோயிலிலோ சென்று அவரவர்களுக்குத் தெரிந்த திருப்பாக்களையும் அருட்பாக்களையும் செப்பி எப்பொழுதும் பூவுலகில் அழிவேயில்லாத பெயரையும், பெறுதற்கருமையான மோக்ஷவீட்டைப் பெறுதற்கான பூஜைகளையும் பக்தியுடன் செய்கின்றனர். இக்காலம்போல் அக்காலத்தில் அச்சியந்திரம் கடிதம் முதலியவை இல்லையாதலால் பெரியோர்கள் பனைவோலைகளில் இரும்பினால் செய்த கூர்மையான ஆயுதங்களைக்கொண்டு கீறுவதுமாக இருந்து கிடைப்பதற்கரிய பெருமைவாய்ந்த நூற்களை இப்போது நாம் படித்து நலமடைய இயற்றி இருக்கிறார்கள். கொடுங்கோன்மையும், பணவாசையும் மதாபிமானமும், எப்பொழுது மழிவேயில்லாத பெயருமாகிய விக்ரக நிக்ரகன் என்ற ஒப்பற்ற பெயரையும் பெற்ற கஜனிமுகம்மது இத்தேயத்தின்மேல் எவ்வளவோ தடவை படையெடுத்து எவ்வளவோ பக்தி மான்களையும்



மதாபிமானிகளையும் கொன்று எவ்வளவோ அருமைவாய்ந்த நூற்களையும், ஒப்பற்ற நீதிகள் வரையப்பெற்ற தகடுகளையும் அவைகள் சேமித்து வைக்கப்பட்ட இடங்களாகிய கோயில்களையும் மடங்களையும் மதியின்மையால் இடித்து நாசமாக்கிய போதிலும் கந்தவேளின் ஆயுதங்களினால் அறுபட்டு மறுபடியும் முளைக்கும் ஆயிரம் தலைகளைப்போல் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் கட்டப்பட்ட கோயில்களும் எழுதப்பட்ட நன்னெறிகளும் இன்றைக்கும் பெருமை பெற்று விளங்குகின்றன.

இன்னுஞ் சில பெரியோர்கள் ஓலைகளும் தகடுகளும் சீக்கிரத்தில் அழியக்கூடிய பொருள்களென மதித்து பெருமை பெற்ற புண்ணிய சரிதைகளையும் புத்திமதிகளையும் பெரிய மலைகளிலும் கருங்கல்லால் கட்டப்பட்ட கோயில்களிலும் வரைந்துள்ளார். அவைகள் பெரும்பாலும் சமஸ்கிருதபாஷையில் வரையப்பட்டிருக்கின்றன. இக்கோயில்கள் இருப்பதினால் என்ன பயன்? எதற்காக எவ்வளவோ பணத்தை சிலவழித்து இவ்வருமையான கட்டடங்களைக்கட்டி சாமி என்றும் அம்மனென்றும் சில கற்களை பிம்பமாகச்செதுக்கி அவைகளுக்கு எண்ணெய்க்காப்பு, சந்தனக்காப்பு முதலியவை சாத்தி தங்கத்தினாலும் வெள்ளியினாலும் நவரத்னங்களாலும் நகைகளும் கவசங்களும் செய்தும், குதிரையைப்போலவும் யானையைப்போலவும் காளையைப்போலவும் வாகனாதிகளும் வெள்ளியினாலாய இரதங்களும் கோடி சூரியர்கள் ஏக காலத்தில் உதித்தால் எவ்வளவு பிரகாசத்தைத்தருமோ அவ்வளவு பிரகாசத்தைத்தரக்கூடிய விளக்குகளும் பலவிதமான வாத்யங்களும் தேவதாசிகளும் தேவாமிர்தத்தையொத்த பிரசாதங்களும் சுவாமிகளாகிற கற்களுக்கு என்ன பிரயோஜனத்தைத் தருகின்றன? இதெல்லாம் மதியீனர் செயல். நாம் செய்வது நியாயமல்ல. நாம் பெரும் படிப்புப்படித்து நாலுகை சட்டை வாங்கினதின் பலன் ஆங்கிலேயமே அற்பமும் அறியாத் ஆஷாடபூதிகள் செய்யும் காரியத்தை செய்வதுதானா? சித்தியடைந்த் சிவவாக்கியர்கூட என்ன செப்புகின்றார்.

"நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட் பஞ்சாத்தியே
சுற்றிவந்து மொணமொணன்று சொல்லுமந்தரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவையறியுமோ."

என்றால், அவரைப்பார்க்கிலும் இவ்வாஷ்டபூதிகள் மதியில் உயர்ந்தோர்களோ மோக்ஷ வீட்டை முட்டிப்பார்த்தவர்களோ என்றெண்ணி பரிகாசம் செய்வதுடன் தாம் செய்ய வேண்டிய கடமைகளையும் விட்டு விடுகின்றனர். அவர்கள் இவ்விஷயம் பார மார்த்திகர்க்கேயன்றி நம்மைப்போன்ற மற்றையோர்க்கன்று என்ற விஷயத்தை நன்கறிவதுடன் ஏனைய மதத்தவர்கள் மோக்ஷ வீட்டையடைந்த மூத்தோரின் வார்த்தைகளின் விஷயங்களை முழுவதுமறியாது அவர்களாலியற்றப்பட்ட பாக்களைச் செப்பி பரிகசிப்பதினால் யதார்த்தமும் பலனும் நிறைந்த பழைய மதத்திற்கு யாதொரு குறையும் ஏற்படாது. இன்னும் இப்பாக்கள் யோக்கிதையைப் பற்றி விசாரிப்போம். அவர்கள் முதலில்,

"மனமெனும் கந்தைநீக்கி மாசிலா வின்பவீட்டிற்
சினமதைக்கழித்து மேலாந் தேசிகனருளைப்பெற்று
அனலதாம் கானலேற்றி அடைபொருளிதுவேயென்று
தனைய கன்றிருப்பரெல்லாம் தரணியில் மேல்வராவர்."

இந்நிலைமையை அடைந்த பின்னர்,

"மூலமாம் வாசியேறி மூதறி விளங்கக்கண்ட
பாலரும் சீலராகி பசுபதி பாசமூன்றும்
சாலவன் னினைவுநீங்கி சமரச நிலையினின்ற
கோலமே பொருளதாகக் கொண்டவர் தொண்டர்."

இத்தொண்டர்கள்தான் அப்பாக்களை இயற்றியவர்கள். அவர்களுக்கும் நமக்கும் உள்ளபேதத்தை நாமேநன்கறிவோம்.

இத்தொண்டர்கள் உலக வாழ்க்கையை நரகக்கடலெனக் கருதி அதைக்கண்டித்தும் அதினின்றும் நீங்கவழி புலப்படா



தவர்களாய் கண்ணியம் பெற்ற கோயில்கள் என்னும் விளக்குத் தம்பத்தையும் அதிலுள்ள விக்கிரகங்கள் என்ற விலையுயர்ந்த விளக்குகளையும் கடலிற் மூழ்கிக்கொண்டே கண்ட பின்னர் பக்தியென்னும் கப்பலிலேறி காண்பதற்கருமையான சரியான துறையாகிய மோக்ஷவீட்டை அடைந்த பெரும் புனிதர்கள். நாமோ இப்பொழுது உலக வாழ்க்கை என்னும் எல்லையில்லாப் பெருங்கடலில் விழுந்து கரையேற வழிதெரியாமல் தவிக்கின்றோம். நம்மை கரைக்குக்கொண்டுபோக பகவானனுப்பிய பக்தியென்னும் கப்பல் காலம் தவராமல் காத்துக்கொண்டிருக்கிறது. அவ்வளவு மகத்வம் வாய்ந்த மரக்கலத்தை சரியான வழியில் செலுத்தி க்ஷேமத்தைத் தரக்கூடிய ஆசிரியர்கள் என்ற மாலுமிகள் அநேகந்தடவை அழைக்கிறார்கள். தம்மாலியன்றமட்டும் நல்லறிவு தடுமாறும் நம்மை இல்லறப் பெருங்கடலிலிருந்து நீக்கி ஆநந்தத்தைத் தரக்கூடிய அக்கரை சேர்ப்பிப்பதாகவும் சொல்லுகிறார்கள். கொஞ்சநாள் யாத்திரையில் கலங்கரை விளக்குத் தம்பத்தையும் அதிலேற்பட்ட விளக்குகளின் விசேஷத்தையும் விளக்குவதாகவும் சொல்லுகிறார்கள். ஆயினும் ஏழை சொல் அம்பலமேறுமா? ஏறாது! பக்தியில் பழுதுபெற்ற நாம் அவர்களால் செய்யப்பட்ட பிசகுகளைக்கண்டு தூஷிக்கிறோமேயொழிய, அவர்களிடத்துள்ள நற்குணங்களை கவனிக்கிறதேயில்லை. அத்தோடு விடுகிறோமா இல்லை. இன்னும் பெரியோர் இயற்றிய பெருமைவாய்ந்த வாக்கியங்களை வாசித்து பெருமை தங்கிய அவர்களுடைய வாக்கியங்களை பன்முறை பேசி பரிகசிக்கின்றோம். நாம் அவர்களாலியற்றப்பட்ட நூற்களினால் உண்டாகும் நயத்தையும் நற்சொற்களையும் ஏற்றுக்கொண்டு நலம் பெற வேண்டுமேயொழிய கேடானவற்றை எடுத்துச்சொல்லி நமக்கே கேட்டை வருவித்துக்கொள்ளக்கூடாது. கருத்துள்ள கப்பலோட்டிகள் சில நாட்களில் கப்பலை கரை சேர்ப்பதாகச்சொல்லலாம் நம்முடைய அஜாக்கிரதையால் பலநாள் செல்லலாம். அதற்குள் நாம் ஆக்கப்பொறுத்தும் ஆறப்பொறுக்காதவன்போல் பறக்கின்றோம். இன்னும் பெருமை அகம்

பாவம் என்னும் கடற் மச்சங்கள் நம்மை தண்ணீருக்குள் இழுக்குமாறு அவ்வளவு அஜாக்கிரதையாயிருக்கிறோம். அதனால் கண்ணுக்கெட்டிய கப்பல் கைக்கெட்டுகிறதில்லை. இப்போதாவது ஜாக்கிரதையாயிருக்கிறோமா இல்லை. நாகரீகம் முதலிய கடற் பாம்புகளுக்கு பெரும் விருந்தாகிறோம். அவைகளின் கொடுமையானவும் கூர்மையானவுமான பற்களில் அகப்பட்டு யானை வாயில் அகப்பட்ட கரும்புபோல் தத்தளிக்கின்றோம். நாம் அவைகளைக்கொன்று பட்டணம் சேரக்கூடிய பக்தியென்னும் கப்பலில் ஏறுகிறதில்லை. நாம் இவ்விதமாய் தவிக்கும்போது சமயாசாரியர்களாகிய கப்பலோட்டிகள் காப்பாற்றுவதாகச் சொல்லுகிறார்கள். அவர்களையும் கவனிக்கிறதில்லை. கடவுள் ஒருவர் உளர் என்பதையும், அவர் எல்லாருக்கும் பக்ஷபாதகமின்றி நன்மையையே செய்பவர் என்பதையும் நம்பாமல் ஐயோ! இப்பாழும் தெய்வம் ஏன் என்னை இவ்வாறு இந்த எல்லை இல்லாச்சமுத்திரத்தில் தொல்லைப்படும்படி விட்டு விட்டதே! மூத்தோர் செய்கிறபடி பரமசிவன் மகாவிஷ்ணு முதலிய தெய்வங்களுக்கு தேங்காய் பழம் முதலியவை நைவேதனம் செய்தேனே? என்ன பயனைப்பெற்றேன்? என்னோடு பேசுகின்றதா? அல்லது என்முன் வந்து கொடுமையான விஷஜெந்துக்கள் நிறைந்த இவ்வெல்லையில்லாச் சமுத்திரத்தினின்று கரையேற கை தூக்கி விடுகின்றதா? அல்லது கரையேறும் வழியைத்தான் செப்புகின்றதா என்று எண்ணி எண்ணி ஏன தவிக்கவேண்டும். முன் தகப்பனால்மிகவும் கொடுமையாய் நடத்தப்பட்ட பிரகலாத ஆழ்வானையும் முதலை பிடித்துக்கொண்ட கஜேந்திரனையும் பகவான் காப்பாற்றாமல் பின் யார்தான் காப்பாற்றினார்கள்? வீண் வம்புகளையும் உபயோகமற்ற புத்தகங்களையும் இன்னும் சிற்றின்பத்தில் இழுத்துக்கொண்டுபோய் விடும் பேராறுகளாகிய துஷ்டமித்திரர்களுடனும் சேர்ந்து கண்ணுக்கெட்டாத கடலில் ஏன் போய்ச்சேர வேண்டும்?

வேதங்கள் இதிகாசங்கள் புராணங்கள் முதலிய நூற்கள் பக்தியென்னும் சட்டலை சரியான துறையில் நடத்தக்கூடிய



நூற்களாகவிருக்க, அப்புத்தகங்களையும் தேடாமல் அக்கப்பலையும் கருதாமல், ஓட்டையாகிய படகில் ஏறி திசை தடுமாறச் செய்யும் புத்தகங்களாகிய காமரஸத்தைக்கிளரக்கூடிய கொக்கோக நூலையும் இந்திரசபா முதலிய நாடகங்களையும் ஏன் படித்து திசை தடுமாறவேண்டும குணமான கோயில்கள் என்ற தீபஸ்தம்பமும், கோடிசூரியப்பிரகாசத்தையொத்த விக்கிரகங்கள் என்ற விலைபெற்ற விளக்குகளும், எவ்வளவு தூரத்திலிருந்து பார்த்தபோதிலும் தெரியுங்காலையில் அவைகளைப்பாராது கண்களை மூடிக்கொண்டு தண்ணீரில் பதுங்கியிருக்கிற பெரிய கற்பாறைகளில் மோதிக்கொண்டு சிவன் முதலிய தெய்வங்களிருந்தால் இச்சமயத்தில் உதவி புரியட்டுமே அவைகள் ஒன்றுமேயில்லை அவைகளுக்கு செய்வதெல்லாம் வீண் கடன் என்று எண்ணி ஏன் தவிக்கவேண்டும்? ஏன் எண்ணாததெல்லாம் எண்ணி கடவுளைத்தூற்றவேண்டும்? நாம் சமயாசாரியர்களின்மேல் பழியைப்போட்டவர்கள் சொல்லுமாறு நடந்து நலம்பெற்று வாழவேண்டும்? இதனால் கோயில்கள் நம்மை தீய ஒழுக்கங்களிலிருந்து விலக்கி நன்னெறியைக்காட்டும் விளக்காயிருக்கின்றன நற்குணமுடைய ஒருவர் தன் குருவின் உபதேசத்தால் கோயிலுக்கு தினந்தோறும் சென்றதினால் தானடைந்த பலனைப்பற்றி பின் வருமாறு எழுதுகிறார்.

“தென்னிந்தியாவிற்கு நெற்களஞ்சியமென்று சொல்லப்படும் தஞ்சை ஜில்லாவில் நன்னிலம் தாலூகாவைச்சேர்ந்த திருமருகல் என்ற பாடல்பெற்ற ஒரு சிவ க்ஷேத்திரத்தில் பிறந்தவன். என்னுடைய ஊரில் பத்து அல்லது பன்னிரண்டு பூசுரர்கிரகங்கள் உண்டு. அதற்கு என் தகப்பனார் வைதீக காரியங்களை நடத்திவைக்கும் நல்லாசானாயிருந்தார். நான் என் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை. முதற் பிள்ளையாகிய முத்தண்ணாவென்பவர் என் தகப்பனார் வேலைக்கே தயார் செய்யப்பட்டு சடுதியில் வல்லவரானார் இரண்டு பையனுக்குகொஞ்சம் சங்கீதத்தில் பிரியம். அதனால் அவர் தாய் தந்தையர் சொற்கேளாமல் நாடகத்தில் சேர்ந்து நாடோடியாகி நாசமடைந்

தார் நான் முதலில் ஆங்கிலேயகவர்ன்மெண்டாரால் ஏழை குடியானவர்கள்மோசம்போகாவண்ணம் படிக்குமாறு ஏற்படுத்தப்பட்டிருக்கும் எலிமெண்டரி பாடசாலையில் அப்பியாசம் செய்தேன். கொஞ்சகாலம் படித்து அவ்விடத்து படிப்பை பூர்த்திசெய்துகொண்டு என் தகப்பனார் வைதீக சாஸ்திரியாயிருந்தபோதிலும் மற்றவர்களைப்போல் மேற்படிப்பு படிக்க வைக்கவேண்டுமென்ற அவாக்கொண்டவராய் நாகூருக்கு அனுப்பினார். தன்னருமைக்குழந்தையும் எல்லாரையும் போல் பி. ஏ. பி. எல். பரீக்ஷைகொடுத்து பெரிய உத்தியோகம் பண்ணுகிறதை பார்க்க வேண்டுமென்கிற அவாவையே உடையவராயிருந்தார். தர்ப்பைக்கட்டையைத் தூக்கும் சாஸ்திரிக்கு இவ்விதமான எண்ணம் உண்டாகலாமா? இது ரொம்பவும் பிசகானகாரியம் தானே என்று படிப்போர் யூகிக்கலாம். அதினால் பாதகமில்லை. ஏனென்றால் இக்காலத்தில் யார் யார் இன்னின்ன தொழில் செய்கிறது என்ற வரம்பில்லாமல் பிராமணன் தோல்கிடங்கு வைக்கிறதும் எண்ணெய் மண்டி வைக்கிறதும், சூத்திரன் வேதத்தின் உண்மைப்பொருளை உணர்ந்து தவம் செய்ய ஆசைப்படுகிறதும், தேவ பாஷையாகிய சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்ட நூற்களைப்படித்து மற்றவர்களுக்கு போதிக்கப் பிரியப்படுகின்ற இக்காலத்தில் என் தகப்பனார் எண்ணினது அவ்வளவு அநியாயமான காரியமன்று. நாகூரிலோ, பெரும்பான்மையோர் மகம்மதியர்கள். போராத குறைக்கு அவர்களுக்கு முக்கியமான கோயிலும் அங்கு ஒன்று இருக்கிறது. இங்கு அவர்களுடைய போதனையே எனக்கு ஜாஸ்தியாக ஏற்பட்டதினால் நான் அந்தணனாயினும் சிவன் விஷ்ணு என்பதையும் அவர்கள் கோயிலுக்கு செல்வதையும் மறந்துவிட்டேன். எனக்கு உபநயனமாயிற்று நாலானாளன்றையதினமே நான் சந்தியாவந்தனம் முதலிய சடங்குகளுக்கு வந்தனம் செய்து அனுப்பிவிட்டேன். நான் நாகூரிலுள்ள படிப்பையும் பூர்த்தி செய்விட்டதினால் மேல் படிப்புக்காக திருச்சிக்கு அனுப்பப்பட்டேன். "வர வர மாமியார் கழுதைப்போலானாள்" என்றபடி மேல் வகுப்பில் படிப்பதினால் எனக்கு அவ்காசமென்பதே இல்லாமற்போயிற்று. நான்



கவனம் வைத்துப்படித்து பரீக்ஷைக்கு பதிலெழுதத்தயாராயிருந்தேன். இவ்விடத்தில் ஒட்டைக்கூத்தனுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பதைப்போல் மகமதியர் சகவாசத்துடன் கிருஸ்தவர் சகவாசமும் ஏற்பட்டுவிட்டது. அதனால் நான் என்னுடைய குலம் கோத்திரம் முதலியவைகளையும்கூட முற்றிலும் மறந்துவிட்டேன் எனக்கு சமீபத்தில் பரீக்ஷை நேரிடாதிருப்பின் என் நாமதேயத்தைக்கூட மறந்திருப்பேன் என்னுடைய பரீக்ஷைக்காகிதங்களில் என் பெயரை அடிக்கடி எழுத வேண்டி வந்ததினால் அது மாத்திரம் மறப்பதற்கு ஹேதுவில்லாமலிருந்தது.

ஆனால் "சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே" என்பது போல அற்ப அறிவையுடைய யான் அறியாமல் செய்த பிழையைப் பொறுத்து அடியேனை ஆட்கொள்ளுவது ஆண்டவனின் கிருபையாதலாலும் கடமையாதலாலும் என்னை வலிய வழைத்து ஆட்கொள்வதே போந்து ஆவணியாவட்டத்திற்கு என்னூருக்கு வரும்படி என் தகப்பனார் கடிதமெழுதியிருந்ததாக என்னைப்பிடித்த நல்லகாலமோ என்னமோ நானும் தடைசெய்யாமல் ஊருக்குச் சென்றேன். என்னைப்போலவே வெளியூருக்கு வேலையாய்ப் போயிருந்த சிலரும் வந்திருந்தனர். இந்த இலக்ஷணத்தில் எனக்கு கல்யாணமாயிருந்தபடியால் என்னை எல்லாரையும் போல் பஞ்ச கச்சம் வைத்து கட்டிக்கொள்ளும்படி அங்கிருந்த சில பெரியோர்கள் ஆக்யாபித்தார்கள். "சித்திரமும் கைப்பழக்கம்" எதுவும் பழக்கமிருந்தாலல்லவோ வரும். நான் அவர்கள் சொல்லியவாறு செய்ய எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் முடியாமல் போயிற்று. வைதீகசிரோன்மணியாகிய என் தமயன் அவ்வேலையில் எனக்கு மிகவும் உதவிபுரிந்தார். சிரவணத்தின் விஷயமாய் சொல்லவேண்டிய மந்திரங்களை யெல்லாம் சாஸ்திரிமார்கள் சரியாகத்தான் சொன்னார்கள் என்று என் தமயன் சொல்லீனுற்றார். நான் அவைகளின் பொருளை அறிய சக்தியற்றவனாயிருந்ததினால் கடைத்தெரு இராமாயணமென மதித்தேன். பின்னர் கோயிலுக்குச் சென்றோம். என்னூர் சிறிய

தாயிருந்தபோதிலும் கோவில் பெரியதென்று முன்னமேயே சொல்லியிருக்கிறேனல்லவா? நானும் என் தமயனும் எல்லாரையும்போல் அவ்விடம் சென்று அநேக விதமான பிம்பங்களையும் மணிகளையும், கட்டியம் சாமரை முதலியவைகளையும் கண்டு வியப்புற்றவனாய்ப் பக்கத்தில் நின்ற என் தமயனைக் கேட்க அவரும் வியப்புற்று இன்னின்னதால் இன்னின்ன பிரயோசனம் என்று விளக்கிக்காட்ட, தெரிந்ததும் தெரியாததுமாய் என் தமயன் முகத்தைப்பார்க்க அவர் மிகவும் வருத்தமடைந்து தெளிவாய் தெரியும்படி சொல்லிக்காட்டினார். இவைகளெல்லாம் தெரியாததைப்பற்றி ரொம்பவும் வருத்தமாகத்தானிருந்தது. இன்னும் அவர் என்னை தன்னோடு சிலநாள் கோவிலுக்கு வரும்படி ஆக்ஞாபிக்க நானும் அத்தொழிலை முநற்றொழிலென சிரமேற்கொண்டு தினந்தோறும் அவருடன் சென்று கொஞ்சநாட்களில் அபரிமிதமான ஆனந்தத்தை அடைந்தவனாய்க் கோயில் உபயோகத்தையும் தெரிந்துகொண்டேன் என்றுசொல்லுகிறார்.

குறவர் முதலிய நாகரீகத்தில் தாழ்ந்த ஸ்தானத்தைப் பெற்றவர்கள்கூட தாங்கள் தங்கள் தெய்வங்களை வணங்குவதற்கென்று ஒருகாலம் விதித்திருக்கிறார்கள். அவர்கள் அந்தக் காலத்தில் தாங்கள் எவ்விதமான அபூர்வ வஸ்துவை வேட்டையாடச் சென்றிருந்தாலும் அதைவிட்டு விட்டு தன்னிருப்பிடம் சேர்ந்து தன்னினத்தாருடன் தெய்வத்தைத்தொழுவார்கள். அவர்கள் தங்களுக்கு எவ்விதமானநோய் வந்தபோதிலும் மருந்து என்பதைத் தேடாமல் தெய்வத்தையே திருமருந்தென்று தீர்மானித்து தீராதநோய்களையும் தீர்த்துக்கொள்ளுகின்றனர். நாகரீகம் மிகுந்த நமக்குத்தான் எவ்வளவு பணம் சிலவழித்தாலும் தீராத வியாதிகள் வருகின்றன. நாம் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்னும்முதுமொழியை மதியாது கேவலம் மனிதனாலாக்கப்பட்ட பொருள்களை பெரிதென மதித்து அவைகளைத் தெய்வமெனத் தெளிந்து ஆராதிப்பதுபோல் அவைகளைப் பன்முறை குனிந்து குனிந்து பார்ப்பதுடன் அவைகளைப் பண்ணியவர்களுடன் பணிந்து பேசுகின்றோம்.



எந்தக்காரியத்தைச் செய்வதாயிருந்தாலும் நமக்கு முதலில் உறுதியென்பது வேண்டியது மிகவும் அத்யாவஸ்யமான காரியமே. நாம்படித்து பலவிதப்பொருள்களையும் நன்றாய்ஊன்றி அறிவதனாலும் பலமதங்களின் பயன்பெற்றதென்று கருதப்படுகின்ற பலவிஷயங்களை பலசமாசாரப்பத்திரிகைகளில் படிப்பதினால் நம்மனது ஒருவழிப்படாது தாமரையிலையிற் விடப்பட்ட தண்ணீரைப்போல் தத்தளிக்கின்றோம். அவர்களோ அப்படியில்லை. கல்வியறிவு யற்றவர்களாயிருப்பதினால் பல விஷயங்களை ஆராய்ந்தறிந்து நம்மாதிரி ஆவது அசாத்தியமானபடியால் அவர்கள் ஒருவழிப்பட்டு "மூத்தோர் சொற்கடைபிடி" என்பது போல தங்கள் பாட்டன் முப்பாட்டன் கொண்டாடிய தெய்வத்தையே அவர்கள் கொண்டாடும் மாதிரியே கொண்டாடுகிறார்கள். அதைத்தவிர மற்றவர்கள் எம்மதத்தைப் பற்றிபோதித்த போதிலும் செவிக்கொள்ளார். அவர்களுடைய தலைவன் எவ்வண்ணம் வணங்கவேண்டுமென்று கட்டளையிடுகிறானோ அவ்வண்ணமே அப்யந்தரமின்றி செய்வார்கள். அதனால்த்தான் அவர்கள் நினைத்த காரியங்களில் சில கைகூடுகின்றன. இதை விளக்க ஓர் சிறுகதை உண்டு. அது பின் வருமாறு. கொஞ்ச காலத்திற்கு முன் ஒருவைதீகபிராமணன் அவசரமாய் காட்டிற்கு பக்கத்திலுள்ள ஒரு ஊருக்குச் செல்ல வேண்டியிருந்தது. அவன் அஸ்தமிக்கும் வேளையில் நடுக்காட்டிலுள்ள ஓர் தடாகத்தைக்கண்டு சந்தியாவந்தனம் செய்ய ஆசைப்பட்டு தண்ணீரில் இறங்கி கிரமப்படி செய்து கொண்டிருந்தான். இதைத்தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த மூடனாகிய ஒரு வேடன் இப்பிராமணன் பரிகாசம் செய்கிறான் என்று கோபங்கொண்டவனாய்த் தன் கையிலிருந்த ஒரு பெருந்தண்டத்தைத் தூக்கிக்கொண்டே இவனருகில் வந்து என்னடா பரிகாசம்செய்கின்றாய் நாரணத்தைச் சொல்லுகிறாயா, கொஞ்சம் தாமதியாமல் இக்குண்டாந்தடியால் கொன்றுப் போடட்டுமா என்றான்.

(இன்னும் வரும்)

K. S. இராமச்சந்திரன்.

## காளமேகப்புலவர் சரிதம்.

நேரிசை வெண்பா.

" அம்புவியி லேபுலவ ராதரித்துத் தோத்திரஞ்செய்
தின்புறுஞ்சீர்க் காளமே கப்புலவன்—நம்புகதை
யிம்மா நிலத்தோர் கெழுதவருள் செயுமே.
கைம்மா முகத்தன் கழல். "

### ஊர்.

இப்புலவர் நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய பாண்டிநாட்டுத் "திருமோகூர்" காளமேகப்பெருமாள் கோவில் பரிசாரகரான ஓர் சோழியப் பிராமணருக்குச் சோழநாட்டிலுள்ள குடந்தைமாநகரென்னும் "கும்பகோணத்தில்" கி.பி. 15-ம் நூற்றாண்டின் பிற்பாதியில் பிள்ளையாயுதித்தனர். பருவமடைந்ததும் "மகனறிவுதந்தையறிவு" என்றாற்போல இவர் தமது தந்தையின் பரிசாரகத்தொழிலையே தாமும் மேற்கொண்டு உபகதிகள் தமதிருப்பாரிசத்திலும் பிரவகிக்கப்பாம்பணையின்மீது பள்ளிகொண்டு "அரங்கநாயகன்" எனத்திருப்பெயர்கொண்டுறையும் "ஸ்ரீரங்கம்" சேர்ந்து வண்டுழாய் மாலையணிந்த மாயற்குத்தொண்டுபுரிந்து ஜீவித்துவந்தனர். இவர் பிறந்தகத்தை அச்சிட்டுவழங்கும் "தனிப்பாடற்றிரட்டு," "விநோதமஞ்சரி." "புலவர் புராணம்," "அபிதான சிந்தாமணி," "தனிச்செய்யுட் சிந்தாமணி," "சிறப்புப்பெயரகராதி," "பாவலர்சரித்திரதீபகம்," முதலிய புத்தகங்களெல்லாம் கும்பகோணமென்றே சுட்டுவதால் நாமும் இவரைக் கும்பகோணத்தவரென்றே கூறுகிறோம். ஸ்ரீரங்கத்திற் பிறந்தவரெனக்கூறக்கேட்டுளோமேயன்றித்துணிந்து கூறுதற்கேற்ற மேற்கோளேதுவுமில்லை. இவ்வளவே இவர் பிறப்பைப்பற்றி நாமறிந்தவை.



### பெயர்.

இவர் இயற்பெயர் இன்னதென இதுவரையும் அறிய இயலவில்லை. பெரும்பாலும் நமது தமிழ்நாட்டில் வாழ்ந்த புலவர்கட்கெல்லாம் அவர் தந்தாய் தந்தையர் யிட்டுவழங்கிய உண்மைப்பெயர் இதுவென விளங்காத நிலைமையிலேயே இருந்து வருகிறது. இணைக்கப்பட்டேனும், இடத்தாலேனும், இடுகுறியாலேனும், ஒருபெயர் நமது தமிழ்ப்புலவரை மருவி அழியாது வழக்கத்திலுளதாதலால் அவர்களது இயற்பெயர் நாளடவில் மறைந்துபோவதற்கு இடமாய் நின்றது.

### சமயம்.

இவர் சாதியில் சோழியப் பிராமணர், சமயாசரத்தில் வைணவராயிருந்தவர் இடையில் நேர்ந்ததோர் காரணத்தால் சைவராயினர். இவர்:—

" மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் சென்ம மெடுக்கவா. "

எனத்திருமாலையும்,

" நீறாவாய் நெற்றி நெருப்பாவா யங்கமிரு
கூறாவாய் மேனி கொளுந்தாவாய்—மாறாத
நட்டமாவாய் சோறு நஞ்சாவாய் நாயேனை
இட்டமாய்க் காப்பா யினி. "

எனச் சிவபெருமானையும் ஒப்ப நினைந்து துதிப்பதால் இவர் இருகடவுளர்களையும் சமமாகப் பாவிக்கும் சமரஸ நிலையுடையவரெனலாம். ஆனால், திருமாலைவிடச் சிவபெருமானைப் பற்றிய பாடல்கள் பெருந்தொகையாகக் காணப்படுவதாலும், அவனது ஒப்பற்ற திருவிளையாடல்களைப்பற்றிப் பன்னிப் பன்னிப் பலமுறையுரைத்து அவனது மங்கள குணானுபவத்தில் ஈடுபடுவதாலும் சிவபெருமானையே சிறந்தவரெனக் கருதுகின்றனர்போலும். இவரியற்றிய "பரப்பிரம விளக்கமும்," "திருவானைக் காவுலா" வும் இதற்குப்போதிய சான்றாம். அன்

னும், சிவனது குமாரர்களாகிய கணபதியையும், முருகனையும் “மூப்பான் மழுவும்,” “அப்பனிரந்துண்ணி” எனப்புகழ்ந்து பாடுதலாலும், இவர் சைவ சமயத்தில் அளவற்ற காதலுடையாரென்பது விளங்கும்.

## ஜீவியகாலமும் பரத்தை மோகமும்.

இவர் தமது பாலியத்தில் பள்ளியிற் பயின்று கல்விகற்றதும், அக்கால வளர்ச்சியைப்பற்றிய விசேடமும், பிறவும் இப்பொழுதொன்றும் திட்டமாய்க்கூறுவதற்கில்லை. இவரைப்பற்றி தற்காலம் வழங்கும் சரித்திரத்தைக்கொண்டு நாம் அறிந்தவரையில் இவர் ஆரம்பகாரியம் ஆலய மடப்பள்ளியில் பரிசாரகத்தொழிலன்றி வேறொன்றுந் தெரியவில்லை. இத்தொழிலின் வருவாயைக்கொண்டுதான் “திருஆனைக்கா”விலுள்ள ஆடல் பாடல் அழகிற்சிறந்தாளொரு கணிகைமீது காதல் பாராட்டி அபிமானித்திருக்கவேண்டும். அவள் ஜம்புகேசனுக்கு சிவத்தொண்டுபுரியும் சிவாலயத்தாசி அவள் பெயர் “மோகனங்கி” என்பர். இங்ஙனம் நிகழ்ந்துவரும் நாளில் மார்கழி மாதமொன்றில், மாணிக்கவாசக சுவாமிகள் மகோற்சவத்தில் “திருவெம்பாவை” சுவாமிசந்நிதியில் பாடும்முறை மோகனங்கிக்கு வந்தது. மோகனங்கியும் வழக்கப்படி தன்னோடொத்த தாசிகள் உடனிருந்து “திருவாசகத்தி”லுள்ள திருவெம்பாவையில்:—

“உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க” [19]

என்ற திருப்பாசுரத்தைப் பாடினள். அதுகேட்டவுடனிருந்த தாசிகள், இவள் வைணவரை வைப்புநாயகராகக்கொண்டிருந்தும், சைவதாசரையன்றி மற்றயோரைக் கணவனாகக் கருதேன் என்று மாறு கூறியதற்குக் கெக்கலிகொட்டி நகைத்தும் பரிகசித்தனர். பொறாத மோகனங்கி பழிப்புக்கிடமாக



நடந்துகொண்ட தனது செயலுக்கு வெட்கி மனம் வருந்தித் தன் வீடு சேர்ந்து வைணவ பரிசாரகர் வரும் தருணமறிந்து கதவடைத்துத் தாளிட்டிருந்தாள். பரிசாரகர் பதிவுபோல் தம்வேலைமுடிந்து சயனத்திற்குத் தாசி வீட்டையடைந்தனர். தன் வரவுக் கெதிர்நோக்கி வழிபார்த்துக் கதவுதிறந்து காத்திருக்கும் மோகனங்கி இன்று கதவடைத்து உள்ளிருக்கும் காரணம் யாதாயிருக்கலாமெனப்பலவாறு சிந்தித்தனர்! மயங்கினர்! வியந்தனர்! விளங்கவில்லை. முடிவில் கதவிடித்தனர். பதிலில்லை. பலவாறு வேண்டினர். குறையிரந்தனர். ஒன்றும் பலிக்கவில்லை. இறுதியில் இனிக்கதவு திறவாதவரையில், இவ்விடத்தே என்னுயிரை விடுவேன் என்றனர். தாசி பழிநேருமென்றஞ்சிக் கதவுதிறந்து பரிசாரகரைநோக்கி ஐய! இதுகாறும் கவனியாது நடந்துகொண்ட குற்றம் இன்று என்னைப் பெரிதும் அவமானத்திற் குள்ளாக்கிற்று. இனிக்கொன்றைமுடியும், பிறைச்சடையுமுடைய மோக்ஷகர்த்தாவாகிய சிவபெருமான் தொண்டர்கட்கன்றி ஆன்மகோடிகளில் ஒருவராகிய விஷ்ணுவினடியார்களைக் கனவிலுங்கருதுவதில்லையென விரதங்கொண்டுவிட்டேன். இதுதீர்மானம். ஆனதால், நீர் திருமண் காப்பும், துளசிமாலையும் நீத்து எஞ்சிவபெருமானுக்குரிய திருநீறும், உருத்திராக்கமும் தரித்துச் சிவதீக்ஷைபெற்று வந்தாலொழிய நும்முடன் கலந்துறவுகொள்ள மனமிசையேன் என்று பிடிவாதங்கொண்டனள். பரிசாரகர் மனம் பேதித்தது. தக்ஷணமே ஸ்ரீரங்கஞ்சென்று கோவில் பரிசாரகம் விட்டுத் திருஆனைக்காவடைந்து சிவதீக்ஷை பெற்று அகிலாண்ட நாயகியாரின் ஆலயத்தே பரிசாரகத்தமர்ந்தனர். தாசி மோகனங்கியும், தன்னபீஷ்டம் நிறைவேறியதற்காக மெத்தப்பரவசமடைந்து அதுமுதல் பரிசாரகரிடத்துப்பின்பும் அன்புமுதிர்ந்தவளாய்க் காதல் வயப்பட்டுக் களித்திருந்தனளென்ப.

இம்மடப்பள்ளியான் தாசி மோகனங்கியின் பிணைக்கால் தொட்டிலிலிருந்து தொடர்ந்துவந்த வைஷ்ணவத்தைவிட்டு சிவதீக்ஷைபெற்று வந்ததைச் சிலர் ஆக்ஷேபிக்கக்கூடும். ஆனால்,

இக்காலத்தும் சில புறமதக்கன்னிகைகளால் நம் இந்துவிட்ர்கள் பலர் மோகமேற்கொண்டு அப்புறமதத்தைத் தழுவுவதை நாம் கண்கூடாகப் பார்ப்பதில்லையா? மேலும் காமம் மதத்தையும். பதத்தையும் பார்க்குமா? காமங் கண்ணற்றதன்றோ? கல்வித் துறைபோய கலையினரும், காமத்துறையில் படிந்தழுவரென்றால் வேசிகமனனை ஓர் சாதாரணபரிசாரகன் தம்மதத்தைவிட்டு வேற்றுமதம் தழுவுதல் ஒன்றுசெய்வான்? மற்றெதுவுஞ் செய்யத்துணிவான். ஆகையால் இச்சம்பவத்தைப்பற்றி யாதோர் சந்தேகமுங்கொள்ளக்காரணமில்லை.

### வலுவில்நேர்ந்த வரப்பிரசாதமும், கவிபாட வாய்த்ததுவும்.

பரிசாரகர், தாசி மோகனாங்கியின் மையலிற் கட்டுண்டு வைஷ்ணவம் நீங்கிச் சைவம் பெற்றதருணம் திருஆனைக்காவில் ஓர் வேதியின் தனக்கு வித்தையில் பூரண பாண்டித்யம் உண்டாகவேண்டுமென அத்தலநாயகியார் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியைக்கருதி மனோவாக்குக்காயங்கள் ஒன்றுபட்டியமனத்துடன் உபாசித்து வந்தான். தேவியும், அவன் உண்மைத் தவத்திற்கிரங்கி அருள்புரிய மனமிசைந்து ஒரு நாளிரவு அழகிய ஒரு சிறு பெண்போலிருக்கொண்டு * வெள்ளைக்கலையுடுத்தித் தாம்பூல நிறைந்த வாயுடன் உபாசகன் கண்ணெதிரே

[இன்னும் வரும்]

* இதனை இவர்மேல் வருஞ்சரிதையில், அதிமதுரக்கவிராயனுடன் வாது புரியத் திருமலைராயன் சமஸ்தானத்திற்குச் சென்றபோது அரசனும் புலவரும், இவருக்கு ஆசனந்தராதிருந்ததற்கு வருந்தி, முன் தமக்கு அகிலாண்ட நாயகியார் கலைமகளார் வடிவங்கொண்டெழுந்து காட்சியளித்து வித்தையருளியதுபோல் இங்கும் அக்காட்சியருளி மனக்குறையகல கருணைபாலிப்பாய் எனவேண்டலும், தேவியும் அவ்வாறே காட்சியளித்துக் காளமேகப்புலவரிருக்கத் திருமலைராயன் ஆசனம் வளர்ந்து இடந்தர அருள்சுரந்ததை வியந்தற்குரியதே.



"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னை
சரியா சனத்தில் வைத்த தாய்."

வெள்ளைப்பணி — வயிரத்தாலும் முத்தாலும் செய்யப்பட்ட ஆபரணம்.

இதனால் இவருக்குத் தமது பாடலில் கூறுவதுபோல் கலைமகளார், முன் தரிசனந்தந்தருளியது உண்மையென விளங்குகிறது. இங்ஙனம் புலவர்கள் தங்களுக்கு வரமருளிய கடவுளரின் தரிசனகோலத்தை அப்படியே தமதுகவிகளில் அமைத்துப்பாடுதல் கவிகளின் மரபோ, அல்லது அவ்வுபாசனமூர்த்திகளின் பாலுள்ள மெய்யன்போ நாமறியோம்.

அருணகிரி நாதரும் தமது திருப்புகழில் குமாரக்கடவுளை:-

இரங்கு கலிபனை பறிவுறு சடலனை
சவுந்த ரிகமுக சரவண பதமொடு மயிலேறித்-
தழைந்த சிவசுடர் தனையென மனதினி
லெழுந்த உரைசெயவரு முகநகையொளி

தழைந்த நயனமு மிருமலர் சரணமு மறவேனே. (105)

எனப்பாடுவதும், கவனிக்கத்தது.

---

### நமது பார்வைக்கெட்டிய புதிய தமிழ்ப்பிரசுரங்கள்.

அகமேபுறம்:—தேசாபிமானியாகிய **ஸ்ரீமான்** வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களா லியற்றப்பட்டது. இப்புத்தகத்தை முழுமையும் வாசித்ததில், அகமும் புறமும், மனத்தின் தன்மையும் வன்மையும், உயர்தர வாழ்வு முதற்பாடம் இரண்டாம்பாடம் மூன்றாம்பாடம், மனோ நிலைமைகளும் அவற்றின் காரியங்களும் அரிய விஷயங்களாகக் காண்கின்றன.

இது ஒவ்வொரு தமிழரும் பார்க்கவேண்டிய அவசியமான நூலாம். இப்புத்தகத்தை ஒவ்வொரு தமிழரும் கைக்கொண்டு இதைப்போன்ற பல நூல்களை ஷை நூலாசிரியரைக்கொண்டு வெளியிடச்செய்யவேண்டும். இதன் விலை அணா எட்டு.

**மெய்யறம்:**—இப்புத்தகம் தேசாபிமானியாகிய ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் இயற்றியது. அரிய பல நீதிகளை ஒவ்வோரடிச்சூத்திரம் 10 கொண்ட. மாணவவியல் முதல் மெய்ந்நிலையடைதல் இறுதியாக 125 அதிகாரங்களையுடையது. கற்றற்கெளிது அரும் பதவுரையமையப்பெற்றது ஒவ்வொரு தமிழருங்கையாள வேண்டிய அவசியமான நூல் விலை அணா எட்டு.

மேற்கண்ட இரண்டு புத்தகங்களும் ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கெழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

**சிவஞான சித்தியார் சுபக்கப்பொழிப்புரை.**—திருக்கைலாயப் பரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனத்து திராவிடமாபாடிய கர்த்தராகிய மாதவச் சிவஞான யோகிகள் பொழிப்புரையைத்தழுவி ஷை ஆதீன சைவப்பிரசாரகர் ஆகிய தூத்துக்குடி ஸ்ரீமான் முத்தைய பிள்ளையவர்கள் எழுதி வெளிப்படுத்தியது. சைவ சமய குரவராகிய ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த சிவஞானசித்தியார் சுபக்க மூலத்திற்கு, ஸ்ரீ மறைஞான தேசிகர், ஸ்ரீ சிவாக்கிரயோகிகள், ஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர், ஸ்ரீ சிவஞானயோகிகள், ஸ்ரீ நிரம்பவழகியதேசிகர், ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகசுவாமிகள் முதலிய ஆறு மகான்களால் இயற்றிய உரைகள் அச்சிடப்பெற்று வெளி வந்துள்ளன. பின்னும் சொர்க்கபுர ஆதீனம் சிவப்பிரகாச முனிவர், இயற்றிய உரையும், திருவாரூர் சிதம்பரநாததேசிகர் இயற்றிய உரையும் இன்னும் அச்சிடப்படாதன. முத்தைய பிள்ளை அவர்கள் எழுதிய பொழிப்புரையுள்பட சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு நமக்குத் தெரிந்தவரையில் ஒன்பது உரை இருப்பதாகத்தெரிய வருகிறது. பின் பக்கம் இதில் பிள்ளை அவர்களுடைய உரை இலக்கண இலக்கியப் பொலிவுள்ளது இக்காலத்திற்கு மிகவும் பயன்படத்தக்கது.

ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள் பதவுரையைத் தழுவியது. சொற்செறிவும் பொருட் பொலிவுங்கொண்டு பிரகாசிப்பது. நந்தமிழ்ச் சிறுரும் இலகுவிற்பொருளறிந்து கொள்ளத்தக்க இலேசான நடையையுடையது. இவ்வரும் பெரும் புத்தகத்தை நமது பார்வைக்கு அனுப்பிய பிள்ளையவர்களுக்கு வந்தனம். விலை ரூ. 1—8—0 தான்.



**பூஜா ராமாயணம்:**—சிறிய உருவத்திற் பெரிய விஷயத்தையடக்கிய இப்புத்தகம் வரப்பெற்றோம். இஃது இராமாயணத்தைப் பூஜா காலத்தில் முற்றிலும் பாராயணம் பண்ணுவதற்கு, இயலாதிருக்குங் கஷ்டத்தை நிவர்த்தி செய்யவேண்டி, ஸ்ரீமத் ராமாயணத்தின் ஸாரமான அம்ஸங்களைத்தொகுத்து சுலப தமிழ் வசனமாக எழுதப்பட்டிருக்கிறது. சொன்னயமுதற் பன்னயங்களுஞ்செறிந்து விளங்குகிறது. இதன் ஆசிரியர் கும்பகோணம் ஸ்ரீமான் G. இராமச்சந்திர நாயுடுகாரவர்களாவார். விலை அணா ஒன்றே. கும்பகோணம் ஆரியன் பிரஸில், கிடைக்கும். ஒண்ணரையணா லேபிள் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**ஸர்வஜன ரஞ்சனி:**—டிம்மி ஐந்துபாரம் கொண்டதாக சென்னை திருவல்லிக்கேணியிலிருந்து R. வைத்யநாதையரவர்களால் வெளியிடப்படும் ஒருமாதாந்தத்தமிழ் பத்திரிகை. இதில் இதுவரையும் வெளிவராத வடமொழியிலுள்ள பலநூல்களின் மொழிப்பெயர்ப்புக்கள் செவ்வனே எழுதப்பட்டு வருகின்றன. இப்பத்திரிகையை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கவேண்டுமென்பது இதன் பெயராலேயே நன்கு விளக்கமாகிறது.

**விஸ்வகர்மன்:**—சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தத் தமிழ்பத்திரிகையாகும் இது. இப்பத்திரிகை சுத்தமான பிரிண்டும் உயர்ந்தபைண்டும் உடையதாய் அநேக விஷயங்களைத் தன்னகத்தில் அடக்கிக்கொண்டு ஒவ்வொருமாதமும் வெளிவருகின்றது. இதின் செப்டம்பர் மாதச்சஞ்சிகை கிடைக்கப்பெற்றோம். விஸ்வகுலாபிவிர்த்தி பலவிஷயங்களும்; பொதுவாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாததாகிய பலவிஷயங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் புலாலுண்ணல் புண்ணியர்க்கழகல்ல, கம்பர் பிறப்பு முதலிய வியாசங்கள் பாராட்டத்தக்கன.

**ஞானபாநு:**—இது சென்னை மைலாப்பூரினின்றும் நடைபெறும் ஒரு மாதாந்தத்தமிழ் பத்திரிகை. இதன் ஆசிரியர் தேசநன்மையின் பொருட்டு உழைத்துவந்தவரும் வருபவருமாகிய ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களுடன் ஒத்துழைத்த பிரம்மஸ்ரீ "சுப்பிரமணிய சிவம்" என்பவர். இப்பத்திரிகையில் இம்மை மறுமை இன்பங்களுக்கேதுவாகிய அரிய பெரிய விஷயங்கள் வெளிவருகின்றன. இத்தகைய பத்திரிகை என்றும் குன்றாது நடைபெறும்படி இறைவனருள் புரிவாராக.

பத்திராதிபர்.

## ஒழுக்கம்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் கல்வியின் பெருமையைச் சொல்லவேண்டிய விடத்து கல்வி என்று ஓர் அதிகாரத்திற் சொல்லியது உலகத்தவர்க்குப் போதுமோ வென்ற நோக்கத்துடன் கல்லாமை யென்று பின்னுமோர் அதிகாரம் கூறினாற்போல் ஒழுக்கத்தைப் பற்றியும் ஒழுக்க முடைமை என்று ஓர் அதிகாரத்தாற் கூறிப்பின்னும் அவ்வொழுக்கத்தை கைப்பற்றாதவர்களுக்கு வருவனவற்றைப்பற்றி கூடாவொழுக்கம் எனப் பின்னுமோர் அதிகாரம் கூறியிருக்கின்றார் எனச் சிலர்கூறுவார். ஆசிரியர் நல்லந்துவனாரால் முப்பால் மொழிந்த முதற்பாவலர் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட திருவள்ளுவனார் ஒழுக்க முடைமையை இல்லறவியலிலும் கூடாவொழுக்கத்தைத் துறவறவியலிலும் கூறியிருக்கின்றார். இதிற் சிலர் அபிப்பிராய பேதம் கூறுவர். இதன் விபரங்களைப் பல்காலும் பல நூலாராய்ச்சியால் என்னினும் பேறறிவு வாய்ந்தும் இச்சங்க அக்கிராசனம் வாய்ந்தும் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ. சுவாமி வேதாசலனார் அவர்கள் அமையம் நேர்ந்துழி அமைத்துக்காட்டுவார்கள். பொதுவாக நோக்குமிடத்து ஒழுக்கம் உடையவர்களுக்குப் பல நன்மையும், கூடாவொழுக்கமுடையவர்களுக்குப் பலதீமையும் உண்டா மென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம் இனி ஒழுக்கமென்னுஞ் சொல்லுக்குத் தங்கள் தங்கள், வருண ஆச்சிரமங்களுக்குச் சொல்லப்பட்ட "ஆசாரம்" என்பது பொருள்என்று பெரியார் கூறுவர். இதை ஒவ்வொருவரும் உடையவர்களாயிருக்க வேண்டு மென்னும் நோக்கத்துடன், ஒழுக்கமுடைமை யென்பதாகத் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் அதிகார வகையாற் கூறியுள்ளார். ஒழுக்கமானது பலவிதத்திலும் மேம்பாட்டைத் தருதலால் அவ்வொழுக்கத்தை உயிரைக்காட்டிலும் சாவதானமாகப் பாதுகாக்கவேண்டும். இது பற்றியன்றோ நாயனாரும் "ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்கம் உயிரினுமோம்பப்படும்". என்று கூறியுள்ளார். பின்னும் ஆசாரத்தை ஒன்றாலும் அழிவுபடாமற்



விரும்பிக்காக்கக் கடமை ஒவ்வொருவருக்கும் அவசியம்வேண்டும். பலதருமங்களையும் ஆராய்ந்து பார்த்து இவற்றுள் இம்மைமறுமைகளுக்குத் துணையாவதும், மனத்தை அடக்கித்தெளிந்து அறிந்தாலும் எவர்க்கும் துணையாய்முடிவதும் அவ்வாசாரமே ஆதலால் ஒழுக்கத்தைக் காக்கின் அவ்வொழுக்கமே துணையாம்.

பின்னும் எல்லார்க்கும் தத்தம் வருணத்துக்கு ஏற்ற ஆசாரமுடைமையானது குலமுடைமையாகுமென்றும் அவ்வாசாரத்தினின்றும் தவறுதலானது தாழ்ந்த ஜாதியில் தள்ளிவிடும் என்பதும், ஒழுக்கமே உயர்குலமென்பதும் வேதநூலோதிப் பொருளுணரும் (பிராமணாதி ஜாதியாரும் அவ்வேதத்தை மறந்தாலும் பின்பு அதை யோதியுணரலாம். ஒழுக்கத்தினின்று தவறினால் ஜாதியாசாரம் ஏற்படமாட்டாதென்பதும் பொருமை யுள்ளவனிடத்துச் செல்வம் இல்லாமைபோல ஒழுக்கமாகிய ஆசாரமில்லாதவனிடத்து மேன்மையில்லை யென்பதும் பெரியோர் ஒழுக்கங் குறைதலால் இழிகுலமாதலையறிந்து ஒழுக்கத்தில் குறையார் என்பதும் ஒழுக்கத்தால் மேன்மையும் ஒழுக்கமின்மையால் தாழ்மையும் உண்டாமென்பதும் நல்லொழுக்கம் நன்மைக்கு வித்தாகும் என்றும் தீய ஒழுக்கம் இருமைகளிலும் துன்பத்தைத் தரும் என்பதும் நல்லொழுக்கம் உள்ளவர்கள் தீய சொற்களைச் சொல்லமாட்டார்கள் என்பதும் பொய்யாமொழியார்திருவாய்மலர்ந்தருளிய நூன்முறையிற்கண்டதாம். இவ்வளவு அருமைபெருமைவாய்ந்த ஒழுக்கமுடைமையும் உலகத்திற்கேற்பவிருத்தல் வேண்டுமென்பதும், உலகநடக்கேலாவிடத்துப் பல்நூல்களைக்கற்றும் பயனில்லை என்பதை திருக்குறளாசிரியர் 'உலகத்தோடொட்டவொழுகல்' பலகற்றுங்கல்லார் அறிவிலாதார் என்று கூறியுள்ளார். அறிவு விசாலத்திற் குரிய பலநூல்களைக்கற்றறிந்தாலும் உலகநடையில்லாவிடத்து விவேகமில்லாராவர்என்பதும் விளங்குகின்றது. ஒழுக்க முடைமைக்கு ஆதாரம் அடக்க முடைமையாம் ஒழுக்கமுடைமையால் அன்புடைமை இனியவை கூறல், செய்ந்நன்றியறி[illegible] நடுவு

நிலைமையுடைமை, பிறனில் விழையாமை, பொறுமையுறுமை, வெஃகாமை, புறங்கூறாமை முதலிய நற்குணங்கள் தாமே வந்தடையுமெனப் பெரியார் கூறுவர்.

இக்காரணம் பற்றியே செந்நாப்போதாரும் மேற்கூறிய குணங்களைக்கூறும் அதிகாரங்களை ஒழுக்கமுடைமைக்கு முன்னும் பின்னுமாக அமைத்திருப்பதாகப்பெரியார் கூறுவர். இவ்வொழுக்க விசேடத்தை ஸ்ரீமதி ஔவையாரும் "ஒப்புரவொழுகு" எனக்கூறியுள்ளார். இதற்கு உலக நடையையறிந்து நீ அந்தவழியிலே நட என ஸ்ரீமத் ஆறுமுக நாவலர் பெருமானும் உரைகூறியுள்ளார் ஒழுக்கம் என்னும் சொற்கு நடையெனப் பொதுவாகப் பொருள் படுமாயினும் நல் நடையைக்கொள்வதே சிறப்பெனப் பெரியோர் கூறுவர். மணம், நாற்றம் என்னும் சொற்கள் பொதுவாக வாசனையைக்குறிக்குமாயினும், மணம் என்னும் சொற்கு நல்வாசனையும், நாற்றம் என்னும் சொற்கு துர்வாசனையும் உலகத்தார் கொள்வது போல், ஒழுக்கம் என்பதற்கும், நல் நடை எனப்பொருள் கொள்ளுதலே சிறப்பாம். ஒழுகு என்னும் பகுதியடியாகப் பிறந்ததொழிற் பெயரென இலக்கணம் உணர்ந்தார் ஒழுக்கம் என்றும் சொற்கு இலக்கண முடிபு கூறுவர். இவ்வொழுக்கம் மனத்தூய்மை முதலிய மனத்தால் அனுட்டிக்கவேண்டுவனவும் இனியவை கூறல் முதலிய வாக்கால் அனுட்டிக்கவேண்டுவனவும், பிறர்க்கின்னா செய்யாமை முதலிய சரீரத்தால் அனுட்டிக்கவேண்டுவனவுமாக திரிகரணங்களாலும் செய்யக்கூடியனவாம். இவ்வொழுக்கத்தை போலியாகச்செய்யாமல் உள்ளபடியே செய்து பழகவேண்டும். போலி ஒழுக்கத்தைப்பற்றித்திருவள்ளுவரும் "வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்களைந்து மகத்தேநகும்" எனக்கூறியுள்ளார். வஞ்சகன் ஒழுக்கத்தை அவன் பஞ்ச பூதங்களை சிரிக்குமாயின் பிறர் அவனைப்பற்றி ஒன்றுங்கூறவேண்டுவதில்லையே? நித்திய கருமத்தை ஒழுங்குற நடத்தல் சிறந்த வொழுக்கமாம். அவ்விஷயம் "வைகறையாமம் துயிலெழுந்து தான் செய்யும் நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற் றந்தையுந்தாயுந்



தொழுதெழுகவென்பதே முந்தையோர் கண்டமுறை" என்பன முதலிய ஆசாரக் கோவைச்செய்யுள்களாலும் சீர்பெறுமனாதி சிவாகமப்படியே நேர்பெற நித்திய நியமம் புரிவோர் கதிரவனெழுமுன் கடிகையைந்தென மதிபெறவெழுந்து மகேசனை நினைவது முதலிய நித்திய கன்மானுட்டான அகவல் முதலிய அகவல்களாலும், நித்திய கன்மநெறிக்குறளாலும் ஸ்ரீமத் ஆறுமுக நாவலர் பெருமான் முதலிய பெரியாரியற்றிய வசனக்கிரந்தங்களாலும் விரிவாயறியலாம். ஆகையால் ஒழுக்கமும் சிறந்த அறமேயாம் சுபம்.

இவ்வொழுக்கத்திற்கு "தந்தைதாய்ப்பேண்" "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" "அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்" "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" முதலிய ஔவைப்பிராட்டியாரின் அமிழ்தினுமினிய சூத்திரங்களையும், சிவஞானிகளையும் சிவலிங்கப் பெருமானையும் சிவமெனவே தேறி வழிபடவேண்டுமென்பதையும் மாத்ருதேவோபவ, பித்ருதேவோபவ, ஆசார்யதேவோபவ, அதிதிதேவோபவ முதலிய உபநிஷத் வாக்கியங்களையும் அதன் அர்த்தங்களையும் பின்னும் நம் இந்து மதத்திற்குரிய விதித்தன செய்தல், விலக்கியன நீக்குதல் முதலியவற்றைப் போதிப்பதற்கு மத சம்பந்தமான பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் அங்கங்கு நம் இந்துமத கனதனவான்களால் நியமிக்கப்பட்டு நம் அக்கிராசனாதிபதி போன்ற கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர்களால் மேல் பார்க்கப்பட்டு ஒழுங்குற நடத்துவிக்கவேணுமாய் நம் இந்துமத கனவான்கள் யாவரையும் மிக்க வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்விதம் நடத்தினால் நல்லொழுக்கம் சீக்கிரம் மிகுதியாய் உலகத்தில் தலையெடுக்கும் "நிலமகட்கழகார் திருநீணுதற்றிலகமொப்பது செம்பியர் வாழ்பதி மலர்மகட்கு வண்டாமரை யோன் மலர்ந்தலகில் சீர்த்திருவாரூர் விளங்குமால்" என்று ஸ்ரீசேக்கிழார் பெருமானால் புகழப்பட்ட நிறைசெல்வத்திருவரூரில் நல்லொழுக்கத்தை மிகுதியும் போதிப்பிக்கவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் 'பிராமணச்சிறு

வர்களுக்கு வேதமாதிய நூல்களைப்போதிக்கவும் சிவத்துவிஜர்களுக்கு வேத சிவாகமம் ஆதிய உயர்ந்த சாஸ்திரங்களைப் போதிக்கவும் சுத்த சைவர்களுக்கு தமிழ் வேதமாகிய தேவார திருவாசக அருட்பாக்களை சரளியாதி சங்கீத அப்பியாசம் ஆதாரமாகப் போதிக்கப்பட்டுப் பண்முறைகளோடு போதிப்பிக்கவும், மற்றும் யாவர்க்கும் நீதி நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும், வடமொழிவாதாரத்தோடு செந்தமிழில் போதிப்பிக்கவும், அரசாங்கத்திற்கு ஏற்ப ஆங்கில பாஷையைப் போதிப்பிக்கவும் இச்சமயம் ஐந்து வகுப்பினைபுடையதாயும், ஸ்ரீ சிவஞானபோத முத்தமிழ் வித்தியாசாலை என்னும் பெயரினையுடையதாயும் உள்ள ஓர் வித்தியாசாலையானது ஸ்ரீ தியாகராஜப்பெருமான் பூங்கோயிலுள்ள தேவாசிரியன் காவணம் திருத்தொண்டர் திருக்கூட்ட மகாசபையின் காரிய தரிசி ஸ்ரீமன். நாராயணசாமி பிள்ளையின் மானேஜ்மெண்டால நடைபெற்று வருகிறது.

இவ்வித்தியாசாலையில் மாணாக்கர்களுக்குச் சம்பளமில்லை. போதகர்களது மாதவேதனம் அன்பின் மிகுதியால் தாதுருத்துவம் வாய்ந்து விளங்கும் கனதனவான்களால் நடைபெற்று வருவதோடு நடைபெற வேண்டியதுமாயிருக்கிறது. இக்கலாசாலையானது நம்மிந்துமதச்சிறார்களுக்கு ஒழுக்கத்தைப்போதிப்பிக்க முக்கிய ஆதாரமாயிருப்பதால் ஈண்டுள்ள கனதனவான்களும் இதைபோஷிக்கக் கடமைப்பட்டுள்ளவர்களே. இதற்கு ஆதாரமாக இச்சிவராஜதானி க்ஷேத்திர வாசியாகிய ஸ்ரீமான் ஆட்கொண்டார் பிள்ளையவர்கள் சுமார் 10 தினங்களுக்கு முன் திருவாரூரில் மேற்குறித்த கலாசாலையில் சப்ரிஜிஸ்தார் பிர்ம்மஸ்ரீ விஸ்வநாதய்யர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் "நிகமாகம திராவிட வேதபோதகம்" என்ற ஓர்விஷயத்தை அருமையாக சுமார் 2 மணிவரையில் பிரசங்கித்துத் தான் இக்கலாசாலைக்குப் போஷகராயிருப்பதோடும், தேவாரஉபாத்தியாகருக்கும் மதபோதக உபாத்தியாயருக்கும் சிவராஜதானி க்ஷேத்திரமாகிய இந்நாகப்பட்டின திருநகரிலுள்ள கனதனவான்களைக்கொண்டே கூடியவரையில் மாதவேதனத்துக்குப் பொருள் உதவிசெய்ய வாக்சகாயம் செய்வதாயும் தானும் தன் சக்திக்கேற்பபொருளுதவி செய்வதாயும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற கலாசாலைகள் எங்கும் உற்பத்தியாகி எல்லாம் வல்ல இறைவன் திருவருளை முன்னிட்டு இனிது நடைபெற்று ஒழுக்கமும் யாண்டும் யாரிடத்தும் நிலைபெறும் வண்ணம் எம்முழு முதற் கடவுளாகிய வழங்கற்கரசாம் வள்ளலாரையும் மன்றிடைமா நடனஞ்செய்யும் மகாதேவரையும் இச்சபையிலிருக்கும் பெரியோர்களாகிய ஆஸ்திக சிகாமணிகளையும் முக்காரணங்களாலும் வந்திக்கின்றேன்,

(வரும்)

மு. சாமிநாத தேசிகர்.



---

## சரஸா மோகனசுந்தரி அல்லது
### மூன்று சகோதரிகள்.

[தொடர்ச்சி]

இருப்பிடம், தீய குணங்களெல்லாம் சேர்ந்து திரண்ட ஒரு பிண்டம்! இப்படிப்பட்ட குணவதி இப்போது சீர்காழி வந்து சேர்ந்துவிட்டாள்!

எப்போது குமாரசுவாமி பிள்ளை இறந்துபோனாரோ அப்போதே குணவதி வீட்டுக்கு எஜமானி ஆகிவிட்டாள். சிதம்பரம் பிள்ளை வீட்டுக்கு வெளியே புலியைப்போலிருந்தாலும் வீட்டுக்குள் வந்தால் பூனையைப்போல் ஒடுங்கி விடுவார். சிதம்பரம் பிள்ளையின் மாற்றாந் தாயாகிய கற்பகமும் அவளுடைய மூன்று புத்திரிகளும் தன்னுடைய வீட்டிலிருப்பதில் குணவதிக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை. அவர்களை ஜாடையாகத் தூஷிக்கவும், இழித்துப்பேசவும் ஆரம்பித்தாள். சாதாரண விஷயங்களுக்கெல்லாம் கண்டபடி கோபித்துக் கொள்ளுவாள். கற்பகத்துக்கு இவளுடைய ஹிம்சை பொறுக்க முடிகிறதில்லை. எங்கேயாவது கண்ணுக்குக்காணாத இடத்திற்குப் போய்விட்டால் நலமென்று நினைப்பாள். பிறகு தன்னுடைய மூன்று புத்திரிகளை உத்தேசித்தும், சிதம்பரம்பிள்ளை தன்னிடமும் தன் புத்திரிகளிடமும் கொண்டுள்ள அன்பைக்கருதியும் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொள்ளுவாள். அழகும் இளமையும் நிறைந்துள்ள மனைவியின் வாக்கு புருஷனுக்கு வேதவாக்கியமாகப்படுவது உலக இயல்புதானே? சிதம்பரம் பிள்ளையின்

மனைதைத் தன்னுடைய இஷ்டப்படிக்குத் திருப்புவது குணவதியைப் போன்ற குணவதிகளுக்கு ஓர் பெரிய காரியமா? குணவதியின் தலையணை மந்திரோபதேசம் சிதம்பரம் பிள்ளையின் காதில் சிறுகச்சிறுக ஏறி வந்தது. ஒருநாள் இரவு உல்லாசமாக இருக்கும் சமயத்தில் சிதம்பரம் பிள்ளையும், குணவதியும் கற்பகத்தின் விஷயமாயும் அவளுடைய குமாரத்திகள் விஷயமாயும் என்ன ஏற்பாடு செய்கிறதென்பதைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். அவர்களிருவருக்குள்ளும் நடந்த சம்பாஷணை பின் வருமாறு:-

"என்னங்க; உங்களைத்தானே! நீங்கள் செய்கிறது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. நாலாயிரம் ரூபா கொஞ்சமாகவா இருக்கும். அவ்வளவு பணத்தை அவர்களுக்குக் கொடுத்துவிட்டால் நம்முடைய குழந்தையின் கதி என்னவாகும்?" என்று குணவதி சிதம்பரம் பிள்ளையிடம் சொன்னாள்

"அப்பா சாகும்போது என்னைக் கேட்டுக்கொண்டது என்ன தெரியுமா? எப்படியாவது அவருடைய இளைய சம்சாரமாகிய கற்பகத்தையும், அவளுடைய மூன்று புத்திரிகளையும் காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நானும் அப்படியே ஆகட்டுமென்று வாக்குக் கொடுத்துவிட்டேன். ஆதலால் அவர்களுக்கு நாலாயிரம் ரூபா கொடுக்கத்தான் வேண்டும்." என்று சிதம்பரம் பிள்ளை பதில் சொன்னார்.

"நீங்களென்ன சித்த பயித்தியமாயிருக்கிறீர்களே சாகப் போகிறவர்களுக்குப் புத்தி சுவாதீனம் இருக்காது என்பது உங்களுக்குத்தெரியாதோ? சித்த சுவாதீனமில்லாமல் சாகிற சமயத்தில் அவர் ஏதோ உளறினால் அதை உண்மையென்று எடுத்துக்கொண்டீர்களே! நல்லாயிருக்கிறது; உங்களுடைய புத்தி! அவர் சரியான சித்த சுவாதீனத்தோடு இருந்தால் ஒரு செப்புக்காசுகூட அவர்களுக்குக்கொடுக்கும்படி அவர் சொல்லியிருக்கமாட்டார் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்." என்று குணவதி சொன்னாள்

"கண்மணி! இவ்வளவு ரூபாய் அவர்களுக்குக்கொடு என்று அவர் சொல்லவில்லை. அவர்கள் கஷ்டப்படாமலும், கண்ணைக்கசக்காமலும், இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும், அதற்காக ஏதாவது செய்யவேண்டுமென்றும் சொன்னார். அவருடைய விருப்பத்தை நிறை

[தொடரும்]

நாகை ஸி கோபாலகிருஷ்ணபிள்ளை.

உ


# கமலாஸனி

# Kamalasani.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம் 3. { 1915ளு மார்ச்சுமீ } சஞ்சிகை 3.


OFFICE OF THE REGISTRAR OF ... 19 MAR 1915 MADRAS.

## வாய்மை.

வாய்மை, உண்மை, மெய்மை, சத்தியம் ஆதியன ஒரு பொருட்கிளவி. வாய்மை, உண்மை, மெய்மை என்பன வாயினது தன்மை, உளத்தினது தன்மை, மெய்யினது தன்மையெனப்பொருள்படும் ஆகவே மனம், வாக்கு, காயம் மூன்றும் பரிசுத்தமுடையனவென்பது சொல்லாமலே விளங்கிக் கிடக்கின்றது. மனிதர்கள் பிறந்து ஐந்துவயதாமளவும் வாய்மையையே பேசுகின்றவர்களாக இருக்கின்றார்கள். அதுவரையும் அவர்களது மனம், வாக்கு, காயங்களும் பரிசுத்தமுடையதாகவே இருக்கின்றன. அதன் பின்னரேதான் பொய்கூறப் பழகுகின்றார்கள். அவ்வாறு பொய்கூறாதிருக்கும்படி அவர்களைச் செய்யும் பொருட்டே நம்முன்னோர்கள் பள்ளிக்கூடப்பாடமாக ஏற்படுத்தியிருக்கும் சிறுசிறு பாடங்களாகிய நீதி நூல்களிலெல்லாம் பொய் சொல்லக்கூடாதென்று வற்புறுத்திக்கூறியிருக்கிறார்கள். இவ்வாறு கூறியதொன்றினாலேயே மனிதர்கள் வாய்மை உடையவர்களாக இருக்கவேண்டுமென்பது தெள்ளிதிற்றெரியக் கிடக்கின்றது.

பெறுதற்கரிய மானுடப் பிறவியைப்பெற்றவர்கள் அதனலாய பயனை அனுபவியாதவரை அவர்கள் மனிதரென்று கருதப்படமாட்டார்கள். மனிதப்பிறவியாலடையும் பயனைக்

கொடுப்பதற்கு மூலகாரணமாயுள்ளது எது என்று ஆராயப் புகுந்தால் "வாய்மை" என்றே காணப்படும். ஆகலான் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாய்மையை உயிரினும் மேலாகக் கருதிக்காக்கவேண்டும். வாய்மையைக் காப்பாற்றாத ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பமே கிடையாது. இதுபற்றித்தான் நம்முடைய பெரியார் ஒவ்வொருவரும் " வாய்மையைப் " படாத கஷ்டங்களைப்பட்டும் தன்னுயிரைக் கொடுத்தும் காப்பாற்றி அழியாப் புகழுடம்பை இந்நிலவுலகில் நிறுவிப்போயிருக்கின்றனர். இன்றும் அவர்களை நாம் கடவுளாகப் பாராட்டிப் புகழ்ந்து வருவது யாருக்குத்தான் தெரியாதது ?

அரிச்சந்திரன், நளன், தருமன், சிபி, தசரதன் முதலிய அரசர்கள் இன்றும் உள்ளர்போலக்காணப்படுவது அவர்களால் கையாளப்பட்டுவந்த வாய்மை ஒன்றினாலேயேயென்பது சகலருக்கும் தெரியாததொன்றல்லவே? அரிச்சந்திரன் வாய்மையைக் காக்கும் பொருட்டு தன் மனைவியையும் புத்திரனையும் விற்று, தான் புலையனிடத்தில் விலைப்பட்டுச் சுடுகாடு காத்தும், கஷ்டப்படவில்லையா ? தசரதன் வாய்மையைக் காக்கும் பொருட்டுத்தன்னுயிரையும் விடவில்லையா ? ஆதலால் அரிதினும் அரிதாகிய மானுடப்பிறவியைப்பெற்ற நாம் எத்துன்பம் வந்தகாலத்தும் வாய்மையை எட்டுணையும் விட்டுவிடாது காப்பாற்றவேண்டும். வாய்மையைக் காப்பாற்றாதமனிதர்கள் உருவத்தால் மனிதராகக் காணப்படினும் அவர்கள் நாற்காற் பிராணியென்றே அறிஞரால் கருதப்படுவார்கள்.

புலவர் சிகாமணியாகிய பொய்யாமொழிப்புலவரவர்களும் " புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும் என்றருளிச் செய்தார்கள். இக்குறளினால் வாய்மையில்லாதவனுக்கு மனந்தூய்மை கிடையாதென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கக்கிடக்கின்றதல்லவா ? மனந்தூய்மை இல்லாதபோது மனிதப்பிறவியாலடையவேண்டிய பெரும்பேற்றை எவ்வாறு அடையமுடியும்." ஒருகாலத்தும் அடையமுடியாதென்பதே துணிபு.



" மறைமுழுதுணர்ந்தாரேனு மகம்பல புரிந்தாரேனுங்
குறைவறு தானமெல்லாங் கொடுத்தறங்கூர்ந்தாரேனும்
நிறைபெறு தீர்த்தமெல்லா நிரம்புறத் துளைந்தாரேனுங்
கறையுறுமொரு பொய்கூறிற் கடுநரகழுந்துவாரே.

பொய்மையே பாவமெல்லாம் விளைதரு பூமியாகும்
பொய்மையே பிறவியெல்லாம் புகப்புரி வித்துமாகும்
பொய்மையே வறுமையெல்லாம் போதரப் புரிவதாகும்
பொய்மையே நரகமெல்லாம் புகுதரப் புகுத்தாநிற்கும்.

அண்ணியகிளையு மில்லுமரும்பெறன் மகவுமன்புந்
திண்ணிய சீருமிக்க செல்வமுந் திறனுந்தேசு
மெண்ணிய பொருள்கள் யாவுமியற்றிய தவமுமேனைப்
புண்ணிய மனைத்துஞ்சேரப் பொம்மையாற் பொன்று
[மன்றே.

இம்மைநல னழிக்கு மெச்சங் குறைபடுக்கும்
அம்மையரு நரகத் தாழ்விக்கும்—மெய்ம்மை
அறந்தேயும் பின்னுமலர்மகளை நீக்கு
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய்.

மேலே கூறிய ஆப்தர்களின் வாக்குக்களினாலே வாய்மையை ஒருவன் தன்னுயிர்போற் காப்பாற்றி வரல்வேண்டுமென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கக்கிடக்கின்றது.

பிறவி தொட்டு ஐந்தாண்டளவும் வாய்மையைப்பெற்று நிற்கும் மனிதர்கள் அதன்பிறகு அதன் கைவிடுதலுக்குக்காரணம் என்னை என்றாராயுமிடத்துண்மை நூலுணர்ச்சியின்மையும் தீநட்புமே எனத்தெரியவருகிறது. நைடதத்தில் அன்னப்பறவையானது தன்னுடைய குணத்தைப்பற்றி வெளிப்படுத்தும்போது "பொய்ம்மைமொழி புகன்றறியோம் புகலமனமெண்ணுகினு—மெய்ம்மையன்றியுரையா நாவேதநவில் புயிர்ச்சியால்" என்று சொல்லுகிறது. இதனாலேயே ஒருவன் பொய் கூறத்துணியுமிடத்து அவன் கற்றுப் பழகிக்கொண்டு

வரும் உண்மை நூல்களே அவனை அவ்வாறு செய்யவொட்டாது இடையே சென்று தடுக்கும் என்பது கரதலாமலகமாகத்தெரிகின்றது. இனி கம்ப ராமாயணத்தில் "தீயவரோடொன்றிய திறத்தகுநலத்தோர்—ஆபவர் தமநிலையறிந்தன துறந்தாங்— கேயவருந்துண் பொடிபடக், கடிதெழுந்தே— பாய்பரி விரைந்ததறி நின்றன பறந்தே" எனக்கூறிய செய்யுளால் தீநட்பைத் தேராதடைந்து விட்டாலும் அந்நட்புத் தீநட்பென்று தெரிந்த மாத்திரத்தே அகன்றுவிடவேண்டும். இது அறிவினர் செயலென்று தெரிய வருகிறது.

எவ்விதத்தில் நாமாராய்ந்தாலும் நம்முடைய உண்மை நூற்களனைத்தும் மனித சரீரத்தை அடைதல் அதிக அருமையென்றும், அருமையாகிய மானிட சரீரத்தைப்பெற்றவர்கள் வாய்மையைக் காப்பாற்றவேண்டுமென்றே கூறும். ஆதலால் மானுடப்பிறவியை எடுத்த நாம் வாய்மையை கைநழுவவிடாது கொண்டு இம்மை மறுமை இன்பங்களையடைவோமாக.

பத்திராதிபர்.

---

## திருவாரூரும் பண்டைத் தமிழ் வித்வான்களும்.

ஸ்ரீநகரம், தென்கமலை, தேவாஸ்ரயமாநகரம் முதலிய பன்னிரு திருநாமங்கள் வாய்ந்த நிறைசெல்வத்திருவாரூரானது ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளால் பெரியபுராணத்து,

"நிலமகட்கழகார் திருநீனுதற்
றிலகமொப்பது செம்பியர்வாழ்பதி
மலர்மகட்கு வண்டாமரை போன்மலர்ந்
தலகில்சீர்த்திருவாரூர் விளங்குமால்"

எனப்பெருமையாகச் சிறப்பித்துக் கூறப்பட்டிருப்பதால் இத்திருவாரூரில்: 'மலர்மகட்கு வண்டாமரைபோன் மலர்ந்து' எனப் பொதுப்படக்கூறியதனுல் செந்தாமரை மலரில் வீற்றி



ருக்கும் இலக்குமிதேவிக்கும் வெண்டாமரை மலரில் வீற்றிருக்கும் சரஸ்வதி தேவிக்கும் ஆதாரமெனக் கூறியிருப்பதால் பல வித்வான்களும் செல்வவான்களும் நிறைந்திருக்கிறார்களென்பது யாவரும் உணரக்கூடிய விஷயம்.

சைவசமயாசாரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தெய்வத்தன்மை வாய்ந்த புலவராய் இந்த க்ஷேத்திரத்தில் பல அற்புதங்களோடு வீற்றிருந்ததை உணராதார் யார்? பிற்காலத்துத் திருவாரூர்க் குறவஞ்சி நாடகம், திருவாரூரொருதுறைக்கோவை, திருவாரூருலா முதலியவையியற்றிய வித்வான்களுடைய காலமும் பெயரும் நன்கு விளங்கவில்லை. ஆயினும் இந்நூல்களை யாராயுமிடத்துச் சொற்பொருட் பிரயோகங்களால் அவர்களெல்லாம் இவ்வூரிலேயே வசித்து இலக்கண இலக்கிய சைவசித்தாந்த சாஸ்திரங்களை நன்குணர்ந்தவர்களாகவே தெரியவருகிறது.

பின்னும் இத்திருவாரூர்க்குத் தமிழில் ஸ்தல புராணஞ் செய்தாருள் ஒருவராகிய அளகைச் சம்பந்தமுனிவர் இப்புராண பாயிரத்துள் கமலைஞானப்பிரகாசருக்கும் சேதுபுராணஞ் செய்த நிரம்பவழகிய தேசிகருக்கும் இரண்டு செய்யுட்களை வணக்கமாகக் கூறியுள்ளார் அவற்றுள்,

"இருந்தமிழ் புலவருய்வான் இபவனமழவையென்னும்
திருந்துசீர்த்தலபுராணத் தெள்ளமுதுரைத்தசெல்வ
பெரும்புகழ்க்கமலைஞானப் பிரகாசனெனும்பேர்பெற்ற
அருங்கலைத்திரையறாத வருட்கடற்கன்புசெய்வாம்"

என்று கூறியிருத்தலால், ஞானப்பிரகாசர் இபவனம் என்ற திருவானைக்காவிற்கும் மழவையென்று சொல்லப்பட்ட திருமழபாடிக்கும் புராணஞ் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இவற்றுள் திருமழபாடிப் புராணம் அச்சாகியுள்ளது. அதில் ஓர் செய்யுளில் "தேசிகன் கமலைஞானப்பிரகாசர்" என்று கூறியிருப்பதால் இவருக்கு ஞானப்பிரகாச தேசிகன் என்னும் பெயரும் இருந்திருக்கிறதாகத் தெரியவருகிறது.

பின்னும் திருமழபாடி ஸ்தல புராணத்துள் உலகநாயகன் என்பவர் கேட்டுக்கொள்ள இவர் நூல் இயற்றியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஞானப்பிரகாசர் மேற்குறித்தவிரண்டு புராணங்களையல்லாமலும், புஷ்பவிதி, சைவாநுட்டான அகவல், சிவபூஜையகவல் முதலிய நூல்கள் இயற்றியதாகத் தெரியவருகிறது. இந்நூல்களை அச்சியற்றினோர் இவருக்கு ஞானப்பிரகாசபட்டாரகர் எனப் பெயரைக் குறித்துள்ளார்கள். இவற்றுள் சிவபூஜையகவலில் திருமழபாடிப்புராணஞ் செய்வித்த உலகநாயகரே கேட்டுக்கொண்டதற்காகச் சொல்லப்பட்டதென்பதை 'நற்றவன் உலகநாயகன் நவிலச்சொற்றனன்' என்பதால் ஞானப்பிரகாச தேசிகரும் ஞானப்பிரகாச பட்டாரகரும் ஒருவரேயென்பது தெரிகிறது.

பின்னும் சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, முக்தி நிச்சயம் முதலிய நூல்களையியற்றிய ஞானசம்பந்தர் இவரது சிஷ்யவர்க்கங்களுள் ஒருவரென்பது அடியில்வருஞ் செய்யுட்களால் தெரியவருகிறது.

" சித்திதருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்திதருநாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப்பிரகாசனுண்மை
தருநாதன் நங் குருநாதன். "

" கண்டேன் இனிப்பாசங்கழிந்தேன் அமுதைமுகந்
துண்டேன் சுகானந்தத் துள்ளிருந்தேன்-வண்டிமிர்கா
தேனைப்பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத
ஞானப்பிரகாசனையே நான். "

" அரியயற்குமுன்னாள் அடிமுடியுங் காணாப்
பெரியவனே வந்துபிறந்து—துரியம்
பெருக்கின்றான் ஞானப்பிரகாசனாகி
இருக்கின்றானாரூரில் இன்று. "

" ஆரறிவார் நீதிவழி ஆரறிவார் சித்திமுத்தி
ஆரறிவார் நற்றவங்களன்பனைத்தும்—பாரவற்குங்



கத்தன் கமலையில்வாழ் ஞானப்பிரகாசனெனும்
அத்தன் என்போல் வந்திலனானால்."

என்பன முதலிய செய்யுட்களால் தெரியவருகிறது. இந்த ஞானப்பிரகாசருக்குச் சிதம்பரநாதன் என்னும் பிள்ளைத் திருநாமமும் இருப்பதாக 'முக்தி நிச்சயம்' முதல்ச் செய்யுளில்,

" சீர்மேவுமாரூர்ச் சிதம்பரநாதன் என்னும்
பேர்மேவு ஞானப் பிரகாசன் "

என்று கூறியிருப்பதால் தெரிகின்றது. இவர் உள்ளந் துறவடைந்து இல்லறத்திலிருந்து பலதுறவிகளுக்கும் ஆசாரியராயிருந்தனரென்பது குமரகுருபர சுவாமிகள் சரித்திரத்திலுள்ள,

"காட்டிருந்தாலு மலையிருந்தாலுங் கருதறிய
நாட்டிருந்தாலு நமக்கென்னகாண் நல்லதோர்கமலை
வீட்டிருந் தாண்டாருள் ஞானப்பிரகாசன்விரைமலர்த்
தோட்டிருந்தாலும் பிறவாநெறிவந்துகிட்டிடுமே." (தாள்

என்ற செய்யுளால் தெரியவருகிறது.

இவருடையகாலம் திருவாரூர்ப் புராணத்தையும் திருமழபாடிப் புராணத்தையுமாராய்ச்சி செய்ய நாநூற்று முப்பது வருடங்கட்கு முன்பிருக்கலாம் என்பது தெரியவருகிறது. இவர் மாணாக்கராகிய ஞானசம்பந்தரே தர்மபுரவாதீனத்து முதல் குருமுகூர்த்தமாக வெழுந்தருளிய ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் என்று பெரியார் கூறுவர்.

சேது புராணஞ்செய்த நிரம்பவழகிய தேசிகரும் இத்திருவாரூரில் பால்யத்தில் சிலகாலம் வசித்துப்பிறகு சிலகாலம் இதற்குச் சமீபத்திலுள்ள திருவாஞ்சியத்தில் தங்கியிருந்து பின்பு பாண்டி நாட்டிலுள்ள சேது க்ஷேத்திரத்தின் புராணமாகிய சேது புராணத்தைச்செய்து இராமநாதபுரம் ஜமீன்தாரால் துப்பாஷூர் முதலிய கிராமங்களை சர்வமான்யமாகப் பெற்

றத் துழாவூரிலேயே பெரியமடங் கட்டிக்கொண்டு வசித்திருந்தனர். இவர் இச்சேதுபுராணமேயல்லாமல் திருப்பரங்குன்ற புராணம் சிவஞானசித்தியார் முதலிய சிலசைவசித்தாந்த சாத்திரங்கட்கு உரையியற்றியிருப்பதாகத் தெரியவருகிறது. இவருடைய மாணுக்கர் திருவாரூர் ஸ்தல புராணஞ்செய்த சம்பந்தர் என்பது திருவாரூர்ப் புராணத்துப் பாயிரத்தில்,

> "உருநிரம்பு பவப்பிணிதீர்க் கடற்சேது புராண
> மருந்துதவியோவா
> குருநிரம்ப வழகனெனும் குணக்குன்றை யருண்
> மலையைக் குறித்துவாழ்வாம்"

என்று கூறியிருப்பதால் தெரியவருகிறது. இவருடைய காலமும் திருவாரூர்ப்புராணமுதலியவற்றுல் நோக்குமிடத்து சுமார் நாநூற்றுமுப்பது வருடங்கட்கு முந்தியேயிருக்கலாம். திருவாரூர்ப்புராணத்தாலும் திருமழபாடிப் புராணத்தாலும் சேது புராணத்தாலும் ஆராயுமிடத்து ஞானப்பிரகாசரும் நிரம்பவழகியரும் ஓரே காலத்தினராகக் கருதப்படுகிறது.

இதற்குச் சின்னுட் பின்னர் இல்க்கணவிளக்கம் என்னும் நூலியற்றிய வைத்தியநாததேசிகரும் இத்திருவாரூரினரே யென்பது திருவாவடுதுறையாதீனத்து ஈசானதேசிகரென்னுஞ் சிறப்புப் பெயர்வாய்ந்த ஸ்ரீ சுவாமிநாததேசிகர் இயற்றிய இலக்கண கொத்துள்

"நூல்செய்தவன் அந்நூற்குரையெழுதல் முறையேயெனிலோ அறைபக்கேணீ முன்பின்பலவே என்கண்காணத் திருவாரூரிற்றிருக்கூட்டத்திற் றமிழ்க்கிலக்காகிய வைத்தியநாதன் இலக்கண விளக்கம் வகுத்துரை எழுதினன்."

என்று கூறியிருப்பதால் இவரும் இத்திருவாரூரினரே யென்புதும் இவர் புத்திரர் சதாசிவதேசிகர், சிதம்பரநாத தேசிகர் இவர் பௌத்திரர் தியாகராஜ தேசிகர் முதலியவர்களெல்லாம் சிறந்த வித்வான்களாக இருந்தார்களென்பதும் இல



க்கண விளக்கப் பதிப்புரையால் நன்கு விளங்கும். இம்மரபினர் இயற்றிய பிரபந்தங்களுள் வைத்தியநாததேசிகரியற்றிய நல்லூர்ப்புராணம், இலக்கண விளக்கம் மூலமும் உரையும், திருவாரூர்ப் பன்மணிமாலை, இவர் மைந்தரியற்றியதசகாரியம் இவையச்சிடப் பெற்றிருக்கின்றன. சேது சமஸ்தானத்தில் பிரபல வித்வானுயிருந்த படிக்காசுப் புலவர் வைத்தியநாத தேசிகரின் மாணுக்கரெனத் தெரியவருகிறது. இவர் காலம் சுமார் இருநூற்றெழுபத்தைந்து வருடங்கட்கு முன்பிருக்கலாம். இவர் சரித்திர ஆராய்ச்சியால் இவர் மரபினரை திருக்கூட்டத்தாரென திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்தாரால் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவர்க்குப்பின் ஒப்பிலாமணிப்பண்டாரம் என்பார், சிவரகஸ்யமென்னும் இதிகாசத்தை சுமார் நாலாயிரம் செய்யுட்களாக இயற்றித் தஞ்சை சரபோஜி மஹாராஜன் காலத்தில் அரங்கேற்றியிருப்பதாக அந்நூற் பாயிரத்தினுல் தெரியவருகிறது. அவர்காலம் சுமார் நூறு வருடங்கட்கு முந்தியிருக்கலாம். இப்பேர்ப்பட்ட தமிழ் வித்வான்களையல்லாமல் வடமொழியிலும் மிக்கத் தேர்ச்சியடைந்த பல வித்வான்களும் இத்திருவாரூரில் இருந்திருக்கின்றனர். தியாகைய கிருதியென்று சங்கீத வித்வான்களால மேன்மையாகக் கொண்டாடப்படுகின்ற நூலையியற்றிய தியாகையரிருந்த இடம் இத்திருவாரூரே. நீலகண்ட சிவாசாரியரென்னும் பெயர்வாய்ந்த அகோர சிவாசாரியார் பத்ததியாகிய வடமொழி வசன நூலுக்கு நிர்மலமணிதேசிகரென்பவரால் நிர்மலமணீயம் என்று சொல்லப்பட்ட சிறந்தபாஷியம் வடமொழியில் இயற்றப்பட்டிருக்கிறது.

இதல்லாமல் அஷ்டாத்யாயீ சந்திரசேகர பண்டாரமென்பவரால் வடமொழியில் சிவலிங்கப் பிரதிட்டைவிதிமுதலியன வசன நூலாக இயற்றப்பட்டிருக்கின்றன. தென்மொழியோடொத்த தெய்வத்தன்மை வாய்ந்து வடமொழியிருப்பதால் வடமொழி வித்வான்களையும் உடன் கூறினேன்.

இப்பொழுதைக்குப்பிரபல வித்வானுயிருந்த மீனுட்சிசுந்

தரம்பிள்ளையவர்கள் இலக்கண ஆசிரியராகிய கீழ்வேளூர் சுப்பிரமணியதேசிகரும் இத்திருவாரூரினரே. இவரியற்றிய நூல் கந்தசுவாமீயம் என்ற நிகண்டாகும். இதில் சில தொகுதிகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. பின்னும் பெரிய புராணத்தை சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் அச்சியற்றிய காஞ்சீபுரம் வித்வான் உரையாசிரியர் சபாபதி முதலியாரவர்களுக்கு ஆசிரியராக தியாகராஜதேசிகரென்பவர் வடமொழி தென்மொழிகளில் சிறந்த வித்வானாக இருந்திருப்பதாகத் தெரியவருகிறது. தொல்காப்பியம் பொருளதிகாரப் பதிப்புரையில் தொல்காப்பியம் வரதப்பமுதலியாருக்கு தொல்காப்பியம் முதலிய நூல்களைப் பாடஞ்சொன்ன திருவாரூர் வடுகநாததேசிகரென்பவர் இருந்ததாகத் தெரியவருகிறது.

இம்முறை இம்மட்டில் நிறுத்தி மறுமுறை வரைவேன்.

M. சுவாமிநாததேசிகர்.

---

## பொன்மணியில் ஓர் பாகம்.

### கோயில்களின் உபயோகங்கள், (முன்தொடர்ச்சி.)

பிராம்மணரோ, பயந்தபோதிலும் தைரியத்தை விடாமல் அடேயப்பா! நான் உன்னை பரிகாசம் செய்யவில்லை பகவானை பூசுரன் போற்றினேனென, கயவன் போற்றினால் என்னபயன் என, பகவான் பிரத்தியக்ஷமாவான் என்றான். உடனே கயவன் குளத்தில் குதித்து கரையேறி விப்பிரன் விளம்பிய வண்ணமே நாசியை இறுகப்பிடித்துக்கொண்டு பூசுரன் உபதேசித்த சிவா என்ற அக்ஷரத்தை அநேக தடவை பயபக்தியுடன் ஸ்மரித்தனன். மூக்கை இறுகப்பிடித்துக் கொண்டதினால் மூச்சுப்போவதற்கிடமில்லாமல் வயிறுஉப்பவும் அதினால் திக்குமுக்காடியும் மூக்கைமாத்திரம் விடாமல் முக்கண்ணனையே மனத்தில் ஸ்மரித்துக்கொண்டிருந்தான். பகவான் இவனுடைய உறுதிக்கு மெச்சி பிரத்யக்ஷமாகி அவன் கேட்டதை ஈன்றனர் என்று என்



னருமைக் குருவாகிய வி. த. சீனுவாச அய்யங்கார் அவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன். நாம் தெய்வத்தை நமக்கு ஆபத்து வந்தகாலத்தில் நினைக்கிறோமேயொழிய சகல சம்பத்தையும் பெற்றுச் சந்தோஷமாயிருக்கும் காலத்தில் பகவானைப் போற்றுகிறதில்லை; ஏன் நமக்கு இந்த பக்ஷபாதமோ?

இன்னும் கோயில்கள் நமக்கு வேறு விதமாகப் பிரயோஜனப்படுகின்றன. ஹிந்துக்களுடைய ஆலயங்களில் வேலைக்கமர்ந்தவர்கள் தங்களுக்கு கிடைக்கும் சம்பளத்தைக்கொண்டும் சாதத்தைக்கொண்டும் தங்களுடைய பெரிய குடும்பங்களை சம்ரக்ஷிக்க வல்லமையுள்ளவராகிறார்கள். ஆயினும் “சிவன் சொத்து குலநாசம்” என்பதை அங்குள்ளோர் ஒவ்வொருவரும் அறிந்து தாம் உழைத்ததற்கு நியாயமாய்க் கிடைக்கக்கூடிய கூலியைப்பெற்றும் திருப்பணி செய்தற்காக புண்ணியத்தையும் பெறுவதுடன் பெருமை பெற்று வாழ்வார்கள். மறுமுறை மாறாது மாக்ஷியுடன் ஆக்ஷி செய்யும் அரசர்களே சில கோயில்கள் நல்ல நிலைமையில் இருக்க வேண்டுவதற்கான சாதனங்களைத் தேடுகின்றனரென்றும் முக்காலத்திய அரசர்களான சேரசோழ பாண்டியர்கள் எண்ணிறந்த கோயில்களைக்கட்டி அதற்கு வேண்டிய நிலத்தையும் பணத்தையும் கொடுத்திருக்கிறார்களென்றும் அவர்களால் அநேக வருஷங்களுக்கு முன் செய்யப்பட்ட ஏற்பாடும் இப்பவும் கொஞ்சங்கூட மாறாமல் நடந்து வருகின்றன என்றும் நாம் அறிகிறோம். சில பழய கோயில்களிலிருந்து எடுக்கப்பட்ட சாசனங்களால் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன் இத்தேயமிருந்த நிலைமையையும் இன்னின்ன பாகம் இன்னின்னரால் ஆக்ஷிசெய்யப்பட்டதென்றும் அவர்கள் எக்குலத்தவர், எக்குணத்தவர், எதற்காக அக்கோயில்கள் கட்டப்பட்டன என்ற விஷயங்களை அறிகிறோம்.

இன்னும் சில கோயில்களின் உயர்ந்த கோபுரங்கள் வெகு தூரத்திலிருந்துவரும் பிரயாணிகளுக்கு திசை காட்டியாக இருக்கின்றன. இன்னும் சில கோயில்கள் முக்காலத்திய

அரசர்களில் சிலருக்குப்பாதுகாப்பு அரண்களாகப் பிரயோசனப்பட்டிருக்கின்றன. உதாரணமாக கர்னாடக யுத்தத்தில் திருச்சிராப்பள்ளியை முற்றுகை செய்த சண்டா சாகிப் என்பவன் இங்கிலீஷ்காரர்கள் தன்னை எதிர்க்கவருகிறார்கள் என்ற சமாசாரத்தைக் கேள்விப்பட்டவுடன் அவ்விடத்தை விட்டகன்று பெருமை பெற்ற காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் மத்தியிலுள்ள தீவாகிய ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதர் அடியார்களோடு வாழும் திருக்கோயிலில் தன் சயின்யத்தோடு தங்கி பகைவரை எதிர்த்தாகத் தெரிய வருகிறது.

இன்னும் பெரிய சிவஸ்தலங்களைத்தான் முக்காலத்திய அரசர்கள் இராஜதானியாகக்கொண்டு அரசு செலுத்தியதாகத் தெரியவருகிறது. உதாரணமாக சோழன் காஞ்சியையும் பாண்டியன் மதுரையையும் தலைநகர்களாகக்கொண்டு ஆட்சி செய்தனர். அவ்விதமான பெரிய ஸ்தலங்களில் தான் பெரிய வித்வான்களும் இருந்ததாகத் தெரிகிறது. உதாரணமாக, முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்களும் மதுரையில் தான் கூடினதாக பழமையான நூற்களால் நாம் அறிகிறோம் இப்போதும் அவைகளின்விசேஷம் மதுரையில் சங்கமொன்று வழங்குகின்றது. ஆகையால் கோயில்களின் உபயோகங்களை பார்த்தீர்களா? இன்னும் நாம் கோயிலுக்குச் செல்வதினால் கடவுள் அம்சமாயுள்ள விக்ரகங்களுக்கு செய்யப்பட்டிருக்கிற கோலங்களைக்கண்டு களிக்கின்றோம். கொஞ்ச நேரமாவது நம் கவலைகளை மறக்கின்றோம். விசனங்களையும் விடுகின்றோம். நம்முடைய அந்தரங்க சிநேகிதர்களை உற்சவகாலத்தில் சந்திக்கின்றோம். சில தேசாந்திரிகளுக்கு சாப்பாட்டுக்கிடமாகின்றன. நாம் எவ்வாறு நம் பெற்றோர்களிடம் நாம் செய்த பிழைகளைச்சொல்லி மன்னிப்பு கேட்டுக்கொள்ளுகிறோமோ அதுபோல நாம் செய்யும் பாபங்களுக்கு விக்ரகங்களை வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் கோவிலுக்குப்போகிறதை பிரதான கடமைகளில் ஒன்றெனக்கொண்டு திவந்தோறும் தேவாலயத்தை நாடி பக்தியுடனும் பரிசுத்த மனதுடனும் பகவானைப்போற்றி ஒழுக



வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள். இது பொன்மணி என்ற ஓர் நாவலில் இருந்து எழுதப்பட்டது அதில் இது போன்ற விஷயங்கள் பல அடங்கியிருக்கின்றன. அதை எழுதியவருக்கு அநேக இடையூறுகள் ஏற்பட்டதினால் அதை இச்சமயம் பிரசுரிக்க முடியாமல் போயிற்று. தமிழபிமானியும் மதாபிமானியுமுள்ளவர்களில் யாராவது அதை அச்சிட இஷ்டப்படுவார்களாயின் அவர்களுக்குப் புண்ணியமும் புகழும் பெருகுமென்று தெரிவிக்கப்படுகிறார்கள்.

K. S. இராமச்சந்திரன்.

---

## இதோபதேச போதினி.

### (கடவுள் வணக்கம்)

அன்பர்காள்!

எண்ணிய நம் எண்ணமெலாம் ஈடேறும் நன்னெஞ்சே
புண்ணிய மெய்த்தேவனடி போற்று: என்றபடி,
உலகமும் பல்லுயிரும் ஒன்றி நிறைந்தோங்கி
இலகுஞ் சிவனெம்மிறை.

ஆதலால்:—நமது திருநாவுக்கரசு சுவாமிகளும் நம் அண்ணலின் (ஸர்வ பரிபூரணத்துவ) மகாத்மியத்தைப்பற்றி,

அங்கமா யாதியாய் வேதமாகி
அருமறையோ டைம்பூதந் தானேயாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானேயாகிப்
பான்மதியோ டாதியாய்ப் பான்மையாகிக்
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னியாகிக்
கடலாகி மலையாகிக் கழியுமாகி
எங்குமா யேறூர்ந்த செல்வனாகி
யெழுஞ்சுடரா யெம்மடிகணின்றவாறே.
[என்றும்

"தீயாகி நீராகித் திண்மையாகித்
திசையாகி யத்திசைக்கோர் தெய்வமாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வுமாகித்
தாரகையு ஞாயிறுந்தண் மதியுமாகித்

காயாகிப் பழமாகிப் பழத்தினின்ற
விரதங்க ளுகர்வானுந் தானேயாகிப்
நீயாகி நானாகி நேர்மையாகி
நெடுஞ்சுடரா யெபமடிக ளின்றவாறே."
[என்றும்

தமது தேவாரத்திலும் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள்.

ஆதலால், (ஸர்வேஸ்வரனாய்) உலகெலா முணர்ந் தோதற்கரியவனாகியும் எல்லாம் வல்ல இறைவனாகியும் (ஸர்வமங்கள) நித்யானந்த ஸ்வரூபியாகியும் ஸர்வ பரிபூரணனாகியும் எள்ளினுள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்து (ஆத்மஸ்வரூபியாய்) அகண்டாகார சச்சிதானந்தப் பழம்பொருளாய் விளங்கானின்ற கடவுளை நாம் தொடங்கும் எக்காரிய முயற்சிக்கும் (முக்காலும்) முதலிற்றொழ வேண்டுமென்பது நம் யாவர்க்குமுற்ற கடமையாகவிருக்கிறது.

இதுபற்றி நம் முன்னோராகிய திரு ஔவையார் அவர்களும்

ஔவைக்குறள்.

எல்லாப்பொருளு முடிக்கலாம் ஈசன்றன்
தொல்லையருள் பெற்றக்கால்—என்றும்
சிந்தையுணின்ற சிவனருள் பெற்றக்கால்
பந்தமாம் பாசமறும்—என்றும்

கூறியிருப்பதோடு நம் சேக்கிழார் சுவாமிகளும்

முன்னவனே முன்னின்றால்
முடியாத பொருளுளதோ—என்றும்
நமது திருநாவுக்கரசு சுவாமிகள் வேண்டுவார்
வேண்டுவதேஈவான் கண்டாய்—என்றும்

நம் திருவள்ளுவநாயனார்

(1) அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு—என்றும்



(2) மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்—என்றும்
(3) கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெனின்—என்றும்

நமக்கு (உள்ளங்கை நெல்லிக்கனிபோல்) உணர்த்தியிருக்கின்றார்கள். அன்றியும்,

நம் திருநாவுக்கரசு சுவாமிகளும்,

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம் வந்தெய்திடும்
சிறப்பர் சேறையுட் சென்னெறியான்கழல்
மறப்பதின்றி மனத்தினுள் வைக்கவே—என்றும்

மாடுதேடி மயக்கினில் வீழ்ந்துநீர்
ஓடியெய்த்தும் பயனிலை யூமர்காள்
சேடர்வாழ் சேறைச் செந்நெறி மேவிய
ஆடலான்றன் அடியடைந் துய்மினே—என்றும்

மிகவும் (வற்புறுத்தி) அருள்சுரந்து அறைந்திருக்கின்றார்கள். அவ்வித கருணைக்கடலாகிய இறைவனுடைய பாதாரவிந்தத்தை என்றுந் துதித்து வருவதன்பொருட்டே,

துதிப்பதற்கு வாயமைத்தாய் சூழ்வதற்குத்தாளமைத்தாய்
மதிப்பதற்கு மனமமைத்தாய் வணங்குதற்குத்தலையமைத்தாய்
கதிப்பதற்கு நூலமைத்தாய் கடிகுளத்தூர் அமர்ந்தறிவில்
உதித்தவுனக்கேங்கள் உதவுவதென் கைம்மாறே. என்று

நமது பெரியோர்கள் கூறியபடி:—

கண்ணுதலாலயம் நோக்கும் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணுறும் பாகனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப்பூசிக்குங் கைகளே கைகள்

பண்ணவன்றன் சீர்பாடும் நன்னாவே நன்னா.
பரன் சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல் பொலன்கழல் நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீழ் அடிமைபுகும் அடிமையே அடிமை.
என்றும்,

ஐயநின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்
ளமுதுண்டு வந்த திருவாய்
அப்பநின் றிருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழுந் தலை
மெய்யநின் றிருமேனி கண்டபுண் ணியர்கள்கண்
மிக்கவொளி மேவுகண்கள்
வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபங் கேழ்க்குஞ்செவி
தூயநின் பதமெண்ணு மேலோர்க ணெஞ்சம்
சுகரூபமான நெஞ்சம்
தோன்றலுன் றிருமுன் குவித்தபெரியோர்கைகள்
சுவர்ணமிடுகின்ற கைகள்
சையமுயர் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் தூய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத்தெய்வமணியே—என்றும்

திருமூலர்—தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனைசெய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ்சூடக்
குருபக்தி செய்யுங் குவலயத்தோர்க்கு
தருமுத்தி சார்பூட்டுன் சன்மார்க்கந்தானே.
என்றும்

சூதசங்கிதை:—

போகமுள்ளன வெலாம் புணர்க்கவல்லது
மோகமுள்ளன வெலாம் முருக்கத்தக்கது
யோகமாஞ் சித்தியை யுதவுநீரது
பாகமாந் தருசிவ பக்தியொன்றரோ—என்றும்



கூறியிருக்கின்றபடி கடவுளை நம்பினோர் கைவிடப்படார் ஆதலின்,

நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தும் நினை
கான்றுஞ்சிவன்றாளினை—என்று

நம் கடவுளடியைக் கனவிலு மறவாது நமது மனோவாக்குக்காயங்களால் ஈசனைத்துதித்து இன்புற்று வாழ்வதே இல்வாழ்வினுற்ற நல்வாழ்வாமென்று பெரியோர் இனிதியம்புவர்.

வி. வைத்திநாத ஸ்வாமி.

## அநுபவம்.

மாறிமாறிவரும் இன்ப துன்பங்களால் மனது கெடாதிருக்க மனிதன் முயலவேண்டும். இகலோக சம்சாரத்தில் இடையிடையே தோன்றி கெடுதியை உண்டாக்குகிற காரியங்கள் எத்தனையோ உள்ளன. இவ்வளவிலும் பட்டுத் தெரிந்தோருக்குள்ள அநுபவம் சாமானியமானதன்று. "படிப்புப் பெரிதா? அநுபவம் பெரிதா?" என்று நாம் விசாரிப்போமானால் அநுபவத்திற்கு மிஞ்சிய ஞானமும் அதனினும் மேம்பாடான படிப்பினையும் கிடையாதென்ற தீர்மானத்திற்கு வரவேண்டியவர்களாகிறோம். மேலும் மனிதனுக்கு ஒவ்வொரு தினத்திலும் ஒவ்வொரு புது அநுபவம் படிகிறது. நாள்தோறும் லோக வாழ்க்கையிலே ஒவ்வொரு படிப்பினையை அவன் கற்றுக்கொள்ளுகிறான். உலகமானது ஒரு உபாத்தியாயராகவும், அதில் வசிக்கும் ஜனங்கள் மாணக்கர்களாகவும் இருக்கிறார்கள். ஒரே ஆசிரியரிடத்தில் கல்வி பயின்ற பல மாணவர்கள் பலவித நிலைமைகளையடைய, உபாத்தியாயர் மட்டும் தமது தொழிலை விடாதிருக்கின்றனர். உலகம் எப்போதும் ஒரே தன்மையுடைத்தாயிருந்தாலும், அதிலேவாசம்புரியும் பிரஜை

கள்மட்டும் பலவிதங்களாக மாறுபட்டுப் போகிறார்கள். இவர்கள் கொண்டுள்ள அநுபவஞானம் பின்னும் பலவிதங்களிலே விசேஷமான மாறுதல்களைப் பெற்றுவிடுகின்றது. "பத்திரிகையின் அபிவிர்த்தி" என்ற வாக்கியம் எப்படி "சந்தாதாரர்களின் அபிவிர்த்தி" என்று குறிக்கப்படுகின்றதோ, அதுபோல "உலகம்பலவிதம்" என்ற பழமொழியானது ஜனங்கள் அடைந்திருக்கிற பலவித வேற்றுமைகளை சுட்டிக்காட்டுகின்றது. பூலோக வாழ்க்கையிலே புதிதாய் புகுபவர்கட்கு தனக்கு முன்சென்று பாடுபட்டவர்களுடைய அநுபவமானது சமுத்திரத்திலே விழுந்து தத்தளிப்பவனுடைய பார்வைக்கு ஒரு சிறு படகு புலப்படுவதை யொத்ததாகும். கல்விக்கு விலையுண்டு. அநுபவத்திற்கு விலையில்லை.

K. S. சுப்பிரமணியபிள்ளை.

---

## காளமேகப்புலவர் சரிதம்.

---

(முன் தொடர்ச்சி.)

தோன்றி "இதனைப்பெற்றுக்கொள்வாய்" எனத்தம்பலத்தை அவன் வாயில் உமிழ வந்தனர். (தொண்டரின் அன்பின்திறத்தைச் சோதிக்க இவ்வாறு பலவித கோலம்பூண்டு காக்ஷியளிப்பது நம்மில் கண்டுவருவது பண்டைக்கால வழக்கம்) வேதியன் போகூழ் காரணமும், தவக்குறையுமுந்த யாரோ சிறுபெண்ணென்றிகழ்ந்து அதனைத்தடுத்து விலக்கினர். தேவி அம்மட்டில் அவனைவிட்டுத் திரும்பி வருகையில் அது சமயம் பரிசாரகர் கோயிற் * குடவரிசைக்குச்சென்ற மோகனாங்கி வீடு திரும்பக் காலதாமதமாகும் அதுவரையும் நாம் தனித்

* குடவரிசை யென்பது:—தாசிகள் சுவாமிக்கெதிரில் கும்பம் போன்றதொரு தீபத்தை எந்திச் சுழட்டுவது.



திருப்பதெவ்விதம் எனக்கவலை மேற்கொண்டு தன்னுள் மறைந்தொளிரும் நல்லூழ்பிடர் பிடித்துவந்த ஆலயஞ்சேர்ந்து மோகனாங்கியைச்சந்தித்து அவளிடத்து நான் இங்குள்ள மண்டபமொன்றில் உறங்குகின்றேன். நீ வீடு செல்லும்போது என்னையும் உடனழைத்துப்போவாய். எனக்கூறிச் சயனித்துக் கொண்டனர். மோகனாங்கியும் அவ்விதமே அர்த்தசாமக் குடமுறை கழிந்ததும் பரிசாரகரைத்தேடிக்காணாது தனித்து வீடு சேர்ந்தாள். ஸ்தானிகர் முதலியோரும், கோயில் பூட்டித்தாளிட்டு வீடு சென்றனர். சிறிது நேரஞ்சென்றபின் பரிசாரகர் திடுக்கிட்டு விழித்து யாரையுங்காணாது கோயில் திருக்காப்பிட்டிருப்பதையுணர்ந்து செய்யும் வகையறியாது பற்பல வெண்ணத்தினிடை மனதை ஊசலாடவிடுத்துப் பாதி நித்திரையுடன் மீண்டும் அம்மண்டபத்தின் மறுபுறத்தில் உறங்கினர். உபாசகனைவிட்டு நீங்கிய தேவியார் மண்டபத்தில் உறங்கும் பரிசாரகரைச்சமீபித்து விளித்து வாய் திறக்குமாறு கட்டளையிட்டனர் பரிசாரகர் ஆகூழாலும், ஜன்மாந்திரத் தவப்பயன் ஈடேறவும் காரணமாகத் தூண்டப்பெறும் அவசரத்தில் தக்ஷணம் வாய்திறந்தனர். அம்மையார் வித்தைக்குரிய தம்பலத்தை அவன் வாயிற் பொழிந்து இன்று முதலுனக்குத் தமிழில் ஆசு முதலாகக் கூறப்படும் நால்வகைக் கவிகளும் நீ நினைத்தவாறு சித்திப்பதாக என அநுக்கிரகித்து மறைந்தனர். பரிசாரகர் கனாக்கண்டவர்போல் விழித்து எதிரில் யாரையுங்காணாது தரிசனந்தந்து தம்மை ஆட்கொண்டருளிய தெய்வம் உலகமாதாவாகிய அகிலாண்ட நாயகியாரென்றறிந்து ஆர்வம் பெருக வாயாரத் துதித்துத் தமக்கு வரமருளிய மண்டபத்திலிருந்தபடியே கடல்மடை திறந்தாலொப்பக் கவிபாடும் வாக்கு நமக்குளதாவெனப் பரீக்ஷித்தறிவார்போல அத்தலத்தைச்சுட்டியே "திருவானைக்காவுலா" என்னும் பிரபந்தம் பாடி மகிழ்ந்தனரென்பர். கல்லானது உளியால் அழகிய உருவெய்துமாறுபோல அந்தணர் பரிசாரகப் பெயர்மாறிக் கவிமழை பொழியும் காளமேகமெனச் சிறந்தனர். பரிசவேதிபட்டமாத்திரத்தில் இரும்பும் தன்னி

யல்பு மாறிப் பொன்னாவதுபோல் இவரும் மேன்மையடைந்தனரெனக் கூறுவர்.

நமது முன்னோர்கள் அமானுஷிகம், அபூர்தவர்ணனை, அலங்கார ரூபகம் இயற்கை விரோதம் முதலிய அம்சங்களில் பூர்ண நம்பிக்கைகொண்டு இச்சம்பவத்தைக் கற்பித்திருக்கலாமென்றும், வைதிக ஒழுக்கநல மேம்பாட்டில் தமக்கொப்பாரும் மிக்காருமில்லையென்று வாதுகூறித் தம்மைத்தாமே வியந்துகொள்ளும் தத்துவ நிலையின் வித்தகமுணர்ந்த மேதாவியர் மலிந்த இத்தமிழ் நாட்டில் இச்சமபவம் நிகழ்ந்ததாகக் கூறுவது சிலருக்குக் கதைபோலத் தோன்றலாம். இத்தகைய மற்றைய சம்பவங்களையும் நம்பாது இயற்கை விரோதமான கட்டுக்கதையென சிலர் சொல்லுவதை அநுபவமாய்க்கொண்டே ஈண்டு இதையும் சிலர் மறுப்பரென ஊகித்தோம். இத்தகையசம்பவங்களை நம்பாத காரணமென்னயெனின்? இயற்கைக்கு மாறுபட்டனவெனக்கூறுவர். இயற்கை என்பது என்ன? முன்னோர் மொழி பொருளுக்கும், யுக்திக்கும், அநுபவத்திற்கும் பொருந்தியதே யன்றோ? தான் எண்ணியவாறு இயற்றவும், இயற்றுவிக்கவும், அழிக்கவும், ஆற்றலுடைய எண்குணக்கடவுள் தன்னை மெய்யன்போடு கலந்துருகும் தொண்டர்களுக்கு காக்ஷியளித்தும், அளிக்காமலும், வேண்டுவன விரும்பித்தருதலும், கொடிய துன்மார்க்கர்களை நேரிலோ மற்றெவ்வகையாலோ, அழித்தலுமான நடுநிலைமையை நாஸ்திகான்றி மற்றெவரேனும் மறுத்துப்பேச முன்வருவரோ! வாரார். கடவுளது பேராற்றலை உள்ளபடியறிந்தோர் அவர் எதையும் செய்யவல்லார் என்றே கருதி நிற்பார். இதற்குச் சான்றாக நம்முன்னோர்கள் மொழிந்த பல திறப்பட்ட சம்பவங்கள் பலவுள. ஆனால் இதில் சங்கையென்னவெனில், அக்காலத்தில் மாத்திரம் அத்தகைய சம்பவங்கள் நடைபெற்றதென்ன? இக்காலத்தில் அதன் வாசனையுங்கூட இல்லாதிருப்பதென்ன? வென்பதுதான். உண்மையே. ஆயின் அம்முழுமதிப் பரம்பொருளின் அபீஷ்டத்தை எவரோ அறியவல்லார்? எவர் அவரை அது செய், இது செய், என



ஆண்டு தூண்டுபவர்? நல்லூழ் இருந்தவாறு வேண்டுவனவற்றை நேரிற்றருவார் இன்றேல், அவற்றை ஒருவகையான் பெறச்செய்வார். எதற்கும் விதிகாரணம். நம் காலத்திலும் சில அபூர்வ சம்பவங்களை நாம் நேரிற் பார்த்துள்ளோம். அங்ஙனம் நிகழ்ந்தனவற்றை யறியாதிருப்பதும், நமது ஊழின் காரணத்தாலேயாம். ஆகவே பண்டைக்காலத்துச் சம்பவங்கள் கற்பனைக்கதைகளெனப் பழித்து விடுவதுதான் இயற்கையின் முரண்படுவதாகின்றது.

இனித் தமிழகத்துக் கீர்த்தி சிறந்து விளங்கிய முற்காலத்துப் புலவர் சிலர்க்குக் கவிபாடும் திற மெய்திய சம்பவத்தை பிற்காலக் கவியொருவர் ஒருபாடலால் விளக்கியுள்ளார். அது வருமாறு:—

“ காளி யருளாற் பொய்யாமொழி நாக்கற்றான்
கப்பனே பிரமார்க் கதனாற் றேர்ந்தான்
நீளவுமே யருணகிரி குகனா லாய்ந்தான்
நெடுங் கூத்தன் வாணிதனைப் பாலுண் டோர்ந்தான்
கோளிற் பனையாற் காளமுகி லாசானான்
குவலயத்தி லிப்படி முன்னாளிற் பல்லோர்
வாளுலவும் வரகவிக ளிருந்தா ரின்னாள்
வழுக்கவிக ளிருக்குநிலை வகுக்கொணாதே ”

பெரும்பாலும் நமது நாட்டில் வாழ்ந்திருந்த வரகவிகளெல்லாம் இத்தகைய சம்பவங்களால் தான் கவிபாடுந்தன்மை பெற்றாரென்பதை நம்முள் கிடக்கும் சொற்ப ஆதாரத்தைக் கொண்டே கூற முற்படுகின்றோம்.

புலவர்க்குக் கவிபாடும் வரப்பிரசாதம் அகிலாண்ட நாயகியாரால் கிடைக்கப்பெற்றுத் திருவானைக்காவுலாப் பாடியபின் இவர் தலயாத்திரை யாரம்பவரைக்கும் யாதொரு விபரமும் தெரிவதற்கில்லை. ஆனால், தன்காதற் களஞ்சியமும், தன் பிற்கால நல்வாழ்வுக்கும், கீர்த்திக்கும் மூலகாரணியுமாயுள்ள

தாசி மோகனாங்கி பாற்சென்று சிறிது காலமாவது அவளிடத்துத் தங்கிப், பின் தலயாத்திரைக்குத் தொடங்கித், தமிழ்நாடெங்குஞ்சஞ்சரித்து இசையொடு வசையுங்கலந்து இனிய பாடல்கள் பாடித் திசைதோறும் தமது புகழை நிறப்பி, இன்றளவும் கற்று வல்லோரால் பாராட்டும்படி செய்திருக்கவேண்டுமெனக் கொள்ளுவது மிழுக்காது.

## இவர் ஆசுகவித்திறமும், தலயாத்திரைக்குறிப்பும்.

நமது தமிழ்நாட்டில் வாழ்ந்த கவிவாணரின் ஜீவிய சரிதைகளை நாம் கவனிப்போமானால் அவைகளில் ஒருபாகம் அவர்கள் தல யாத்திரைப்பற்றி நிகழ்ந்த விஷயங்களைக்காணலாம். கருதிக்கற்றதின் முயற்சியாலோ, பூர்வ புண்ணிய பலத்தாலோ, வரப்பிரசாத விசேடத்தாலோ, மற்றெக்காரணத்தாலோ பாடுதற்கு நாவன்மைபெற்ற புலவர்கள் தலங்கள்தோறும் மூர்த்திகளைத்தரிசித்து அக்கடவுளர்மீது வசையாகவோ, நசையாகவோ காலமுங்களனும் ஒத்தவாறு பாடிச் செல்வதை வழக்கத்திற் கொண்டிருப்பதாக வறியலாம். இவர்களிங்ஙனம் தலங்கள் தோறும் சென்று பாடும் கருத்து நமக்கின்னதென அறியவியலாதிருப்பினும் ஒருவாறு விளங்குவதெல்லாம் தமது ஆத்மரக்ஷணையிற் பேராசைத் தூண்டப்பெற்றவராய்ப் புண்ணிய தலங்களைத் தரிசித்துத் தீர்த்தமாடி தம்மை விரும்புகின்றவர்கள் வரங்களை விரும்பியபடியே பெற்று நின்று வழிபட அவ்வவ்விடத்திலே அவ்வவர்களை ஆட்கொள்ள குருமுகூர்த்தங்களாக எழுந்தருளியிருக்கும் கடவுளர்களைத்தொழக்கருதியும்,

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாற்றொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

எனும் நல்லுபதேசத்தையும் காரணமாகக் கொண்டனரோ வென்பதுதான்.

இக்கருத்தைப் பின்பற்றித்தானோ! சமயாசாரியர்களும் திருத்தொண்டத்தனியடியார்களும் ஆழ்வாராதிகளும், தலயாத்திரையையே பிரதானமாகக்கொண்டு தம் ஜீவிய காலத்தின் பெரும்பாகத்தைச் செலவிட்டிருக்க வேண்டுமென்றெண்ணுகிறோம். எங்ஙனமாயினும் ஆகுக. இவற்றிற்கெல்லாமேதோர் காரணமிருக்கத்தான் வேண்டுமெனக்கூறி மேற்செல்வோம்.



இவர் தலயாத்திரைக்குத் தொடங்குமுன்னமே, இவர்க்குக்கவிபாடக்கூடிய சிறந்த யோக்யதைச்சித்தித் திருப்பதைப் பலரும் நன் குணர்ந்திருந்தனர். திருவானைக்காவில் வசித்திருந்தபொழுது சமயம் நேர்ந்தபோதெல்லாம் திருவரங்கமும் சென்று வந்து கொண்டிருந்ததாகத்தெரிகிறது. இவர் அங்ஙனஞ் சென்ற சமயங்களில் திருவரங்கத்துள்ள சிலர் வைணவர்கள் திடும்பிரவேசமாய் வைணவம் நீங்கிச் சைவம் பெற்றதற்காக இவர்மீது தீராக்கோபமும் மாறான வரமுங் கொண்டு இவரைக்காணின் நஞ்செனவும் கருதி வந்தனர். அகிலாண்ட நாயகியாரின் அருட் பிரசாதத்தால் இவர்க்குச் சிறந்த கவிபாடக்கூடிய திறமை யெய்திருப்பதையுணர்ந்த மேல் அச்சமும், அன்புங்கொண்டு நட்புப்பாராட்டினரேனும் இவர் அபிமானித்த சைவ சமயத்தில் இவரறிந்தவுண்மை எம்மட்டுஞ் சிறந்துள்ளதென்பதைப் பரிக்ஷித்தறியும் நோக்கங் கொண்டு இவரிடத்து சில வினாக்களை விடுக்கப்பிந்தினாரில்லை. குணத்தை மாற்றக் குருவில்லையன்றோ?

**திருவரங்க வைணவர் வினாக்களும், காளமேகத்தின் விடைகளும்:—**

திருமால் உலகத்தையுண்டருளியபோது சிவன் எங்கேயிருந்தாரென்று வினாவியதற்கு விடையாகக்கூறியது.

அருந்தினா னண்டமெலா மன்றுமா லீசன்
இருந்தபடி யேதென் றியம்பின்—பொருந்திப்
பருங்கவளம் யானைகொளப் பாகனதன் மீதே
இருந்தபடி யீசனிருந்தான்.

(இதன் பொருள்.) உலகமுடிவில் திருமாலானவர் உல

கங்களையெல்லாம் உண்டபொழுது சிவபெருமானிருந்தவிதம் யாதென்று கேட்பின்? யானையானது பெருங்கவளத்தையுட்கொள அதை நடத்தும் பாகன் அதன் மீதிற்றானே பொருந்தியிருந்தாற்போல சிவபெருமான் இருந்தானென்பதாம்.

ஒருவர் விநாயகருக்கு நாமமிட்டு இவர் விஷ்ணுவே பரமென்று நாமமிட்டுக்கொண்டிருக்கிறார் பாரும் என்றிகழ்ந்ததற்குப் பாடியது.

தந்தை பிறந்திறவாத் தன்மையினாற் றன்மாமன்
வந்து பிறந்திறக்கும் வண்மையினால்—முந்தொருநாள்
வீணிக்கு வேளை யெரித்தான் மகன் மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்.

(இதன் பொருள்) தன் தகப்பனாகிய பரமசிவன் ஜனித்து மரிக்காத தன்மையினாலும், தன் மாமனாகிய திருமால் உலகில் வந்து பிறந்து இறக்கின்ற வளப்பத்தாலும், பூர்வம் ஒரு காலத்தின் வீணே கருப்பு வில்லையுடைய மன்மதனை எரித்தவனாகிய சிவபெருமானுக்கு மூத்த பிள்ளையாகிய விநாயகன் மாமனுடைய காணியின்பொருட்டு வந்து இவ்விடத்தில் தங்கியிருக்கிறான் என்பதே.

இக்கருத்தினையே, தமது வாழ்நாளில் தமிழ் மொழியை அழியவிடாது காக்க தொல் காப்பியம் முதலிய பல பழைய நூல்களை விடா முயற்சியுடன் பரிசோதித்து அச்சுயந்திர வழியாக வெளிப்படுத்தித் தமிழர் என்றும் கொண்டாடப் பேருபகாரம் புரிந்த காலஞ்சென்ற ஸ்ரீமத் சி. வை தாமோதரம் பிள்ளையவர்கள் தமது "வீரசோழியப்பதிப்புரை" யில் பின் வருமாறு கூறியுள்ளார்.

"வஞ்சகச் சூதினால் வடவேங்கடத்தைக் கைப்பற்றியது போலவும், விக்கினேசுவரரைத் திருமண் சாத்தித் தும்பிக்கையாழ்வாரென்று கொண்டது போலவும், தமிழ் நூலுடையார் தஞ்சமயத்தாரில் யாருமில்லாத குறையை நிவர்த்திக்க முய



ன்று வல்லடி வழக்காக வைணவர்கள், சாதியில் ஒச்சனுஞ் சமயாசாரத்தில் பிடாரி பூசகனுமாகிய கம்பருக்கு ஆழ்வார் நாமஞ்சாத்தியும், வாய்ப்பகட்டுப்பேசியும் யாது பயன்?" என்பதே. இதனால் காளமேகப்புலவரிடத்து திருவரங்க வைணவர்கள் வாதம் புரிந்தவுண்மை வெளியாம். இதற்குப்பின்னர்தான் இவர் சிவபெருமானே எவர்க்குஞ்சிறந்த கடவுளென்பதைச் சித்தாந்தப்படுத்தி "பரப்பிரம விளக்கம்" என்னும் நூலைச் செய்திருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கவேண்டியதாகிறது. இது வைணவமத கண்டனஞ்செய்து சைவ மதஸ்தாபனஞ்செய்யும் ஒரு சிறந்த நூலாதலால் பொருட்சுவை மலிந்து வினோதமானதாகக் காணப்படுகிறது. இப்புத்தகத்தினைக் கண்ணுறுவோர் இவர்க்குச் சைவசமயத்தின் பாலுள்ள அன்பும் அளவற்ற காதலும் இன்னதென விளங்காமற் போகாது.

திருவரங்க வைணவரும், திருவானைக்காச் சைவரும் சண்டையிட்டபோது பாடியது.

சீரங்கத் தாருந்திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருதேன்—ஓரங்கள்
வேண்டா மிதென்ன விவரந் தெரியாதோ.

(இன்னும் வரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்

## சரஸா மோகனசுந்தரி அல்லது
### மூன்று சகோதரிகள்.

[தொடர்ச்சி]

வேற்றவேண்டியது புத்திரனாகிய என்னுடைய கடமையல்லவா ?" என்று சிதம்பரம் பிள்ளை கேட்டார்.

"ஏதாவது செய்யவேண்டுமென்றால் செய்கிறதுதானே ? அதை யார் வேண்டாமென்கிறார்கள். அந்த "ஏதாவது" நாலாயிரம் ரூபாவாக இருக்கவேண்டாம். பணம் நம்மைவிட்டு ஒருதரம் பிரிந்தால் எப்போதும் பிரிந்ததுதான். முதலைவாயில் அகப்பட்ட பண்டம் திரும்புமா? உங்களுடைய சகோதரிகளுக்கு விவாகமாகிவிட்டால் அந்தப்பணம் அவர்களுடைய புருஷர்களைச்சேருமே ஒழிய நம் குழந்தைக்கு வருமா ? நீங்களே யோசித்துப்பாருங்கள்" என்று குணவதி சொன்னாள்.

"ஆமாம்; நீ சொல்லுவதும் வாஸ்தவந்தான். நம்முடைய குழந்தை சுந்தரன் பெரியவனாகி அவனுக்கு விவாகமானால் குடும்பம் வலுத்துப் போகும் அப்போது இந்த நாலாயிரம் ரூபாய் இருந்தால் எவ்வளவு உதவியாயிருக்கும்." என்றார் சிதம்பரம் பிள்ளை.

"அதற்குச் சந்தேகமா ? உங்களுக்குத்தெரியாதது கரிப்பானை சுரண்டும் எனக்காதெரியப்போகிறது? நான் உங்களைப்போல பி. ஏ. பி. எல். பாஸ் கொடுத்து கவர்னரிடத்தில் நாலுகை சட்டையா வாங்கியிருக்கிறேன்?" என்று குணவதி சற்று புகழ்ந்து கூறினாள்.

"நாலு பேருக்கும் சேர்த்து ஆயிரம் ரூபா கொடுத்துவிட்டால் போதுமானதென்று நினைக்கிறேன். என்னுடைய மாற்றாந் தாயாகிய கற்பகத்துக்குச் சொந்தமான சொத்து எண்ணாயிரம் ரூபாய்க்குமேல் இருக்கிறதே? அவள் செத்தால் அந்தப்பணம் அவளுடைய புத்திரிகளைத் தானே சேரப்போகிறது. இந்த ஆயிரத்தையும் சேர்த்தால் ஒன்பதாயிரம் ரூபாய் ஆயிற்று. மூன்று பெண்களும் தலைக்கு மூவாயிரம் ரூபா எடுத்துக்கொள்ளட்டுமே. அரை வட்டி வீதம் பார்த்தாலும் மாதம் பதி



னைந்து ரூபா ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். இது போதாதா அவர்கள் செலவுக்கு?" என்றார் சிதம்பரம் பிள்ளை.

"ஆ! அதற்கும் சந்தேகமா? உலகத்தில் எந்தச் சகோதரன் மனம் வந்து இவ்வளவு பணத்தை சகோதரிகளுக்குக்கொடுப்பான் ? கூடப் பிறந்த சகோதரமாயிருந்தாலே கொடுக்கமாட்டானே? அவர்கள் உங்களுடன் பிறந்த சகோதரிகளல்லவே ? தகப்பன் ஒன்றாய் இருந்தாலும் அவர்களுக்கும் உங்களுக்கும் தாய் வேறுதானே ? அப்படியிருந்தும் ஆயிரம் ரூபா கொடுக்கலாமென்று நீங்கள் சொல்லுவது உங்களுடைய தங்கமான குணத்தையல்லவா காட்டுகிறது" என்று குணவதி கொஞ்சம் பொடி வைத்துப் பேசினாள்.

"ஆம்; அரை குறையாகச் செய்வதென்றால் எனக்கு இஷ்டப்படுகிறதில்லை. ஏதாவது செய்தால் நன்றாய்ச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் பேசாமலிருந்துவிடவேண்டும். செய்தும் கெட்டபேர் வாங்குவதென்றால் நன்றாயிராது. அவர்களுக்கே திருப்தியுண்டாகும்படிச் செய்யவேண்டும். 'இதற்குமேல் எதிர்பார்ப்பது நியாயமல்ல' என்று அவர்களுடைய மனதிலேயே படும்படியாக நாம் ஏதாவது செய்தால்தான் உலகத்தார் நம்மை மெச்சுவார்கள்." என்று சிதம்பரம் பிள்ளை சொன்னார்.

"அவர்கள் எவ்வளவு எதிர்பார்த்திருக்கிறார்கள் என்பது கேள்வியல்ல. நாம் எவ்வளவு கொடுக்கலாம் என்பதுதான் கேள்வி. கிழவிக்கிருக்கலாம் குமாரனுக்கு வாழ்க்கைப்படவேண்டுமென்கிற எண்ணம். குமரன் சம்மதிக்கவேண்டுமே? அவர்களுக்கிருக்கலாம் இலட்சம் ரூபாய் வேண்டுமென்கிற ஆசை. நம்மால் எவ்வளவு கொடுக்கமுடியுமென்பதைப்பற்றி யோசியுங்கள்." என்று குணவதி சொல்லவே சிதம்பரம் பிள்ளை சரியென்று சொல்வதுபோல் தலையை அசைத்தார்.

"ஏன் ? இல்லாவிட்டால் இன்னொன்று செய்து விடுவோமே ? அந்த மூன்று பெண்களுக்கும் பணக்கார இடமாகப் பார்த்துக் கல்யாணம் செய்துவிட்டால் நம்முடைய உதவி அவர்களுக்கு வேண்டியிராது.

ஆதலால் அவர்களுக்கு ஒன்றும் செய்யவேண்டியதில்லை. என்னுடைய மாற்றாந்தாயாகிய கற்பகத்துக்கு மட்டும் அவள் உயிரோடு இருக்கிற வரையிலும் மாதம் பத்து ரூபா சீவனாம்சம் கொடுத்துவந்தால் போதுமானதென்று நினைக்கிறேன். உன்னுடைய அபிப்பிராயம் எப்படி ?" என்று சிதம்பரம்பிள்ளை தம்முடைய மனைவியை யோசனை கேட்டார்.

குணவதி பதில் சொல்லுவதற்குத் தயங்கினவள்போல் சிறிது நேரம் இருந்துவிட்டு நீங்கள் "சொல்லுவது நல்ல யோசனைதான். ஏககாலத்தில் ஆயிரம் ரூபாயை இழப்பதைவிட மாதம் பத்து ரூபாய் கொடுப்பது நல்லதுதான். ஆனாலும் என்னுடைய மாமி பதினைந்து வருஷத்துக்கு உயிரோடு இருக்கிறாள் என்று வைத்துக்கொள்ளுவோம். மாதம் பத்து ரூபாய் வீதம் பதினைந்து வருஷத்துக்கு எவ்வளவு ரூபாய் ஆகிறது பாருங்கள். பதினெட்டு நூறு ரூபாய் ஆகிறதே! அவ்வளவு ரூபாய் கையிலிருந்தால் நம்முடைய குழந்தை சுந்தரன் பெரியவனாகி அவனுக்கு பிறக்கும் பெண் குழந்தைக்கு அது பெரிதாகி விவாகம் செய்துகொள்ளும்போது, ஸ்ரீதனமாகக் கொடுக்கலாமே?"

"நன்றாய்ச்சொன்னாய். இப்போதே கற்பகத்துக்கு ஐம்பது ஐம்பத்தைந்து வயதாகிறதே? இன்னும் அவள் எவ்வளவு காலத்திற்கு உயிரோடிருக்கப்போகிறாள்? இன்னும் இரண்டொரு வருஷகாலம் அவள் உயிரோடு இருப்பாளோ இருககமாட்டாளோ; அதுவே சந்தேகமாயிருக்கிறது. நீ பதினைந்து வருஷத்துக்குக் கணக்குப்போட்டுவிட்டாயே. என்னுடைய தகப்பனார் இறந்தபிறகு அவளுக்கு உள்ள பலமும் போய்விட்டதே. இரண்டு வருஷம் அவள் உயிரோடிருக்கலாம்; அதற்குமேல் முடியாது." என்று சிதம்பரம்பிள்ளை சொன்னார்.

உங்களுக்குத்தெரிந்தது இவ்வளவுதான். சீவனாம்சம் வாங்கும் பெண்களைக் கவர்ன்மெண்டு பென்ஷன் உத்தியோகஸ்தர்களைப்போல் நினைத்துக்கொண்டிருக்கிறீர்களோ? கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் உத்தியோகம்செய்யும் காலமெல்லாம் உத்தியோகம் செய்துவிட்டு பென்ஷன் வாங்கப்போகும் சமயத்தில் மரணமடைந்து விடுகிறார்கள் என்று நீங்கள் அடிக்கடி சொல்லுவது உண்மையே, சீவனாம்சம் பெறும் பெண்கள் விஷயத்திலும் அப்படிப்பட்ட அபிப்பிராயத்தைக்கொண்டு



விட்டீர்கள். இன்றைக்கோ நாளைக்கோ என்று நினைக்கும்படிக் குற்றுயிருங் குறையுயிருமாயிருக்கும் தொண்ணூறு வயதுள்ள கிழவிக்குக்கூட 'சீவனாம்சம்' ஏற்பட்டால் அவளுடைய ஆயுள் மார்க்கண்டனுக்கு வளர்ந்ததுபோல் என்றும் பதினாறாக வளர்ந்துகொண்டே போகிறதை நான் அநேக இடங்களில் பார்த்திருக்கிறேன். ஏன் ? பக்கத்துவீட்டுப் பார்வதியைப் பாருங்களேன் ? அவளுடைய புருஷன் இருந்தபோது எலும்புந்தோலுமாயிருந்தாள். அவர் இறந்தபோது மாதம் ஏழு ரூபாய் ஜீவனாம்சம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு இறந்துபோனார். இப்போது பாருங்கள் அவளை ! ஸ்ரீரங்கத்து கோவிலானைமாதிரி உப்பிப்போய்விட்டாள் ! இரண்டு கதவையும் திறந்துவைத்தால்கூட அவளுக்கு நுழைவதற்குக் கஷ்டப்படும்போலிருக்கிறது ! ஐம்பது வயது சென்ற கிழவி மாதிரியாயிருக்கிறாள் ? இப்போதுதான் வரவர அவளுக்கு அழகும் தேஜஸும் உண்டாகிறது. இன்னும் ஐம்பது வருஷத்துக்கு இப்படியே இருப்பாள் போலிருக்கிறது. சீவனாம்சம் கொடுத்தால் பெண்களுக்கு ஆயுள் வளரும். பார்த்துக்கொள்ளுங்கள்." என்று குணவதி காரணங்காட்டிப்பேசினாள்.

"கண்மணி ! நீ சொல்லுவதும் வாஸ்தவமே ! சீவனாம்சம் கொடுக்கிறதென்று வைத்துக்கொண்டால் நாம் எப்போதும் கொடுத்துக்கொண்டே இருக்கும்படி நேரிட்டுவிடும். ஒருமாதம் தவறினாலும் விடமாட்டாள். ஆகவே பயந்துகொண்டு கொடுக்கவேண்டிய பொறுப்பல்லவோ நம்முடைய தலையில் வந்து விடிகிறது" என்று சிதம்பரம்பிள்ளை சொன்னார்.

"அப்படியே கொடுக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள், உங்களுடைய மாற்றாந்தாய் "ஏதடா ! இவ்வளவாவது செய்கிறார்களே !" என்று பாராட்டப்போகிறார்களா ? இல்லை. ஏதோ நீங்கள் பயந்துகொண்டு கொடுப்பதாகத்தான் நினைப்பாள்."

"ஆதலால் ஒன்றுமே செய்யவேண்டாம். ஏதாவது நல்ல நாள் பெரியநாள் வந்தால் துணிமணிகளை எடுத்துக்கொடுத்து செலவுக்கும் இரண்டொன்றைக் கையில் கொடுத்துவிடலாம். ஏன்? நல்ல யோசனைதானே ?"

“ உங்களுடைய துணிமணியைத்தான் அவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ ? அவர்கள் தங்களுடைய இஷ்டப்படி எடுத்துக்கொள்ளுவார்கள். நீங்கள் ஏதாவது எடுத்துக்கொடுத்தால் ‘ அது அப்படியிருந்தது இது இப்படியிருந்தது ’ என்று குறை சொல்லுவார்களே ஒழிய சந்தோஷப்படமாட்டார்கள். மரியாதைக்கு தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ தினங்களில் அவர்களைக் கூப்பிட்டு ஸ்நானபானஞ் செய்யும்படி உபசரிக்கலாம். நம்முடைய வீட்டில் சாப்பிடும்படி செய்யலாம். இவ்வளவு தான் நம்மால் செய்யு முடியும். இதைப் பற்றித்தான் உங்கள் தகப்பனார் சொல்லியிருக்கலாம். நீங்கள் என்னென்னமோ நினைக்கிறீர்களே ! ” என்றாள் குணவதி.

“ பெண்ணே ! நீ சொல்லுவது தான் நியாயம். அப்படியே செய்துவிடலாம். ” என்றார் சிதம்பரம் பிள்ளை. இவ்விதமாக இவர்களுடைய சம்டாஷணை முடிந்தது.

[ இரண்டாம் அதிகாரம் முற்றும். ]

தொடரும்,

நாகை ஸி. கோபாலகிருஷ்ணபிள்ளை.

## சந்தேக வினாக்கள்.

1. போஜனஞ் செய்வதற்குமுன் காக்கைக்கு அன்னமிடும் வழக்கம் யாரால் எதற்காக உபதேசிக்கப்பட்டது ? ஏன் அவ்வாறு செய்யவேண்டும் ?

2. தருமச் சிந்தனையற்ற தனவானுடைய பொருளை, தரும சிந்தனையுள்ள ஏவலாள் தருமஞ்செய்து விடுவானாகில் அப்புண்ணியம் எவரைச் சார்ந்தது ?



3. எஜமானன் தருமஞ் செய்யக்கட்டளையிட காரிய நிர்வாகி எஜமானனுடைய சொத்துக்களைக் காப்பாற்றும் பொருட்டு அத்தருமத்தைச் செய்யாதிருப்பானானால் அப்பாவம் எவற்கு ?

4. ஓர் வேலைக்காரன், எஜமானனுடைய கட்டளைக்குட்பட்டு பொய், வஞ்சகம், கொலை முதலிய பாதகங்களைச் செய்ய நேரிட்டால் அப்பாவம் எவரைப் பீடிக்கும் ?

5. பாபம்செய்தவொருவன் நற்கதிக்காளாக வேண்டுமென்று புண்யகாரியத்தைச் செய்யநினைத்து எண்ணம் முடிவு பெறுவதற்குமுன் உயிர் நீங்கிவிட்டால் அப்பேர்ப்பட்டவன் நற்கதியையடைய முடியுமா ?

6. ஒரு ஜன்மத்தில், துர் கிருத்தியங்களைச்செய்த ஒருவன் பின்னால் அதற்குப் பரிகாரமாக நற் கிருத்தியங்களைச் செய்வானானால் பாவ புண்யம் சமமாய்ப்போகுமா ?

7. விபசாரதோஷமென்பது சாஸ்திர சம்மதமா ? வாய்ப்பேச்சா ? அத்தோஷம் ஸ்திரீ புருஷர் இருவகுப்பினரையும் பாதிக்கிறதா ? ஸ்திரீகளை மட்டும் பாதிக்கிறதா ? அதற்குப் பரிகார மேதேனுமுண்டா ?

8. சாஸ்திரங்களையறியாமல் பாவம் செய்தவனை ஈசுவரன் க்ஷமிப்பதுண்டா ?

9. பதி செய்யும் பாவமும் புண்யமும் பத்னிகளுக்கு உண்டா? பத்னி செய்யும் பாவமும் புண்யமும் பதிகளுக்குண்டா ?

இன்னும் வரும்.

இச்சந்தேக வினாக்களுக்கு சாஸ்திர ஆராய்ச்சிவல்லோர் அடியேன்மீது தயைபுரிந்து “ சந்தேக விளக்க ” மென, முன்றியே விளக்கி வரும்படி விரும்புகின்றேன்.

குடந்தை, ஜி. இராமசந்திர நாயுடு.

## ஹாஸ்யக் குறிப்புகள்.

1. ஒருநாள் ஒருவன் வைத்தியர்களைப்பற்றி பரிகாசமாய்ப் பேசினபோது, அதைக்கேட்டிருந்த ஒரு வைத்தியன் உக்கிர கோபங்கொண்டு, அவனைப்பார்த்து நான் வைத்தியம் செய்தவர்களில் என்னை குறைவாகப் பேசினவர்களுண்டா என்று கர்வத்தோடு பேசலானான். அக்கூட்டத்திலிருந்த ஒருவன் அவனைப்பார்த்து, "வைத்தியரே! நீர் தாராளமாய்ப் பேசும்; தங்களுடைய மாத்திரையால் எமலோகஞ் சென்றவர்கள் திரும்பிவந்து உம்மைப்பற்றி குறை சொல்லப்போகிறார்களா? நீர் தைரியமாய் பேசும்" என்றான்.

2. ஈனஸ்திதியிலிருந்த ஓர் மனிதனிடத்தில் பிச்சைக்காரன் ஒருவன் யாசகங்கேட்டான். அதற்கவன் "ஐயோ என் சகோதரனே, நீ தடை செய்யாமலிருந்தால் உன்னிடத்திலேயே நான் பிச்சை கேட்க விருக்கிறேன்" என்றான்.

3 கர்வமுள்ள ஒரு சிறுவன் அம்பட்டனிடத்திற்போய் நீ எப்போதாவது குரங்கிற்கு க்ஷவரஞ் செய்ததுண்டா வென்று வேடிக்கையாய் கேட்டான். அதற்கு அம்பட்டன் மிக்க மரியாதையோடு "இல்லை ஐயா! தயவுசெய்து உட்கார்ந்தால் தங்களிடத்தில் செய்து பார்ப்பேன்" என்றான்.

K. S. சுப்பிரமணிய பிள்ளை.

## கமலாஸனியைப்பற்றி

திருச்சி தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமான் N. M வேங்கடசாமி நாட்டார் எழுதுகிறார்கள்.

அன்புமிக்க ஐயா! தங்கள் 'கமலாஸனி'யின் இவ்வாட்டைச் சஞ்சிகையிரண்டு வரப்பார்த்து மகிழ்ந்தேன். பிறப்பு மாத்திரையானே நிரதிசய வின்பம் பயக்கும் திருவாரூரிற்றோன்றி வெளிப்போந்துலாவும் இப்பத்திரிகை தன்னை ஆசிரயிப்பார்க்கு எவ்வித இன்பமும் பயக்கவற்றாகும் எனக் கருதுகின்றேன். விஷயங்கள் யாவரும் படிக்குமியல்பின. இது செவ்விதின் நடக்க இறைவன் அருள் புரிக. தங்கட்குக் கடிதமெழுதப் பன்னெடு நாட்களாக எண்ணி வந்தேன். இன்றே திருவருள் கூட்டிற்று.

உ

# கமலாஸனி
Kamalasani.

...7 1915 MADRAS.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம் 3. } 1915௵ ஏப்ரல்௴ { சஞ்சிகை 4

## இன்பம்.

(I)

இன்பம் இரண்டு வகைப்படும். அஃதாவது:- இம்மையின்பம், மறுமையின்பம். இம்மை இன்பமாவது இவ்வுலகத்தில் அநுபவிக்கும் இன்பம். மறுமை இன்பமாவது இவ்வுலக வாழ்வைத்துறந்தபின் அநுபவிக்கும் இன்பம். இவ்விரண்டினுள் இம்மை இன்பமென்பது மிகத் தாழ்ந்ததாகவுள்ளது. எவ்வாறெனிற் கூறுதும்.

ஆன்மா அநாதியே தன்னைப்பற்றி நின்ற ஆணவ மலவலியினாலே நீர்க்குமிழிபோல நிலையின்றி அழிதன் மாலையவாகிய உலகப்பொருள்களிடத்து அன்புவைத்து அனுபவித்து மகிழ்வதே இம்மையின்பம். இவ்வின்பமும் நீர்க்குமிழிபோலத் தோன்றிய காலத்தே அழியுந்தன்மையையுடையது. சரீர சம்பந்தம் ஒன்றையே கொண்டவர்களாகிய மாதா, பிதா, மனைவி, மக்களிடத்து அன்புவைத்து ஒருவன் அனுபவிக்கும் இன்பம், இன்பம்போற் காணப்படினும் ஆழ்ந்து ஆராயுமிடத்து அது துன்பமாகவே முடியும். மேற்கூறிய மாதா பிதா மனைவி மக்கள் முதலானோர் நம்மிடத்து அன்புபாராட்டுவதெல்லாம் தம் பயன் கருதியேயன்றி நம்பயன் கருதியல்லவென்பது ஒருதலை. இதுபற்றியே,

" பெண்டீர்மக்கள் சுற்றமென்னும் பேதைப்பெருங்கடலை
விண்டுபண்டே வாழமாட்டேன் வேதனை நோய்வலிய"

என்று ஸ்ரீ திருஞான சம்பந்தப்பிள்ளையாரும்,

" தந்தையார் தாயார் உடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமாரே, வந்தவாறெங்ஙனே போமாறேதோ மாயமாமிதற்கேதும் மகிழவேண்டாம் "

என்று ஸ்ரீ வாகீசப்பெருமானும்,

" வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் "

என்று ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

" உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்
பேர் வேண்டேன் கற்றாரை யான் வேண்டேன் "

" மாடுஞ்சுற்றமு மற்றுளபோகமு மங்கையர் தம்மோடுங்
கூடியங்குள குணங்களா லேறுண்டு குலாவியே திரிவேனை "

என்று ஸ்ரீ மணிவாசகப்பெருமானும்,

" தந்தைதாய் தமர்தாரம் மகவெனு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டம் "

என்று ஸ்ரீ தாயுமான சுவாமிகளும்,

" பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணான் மயக்கி முலையால் வெருட்டிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடைத்தள்ளி என்போதப் பொருள்பறிக்க "

" ஊருஞ்சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல இத்தேயத்திலே
யாருஞ்சதமல்ல "



என்று பட்டினத்தடிகளும் கூறிப்போந்ததென்க.

மனைவி மக்கள் சுற்றத்தோடு கூடி அனுபவிக்கும் இன்பமானது ஓர் நாய் சிறிதுகூட மாமிசச்சத்தில்லாது நீண்ட காலமாகக் குப்பையிற் கிடக்கும் எலும்பை மாமிச இச்சை காரணமாக எடுத்து அதனை வாயால் ஓயாது கடிக்க, அவ்வெலும்பானது அந்நாயின் வாயில் புண்ணுண்டாகும்படி குத்திவிட அப்புண்ணிலிருந்து வரும் இரத்தத்தைத்தன் வாயினின்று வரும் இரத்தமென்றறியாது, எலும்பிலிருந்து வரும் இரத்தமெனக்கருதி அவ்வெலும்பை மேலும் மேலும் விடாது கடித்துத்தன் வாயைப்பெரும் புண்ணாக்கிக் கொள்வதைப்போன்றது. இது பற்றியன்றோ ஆன்றோரும் நாயிற் கடையேன் நாயிற் கடையேன் எனப் பலவிடங்களிலும் பரிபவப்பட்டுக் கூறிப்போந்தனரென்க. கயிற்றைப் பாம்பென்றும், இப்பியை வெள்ளியென்றும், கானலை நீரென்றும் கருதியதைப்போன்றது உலக இன்பத்தை இன்பமென்று கருதுவது.

நாம் மேற்கூறிப்போந்த நியாயங்களால் இவ்வுலக இன்பம் இன்பமல்லவென்று துணியக் கிடக்கின்றது.

இனி மறுமையின்பத்தைப்பற்றி ஆராய்வாம். மறுமையின்பமும் பெத்த இன்பமென்றும் முத்த இன்பமென்றும் இரண்டு வகைப்படும். அதாவது:-

இவ்வுலகத்தில் செய்த நல்வினைக்கீடாக நாம் இந்திரன், பிரமன், விட்டுணு, முதலிய இறைவர்கள் பதத்தையடைந்து அநுபவிக்கும் இன்பம் பெத்த இன்பமென்று சொல்லப்படும்.

இப்பெத்த இன்பம் குறித்தகாலம் வரையும் நின்று பின்னர் அழிந்துபோவதும், அனுபவிப்பவனைத்திரும்பவும் பிறவிப் பெருங்கடலில் தள்ளுவதுமாக வுள்ளதாகலின், இவ்வின்பமும் நிலவுலக இன்பத்தை எவ்விதத்திலும் ஒத்ததேயன்றி வேறல்ல. இந்திரன் பிரமன் விஷ்ணு முதலியவர்கள் மூல

பலத்தினால் பந்திக்கப் பட்டவர்களாதலாலும், அவர்களும் அவர்கள் பதங்களும் அழிந்தழிந்து தோன்றுகின்றபடியினாலும் இவ்வின்பமும் நிலையுடைத்தன்றென்பது துணியக்கிடைக்கும். இதை,

" நூறுகோடி பிரமர்க ளொழிந்தனர்
ஆறுகோடி நாராயண ரங்ஙனே
ஏறுகங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறிலாதவ னீச னொருவனே "

என்று கூறிய திராவிட வேதத்தாலறிக இதுவரை நமது ஆராய்ச்சியால் இம்மையின்பமும், மறுமையின்பமிரண்டினுள் பெத்த இன்பமும் ஒரு தன்மைத் தாய்க்கனவிற் கிடைத்த கைப்பொருள் போலப் பயனின்மையாக முடிந்தன.

இவ்விரண்டின் பங்குகளும் இவ்வாறாகவே எஞ்சி நின்றது முத்த இன்பமொன்றே. இனி அவ்வின்பத்தைப்பற்றி ஆராய்வாம்.

முக்தம் என்ற வடமொழிச்சொல் முத்தம் என்று தமிழில் தற்பவச்சொல்லாகி நிற்கின்றது. முக்தம் என்ற வட சொல்லுக்கு விடுதல் என்பது பொருள். இங்கே முத்த இன்பமென்று கூறவே ஆன்மாக்கள் பிறப்பென்ற பெருஞ்சாகரத்திற் கிடந்துழன்று வருந்தாது அதினின்றும் விடுபட்டு அனுபவிக்கும் இன்பம் என்பது தேர்ந்த பொருள். இவ்வின்பமே பேரின்பமென்று சொல்லப்படும்.

இளமையும் நலனுமொத்த தலைவன் தலைவியிருவரும் மனமொத்து அனுபவித்த புணர்ச்சி இன்பத்தை எவ்விதம் இருந்ததென்று கேட்டால் அனுபவித்த தலைவனோ அல்லது தலைவியோ அஃதிவ்வித மிருந்ததென எடுத்துச்சொல்ல ஆற்றல் சிறிதுமில்லாதாராக இருப்பதை நாம் நிதரிசனமாக அறிகின்றோம்.



முற்றத்துறந்த முனிபுங்கவர்களினாலே வெறுத்தொதுக்கப்பட்ட கேவலமுடையதாகிய சிற்றின்பமே அனுபவித்த ஒருவனால் இத்தன்மையதாக இருந்ததென்று எடுத்துக்கூற இயலாதேயானால், பசுபோதமற்றுப் பதிபோதம் பெற்றுப் பதியோ டிரண்டறக்கலந்து ஆன்மா அனுபவிக்கும் பேரின்பத்தின் றன்மையைக் கேட்பார் ஒருவருக்கு இத்தன்மைத்தென்று எடுத்துக்கூற எவ்வாறு முடியும் ஒரு காலத்தும் முடியாததென்பதே யொருதலை.

ஒரு தலையாயினும் மேற்கூறிய முத்த இன்பமாகிய பேரின்பத்தை அளிக்கவல்லதாகிய அன்பு எதுவோ அவ்வன்பினையே இன்பமென்று பெரியோர்களால் வகுத்துக் கூறப்பட்டிருத்தலால் அவ்வன்பைப்பற்றியே நான் இங்கு எடுத்துக் கூறுகின்றேன்.

" அன்புஞ்சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே "

என்று திருமூல நாயனாரும்.

" இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார், பிறவாமை வேண்டுமீண்டும் பிறப்பிறப்புண்டேலுன்னையென்று, மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநாள் மகிழ்ந்துபாடி, யறவா நீ யாடும்போதுன்னடியின் கீழிருக்கவென்றார் "

என்று காரைக்காலம்மையாரும்.

" இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத்தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள்ளோரைக்
கனவினு நனவினுங் காண்பதுதானே "

என்று ஔவைப்பிராட்டியாரும் கூறியருளினூர்.

இதனாலே அன்புஞ் சிவமும் வேறல்லவென்பதும், அன்பையடைந்தவர் சிவத்தையடைந்தவரென்பதும், அன்பையடைந்தவரே பேரின்பத்தையடைந்தவரென்பதும் வெள்ளிடைமலைபோல் விளங்கிக்கிடக்கின்றது.

பத்திராதிபர்.

---

## பண்டைநாட் புலவர் பெருமை.

---

அஃதாவது முற்காலத்தில் புலவர்க்கிருந்த சிறப்பும் செல்வாக்கும். இங்கு எண்ணிச்சொல்லவந்தது நம் தமிழ் நாட்டுப்புலவரைமட்டுமே. மன்னனுமாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்-மன்னனிற் கற்றோன் சிறப்புடையன், மன்னனுக்குத், தன்றேயமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச், சென்றவிடமெல்லாஞ் சிறப்பு என்ற பாட்டினுண்மை இன்றைக்குமுண்மையாயினும், அனுபவத்தில் யாவருங் காணும்படியான பாக்கியம் தற்காலத்துப் புலவர்க்கின்றாக, அது வாரியின் முத்தம்போல் கிடக்கிறது. முற்காலத்து அன்னோர் உற்ற பதவியைக்காணின் அது சற்றுப் பயன்தருமென் றெண்ணியே புலவர் சிறப்பைக்கூறவந்தது.

அவரிடம் கவித்திற மன்றித் தெய்வத்தன்மையும் நன்னடக்கையும், சாதுரியமும் குடிகொண்டிருந்ததாய் எழுதப்பட்டுள்ளதாகையால், அத்தகைய பெருமைக்கு அக்குணங்கள் காரணமாகலாம். காரணம் யாதாயினுமாருக, பெருமையினுண்மை மலைமேலேற்றிய விளக்கென விளங்கா நிற்கும், மன்னவர்களுக்குள் உண்டாம் மனவருத்தம், அரசர்க்கும் அரசிக்கும் உண்டாம் பிணக்கு, பெற்றோர்க்கும் பிள்ளைகட்கும் உண்டாய மனஸ்தாபம், இவற்றைப்போக்கி நட்பு மூட்டுதல், தந்தையின் பின்னே தனயன் இளமையில் நாடாளல், சத்துருவின் ஒழுக்கமறியும் ஒற்றுடல், தூதுபோதல் முதலாம் அரியசெயல், செய்யும் ஊழ்வலி பெற்றார் பெருமை எத்துணைத்தாதல்வேண்டும்?



ஒருகாலத்தில் உறையூரில் அரசு புரிந்து வந்த கோப்பெருஞ் சோழன் என்பவன் கல்வி யறிவு ஒழுக்கங்கள் நிறைந்து, பல்லோர் புகழப்பாவலர் நட்புப்பெற்று விளங்குங்கால், அவர்க்கும் அவன் மக்கட்கும் பெரும்பகையுண்டாம், அவரைக்கொல்லற் பொருட்டு, படையுடன் எழுதலும், ஆங்கண் விளங்கிவந்த தமிழ்ப் புலவருள் ஒருவராம் புல்லாற்றூர் எயிற்றியனூர் அதுகண்டு, என்ன விந்தை! உன்னுடன் பொருதவந்தார் உன் பகைஞருமல்லர்; நினையுங்காலை நீயுமவர் பகைஞனுமல்லை; உன்பிற்காலத்து இவ்வாட்சியுரிமை யாவர்க்குரித்து? அவர்போரில் தோற்பின் இப்பெருஞ்செல்வத்தையாவர்க்கீவை நீ தோற்றிடினோ பகைவர்கள் இகழ்ப்பழியைச் சுமப்பை. ஆகலான் சினத்தை யகற்றி வானவருலகம் செல்லுதற்கியைந்த தவத்தையாற்றலே சிறப்பிற் சிறப்பாம். அது செய்ய விரைந்தெழுவாய் எனப்புத்தி புகட்டி ராஜஸத்தை மாற்றிச் சினத்தையுமாற்றினூர்.

மற்றொரு காலத்துக் குமணனென்ற ஓர் கொடையாளி தன் தம்பியால் நாடு கொள்ளப்பட்டுத் தான் காட்டில்பதுங்கியிருந்தகாலைத் தன்னை நோக்கி யாசித்துவந்த பெருந்தலைச் சாத்தனூருக்குக் கொடுக்கப்பொருளின்றித் தன் வாளைத்தந்து, தன் தலையைத் துணித்துத் தம்பிக்கீந்தால் மனம் பூரித்து மிடியைத்தீர்ப்பான்என்றுசொல்லலும், அவர் வியப்புற்று இளங்குமணனிடம் சென்று நடந்ததை யுணர்த்திப் பகைமையைப்போக்கினர்.

குலோத்துங்க சோழன் முதலாமவன் ஒட்டக்கூத்தரிடம் வைத்த மதிப்பும், சிற்சில சமயங்களில் தான் நாடுவிட்

டுச் செல்ல நேர்ந்தக்கால், அவரை அரசாளுமாறு, நாட்டிலிருத்தியதும், அவர் மொழியைச்சிரமேற்கொண்டு புகழேந்தியை வருத்தவிட்டதும், அதுகண்ட அரசி ஊடல் மிக்கு அரசனை வெளியில் வைத்துக் கதவைத்தாழிட்டதும், ஒட்டக்கூத்தர் யாது முயன்றும் பயன்படாதுபோக, புகழேந்தியைக்கொண்டு அரசன் அது தணித்ததும் நாடறிந்த விஷயம்.

இன்னும், கடைஎழுவள்ளல்களில் ஒருவனாய பேகன் என்பான் தன் மனைவி கண்ணகியைத்துறந்து, பொதுமகள் ஒருத்தியிடம் அன்பு பூண்டொழுகலும் அவள் கண்ணீர்கண்டு பொறுத புலவர் பலர் அவனைப்பாடி, சினத்தைப்போக்கி அன்பைத்திருப்பி அவளுடன் சேர்த்துவைத்தனராம். அவ்வாறு செய்யப்பாடினோர் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றார்க்கிழார் என்பவர்கள்.

மற்றொருகாலத்தில் சோழன் செங்கணான் சேரமான் கணைக்காலிரும்பொறையைப் போரில் வென்று, பிடித்துக்கட்டிச் சிறையில் வைத்தலும், அதுகண்டு பொறாத பொய்கையார் என்னும் புலவர் "களவழி நாற்பது" என்னும் நூலைப்பாடி அவனைச் சிறைமீட்டதும், இளந்த்தன்மை என்ற புலவன் சோழன் நலங்கிள்ளியிடமிருந்து அவன் பகைவனும் நெடுங்கள்ளியிடம் சென்றகாலத்து, அவனை ஒற்றனென்றெண்ணிக்கொல்லஎத்தனித்தும், அதுகண்டஞ்சியகோவூர்க்கிழார் என்ற புலவர் பாடித்தடுத்தும், இன்னொரு சமயம் அந்நலங்கிள்ளி நெடுங்கள்ளியூராம் ஊறையூரை முற்றுகை போட்டபோது கோட்டை வாயிலடைத்து உள்ளிருந்தகிள்ளி அக்கோவூர்க்கிழாரால் தேறுதல் செய்யப்பட்டதும் புலவர் பெருமை அக்காலத்து எத்துணையதாய் இருந்ததெனத் தெளிவிக்கும்.

அன்றியும், பூதலமாளும் புலவராயினும் அஞ்சாது உண்மையுரைத்தல், அன்னோர் தவறியவழி இடித்துச் சொல்லல்,



மதிப்பைநாடிப் பொருளைவெறுத்தல், சொற்றவறாமை, நன்னடக்கை முதலாம் நற்குணங்கள் பொருந்திய அரும்புலவர் பெருமையுற்றால் அது வியப்பாமோ? பொறாமையே வியப்பாம்.

இத்தகையருள் பெருஞ்சித்திரனார் ஒருவர். இவர் வறுமைத் துன்பத்தில் மிக்க ஆழ்ந்தவர். ஆயினும் தன்னை மதித்துத் தக்கவாறு பரிசில் கொடாது சிறிது கொடுத்த இளவெளிமானை அது கொள்ளாது; நெஞ்சமே இவன் கண்டும் காணாதவன்போல் முகத்தைச் சுளுக்கிச் சிறிது தந்த உள்ளங்கனியா வன்கனியாவன்; ஆகையால் இவனை விட்டு எழு; உலகம் பெரிது; நம்மை விரும்புவரும் பலர் என, அவனை இகழ்ந்து கூறிச்சென்றனராம். அவரே இன்னொருகாலம் வறுமையால் வருந்தி அதியமான் நெடுமானஞ்சியிடம் செல்லலும், அவன் அவரைக்காணாது பரிசளிக்க அவன் அது கொள்ளாது.

காணாதீத்த இப்பொருட்கு யானோர்
வாணிகப்பரிசிலனல்லேன் பேணித்
தினையளவாயினும் இனிதவர்
துணையளவறிந்து நல்கினர் விடினே.

என்று சொல்லிச் சென்றுவிட்டனராம்.

பெருங்குன்றார்க்கிழாரும் இத்தன்மையரே. இவர் பரிசில் கொடாது தாமதம் செய்துவந்த அரசன் ஒருவனை, உயிர்களைக்காக்கும் பெருமையை மறந்து அன்பில்லாத பார்வையோடுகூடிய உன்னைப்போல் மற்ற மன்னரும் ஆவார் ஆயின் என்போன்ற் புலவர் பிறவாதிருத்தலே சிறப்பு; வறுமையாற் காய்ந்து, என்வரவு பார்த்திருக்கும் என் மனைவி இதுகாறும் என்னைக் காணாமையால் உயிர்மாயாது இருத்தல் அருமை; அவள் துன்பம் தீர்த்தல்வேண்டி உடனே செல்வேன்; என்னை இவ்வாறு மனம் வருந்தச் செலுத்தும் நீ செம்மையாய் இருக்கக்கடவை என்றும்; நீ வள்ளல் என்றெண்ணி அல்லாதாரை

இகழ்ந்து பாடியதைக்கேட்டும், நீயும் அவ்வாறே செய்தாய்; பரிசில் கையிற் புகுந்ததுபோலக் காட்டிக்கொடாது நின்ற உன் நிலைமையைக்கண்டு நான் வருந்தியதற்கு நீ நாணாய் ஆயினும், நாணும்படி உன்மார்பை வாழ்த்திச் செல்வன்; நாடோறும் ஒவ்வொரு இடமாய் மாறிமாறிச் சென்றும் உணவுகாணாது வருந்திச் செத்த எலிகள் நிறைந்துள்ள எனது அகத்துள் வறுமையாற்றவிக்கும் எனது இல்லாளைத் தேற்றற்பொருட்டுச் செல்வேனென்று பாடிச்சென்றனராம். இவ்வாறே பெருந்தலைச் சாத்தனாரும் மகா தைரியம் வாய்ந்தவர். ஒருசமயம் இவருக்குப்பரிசில் தாராது தாமதம்செய்த அரசனை,

" முற்றியதிருவின் மூவராயினும்,
பெட்பின்றீதல்யாம் வேண்டலமே''

எனப்பாடிச்சென்றனராம். இவர் ஒருசமயம் இளவிச்சிக்கோ இளங்கண்டீரக்கோ என்ற அரசர் இருவர் ஒருங்கிருந்த இடத்துச் செல்ல நேர்ந்து பிந்தியவனைப் புல்லி, முந்தியவனைப்புல்லாது வைத்தலும் அதன் காரணம் வினவினதற்கு, அன்னோர் பாவலர் பசியைத்துடைக்கும் மன்னவர், நீயோ நன்மரபில் உதித்துச் செல்வம் படைத்துப் புகழுக்கும் புலவர்க்கும் பாத்திரனாயினும், பாவலர்க்குத்திறவாத கதவுடைமை பற்றி அன்னோரும் பாடினர் இல்லை; யானுமிவ்வாறு செய்துளேன் என்றறைந்தார்.

ஔவையும் பரிசில் கொடாது தாமதஞ்செய்த அதியமான் நெடுமானஞ்சியைக்கண்டு, மொழிவிதை விதைத்து உன்னியது முடிக்கும் வன்மையையுடையவர் யாம்; உன்பெருமையின் எல்லை எவ்வாறென்றறிந்தாயில்லை; என்பெருமையையுமளவிட்டாயில்லை; உலகத்தில் அறிவும் புகழுமுடையவர் யாவரும் இறந்துவிடவுமில்லை; ஆதலால் 'எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே'' என்று இகழ்ந்து பாடிச் சென்றனராம்.



இத்தகையோர் கணக்கில்லாமல் இருந்திருத்தல் வேண்டுமென்றுஊகித்தற்கிடமிருக்கிறது. இக்காலத்தோர் வறுமையால் வருந்துவதில் முற்காலத்தவரை ஒத்துள்ளார். ஆயினும் இதர விஷயத்தில் ஒத்தாரில்லை. ஒத்தவரையும் மதிப்பாரில்லை. மதவிஷயமாய்ப் பழைய புராணங்களைக்கற்றுத் திருப்பித்திருப்பி ஒப்புவித்துச் சற்றுப் பெருமைபெறும் சிற்சிலரைத் தவிர, பொதுவாய்ப் பாஷாஞ்ஞானமும் நுட்ப அறிவும் நிறைந்தவர் தொகை மிகச் சொற்பம். அவரையும் மதித்து மேன்மேலும் தூண்டத்தக்க மன்னருமில்லை. செல்வருமில்லை. அவர்களை எதிர்பாராது புலவர், சிகாமணிகள் தமிழ் கற்கப்புகுங்காலம் எக்காலமோ? அக்காலத்துத்தான் தமிழ் செழித்துவளரும்.

நாகை, ஜி. சதாசிவம்பிள்ளை.

---

## சமயம்.

சமயமென்னுமிச்சொல்லுக்குப் பல பொருளுரைப்பர் பெரியோர். ஆயினுமவற்றுளிரண்டை ஈண்டெடுத்துக்கொள்ளுதல் அவசியமாகும். அவை மதம் காலம் என்னும் இவ்விரண்டுமே. ஆகவே முதலில் மதம் என்பதைப்பற்றி ஒருசிறிது சொல்லவேண்டுவது உசிதமாயிற்று. அதை ஆராயுங்கால்,

பல்வகைப் பிறப்புக்களிலும் பெருமை வாய்ந்ததெனப் பலராலும் புகழப்படும் மானிடப்பிறவியில் பூர்வ ஜென்ம புண்ணிய பரிபாகத்தால் வந்தவதரித்தவர்களாம் நம்மனோர்களுட் சிலர் முற்காலங்களில் தாந்தாம் உறைந்த இடத்திற்கும் காலரீதிக்கும் தத்தம் புத்தி நுட்பத்திற்குத் தக்கவாறு நாம் இவ்வுலகில் வந்தவதரித்தது எற்றுக்கு? நாம் யார்? இவண் நாம் செய்யவேண்டிய காரியம் என்னை! என்பனவாதிய விஷயங்களைத்தெள்ளிதின் ஆராய்வான் புகுந்து அவர

வர்களும் தத்தம் மனோபாவத்திற்குத்தக ஒவ்வொரு முடிபு கண்டிருக்கின்றனர்.

இவர்கள் தாம் ஆராய்ச்சிசெய்த மேற்கூறிய விஷயங்களைத் தங்கள் பால் அடிக்கடி வந்து பேசும் சிலர்க்கும் சிற்சில சமயங்களில் சில விடங்களில் பிரசங்க முகத்தாற் பலர்க்கும் போதிப்பர். அவர்கள் பலரும் தாம் கேட்ட பலவித விஷயங்களின் உண்மையை ஓர்ந்துணர்ந்து அவ்வவற்றிற்கேற்ப வொழுகி வந்தனர். உதாரணமாக கௌதம புத்தர் என்பவரும் மஹாவீர ஞாத்ரீ புத்ரர் என்பவரும் சில விஷயங்களைக்கண்டுபிடித்து அவற்றைத்தம் சீடர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் கற்பித்து தங்கள் வழிப்படி கடைப்பிடித்து ஒழுகும் விதம் எவ்வாறு செய்தனர் என்பது பலர்க்கும் போதரும். மேற்கூறியோரது கொள்கைகளே முறையே பௌத்த சமயமென்றும் ஜைன சமயமென்றும் பேர் பெற்றன. இவ்வாறே பலர் பல சமயங்களைக் கண்டுபிடித்து அவ்வவற்றிற்கு ஆசாரியர்களாக வீற்றிருந்தனர். இவையாவும் நமது ஆத்மா நல்ல வழியைச் சேரவேண்டிய மார்க்கங்களைக் காட்டற் பாலனவாம் கைகாட்டி மரங்கள். ஓர் ஊரில் பெய்யும் மழை ஜலமானது சிற் சிறு கால்வாய்கள் வழி ஓடி சிற்றாறுகளிற் சேர்ந்து அவையும் பேராறுகளிற் கலந்து இறுதியில் தனது முடிவாகிய சமுத்திரத்தைக்காணுதல் கண்டிருக்கிறோம். இதுபோலவே ஜனங்களும் தமது மனோபாவத்திற்குத்தக்க சிற்சில சமயங்களைப்பின்பற்றியொழுகி அக்கைகாட்டி மரங்கள் செல்லும் மார்க்கத்திற் சார்ந்து இறுதியில் Destination Goal என்று சொல்லப்படும் ஒன்றைக்காணுவது திண்ணம் என்பது காணக்கிடைக்கும். ஏனெனிற் கூறுதும்.

"எவ்வெவர் தம்மையேனும் யாவரே யெனினும் போற்றின்; அவ்வவரிடமாக்கொண்டே யவர்க்கருள் ஐத்தருதலையே தொழிலாகப் பூண்டுள்ள கருணைக்கடலாம் முழுமுதலொன்றுண்டேயன்றோ?" அதுபற்றி என்க.



இனி நிலவுலகில் வழங்கும் மதங்கள் பலவற்றுள்ளும் புண்ணிய பூமியென்று யாவரும் பெருமையாய்ப்பாராட்டும் பெற்றிவாய்ந்த நமது இந்துதேசத்தில் வழங்கும் மதங்களே சிறந்தன. காரணமென்னெனின் இக்காலத்திலும் அநேக ஜாதியார்களாலும் தேசத்தார்களாலும் உண்மை நூல் என அங்கீகரிக்கப்பட்ட வேதாகமங்களையே முக்கிய ஆதாரமாகவும் பிரமாணமாகவுங் கொண்டுள்ளமையாதலின் இவைகள் யாவும் பொதுவகையில் ஹிந்துமதமெனப் பெயர்பெறும். இம்மதம் பல்வேறு பாகுபாடுள்ளது. இப்பகுப்புக்கள் அனைத்தும் சைவம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்னுமிவை மூன்றனுளடங்குவனவாகும்.

சைவம் என்பது சிவபெருமானையே பரம்பொருளாமெனக்கொண்டு வழிபடுவது இச்சமயக் கொள்கையாராய்ச்சியாலும், சைவ சாத்திரங்களின் நுண்ணுணர்வினாலும், இதனுண்மைப்பொருளைக் கண்டொழுகுவதனாலும், உலகிலுள்ள மற்றெம்மதத்தையுந் தன்னுளடங்கி யவற்றைச் சோபானமாக்கித்தான் மேனிலையில் நின்று வீடு பயப்பதாய்த்தனக்கு ஒப்பும் உயர்வும் வேறொன்றிலாததாய் அமைந்துள்ள ஞானமதமென்பது நன்கு புலப்படும். இவ்வுண்மைக்குச் சாட்சியம்.

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம்புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம
அறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள் புரிந்தும்
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றார்சைவத்
திறத்தடைவரிதிற்சரியை கிரியாயோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வர்"

"யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார் தாம்வருவர் மற்றத்தெய்வங்கள்

162013

வேதனைப்படு மிறக்கும் பிறக்குமேல் வினையுஞ்செய்யு
மாதலானிவையிலா தானறிந்தருள் செய்னன்றே"
என்னுஞ் சித்தியாருடையார் திருவாக்குக்களே.

இனிச் சமயங்களெல்லாம் புறப்புறச்சமயமும், புறச்சமயமும், அகப்புறச் சமயமும், அகச்சமயமுமாக நான்கு வகைப்படும். அவற்றுள், உலோகாயதம், நால்வகைப்பௌத்தம், ஆருகதம் எனப் புறப்புறச்சமயம் அறுவகைத்து, புறச்சமயம்:-தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என அறுவகைப்படும். பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கவாத சைவம் என ஆறு பகுப்பினது அகப்புறச்சமயம். அகச்சமயம் ஆறுவன:-பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவ சமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர வவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம், அல்லது நிமித்த காரண பரிணமவாத சைவம், இந்நால்வகைச் சமயங்களும் அகம்புறம் தன்னும் இரண்டு கூற்றுள் அடங்குமாறும் உணரர்பாற்று.

மேற்போந்த சமயங்கள் அகம்புறம் எனப்பகுக்கப்பட்டதின் காரணத்தையும் அவைகளது கொள்கைகளையும் இங்ஙன் விரிக்கப்புகின் மிகுதியும் விரியுமென அஞ்சிவிட வேண்டுவதாயிற்று. ஆயினும் இவற்றையுணர விரும்புவார் சிவஞானபோதமா பாடியத்திலும், நீலகண்ட பாடியத்திலும், சர்வதரிசன சங்கிரகம் என்னும் நூலிலும் பார்க்கக்காணலாம்.

எனினும் அகச்சமயத்துளடங்கும் ஆறு சமயங்களையும் முற்கூறிய நூற்காரர்களைப் பெரும்பாலுந் துணையாகக்கொண்டு ஒரு சிறிது விசாரிப்போம்.

பாடாணவாத சைவம்:—அநாதி தொட்டே ஆன்மாவிற்கு ஆணவ மலம் சகசமாயுண்டு, அத்துணையானே ஏனைமாயை கர்மங்கள் ஆன்மாவைத் தலைக்கூடும் சரீரங்களை நமக்கு இருவினைக்கீடாக இறைவன் கொடுக்கிறான். அவற்றைப்



பொருந்தி ஆன்மா இன்ப துன்பங்களை நுகரும், கண்ணொளியை மறைக்கும். காச படலமென ஆன்மசைதன்யத்தை ஆணவ மலம் மறையா நிற்கும் அதனாலே பிறவித்துன்பம் அதிகரிக்கும் இயல்பிற்று. முத்தியென்னப்படுவது பாச ஞானமெல்லாந்தன் கீழ் வியாப்பியமென்று தெரிந்து நீங்குதலே, ஆன்மா சகசமலம் நீங்குதலின்றிச் சுட்டறிவுஞ் சுக துக்கானுபவமு மற்றுக்கிடக்கும் முத்திபெற்ற நிலையில் என்னும் இக்கொள்கைத்து.

பேதவாதசைவம்:— அநாதியே ஆன்மாக்களுக்கு மும்மலங்களும் செம்பிற் களிம்புபோலவுண்டு; இதனானே சுகதுக்கானுபவம் ஏற்படுகிறது காலைமாலைகளிற் சேய்மைக்கட்சென்ற ஒருவனது நிழல் உச்சிப்போதில் அவனடியில் வந்தொடுங்குவதைப்போன்று கரணங்களிற்சென்ற தன்னறிவானது பக்குவகாலத்தில் அங்ஙனஞ்சேறலொழித்துத் தன்னுடன் வந்தொன்றி நிராதாரமாய் நிற்கும்; செம்பு களிம்பு நீங்கப்பெற்றுப்பொன்னாதல் இரச குளிகையினாலன்றோ? அதையொப்ப ஆன்மாவும் இறைவன்றிருவருளால் மும்மலங்களும் நீங்கிப் பெறுவானும் பேறுமாயிருக்கும்; அதன்மேலும் அடிமையாதல் கிடையாது என்பது இதன் கொள்கை.

சிவசமவாதசைவம்:— பதி, பசு, பாசஞானங்கள் மூன்றும் அநாதியேயுள்ளன; இந்திரியங்களாம் பாசஞானம் விடயங்களைவிளக்குதலாலே பாசஞானம் அவற்றைப் புசிக்கும்; இவ்விருஞானங்களும் நீங்கினவழி சுவாலையின்றியிருக்கும் நெருப்புபோல ஒன்றையுஞ் சுட்டறிய இயலாததாய்க்கிடக்கும் ஆன்மா அறிவுமாத்திரையாய்; அப்பொழுது, வேட்டுவன் புழுவை எடுத்துக்கொள்வதுபோலப் பதிஞானம் ஆன்மாவையெடுத்துக்கொள்ளும்; ஆன்மாவும் அப்புழுவைப்போல பதியை நினைத்து அதன் வடிவாதன்மேலும் அதன்றொழிலையும் இயற்றி நிற்கும் என்பதாம்.

(தொடரும்)

ஜி. இராஜகோபாலன்

## காளமேகப்புலவர் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி)

"ஆண்டானுந் தாதனு மானால்"

இ-ள். திருவரங்கத்திலுள்ள வைணவரும், திருவானைக் காவிலுள்ள சைவரும் உரிய ஆதாரங்களோடு சண்டை செய் ததற்குக் காரணம் யாது? சேஷியும் சேஷபூதனும் ஆயின், பக்ஷபாத சொற்கள் வேண்டாம். இதுவென்ன ஆச்சரியம். விபரந்தெரியமாட்டாதா? என்பதாம்.

"ஆண்டானுந் தாதனுமானா லென்பதை" ஆண்டியுந் தாதனுமானா" லெனச் சிலர் சொல்வர். அது சரியன்று.

சைவம் வைஷ்ணவமாகிய இவ்விருசமயக் கொள்கையும், "ஏகமேவாப்ரப்பிரமம்" என்னும், அத்வைதம்போலன்றி ஆத்மா பரமாத்மா இரண்டுமுண்டென்றும்; அவ்விரண்டும் ஒன்றற்கொன்று சமத்வமுடையனவல்லவென்றும், அவ்விர ண்டினுள் பரமாத்மா ஆண்டானென்றும், சீவாத்மா அதற்கு அடிமையென்றும் சொல்லப்படும் விசிஷ்டாத்வைதமாய்க் கரத லாமலகம்போல விளங்கிநிற்கையால் இஃதென்ன ஆச்சரியம்? இந்த விபரம் தெரியாதா? இதுபற்றி இனி ஒருவருக்கொரு வர் ஆரவாரங்கள் பேசவேண்டாம் என்பதும் இங்கு கவனிக் கத்தக்கது.

### திருவரங்கர் சந்நிதிக்கு முருகர் வர அவரது மயில்வாகனத்தைக் கண்டு அத்திருவரங்கரது அணையாகிய பாம்பு அஞ்சியதாகப் பாடியது.

திரண்டிமையோர் தொழுந்தென் னரங்கேசர்முன் செங்
கைகளா, றிரண்டுடையோனு மெதிர்சென்றதா லெதிர்ந்தார்
தமைக்கன், றருந்தெழுமை வர்க்குத்தேரூர்பவன் கொ
ளணை வெருண்டு, புரண்டொரு புற்றைக் கடந்தொருபுற்றிற்
புகுந்ததுவே



இ-ள். தேவர்கள் கூடி வணங்குகின்ற தென்னரங்கநாத னுக்கெதிரில் பன்னிரண்டு திருக்கைகளையுடையவனாகிய முரு கனும், எதிரே போனதினால் இவனது மயிலைக்கண்டு எதிர்ந்த வர்களாகிய துரியோதனாதியரை நோக்கி, அஞ்சியெழுந்த பஞ்சவர்பொருட்டு அர்ச்சுனனுக்குத்தேர் செலுத்தினவனாகிய திருமால்கொண்ட அணையாகிய பாம்பு அஞ்சிப் புரண்டு, ஒரு புற்றைத்தாண்டி ஒரு புற்றில் நுழைந்தது என்பதாம்.

மயிலைக்கண்டு பாம்பொளிவது இயற்கையெனினும், அதனை அனுபவமுகத்தால் மயிலுக்கு விசேடணங்கூறி விதந் தனர். இக்கருத்தையே நமது மணிவாசகரும் :—

"கோம்பிக் கொதுங்கி மேயாமஞ்ஞை குஞ்சரங்கோளி
பாம்பைப் பிடித்துப் படங் கிழித்தாங்கு" [ழைக்கும்

என தமது திருக்கோவையாரில் குறித்துள்ளார்.

### திருவரங்கரை மணியாகச் சிலேடித்துப் பாடியது.

பாங்கு பெறுந்திரு வைந்நூற்றிரட்டிப் பணவிடையில்
தூங்குமதிலொரு மாவேற்ற முண்டு சுரர்முனிவர்
ஆங்கவர் செப்பிற் கடங்காதுலக மனைத்தும்பெறும்
ஓங்குமரங்கத் திருப்பெட் டகத்து ளொருமணியே.

இ-ள். உயர்ந்த திருவரங்கமாகிய அழகாகிய பெட்டியி லிருக்கின்ற ஒப்பற்ற ரத்னமானது அழகு பெற்றிருக்கும், அழகாகிய ஆயிரம் பணவெடையென்றும் நிறைபெற்றிருக் கும், அதில் ஒருமா அதிகமுண்டு, தேவர் முனிவராகிய அவ ர்களுடைய செப்பினுள் அடங்காது. உலகங்களெல்லாவற் றையும் விலைமதிக்கப்பெறும், என்பதாம்.

திருவரங்கனைக் குறிக்கும்போது ஒப்பற்ற நீலமணியை நிகர்த்தரங்கநாதன், அழகைக்கொண்டிருக்கிற ஆதிசேடனது அழகாகிய ஆயிரம் பணாமகுடங்களினிடையே பள்ளிகொள்வான். அப்படிப் பள்ளிகொள்வதிலும் ஒப்பற்றத் திருமகளும் திருமார்பில் ஏறியிருத்தல் உண்டு. தேவர் முனிவர் என்னும் அவர்களுடைய சொல்லுக்கு அடங்கான், எல்லாவுலகங்களையும் படைத்தருளுவன் எனப் பொருள் கொள்க.

### திருவரங்கத்தில் ஒருத்தி வீட்டிலுண்டவிருந்தை நிந்தித்துப் பாடியது.

நீச்சாற் பெருத்திடு காவேரியாற்றை நிலைநிறுத்திச்
சாய்ச்சா ளிலைக்கறிச்சாற்றை யெல்லாமது தானுமன்றிக்
காய்ச்சாப் புளியுநற் கல்லுடன்சோறுங் கலந்துவைத்த
ஆய்ச்சாளை யான்மறவேன் மறந்தான்மன மாற்றிடுமே.

இ-ள். நீச்சுநிலையால் பெருகியோடுகிற காவேரிநதியைத் தடுத்துக் கீரைச்சாற்றையெல்லாம் சாய்த்தாள். அதுவுமன்றி பச்சைப்புளியையும், கல்லோடு கூடிய சோற்றையும், கலந்து படைத்த ஆச்சாளை நான் மறக்கமாட்டேன். மறந்தேனாயின், என் மனம் பொறுக்குமோ, என்பதாம். மறவேன் மறந்தால் மனம் ஆற்றிடும் மறக்காதவனானேன். மறந்தேனாயினும் மனம் சற்று ஆறுதலடையும். எனப்பொருள் படலுங் காண்க.

### மாம்பிஞ்சுகளை நோக்கிப் பாடியது.

திங்க ணுதலார் திருமனம் போலேகீறிப்
பொங்கு கடலுப்பைப் புகட்டியே—எங்களிட
ஆச்சாளுக் கூறுகா யாகாம லாருக்காக்
காய்ச்சாய் வடுக மாங்காய்.

இ-ள். மாவடுவே, அஷ்டமீசந்திரன்போன்ற நெற்றியையுடைய மாதரது அளகிய மனம்போலப் பிளவுபட்டு பொங்குகின்ற கடலிலுண்டாகிய உப்பையூட்டப்பெற்று எம்முடைய ஆச்சாளுக்கு ஊறுகாய்க்குதவாமல் வேறு யார்பொருட்டுக் காய்த்தனை? என்பதாம்.



மாதர் மனம் வஞ்சகமுள்ளது என்றதற்கு திங்கணுதலார் திருமனம்போலே கீறி என்றார். இவ்வளவே இவர் திருவரங்கஞ்சென்றபோது பாடியதாக இப்போது கண்டவை.

இவர் பாடியதாகக் கண்ட தனிப்பாடல்களில் நமக்குக் கிடைத்துள்ளவற்றைக்கொண்டு செவ்வனே ஆராய்ந்ததில் இவர் யாத்திரையில் கண்ட தலங்கள், மதுரை, திருமோகூர், திருமாலிருஞ்சோலை, வேப்பத்தூர், கயத்தாறு, தஞ்சை, திருமழபாடி, திருவழுவூர், திருவலஞ்சுழி, கும்பகோணம், திருக்குடவாயில், திருவிடைமருதூர், திருப்பனந்தாள், திருத்துருத்தி, மாயூரம், வைத்தீச்சுரன்கோயில், கங்கைகொண்டசோழேச்சுரம், திருவாலங்குடி, திருவிரிஞ்சை, திருவீழிமிழலை, திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை, திருமங்கை, திருவத்திகிரி, திருக்கச்சபேசம்; காஞ்சிபுரம், திருமாலைராயன்பட்டினம், திருவண்ணாமலை, திருவொற்றியூர், ஆற்றூர், எட்டிக்குளம், தண்டாங்கூர், ஆமூர், அமராவதி, திருச்செங்காடு, திருக்கழுக்குன்றம், ஸ்ரீமுஷ்டம், திருவாரூர், நாகப்பட்டினம், திருக்காளத்தி, சிதம்பரம், திருக்கருவைநல்லூர், இஞ்சிகுடி சிக்கல், கொண்டத்தூர். திருவிருத்தி, ஆக நாற்பத்தியாறு (46) தலம் எனத்தெரிகிறது. இவைகளில் சில தொண்டைநாட்டிலும், சில பாண்டிநாட்டிலும், சில மகதநாடெனும் நடுநாட்டிலும் உள்ளன. இவர் தமிழ்நாட்டிற்கப்பால் போனதாகத் தெரியவில்லை. இவர் தமது யாத்திரையைத் திருவானைக்காவினின்றுதான் தொடங்கியிருக்கவேண்டும். ஆனால், திருவானைக்காவினின்றும் புறப்பட்டு இன்ன தலத்திற்குத்தான் முதலிற் சென்றாரென்றும். இன்ன பாடலைத்தான் முதலிற்பாடி மூர்த்தியைத் தெரிசித்து வணங்கினாரென்றும் இப்

பொழுது விபரமாய்க் கூறுவதற்கில்லை. நாமாகவே ஒருவாறு யூகித்து இவ்வகையாகத்தான் சென்றிருக்கவேண்டுமெனத் தீர்மானித்து அவர் தரிசித்துள்ள தலங்களின் மார்க்கங்களைக் கிரமப்படுத்திச் சுருக்கமாக அத்தலங்களின் சிறப்புகளையும், அவைகளிருக்கும் இடத்தையும் செவ்வனே கூறி வாசிப்பவர்கட்கு உபயோகமாகும்படி இங்கு வெளியிடத்துணிகின்றோம். இவர் தலயாத்திரைக்குப் புறப்படுமுன்னரோ, பின்னரோ, தமக்குக் கவிபாட வரமளித்த தலத்தின் மூர்த்தியைத் துதித்திருக்கின்றனர் அது வருவாறு.—

### 1 திரு ஆனைக்கா.

கல்லாலடித்ததற்கோ காலாலுதைத்ததற்கோ
வில்லாலடித்ததற்கோ வெட்கினீர்—சொல்வீரால்
மஞ்சுதனைச்சூழ் மதிலானைக்காவாரே
நஞ்சுதனைத் தின்றதென் முன்னாள் (தனிச்செய்யுட் சிந்தாமணி)

(இ-ள்.) மேகங்கள் தவழுகின்ற உயர்ந்த மதில்களுடைய திருவானைக்காவில் வீற்றிருந்தருளும், சிவபெருமானே! நீர் பூர்வத்தில் நஞ்சுதனை அருந்தின காரணமென்ன? (தனிச்செய்யுட்சிந்தாமணி) சாக்கியநாயனார் கல்லாலெறிந்ததற்கோ? அன்பு மிகுந்த கண்ணப்பர் காலாலுதைத்ததற்கோ? சிறப்புற்ற அருச்சுனன் வில்லாலடித்ததற்கோ? எதன் பொருட்டாக வெட்கமடைந்தீர் கூறவேண்டும் என்பதாம்.

---

* இதனைத் "தொண்டைமண்டலசதக" முடையாரும்.

கொங்கலர் மாலையுங் கல்லாய் விடுமன்பு கொண்டெறிந்தா
லிங்கலராய் விடுங்கல்லானது மென்பதின்றறிந்தோஞ்
செங்கலினு லெறிந்தே சிவனார் பதஞ்சேர்வர் சங்க
மங்கையின் மேவிய சாக்கியனார் தொண்டமண்டலமே.

எனக் குறிப்பிடுவதும்.

மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்குமடியேன் (திருத்தொண்டத்தொகை) என வருவனவற்றையுங் கவனிக்கத்தக்கது.

* இத்தலப்புராண விசேடச்சிறப்பை இதன் அநுபந்தத்தில் காண்க.



மேற்குறித்த பாடலைத்தவிர இவர் யாதோர் பிரபந்தமும் இத்தலத்தைப்பற்றிச் செய்திருப்பதாகத்தெரியவில்லை. இவர் திருவானைக்காவினின்றும் தமது யாத்திரையைப் பாண்டிநாட்டிற்குத் தொடங்குகின்றனர். வழியில் எங்கெங்கு தங்கிச் சென்றனரென்றும், என்னென்ன செய்தனரென்றும் இப்பொழுது தெரிவதற்கில்லை. மதுரையிற்சென்று சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்து சில பாட்டல்கள் புகழ்ச்சியும், இகழ்ச்சியுமாகப் பாடியிருக்கின்றனர். அவைகள் வருமாறு:—

### 2. மதுரை

சொக்கநாதரைத்தரிசித்து இகழ்ச்சி (நிந்தாஸ்துதி) யாகப் பாடியது.

I

கண்டீரோ பெண்காள் கடம்பவனத்தீசனார்
பெண்டீர் தமைச்சுமந்த பித்தனார்—எண்டிசைக்கும்
மிக்கான தங்கைக்குமேலே நெருப்பையிட்டார்
அக்காளை யேறினாராம்.

(இ-ள்.) பெண்களே! நீங்கள் இவ்வதிசயத்தைப்பார்த்தீர்களா? இம்மதுரையிலெழுந்தருளிய கடம்பவன நாதரானவர் எப்போதும் பெண்ணைத்தலைமேலே சுமந்து திரிகின்றபைத்தியம் பிடித்தவர். அன்றியும் எட்டு திக்கிற்கும் சிலாக்கியமாயிருக்கின்ற தங்கைமேலே நெருப்பையிட்டார். அக்காளைமேலே ஏறினான். ஆதலால் "பித்தர்க்குத் தங்குணம் நாலினும் செம்மை" யென்பது மெய்ப்பட்டிருக்கின்றது என்பதாம்.

பெண்ணைச்சுமந்தது—கங்கையைத்தாங்கினது. தங்கைமேல் நெருப்பிட்டது—தமது கையில் மழுவேந்தினது: அக்காளை ஏறியது—அந்த இடபத்தின்மீது ஆரோகணித்தது.

## II.

### மீனாக்ஷியம்மையைத்தரிசித்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

நல்ல தொருபுதுமை நானிலத்தில் நான்கண்டேன்
சொல்லவா சொல்லவா சொல்லவா—செல்வ
மதுரைவிக்கி னேசுரனை மாதுமையாள் பெற்றாள்
குதிரைவிற்க வந்தவனைக் கொண்டு.

(இ-ள்.) இவ்வுலகத்தில் நான் நன்மையாகிய ஒரு அற்புதத்தைக்கண்டேன். அதைச்சொல்லவா! சொல்லவா!! சொல்லவா!!! என்னெனின்? உமாதேவியானவள் மதுரையில் பாண்டியனிடம் குதிரை விற்க வந்தவனைச்சேர்ந்து விநாயகமூர்த்தியைப்பெற்றாள் என்பதாம்.

குதிரை விற்க வந்தவன்—சொக்கநாதன். மணிவாசகப்பெருந்தகையார்க்காகச் சோமசுந்தரக்கடவுள் நரியைப் பரியாக்கிய திருவிளையாடலைக் குறிப்பிட்டதாம்.

## III.

### மற்றொருகால் மீனாக்ஷியம்மையைத்தரிசித்துப் பாடியது.

விள்ளப் புதுமையொன் றுண்டால வாயினின் மேவுதென்னன்
பிள்ளைக் கொருமுலை மூன்றே குரும்பை பிடித்ததிலே
கொள்ளிக் கணன்றிட்டியாலோர் குரும்பை குறைந்தமிர்தம்
உள்ளிற் பொதிந்த விரண்டிள நீர்கச் சுறைந்ததுவே.

(இ-ள்.) கூறுவதற்கு அருமையான விஷயமொன்றிருக்கிறது. என்னெனில், மதுரைமாநகரில் பாண்டியன் மகளுக்குத் தென்னங்குரும்பையை நிகர்த்த மூன்று தனங்கள் மார்பில் தோன்றியிருந்தன. அவற்றில் நெருப்புக்கண்ணையுடைய சொக்கநாதரது பார்வையில் ஒன்று கருகி மறைந்தது. மற்றவையிரண்டும் அமுதம் நிறைந்த இரண்டிளநீர்களை நிகர்த்துக்கச்சின் கண்ணே தங்கின என்பதாம். பாண்டியன் மகள்—தடாதகைப்பிராட்டியார்.



மலையத்துவஜபாண்டியன் புத்திரர் வேண்டித்தவமியற்றியபொழுது இந்திரன் தோன்றியாகஞ்செய்யவேவினன் செய்தயாகத்தில் பார்வதிதேவியார் மூன்று முலைகளுடன் குழந்தையாக அவதரித்தனர். அரசன் குமரியின் உறுப்பின் மிகுதியைப்பற்றி வருந்துகையில், அசரீரி இக்குழந்தைக்குக் கணவன் தோன்றுகையில் ஒரு முலை மறையுமென அரசன் கேட்டுக் களிப்புடனிருந்தனன். இராஜசூயயாகஞ் செய்ய முயன்றபோது தடாதகைப்பிராட்டியார் திக்குவிஜயஞ்செய்தனர். ஈசான் திக்கிற்செல்ல அதற்கிறைவராகிய ஈசான மூர்த்தியின் திருஷ்டிபட்ட மாத்திரம் ஒரு தனம் மறைந்தது. பிராட்டியார் சிவபெருமானை மணந்தனர். இது திருவிளையாடற் புராண வரலாறு.

## IIII.

### பின்னொரு சமயம் மீனாக்ஷியம்மை அன்னவாகனத்தில் வருவதைப்பார்த்து நிந்தாஸ்துதியாகப் பாடியது.

மாயனார் போற்று மதுரா புரிச்சொக்க
நாயனார் பித்தேறி னாரென்றே—நேயமாம்
கன்னன் மொழி யங்கயற்கட் காரிகையா ளையையோ
அன்னமிறங் காமலிருந்தாள்.

(இ-ள்.) திருமால் வணங்குகின்ற பெற்றியையுடைய மதுரைச் சொக்கநாதர் பித்தேறப் பெற்றாரென்ற நிச்சயத்தால் கவலைமிகுந்த இனிய மொழியையுடைய அழகிய மீன் கண்ணைப்போன்ற காரிகையார் மீனாக்ஷியம்மை அந்தோ! அந்தோ! உணவு இறங்காமல் இருக்கின்றாள் என்பதாம். அன்னம்—அன்னமென்னும் பறவைவாகனம்.

பித்தர்-பித்தமுடையவர். எம்பெருமானுக்குப் பித்தமாவது-அடியவரைக்காக்கும் பெருங்கருணையென்க.

## V.

### சோக்கநாதரைத் தரிசித்தபோது பாடியது.

இவர் மதுரையிற் சுவாமி தரிசனம் செய்கையில் அங்குள்ள சிவப்பிராம்மணர்கள் அவரைப்பார்த்துச் சோமசுந்தரக் கடவுள் சந்நிதிக்கெதிரே கட்டிய கூட்டிலிருந்து கின்னரி வாசிக்கிறதுபோலக் கூவுகின்ற கிளியைச் சுட்டிக்காட்டி "கின்னரி வாசிக்குங்கிளி" என்பது ஈற்றடியாக வர, அதற்கேற்க ஈற்றயலடியைத்திரித்து இச்சொக்கநாதர் விஷயத்தில் ஒரு வெண்பாப் பாடவேண்டுமென அவ்வாறே பாடியது:-

ஆடல்புரிந் தானென்று மந்நாளி லேமூவர்
பாடலுவந் தானென்றம் பான்மையான்—கூடலிலே
நன்னரிவா சிக்கு நடைபயிற்றி னானென்றும்
கின்னரி வாசிக்குங் கிளி.

(இ-ள்.) அக்காலத்தில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்தியென்னும் இம்மூவரும் பாடிய தேவாரப்பாடல்களைத் திருவுளமுவந்தருளினாரென்றும், அன்பர்க்கெளியனாகுங்குணத்தினால் பரமசிவன் திருவாலவாயில் தனது பரமசாமர்த்தியத்தை விளக்கிக்காட்ட நரியாகிய பரிக்கு மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதியாகிய ஐவகை நடையினைக் கற்பித்தானென்றும், கிளியானது கின்னரிவாசியாநின்றது என்பதாம்.

## VI.

### சிவபெருமானைச் சிறப்பித்துப்பாடியது.

காண்டரிய மேனியுமொண் சுந்தரமுஞ் சுந்தரனாய்
ஆண்டதுவு மேனிக் கமைந்ததுவு—நீண்டமுகின்
மைக்கலிங் மாகமணிமா டமணி மாமதுரைச்
சொக்கலிங்க மென்னுஞ் சுகம்.

(தொடரும்)
சி. கு. நாராயணசாமி முதலியார்.

உ
ஸ்ரீரஸ்து.

# முகவுரை.

ஆதியந்தமற்ற அரும்பொருளான பரமாத்மா கல்பத்தின் துவக்கத்தில் சேதனாசேதன உருவங்கொண்ட இப்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து ஜீவகோடிகளை ஆக்ஷி கொள்வதையே தமக்கோர் லீலையாய்க்கொண்டு. அவ்வான்மாக்களுக்கு தேவ மனுஷ்யாதி தேகங்களைத் தத்தம் கர்மகதிக்கேர்ப்ப உகந்துதவி அவர்கள் உய்யுமாறு ஞானேந்திரிய கர்மேந்திரியங்களையும் மனம் புத்தி முதலிய தத்வங்களையும் அளிக்கலானார். அவர்கள் ஈச்வர தத்வத்தையுணர்ந்து, அப்பரமாத்மாவை, கர்ம மார்க்கத்தாலும், ஞான மார்க்கத்தாலும், பூசித்து மேன்மேலும் உயர்வுபெற்று, முடிவில் பரகதியை அடையும்வண்ணம், தமது சாசனரூபமான அநாதி வேதங்களை (ச்ருதிகளை) உலகில் இருடிகளின் வாயிலாய்ப் பிரவர்த்திப்பித்தார். இவ்வேதங்கள் அநந்தங்களாய் சாமான்ய ஜனங்களின் ஆராய்ச்சிக்கு எட்டாமலிருப்பதால், அவ்வேதங்களின் தாத்பர்யங்களை அநுஷ்டானமுறைக்கு ஏற்றவண்ணம், கருணைக்கடலான மகரிஷிகள் ஸ்மிருதி (தர்ம சாஸ்திரங்) களாக இயற்றினார்கள். இந்த ஸ்மிருதிகளும் நம்போன்றவர்களுக்கு நன்கு விளங்காமைப்பற்றி, ஈசனது கல்யாண குணங்களையும், புண்ய பாபங்களின் ரூபங்களையும் பலன்களையும் மேன்மைபெறுக்குப் பிரதி கூலங்களையும் அநுகூலங்களையும், அறிதற்பாலதான மற்றுமுள்ள அரும்பொருள்களையும், நேரில் உதாரண மூலமாய்ச்சுட்டி உணர்வித்து, எல்லோரையும் நல்வழிப்படுத்துமாறு, புராணங்களும் இதிஹாசங்களும் பலவாய் இவ்வார்ய பூமியில் விளங்கி வருகின்றன.

தொன்மையான இந்நூல்கள், நமது புண்ய பூமியில் காலா காலங்களில் பற்பல மூர்த்தியாய்த் திருவவதரித்த பரமன் பெருமையும் தெய்வாம்சமாய் உலகில் ஜனித்த பக்தகோடிகளின் மகிமையும், நம் எல்லோர் மனத்தையும் வசியம்செய்து நமக்கு நன்மையைப்புகட்டும் தன்மையாய் அமையப்பெற்றவை.

அப்புராணங்கள் யாவற்றுள்ளும், மஹாவிஷ்ணுவின் அம்ஸத்தைப் பெற்று, அருந்தவமுனிவராய், அவதரித்த வியாஸமகரிஷியால் இயற்றப்பெற்ற பதினெண்புராணங்கள் மேம்பாடுடையன. இப்புராணங்கள்

அனைத்திலும், விஷயங்களின் மேன்மையாலும், கதாசந்தர்ப்பங்களின் அமைப்புக்களாலும், அறியற்பாலதான அரும்பொருளனைத்தையும் சந்தர்ப்பங்களுக்கியைய, நன்கமைத்து வற்புறுத்து மியற்கையாலும், ஐந்தாம் வேதமென்று ஆன்றோர்கருதும், ஸ்ரீமஹாபாரதம் ஒப்புயர்வற்றுமேலாய் விளங்குகின்றது. இம் மஹாபாரதத்தில் அடங்கிய ஒவ்வோர் இதிஹாஸமும் நள்ளிருளில் வழிகாட்டும் தீபம்போல், ஒவ்வோர் நற்போதனையைத்தந்து அஞ்ஞான இருளை விலக்குகின்றது. இந்நூலை ஆராய்ச்சிசெய்யாதவர்கள் எத்தகைய கல்விகேள்விகள் பெற்றவர்களேனும், ஒன்றுமறியாதவர்களேயென்று பெரியோர்கள் கூறுகின்றனர். ஆதலால் மஹா பாரதத்தை யாவரும் ஆராய்ச்சிசெய்வது இன்றியமையாத ஓர் முறைமை. ஆயினும் சமஸ்கிருத பாஷையில் அமைந்திருக்கும் இதன் முதனூலும் தமிழில் செய்யுளிலும் வாசக நடையிலும் ஏற்பட்டிருக்கும் மொழிபெயர்ப்புக்களும், மிகவும் விஸ்தாரமாயிருப்பதாலும், பாஷா ஞானத்தை முன்னிட்டே ஆராய்ச்சி செய்யவேண்டியிருப்பதாலும், பெரும்பான்மையோர் பாரதகதையின் தொடர்ச்சியை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள்.

ஆதலின் விஸ்தாரமான இவ்வரிய நூலின் சாராம்சத்தைச்சுருக்கி, முக்கியமான கதைகளைவிடாமல் எளிய தமிழில் யாவரும் அறிந்துகொள்ளும்விதமாய், பிரசுரப்படுத்த ஆவல்கொண்டேன். என் சிற்றறிவைக்கொண்டு யத்தனம்செய்யும் இப்பெருங்கார்யத்தில் ஏற்படுங் குற்றங்குறைகளைப் பெரியோர் மன்னித்து உதவிசெய்யும்படி வேண்டுகிறேன்.

P. A. திருவேங்கிடத்தய்யங்கார்,
திருவாரூர்.

உ

கடவுள் துணை.

# மகா பாரதச்சுருக்கம்.

## ஆதி பர்வம்.

### பராசர-வ்யாஸ முனிவர்களின் பிறப்பு.

**சுலோகம்.**

வ்யாஸம் வஸிஷ்ட நப்தாரம் சக்தே:
பௌத்ர மகல்மஷம் பராசராத்மஜம்
வந்தே சுகதாதம் தபோநிதிம்.

**அர்த்தம்.**

வஸிஷ்ட மகரிஷியின் கொள்பேரனும் சக்தி என்பவரின் பேரனும்; பராசர முனியின் புத்திரனுமாய், தோஷமற்று விளங்கும் தபோநிதியான வ்யாஸ பகவானை நமஸ்கரிக்கின்றேன்.

1. இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த கல்மாஷபாதன் என்னும் அரசன் ஓர் சமயம் வேட்டைக்குச்சென்று, காடுகள் மலைகளில் அலைந்து, களைப்படைந்து திரும்புகையில் வழியில் வஸிஷ்ட மகரிஷியின் நூறு புத்ரர்களில் மூத்தவரான சக்தி என்பவர் நின்றார். அவ்வழி மிகவும் ஒடுக்கமாயிருந்ததனால், மார்க்கத்தைவிட்டு விலகித்தனக்கு வழி விடும்படி, அரசன் ரிஷி குமாரனை அதட்டிப்பேசினான். சக்தியும், பிராம்மணர்களுக்கு அரசன்தான் விலகவேண்டுமென்று பிடிவாதமாய்ச் சொல்ல, அரசன் மிகவும் கோபித்து, அந்தத் தபஸ்வியை சவுக்காலடித்து ஒதுக்கிவிட்டு, முன் நோக்கிச் சென்றான். சக்தியும் மிகவும் கோபங்கொண்டு அரசனைப்பார்த்து, "அடா மூடா! நீ ராக்ஷஸத்தன்மையைக் கைக்கொண்டு, ஓர் பிராம்மணனை இவ்விதம் நடத்தினதால் நீ மனிதர்களைத்தின்னும் நரபக்ஷகன் ஆவாய்" என்று சபித்தார். அந்த சமயம் அவ்

விடம் சென்ற விச்வாமித்ரமுனிவர் கிங்கரன் என்னும் ஓர் இராக்ஷஸனை, சக்தியின் சாபத்தை அடைந்த கல்மாஷபாதன் சரீரத்தில் ப்ரவேசிக்கும்படி ஏவினார். அவ்வரசனுக்கு வேறோர் பிராம்மணனால் பின்னும் ஓர் சாபம் கிடைத்தது. மாம்ச சம்பந்தமான அன்னத்தை யாசித்த ஓர் பிராம்மணனுக்கு அவ்விதம் போஜனமளிப்பதாய் அவ்வரசன் வாக்களித்தான். "பிராம்மணாகள் அங்கீகரிக்கும் மாம்ஸம் கிடைக்கவில்லை" என்று சமையற்காரர்கள் அரசனிடம் சொல்ல, அவ்வரசன் சரீரத்தில் ப்ரவேசித்திருக்கும் ராக்ஷஸன், "நரமாம்சத்தை பக்குவம்செய்து பார்ப்பானுக்கு உதவுங்கள்" என்றான். அவ்விதமாகவே பரிசாரகர்கள் தயார்செய்து அந்த வேதியனுக்கு உதவினார்கள். அவர் அதையறிந்து, அரசனைப்பார்த்து "நரமாம்சத்தை எனக்கு நீ இடுவித்ததனால், நீ எற்கனவே சக்தியினால் கொடுக்கப்பட்ட சாபப்படி, மனுஷ்ய மாம்ஸத்தைத் தின்றுகொண்டு அலைவாய்." என்று சாபமிட்டார். கல்மாஷபாதன் ராக்ஷஸத் தன்மையைக்கைக்கொண்டு. தனக்கு முதலில் சாபமிட்ட சக்தி முனிவரை முதலில் பக்ஷித்தான். வஸிஷ்டர் பேரிலும் அவர் புத்ரர்களின் பேரிலும் தீராத பகைமையைக்கொண்ட விச்வாமித்ரரின் போதனையால் அவ்வரசனிடமிருந்த ராக்ஷஸன் வஸிஷ்டருடைய புத்திரர்கள் எல்லோரையும் தின்று ஒழித்துவிட்டான்.

பிறகு வஸிஷ்ட முனிவர், தமது புத்ரர்கள் எல்லோரும் விசுவாமித்ரரின் தூண்டுதலால் இறந்ததை அறிந்தும், அக்கௌசிகமுனிவர்மேல் கொஞ்சமேனும் கோபங்கொள்ளாமல், புத்ரசோகத்தைப் பொறுக்க முடியாமல், ப்ராணனைவிட நிச்சயம்செய்து, அதற்காகக் பற்பல உபாயங்கள் செய்தும், அவர் மகாத்மாவாதலால், பஞ்சபூதங்களும் அவருக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. பிறகு அம்முனிவர், தமது ஆச்ரமத்தைவிட்டு வெளிப்படும்பொழுது, சக்தியின் பார்யையான



அதிர்சியந்தி என்பவள் வேறோர் கெதியுமில்லாமல் தனது மாமனாகிய வஸிஷ்டரைப்பின் தொடர்ந்தாள்.

இவ்விதம் போய்க்கொண்டிருக்கையில், வேத வேதாங்கங்களை உச்சரிக்கும் தமது புத்ரனான சக்தியின் குரல்போன்ற ஓர் சப்தத்தைக்கேட்டு, நிர்மானுஷ்யமான இடத்தில் இவ்வித சப்தத்திற்கு என்ன காரணம் என்று, தமது மருமகளைக் கேட்க, அவள் தனது வயிற்றில் சக்திமா முனியின் வீர்யத்தால் ஏற்பட்ட ஒரு கர்ப்பம் 12 வருஷகாலமாய் வளர்ந்து வருவதாய்ச்சொன்னாள். பிறகு அந்த மகரிஷி, தமது குலவிர்த்திக்குக்காரணமான ஓர் குழந்தை அவள் கர்பத்தில் வசிப்பதை அறிந்து, சந்தோஷமடைந்தார். பிறகு அதிர்சியந்தீயானவள் ஓர் புத்ரனைப்பெற, அவனுக்கு பராசரர் என்று வஸிஷ்டர் நாமகரணம் செய்தார். இக்குழந்தை கர்ப்பத்திலிருப்பதைத்தாம் அறிந்ததுமுதல், தாம் புத்ர சோகத்தைத்துறந்து பிராணனைவிடும் முயற்சியை நிறுத்தினதினால், அதற்குப் பராசரர் என்னும் பெயர் அவரால் இடப்பட்டது. (பராஸு என்றால் 'பிராணனை விடுபவன்' என்று அர்த்தம்.)

பராசரர் முதலில் வஸிஷ்டரையே தமது பிதாவென்று நினைத்திருந்தார். பிறகு தம் மாதாவின் மூலமாய், தாம் வஸிஷ்டரின் பேரனென்பதையும் தம் பிதாவாகிய சக்தி, விச்வாமித்ரரின் தூண்டுதலின்படி ஓர் ராக்ஷஸனால் கொல்லப்பட்டதையும், தெரிந்துகொண்டார். உடனே பராசரர் மகா கோபத்துடன், ராக்ஷஸர்களை அடியோடு தொலைக்கும் எண்ணங்கொண்டு அதற்காக ஓர் யாகத்தை ஆரம்பிக்க, புலஸ்தியர் முதலிய முனிவர்கள் வந்து, நல்வார்த்தைகளால் சமாதானஞ் செய்தார்கள். பிறகு விச்வாமித்ரரைக்கொல்வதற்கு சக்தியின் குமாரர் ஓர் அக்னியை உண்டுபண்ண, அதை சுப்ரமண்யக்கடவுள் தமது தேஜஸினால் அடக்கிவிட்டார்.

2. உபரிசரன் என்னுமொரு அரசன் ஓர் சமயம் ஆகாய மார்க்கத்தில் போகையில் அவன் வீர்யம் யமுனாநதியின்

ஜலத்தில் வீழ்ந்தது. அதை ஒரு மச்சமானது பானம்செய்து கர்ப்பத்தைத்தரித்தது. அது ஒரு செம்படவன் கையி லகப்பட்டு காலக்ரமத்தில் ஒரு ஆண் குழந்தையையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றது. அம்மீனைப்பிடித்த அச் செம்படவன் இரண்டு குழந்தைகளையும் உபரிசரன் என்னு மரசனிடம் கொண்டுபோய் அவர்கள் பிறந்த வரலாற்றைத் தெரிவிக்க, அவன் ஆண் குழந்தையைத் தான் வைத்துக்கொ ண்டு, பெண் குழந்தையை அச்செம்படவனிடம் கொடுத்து விட்டான். செம்படவன் பிள்ளையில்லாமையாலப்பெண் குழ ந்தையை அருமையாய் வளர்த்து வந்தான். அப்பெண் சகல குணங்களும் பொருந்தி மிகவும் அழகுள்ளவளாய் இருந்தாள். அவளுக்கு சத்யவதியென்னும் பெயரிருந்தாலும் மத்சத்தின் வயிற்றில் பிறந்ததனால் அந்த மத்சத்தின் நாற்றமே வீசி மத்சகந்தியென்னும் பெயரும் ஏற்பட்டிருந்தது. அவள் செம்படவனைத் தகப்பனாக நினைத்து அவனுக்கு மிகவும் சிற் றுண்டி செய்துகொண்டு அந்த யமுனையாற்றில் ஓடந்தள்ளும் காரியத்தில் அவனுக்கு உதவி செய்துகொண்டு வந்தாள்.

ஓர் சமயம் பராசரமுனிவர் தீர்த்தயாத்திரை செய்து கொண்டு வரும்பொழுது யமுனாநதியையடைந்து மத்சகந்தி ஓடம் தள்ளும் இடம் வந்து சேர்ந்தார். அங்கே ஓடத்தில் புருஷன் ஒருவனுமில்லாமல் அப்பெண்மட்டு மிருப்பதைப் பார்த்து, தான் அக்கரை போவதற்கு யார் ஓடந்தள்ளுவார் என்று கேட்டார். மத்சகந்தி தானே தள்ளுவதாகவும் ஆனால் ஆயிரம் பெயருக்குக்குறைந்தால் அவ்வோடத்தைத் தள்ளு கிற வழக்கமில்லையென்றும் சொன்னாள். மகரிஷி ஏ! அழ கான பெண்ணே, நீ அதைப்பற்றி யோஜிக்கவேண்டாம். என் கையிலிருக்கும் கமண்டலு (கலசம்) வை ஐந்நூறு பே ருக்குச்சமமென்று நினைத்துக்கொள். நானும் ஐந்நூறு பெய ருக்குச் சமமாவேன். என்று சொல்லி, அந்தப்பெண்ணின் பிறப்பு வரலாற்றையும் விஸ்தாரமாய் அவளிடம் சொன்னார்.



பிறகு பராசரர் அப்பெண்ணைப்பார்த்து நீ மிகவும் ரூபலாவ ண்யமுள்ளவள். ஆகையால் மிகவும் தபோ வீர்யத்தை யுடைய எனக்கு உன்னிடம் ஆசை ஜனித்தது. அதற்கு நீ இணங்கவேண்டும்." என்றார். அப்போது மத்சகந்தி கொஞ் சம் பயந்து, தான் தன்னை வளர்த்த தகப்பன் மனதுக்கு விரோதமில்லாமல் நடக்கவேண்டுமென்றும், அவருடைய அநுமதியில்லாமல் தான் சம்மதிக்கக்கூடாதென்றும் சொன் னாள். ஆனால் பராசரர், "நீ பயப்படவேண்டாம் என் தபோ மகிமையால் உனக்கு யௌவனத்தையுண்டுபண்ணி, உலகமெல் லாம் மெச்சும்படியான வொரு புத்ரனையும் தந்து, பிறகு கன்யாப்பருவத்தையும் தந்து விடுவேன்" என்றார். இதைக் கேட்டு மத்சகந்தி பிரமித்து நிற்க, திடீரென்று ஒரு பனி மூட்டமானது வந்து, அந்த யமுனையின் நான்கு பக்கங்களை யுஞ்சூழ்ந்தது. பராசரரும் மத்சகந்தியும், யமுனையின் ஒரு தீவில் தனிமையாயிருந்ததை இந்திராதிகளும் அறிய முடிய வில்லை. உடனே பராசரர் சத்யவதியினிடம் மிகவும் சந்தோ ஷங்கொண்டு, அவளுடைய மீன் நாற்றத்தை . க்கி; ஒரு யோஜனை தூரம் திவ்யகந்தம் பரிமளிக்கும்படி யோ ஜனை கந்தியாக ஆக்கிவிட்டார். இவ்விதம் பராசரருக்குப் பிறந்த புத்ரர்தான் வியாசமுனிவர். புத்ரனைப்பெற்ற பிறகு யோஜனைகந்தி, ரிஷியின் அநுக்ரகத்தினால் கன்னிப்பருவத்தை யடைந்தாள். அக்குழந்தை தன் தாயைப்பார்த்து, "நீ என்னை நினைக்குங்காலத்தில் நான் வந்துதவுகிறேன்." என்று சொல்லி, வணங்கி விடை பெற்றுக்கொண்டு, தவம் புரிவதற் குச்சென்றுவிட்டது. அப்படி யமுனையின் த்வீபத்தில் (தீவில்) வியாசர் தன் தாயால் பெற்றுவிடப்பட்ட படியினால் அவருக் குத் த்வைபாயினர். என்னும் பெயர் வந்தது. பிறகு வேதங்

களையெல்லாம் வகுத்ததினால் வியாசர் என்னும் பெயர் அமைந்தது. இவ்வியாச முனிவர்தான் மகா பாரதத்தையியற்றியதோடு, உபநிஷத்துக்களின் அர்த்தங்களான வேதாந்தங்களை, பிர்ம்ம சூத்திரம் என்னும் பெயர்கொண்ட சூத்திரங்களால் வெளிப்படுத்தினவர்.



உ

# கமலாஸனி.

# KAMALASANI.

ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம் 3. { 1915வரு மேமீ { சஞ்சிகை5

## இன்பம்.

### (II)

ஆன்மாக்கள் செய்யுஞ் சரியைகிரியை யோகங்களைக்கண்டு மகிழ்ந்து பரமபதியானவர் அன்பை ஆன்மாக்களுக்குக்கொடுக்கின்றார். அன்பைப் பெற்றவழி ஞானியாகி விடுகிறார்கள். அன்பர் என்பவரும் ஞானி என்பவரும் ஒருவரே. எப்படியெனில் பிறப்பிறப்பு ஆதிமத்யாந்தம் இல்லாத முதல்வர் ஒருவர் உண்டென்றறிவதே ஞானம் அறிந்துழி அம்முதலையுடைய அம்முதல் மாட்டுச்செலுத்துவதே அன்பு. ஞானமில்லார்க்கு அன்பில்லை. அன்பில்லார்க்கு ஞானமில்லையென்பது இதனால் விளங்கக்கிடக்கும். ஆதலால் அன்பரென்றும் ஞானியென்றுங் கூறுவது ஒரு தன்மையோரையே. இது பற்றியேயன்றோ.

“ சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம்
உவமையிலாக்கலை ஞானமுணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில் ”

162013

என அருண்மொழித்தேவர் திருத்தொண்டர் புராணத்துட் கூறியருளினர். இங்கே ஞானத்தையுணர்ந்தாரென்றபோது ஞானியென்பதும், தவமுதல்வர் என்றபோது அன்பர் என்பதும், ஞானியும் அன்பரும் வேறல்லர் என்பதும் மேற்கூறிய செய்யுளொன்றே விளக்கமாகக்கூறியதல்லவா? இனி இதைப்பற்றி விரிப்பிற்பெருகு மென்றஞ்சி இம்மட்டோடு நிறுத்தி மேல் விஷயத்தை ஆராய்வாம்.

மேற்கூறிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணச்செய்யுளில் "தவமுதல்வர் சம்பந்தர்" என்று கூறியபடியினால் மிக்க தவமில்லாவிடில் ஞானமும் அன்புஞ் சித்தியாதென்பது விளங்கக்கிடக்கின்றது. ஞானத்துக்கும் அன்புக்குங் காரணமாகவுள்ளது தவமாதலாலே ஆன்மாக்கள் சரியை கிரியை யோக மார்க்கங்களினாலே தவத்தைச் செய்யவேண்டும்.

பஞ்ச பாண்டவருள் நடுப்பிறந்தாராகிய அர்ச்சுனர் மறுபிறப்பில் ஒன்று முணரா வேட்டுவமரபிற் போய்ப்பிறந்தாரேனும் முற்பிறப்பிற் செய்துள்ள சரியை கிரியை யோகங்களாலுண்டான மிக்க தவத்தினால் ஞானமும் அன்பும் பெற்று என்று மிறவாப் பேரின்பமடைந்தாரென உணருகின்றோம். இது,

"முன்புசெய் தவத்தினீட்ட முடிவிலா வின்பமான
அன்பினை யெடுத்துக்காட்ட வளவிலா வார்வம் பொங்கி
மன்பெருங்காதல் கூறவள்ளலார் மலையை நோக்கி
யென்பு நெக்குருகி யுள்ளத்தெழும்பெருவேட்கையோடும்"

என்ற கண்ணப்ப நாயனார் புராணச்செய்யுளால் இனிது விளங்கக்கிடக்கும்.

ஆதலால் ஆன்மாக்கள் சரியை கிரியை யோக வழிகளில்



மனத்தளர்வின்றி நின்று தவத்தைச் சம்பாதித்தல் வேண்டும் தவமில்லாவழி பேரின்ப மனுபவிக்க முடியாதென்பது ஒருதலை இதுபற்றியே.

"அரும்பொனேமணியே யெனன்பே யெனன்பான
வறிவேயெ னறிவிலூறும்
ஆனந்தவெள்ளமே யென்றென்று பாடினே
னாடினே னாடிநாடி
விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவெணிரு கண்மாரி பெய்யவே
வேசற்றயர்ந் தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமுனை
யிடைவிட்டு நின்றதுண்டோ
என்றுநீ யன்று நானுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியாவெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே" என்றும்,

"செய்யுந்தவஞ் சற்றுமில்லாத நானுன் றிருவடிக்கே
கொய்யும் புதுமலரிட்டு மெய்யன்பர் குழாத்துடனே
கையுஞ் சிரமிசைக்கூப்பி நின்றாடிக் கசிந்துருகி
உய்யும்படிக்கருள் செய்வதென்றோ புலியூரத்தனே"

எனவும்,

"இரவு பகலற்றவிடத் தேகாந்தயோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே" எனவும்

ஸ்ரீ தாயுமான சுவாமிகள் அருளிச்செய்ததென்க.

ஆதலால் பேரின்பத்தையடைய விரும்பும் ஆன்மாக்கள் சரியை கிரியை யோக வழிகளில் உறுதியுடன் நின்றனுட்டிக்க வேண்டும் என்பது எவ்விதத்தினும் மறக்கப்படாததாகும்.

## விஷயச் சுருக்கம்.

நாம் இதுவரையும் கூறியதின் சுருக்கமாவது இன்பமென்பது இம்மையின்பம் மறுமையின்பம் என இருவகைப்படுமென்றும், இவ்விரண்டனுள் மறுமையின்பம் உயர்ந்ததென்றும், அம்மறுமையின்பமும் பதவின்பம் பதியின்பம் என இருவகைத்தென்றும், பதவின்பத்தினும் பதியின்பமே பேரின்பமென்று கூறப்படுவதென்றும், மற்றைய இன்பங்களெல்லாம் சிற்றின்பத்திற் சேர்வனவென்றும், பேரின்பத்தைக் கொடுத்தருளுவது அன்பென்றும், அன்புக்குஞ் சிவத்திற்கும் வேற்றுமை கிடையாதென்றும், அன்புடையாரே ஞானிகளெனப்படுவர் என்றும், ஞானம் சரியை கிரியை யோகங்களினால் ஈட்டிய தவமிகுதியால் உண்டாகக்கூடியதென்றும், பல ஆப்த வசனங்களைக்கொண்டு ஒருவாறு சுருக்கியும் விளக்கியும் கூறினோம். இனி இதனால் நாம் உணர்ந்துகொள்ளவேண்டிய சாரமாகிய முடிபுரையைக்கூறி முடிப்பாம்.

## முடிபுரை.

கிடைத்தற்கரிய மானிடயாக்கையைப் பெற்ற நாம் இவ்வியாக்கையால் அடையக்கூடியது அடைதற்கரிய பேரின்பமேயாகும். பேரின்பத்தை நமக்கு அளிப்பவர் பரமபதியேயாகும். பரமபதி நமக்குப் பேரின்பத்தை கொடுத்தருளுதற்கு நாம் அவர்மாட்டு அன்புடையவராக இருக்கவேண்டும். இவ்வன்பை நமக்குக்கொடுப்பது சரியை கிரியை யோகங்களால் நாம் ஈட்டிய தவமாகும். ஆதலால் தோன்றியழியும் உலக இன்ப மயக்கத்தை அறவே வொழித்துச் சரியை



கிரியை யோகாதிகளைப்புரிந்து தவத்தைப்பெருக்கி ஞானத்தையும் அன்பையும் அடைந்து முழுமுதலாகிய பரமபதியைப் பற்றி என்றும் குன்றாப் பேரின்பத்தையடைந்து மகிழ்வோமாக.

திருச்சிற்றம்பலம்

பத்திராதிபர்.

## காளமேகப்புலவர் சரிதம்.

(முன் தொடர்ச்சி.)

(இ-ள்.) விசாலமாகிய முகில்கள் கருமை நிறத்தோடு ஓர் போர்வையாகக்கவிந்து உயர்ந்த மாட மாளிகைகளாற் சிறப்புற்ற பெரிய மதுரைமாநகரின் கண்ணே! பேரின்பசுகமாய் விளங்குகின்ற சொக்கலிங்கமென்னும் கடவுளின் திருவுருவத்தையும் அழகு பொருந்திய நீலகண்டத்தையும், பாண்டியனின் பிரம்படியை முதுகிலேற்று யாவரையும் வருந்தச்செய்ததையும், சோமசுந்தரனெனும் பாண்டியனைப் பரிபாலித்ததாகிய பெருமைகளை நம்மால் கூறி முடிவதோ? முடியாதென்பதாம்.

சுந்தரனைப் என்பது:- மதுரையிற் சோமசுந்தர பாண்டியனைத் தமது இச்சையாற்றிருமேனிகொண்டு மலையத்துவஜன் செய்த தவப்பேற்றாய்த் தடாதகைப் பிராட்டியாராய்த் திருவவதரித்திருந்த பார்வதியாரைத் திருமணங்கொண்டு உக்கிரகுமார பாண்டியனைப்பெற்று அவற்கு வேல், வளை, செண்டு அருளிப் பட்டமளித்துத் திருக்கைலைக்கு எழுந்தருளினது.

மேனிக்கமைந்ததென்பது:— வாதவூரடிகளுக்கு குருமூர்த்தியாய் எழுந்தருளி உபதேசித்து நரி பரியாக்கி, பரி நரியாக்கி மண்சுமந்து பாண்டியனாலடியுண்டு சராசரமெல்லாந் தமது திருமேனியென்று காட்டுவித்தது.

மைக்கலிங்கமாகமென்பது:—வருணன் மதுரையின் மீது பகைத்துக் கடலைவிட அதனைத்தமது சடையிலிருந்த மேகங்களை ஏவிக்குடிப்பித்தது.

ஒண்கந்தரமென்பது:— அமிர்த மதனகாலத்துப்பிறந்த விஷத்திற்கஞ்சிய தேவர்களுக்கு அபயமளித்துத் தாம் அதை வருவித்துப் புசித்துக்கண்டமட்டில் ஆக்கி நீலகண்டத்திருநாமம் பெற்றது.

காண்டற்கரியமேனியென்பது:— தேவர்களும் இலகுவில் காணமுடியாத அறிய திருமேனியுடையவர்.

## VII.

### சோக்கநாதரைப் புகழ்ந்து பாடியது.

கடம்பவனச் சொக்கருக்குக் கண்ணன்றான் வேறோ
இடம்பெரிய கண்ணொன்றை யீந்தான்—உடம்பதனிற்
சொம்பாதி யானான் சுமக்க வெருதானான்
அம்பானான் றேவியு மானான். (தனிச்செய்யுட்சிந்தாமணி)

(இ-ள்.) மதுரைச்சொக்கநாதருக்கு திருமால்தான் வேறுவனோ ஆகான் ஏனெனில், பெரியதாகிய இடக்கண்ணொன்றைத்தந்தான், உடம்பில் சரிபாதியானான். சுமக்க இடபமானான், பாணமானான். மனைவியுமானான் என்பதாம்.

இடக்கண்ணீந்தது— திருமால் தாமரை மலர்கொண்டு தம்மைப்பூசிக்கையில் அம்மலரில் ஒன்று குறையத்தமது கண்



ணைப்பிடுங்கி அர்ச்சித்ததினால் களிப்படைந்து தாமரைக் கண்ணனெனத்திருநாமமும், இஷ்டசித்தியும் சக்கிரப்பேறும் பெற்றது.

பாதியானது:— திருமால் சிவமூர்த்தியினது வலப்பாகத்தில் காலதீதமாய் ஒளியாய் ஒன்றாய் அவ்வியத்தந் தோன்றுக்காரணமாயிருக்கும் சிவசத்தியென விளக்கற்பொருட்டு.

சிவனை ரிஷபமாகத்தாங்கியது-திரிபுரதகனகாலத்தில் அம்பாகவிருந்து வென்றதும்-அப்பொழுதே தேவியானது-மோகினி அவதாரகாலத்தில் "கனமன்சினமால்விடையான்" என வரும் தேவாரமும் கவனிக்கத்தக்கது.

### மதுரைப்பெருமானை நோக்கிப் பதினாறு பேறுந்தர வேண்டுமெனப்பாடியது.

துதிவாணி வீரம் விசையஞ்சந் தானந் துணிவுதனம்
அதிதா னியஞ்சவு பாக்கியம்போக மறிவழகு
புதிதாம் பெருமை யறங்குல நோவகல பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே.

(இ-ள்.) புகழ், கல்வி, வீரத்தன்மை, வெற்றி, பிள்ளைகள், துணிதல், பொன், மிகுதியாகிய தானியம், சிறந்தபாக்கியம், மாதரது அநுபவம். ஞானம், சௌந்தரியம், நூதனமாகிய பெருமை, தருமம், உயர்குலம், ஆரோக்கியம், ஆபரணம், ஆயுள், எனும் பதினாறு பேற்றையுந்தந்தருள்வாய் மதுரையிலெழுந்தருளியிருக்கின்ற பராபரனே என்பதாம்.

### மதுரையில் தனக்கெதிர்ப்பட்ட ஒருவனை நோக்கி நல்லோருக்கு உதவி முதலியவற்றைச் செய்கவெனப்பாடியது.

பண்புளருக் கோர் பறவை பாவத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கா னாற்காலி—திண்புவியை
ஆள்வார் மதுரை யழகிய சொக்கர்க் கரவம்
நீள்வாகன நன்னிலம்.

(இ-ள்.) நற்குண முடையார்க்கு ஒரு பறவை. பாவத்துக்கு ஒரு எண், நட்புக்குணமில்லாதவரைக்கண்டால் நாற்காலி, வலியமைந்த நிலவுலகத்தை யாள்பவராகிய மதுரையி லெழுந்தருளியிருக்கும் அழகாகிய சொக்கநாத சுவாமிக்கு பாம்பு, பெரியவாகனம், நல்ல நிலம் என்பதாம்.

ஓர்பறவை-ஈ, ஓர் இலக்கம்-அஞ்சு, நாற்காலி-நான்கு கால்களையுடையதாகிய விலங்கு, அரவம், வாகனம், நிலம்-பணி, விடை, செய், இவற்றை முறையே பண்புளர் முதலியோர்க்குப் பின்னே சேர்த்து பண்புளருக்குக்கொடு, பாவத்திற்குப் பயப்படு, நண்பிலரைக்கண்டால் விலகு, சொக்நாதருக்குப் பணிவிடைசெய், எனவுரைக்க; விடை-இடபம், கண்டக்கால் நாற்காலி என்பதை-காணிலிரு நாற்காலி எனப்பாடமோதி, காணில்-பரிகரி, நீக்கு எனவுரைத்தலுமுண்டு. பரி--குதிரை, கரி-யானை, இரு நாற்காலி-இரண்டு நாற்கால் பிராணிகள்.

## வெறி விலக்கல்.

போலநிற மாவார்க்குப் பூஜை மாவாரை
ஏலவதை செய்தா லியல்பாமோ—சாலப்
பழிக் கஞ்சுந் தென்மதுரைப் பாவையி ரெட்டு
விழிக் கஞ்சன் சோம னலைவேந்து.

(இ-ள்.) எட்டுக்கண்களையுடைய பிரமன் போலவும், சந்திரன் போலவும், கடற்கரசனாகிய வருணன் போலவும், முறையே செம்மை, வெண்மை, கருமை என்னும் நிறவேற்றுமையுடைய இப்பெண்ணரசியார் பொருட்டு ஆட்டைப்பொருந்தக் கொலைசெய்தால் அது நல்லியற்கையாகுமோ ஆகாது. அன்றியும் தென் மதுரையிலுள்ள பாவைபோலும் உருவுடைய எமது பெண்ணும் மிகவும் பழிக்கு அஞ்சுவாள் என்பதாம்.



ஆட்டு மாமிசத்தைச் சிறுக அறிந்து உலர்த்துவோர் கயிற்றில் கோர்த்து ஆரம்போலத் தோரணங்கட்டுதலால் ஆட்டைப்பூஜையென்றார். நிறமாவாரை எனப்பாடமோதி, செம்மை, வெண்மை, கருமை நிறங்களையுடைய ஆடுகளை எனப் பொருள் கூறுவாருமுளர்.

## இதுவுமது.

முந்நான்கி லொன்றுடையான் முன்னான்கி லொன்றெடுத்து
முந்நான்கி லொன்றின்மேன் மோதினான்—முந்நான்கில்
ஒன்றறிந்தா லாகுமோ ஓ ஓ மடமயிலே
அன்றணைந்தான் வாரா விட்டால்.

(இ-ள்.) ஓ இளமை பொருந்திய மயிற் சாயலுள்ள பெண்ணே! அன்று கலந்து பிரிந்த தலைவன் வாராதிருந்தால், பன்னிரண்டில் ஒன்றையுடையவன், பன்னிரண்டில் ஒன்றையெடுத்து பன்னிரண்டில் ஒன்றின்மீது மோதினான், இதற்குப் பன்னிரண்டில் ஒன்றினை அறுத்தால் பரிகாரமாகுமோ என்பதாம்.

முந்நான்கு என்னும் நான்கனுள் முதலாவது இராசிபன்னிரண்டில் ஒன்றாகிய மீனம், இரண்டாவது இராசிபன்னிரண்டில் ஒன்றாகிய தநுசு, மூன்றாவது இராசி பன்னிரண்டில் ஒன்றாகிய றாகிய கன்னி, நான்காவது இராசி பன்னிரண்டில் ஒன்றாகிய மேஷம், (ஆடு) மன்மதன் வில்லை வளைத்து மலர்க்கணை எய்யக் காம வெறிகொண்ட இக்கன்னிக்கு ஆட்டைக்கொலைசெய்து அவ்வெறியை நீக்க நினைத்தல் பயனின்றென்பது கருத்து.

## ஞானவரோதயர் மதுரைக்குப் போனபோது காளமேகம் எழுதியனுப்பிய கவி.

" முதிரத் தமிழ்தெரி நின்பாடறன்னை முறையறிந்தே,
எதிரொக்கக் கோப்பதற் கேழுழு பேரில்லை—யின்றமிழின்

பதரைத் தெரிதரக்கோவில்லை யேறப் பலகையில்லை
மதுரைக்கு நீ சென்ற தெவ்வாறு ஞான வரோதயனே"
[தனிச்செய்யுட் கோவை

(இ-ள்.) ஆழ்ந்த பொருளையும், அரிய கருத்தையும் விளக்குவதான உம்முடைய இனிய பாடல்களை அருமையுடன் ஒழுங்கு தெரிந்து வரிசைப்படக் கோப்பதற்கு நாற்பத்தொன்பது பேராகிய தமிழ்ச்சங்கப் புலவர்களுமில்லை. இனிய தமிழிற்காணும் குற்றங்களைக் காண்பதற்கோ தமிழை வளர்த்த பாண்டியனுமில்லை. வீற்றிருப்பதற்கோ ஒப்பற்ற சங்கப்பலகையுமில்லை. இவ்வகைச் சிறப்புக்களெல்லாம் இப்பொழுதில்லாதிருந்தும் நீர் மதுரை சென்றதெவ்விதம்? ஞானமென்னும் வரத்தினால் அவதரித்தவனே! என்பதாம்.

இவ்வளவே மதுரையைப்பற்றி நமது புலவர் பாடியதாக இப்பொழுது கண்டவை.

3.

திருமோகூர்.

இத்தலம் மதுரையிலிருந்து வடக்கில் அழகர் கோவிலுக்குச் செல்லும் பாதையில் 5 மைலில் இருக்கிறது. நம்மாழ்வாராலும் திருமங்கையாழ்வாராலும் பாடப்பெற்றது. திருமோகூர் வல்லிநாச்சியார், மோகவல்லி நாச்சியார், சமேதராய் காளமேகப்பெருமாள் என்னும் திருநாமம்பெற்று அஜருத்ரேந்திராதிகளுக்குக் காக்ஷி தந்தருளிய தலம், தமது தந்தையாரின் ஜனன ஸ்தானமும் இதுவே என்பர். இத்தகைய தலத்தையடைந்து பெருமாளைத் தரிசித்தபோது பாடியது.

நிரனிறைப்பொருள்கோள்.

"பொன்னனைவா ளரக்கனை நூற் றுவரைக்காவைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்னனீன்ற



நன்மகற்காச் சுரர்க்காயை வருக்காக் காதல்
நப்பின்னைக்காச் சானகிக்கா நடவைக்காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்களாலு
முன்னுரங்கி றிச்சிரங்கொண் டமரில்வீழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மோகூரானே"

(இ-ள்.) இரணியனையும், வாட்படையையுடைய அரக்கனாகிய ராவணனையும், துரியோதனன் முதலிய நூற்றுவரையும், பாரிசாத மலர்ச்சோலையையும், போர் புரிதற்குரிய வில்லையும், ஒலிக்கின்ற கடலையும், இரணியன் பெற்ற சற்புத்திரனாகிய பிரகலாதன் பொருட்டாகவும், தேவர்கள் பொருட்டாகவும், பஞ்சவர் பொருட்டாகவும், அன்புள்ள நப்பின்னைப்பிராட்டிக்காகவும், சீதாபிராட்டியின் பொருட்டாகவும், வழியுண்டாகும் பொருட்டாகவும், நிலைபெற்ற நகத்தாலும், வடித்தலமைந்த அம்பினாலும், சங்கத்தொனியினாலும், பறவையாலும் விளங்குகின்ற புஜ பலத்தினாலும், வானரங்களாலும், முற்காலத்தில் மார்பைப்பிளந்தும் தலையையறுத்தும், யுத்தகளத்தில் விழுத்தியும், வேரோடு பெயர்த்தெடுத்தும், ஒடித்தும், திருவணை கட்டித்தடுத்த திருமோகூரில் எழுந்தருளிய இறைவனே என்பதாம்.

பொன்னுக்கு "இரணியம்" என்று பெயராதலால் "பொன்னன்" என்றது இரணியனுக்காயிற்று.

(தொடரும்)
சி. து. நாராயணசாமி முதலியார்.

---

## இக்காலத்து சன்னியாசமும் அதன் சீர்திருத்தமும்.

சன்னியாசமென்றால் வடமொழியில் நன்றாக விடுதல். அதாவது ஒன்றிலும் பற்றுதலின்னியில் ஈசுவர தத்வத்தை

பார்களுக்கு உபதேசஞ்செய்து கொண்டிருப்பதேயாம். நம் நாட்டில் பூர்வகாலத்தில் இத்தொழிலை கிருஹஸ்தவர்கள் கைகொண்டு வந்தார்கள். அவர்களை ருஷிகளென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவர்கள் வம்சஸ்தர்களே நாமெல்லோரும். சில காலத்திற்குப்பிறகு இந்த ருஷிகளுக்கு பெண்டு பிள்ளை வீடு வாசல்களில் அபிமானம் சாஸ்தியாகும்பொழுது இந்த ஆசிரமத்தை விலக்கி பற்றுதலில்லாமலிருக்கிற வேறொரு ஆசிரமத்தை உண்டாக்கி அதை கைக்கொள்ளுகிறவர்களுக்கு காவி வஸ்திரத்தைக் கொடுத்து வேதாந்த உபதேசஞ் செய்கிறதைத் தொழிலாக்கி சன்னியாசிகளென்று பெயர் கொடுத்தார்கள். இதை பலப்படுத்தினதில் முக்கியமானவர்களில் நம் ஆதி சங்கராசாரியார் ஒருவராகும். அவருக்குப் பிறகு சிலகாலம்வரை மேற்படி ஆசிரமம் ஒழுங்காக நடந்து வந்தது. இப்பொழுது காலகெதியினால் இச்சன்னியாசமானது எவ்வளவு கெட்டுப்போயிருக்கிறதென்பது நம் நண்பர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே. இதை நாம் சீர்திருத்தவேண்டியது அத்தியாவசியமாக இருக்கிறது.

இவ்வுலகத்தில் அனுஷ்டித்து வருகிற மதங்களை முக்கியமாக மூன்றாகப் பிரிக்கலாம். அதாவது ஹிந்து, பௌத்தமம், கிறிஸ்துவம், மற்ற எல்லா மதங்களும் இதற்குள் அடங்கியதென்று வித்துவான்கள் கூறுகிறார்கள். இந்த மூன்றுக்குள் ஹிந்துமதம் தாய் ஸ்தானமாகும். இம்மூன்றிலும் இக்காலத்தில் சந்நியாசிகளிருக்கிறார்கள். கிறிஸ்துமத சந்நியாசிகளுக்கு பாதிரிமார் என்று பெயர் அவர்கள் நம் முற்காலத்து ரிஷிகள்போல் கிருகஸ்தர்களாகவுமிருக்கிறார்கள். பௌத்த மதத்தில் சந்நியாசம்பூண்டு காவி வஸ்திரத்தை வாங்கி பிறகு காமத்தினால் உலக வாழ்க்கைக்கு வரப் பிரியப்பட்டவர்கள் உடனே மேற்படி வஸ்திரத்தை தன் குருவினிடத்தில் ஒப்புவித்துவிட்டு திரும்பவும் கிருகஸ்தர்களாக ஆகிறார்கள். அப்



படி இருக்கிறபடியினால் மேற்படி சந்நியாச ஆசிரமம் வெகு பரிசுத்தமாக இருக்கிறது. அதிலிருந்து அநேகமாக தவறுதல் நடக்கிறதில்லை.

நம் ஹிந்து மதத்திலேயோ வென்றால் ஒருதரம் சந்நியாசத்தை எவ்வித காரணத்திலாவது அதாவது ஸம்சாரத்தினிடத்தில் கோபம், பைத்தியம், அல்லது ராஜத்துரோகம் முதலானவைகளைச்செய்து பிறகு அதை மறைப்பதற்காகவாவது, அல்லது மடாதிபத்தியம் கிடைப்பதற்காகவாவது பூண்டுகொண்டால், திரும்பி மனவருத்தமுண்டாகி எவ்வித பிராயச்சித்தம் செய்து கொண்டாலும் முன்னிருந்த ஸ்தானத்தையடையமாட்டார்களென்று ஏதோ சில தர்ம சாஸ்திர வசனங்களை நம்பி நம் ஹிந்துக்கள் நடந்து வருகிறார்கள். இதனால் உண்டான பலன் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. நூற்றில் ஒரு சந்நியாசிகூட யோக்கியர்களாகக்காணப்படுகிறதில்லை. ஏதோ வைராக்கியத்தினால் வயது மூத்து ஆபத் சந்நியாசமென்று மரணகாலத்தில வாங்குகிறவர்கள்கூட பிறகு பிழைத்துவிட்டால் அவர்கள் செய்கிற கலகங்களைச் சொல்லி முடிய[illegible]. மற்றும் ஹிந்துக்கள் மூட பக்தியினால் எவ்வித கெட்ட நடக்கையுடன் கூடிய சந்நியாசியைச் சந்தித்தாலும் சந்நியாசி எப்படி இருந்தாலும் நாம் அவர்களுக்கு உபசாரஞ்செய்யவேண்டியது அவசியமென்று அவர்களுக்கு காசு முதலானவைகள் கொடுத்து உபசாரஞ்செய்து அவர்கள் கெட்ட நடக்கையை அபிவிருத்தி செய்யக் காரணமுமாகிறார்கள். இதில் ஒருவர் பணம் சம்பாதிக்கிற வழியை இவ்விடத்தில் காட்டுகிறேன். தினந்தோறும் கிராமம் கிராமமாக ஒரு சந்நியாசி திரிந்து ஏழை கிரகஸ்தர்கள் வீடு நுழைந்து பிக்ஷைக்கு உட்காருவார். இலையில் அன்னமளித்தவுடன் வாயிலிருந்து ஆவென்று ஒரு சாலிக்கிராமத்தை தொண்டைத் துவாரத்தில் அடக்கியிருக்கிறதைக்கக்கி, உடனே மூடர்களான கிரகஸ்தர்களைப் பார்த்து "சுவாமி நேரே தங்கள் பிக்ஷையை வாங்க வந்திருக்

கிறார் நீங்கள் ரூ. 5-க்குக் குறையாமல் கொடுக்கவேண்டியது. இல்லாவிட்டால் உங்கள் பிக்ஷையை அங்கீகரிக்கமாட்டார்" என்று பயமுறுத்தி கொடுத்த ரூபாயைப்பெற்றுக்கொண்டு திருப்பவும் மேற்படி கல்லை தொண்டையில் முழுங்கிவிடுவார். இது ஒரு சந்நியாசியின் பிழைப்பு. இப்படிக் கோடிசரித்திரத்தை தினந்தோறும் நாம் பார்க்கலாம். மற்றும் கேட்கலாம். இப்பொழுது இதைச் சீர்திருத்தவேண்டியது நம் மதாபிமானிகளின் கடமையாக இருக்கிறது. இவ்விதமான கெடுதல்கள் வருமென்றே நம் பூர்வீகர்கள் கலியுகத்தில் ஒருவிதமான சந்நியாசமும் வாங்கக்கூடாதென்று நிஷேதித்திருக்கிறார்கள்.

சீர் திருத்த முறையாவது:—ஒரு சன்னியாசிக்காவது நாம் ஒருவிதமான உபசாரமுஞ் செய்யக்கூடாது. காசும்கொஞ்சங் கூடக் கொடுக்கக்கூடாது. மற்றும் யௌவன சந்நியாசிகளைச் சந்தித்தால் அவர்களுக்கு நாம் நல்ல உபதேசங்களைச் செய்து பச்சாதாபமிருக்கிற பக்ஷத்தில் பிராயச் சித்தம்செய்துவித்துத் திரும்பவும் அவர்கள் பூர்வ ஸ்தானத்தில் சேர்ப்பிவிக்கவேண்டியது. பிராயச்சித்தஞ் செய்ய வேண்டிய முறையானது நிர்ணய சிந்து முதலான கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறது.

சிலர் இவ்விஷயத்தை முற்றிலும் பிசகென்று சொல்லலாம். ஒருதரம் சன்னியாசியானால் மறுபடியும் பூர்வ ஆசிரமத்திற்குத் திரும்பக்கூடாதென்றும் நாடகவேஷத்தில்சன்னியாசம் பூண்டவர்களைக் கூட நாம் பூஜிக்கவேண்டு மென்றும் சொல்வதுண்டு. அவர்களுக்கு நாம் சமாதானஞ் சொல்லமுடியாது. ஆனால் எவ்வளவோ விரக்தர்கள் சன்னியாசந்தரித்து வேதாந்தோபதேசஞ் செய்து வருகிறார்கள். அவர்கள் தொழிலை நாம் மெச்சவேண்டியது அவசியமே. அவர்களும் கிருகஸ்தர்களாகயிருந்து மேற்படி உபதேசத்தொழிலை வைத்திருந்தால் இன்னும் ஜாஸ்தி கௌரவமாக இருப்பார்களென்று நாம் நினைக்கிறோம். நம் ராஜாங்கத்தார்களும் தப்பு சந்நியாசிகளைக் குற்றவாளிகளைப்போல் நடத்தமேணுமென்று நினைத்திருக்கிறபடியினால் நாமே இச்சமயத்தில் இவர்களைச் சீர்திருத்தினால் நலமாகும்.



ஆர். ஏ. சாஸ்திரி.

திருக்கைலாய பரம்பரை தருமபுரவாதீன ஸ்தாபகரான ஆதி ஞானசம்பந்த சுவாமிகள் அருளிய

## சொக்கநாதக் கலித்துறை.

கண்ணுக்கினியபொருளாகியேயென்கரத்தில்வந்தாய்
விண்ணும்பரவிடுமற்புதமேயென்னவிஞ்சையிதுதான்
மண்ணும்புகழ்ந்திடவென்னையுன்பூரணவாரியுள்ளே
நண்ணும்படிசெய்மதுராபுரிச்சொக்கநாயகனே. 1.

ஆதாரமிந்நிலத்துன்னையல்லாலெனக்காருளரோ
மீதானமானவெளியினைக்காட்டவிரைந்துடன்வந்
தேதாமலோதியெனைவசமாக்கினையுள்ளொளியாள
நாதாவருள்செய்மதுராபுரிச்சொக்கநாயகனே. 2.

பாடும்படிசெய்நினைநினைந்தேத்திப்பணிந்தெழுந்தே
யாடும்படிசெய்மலமைந்துமேயடியேனுளத்தே
வீடும்படிசெய்நின்ஞானந்தசாகரமேலெனவே
நாடும்படிசெய்மதுராபுரிச்சொக்கநாயகனே. 3.

ஏறுதவிண்ணப்பங்கூறுநின்றேனஃதேதென்னெனிற்கேள்
மாறுமலிந்தமகாலிங்கந்தன்னின்மகிழ்ந்திருந்தே
யாறுப்பவத்துயராற்றிச்சிவானந்தமன்பர்க்கென்று
நாறுகவேசெய்மதுராபுரிச்சொக்கநாயகனே. 4.

ஆசங்கரணம்புவனங்கள்போகங்களானவெல்லா
மோகம்பொருந்தவைத்தாட்டுதியேமும்மலாதியெலாம்
போகவிடுத்தெனக்கானந்தங்காட்டப்பொறியுனக்கே
நாகமசைக்குமதுராபுரிச்சொக்கநாயகனே. 5

ஆடாமலாடிப்புலன்வழிபோய்நின்றனுதினமும்
வாடாமல்வாடிமயங்கனன்றோமனமொக்கிறந்து
கூடாமற்கூடிச்சிவானந்தவெள்ளக்குணக்கடலை
நாடாமனுடைவருள்கூடல்வாழ்சொக்கநாயகனே. 6.

மதுராபுரிச்சொக்கன் ஞானப்பிரகாசன் கமலைமன்
சதுரானகாரியஞ்செய்ததென்னையிந்தத்தாரணிக்கே
முதிராவிளம்பிஞ்சைநற்கனியாக்கு முறைமையென்ன
வெதிராமல்மறுத்தென்னையுமாட்கொண்டுவிட்டனனே 7.

பொய்யாமலமறுத்தென்னுளத்தானந்தபூரணத்தை
மெய்யாயினித்தைவிடாதுகண்டாய்விடிலோகெடுவேன்
ஐயாவெனதுயிரேவினைமார்க்கத்தழுந்தியென்று
நையாதருள்செய்மதுராபுரிச்சொக்கநாயகனே. 8.

பிறவாதசென்மமுழந்தாததுன்பம்பிறந்தடியே
னிறவாததானமுமின்றுகொலோவெளியேன்றிரும்ப
வறவாயிங்கென்னையினியாடல்போதுநின்ஞானந்தத்தே
னறவார்பொழிமின்மதுராபுரிச்சொக்கநாயகனே. 9.

செய்யாதபாதகமொன்றில்லையொன்றொன்றுசெய்ததெல்லா
மையாவளவில்லைநீயேயறிவையதார்செயலோ
மெய்யாவுயிர்க்குயிரேயடியேனிவ்வினையிலென்று
நையாதருள்செய்மதுராபுரிச்சொக்கநாயகனே. 10.

அறிவைத்திருப்பிநின்பாதாரவிந்தமடையநல்ல
நெறியைக்கொடுத்து நிறுத்தினையேயின்மலாவினியென்



பொறியைத்தவிர்த்துநின்ஞானந்தசாகரபூரணத்தே
பிறிவற்றிருக்கவைப்பாயென்னையாண்டருள்பிஞ்ஞகனே 11.

முற்றும்

இலக்கண விளக்க பரம்பரை திருவாரூர்

சோமசுந்தரதேசிகன்.

## தீவினை.

பிரகிருதியின் காட்சியை உற்று நோக்கியவர்கள் மாறான இரு தத்துவங்களால், இவ்வுலகத்துள்ள ஒவ்வொரு செய்கையும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றனர். உதாரணமாக,

| | |
|---|---|
| நன்மை | தீமை |
| புண்ணியம் | பாவம் |
| குணம் | தோஷம் |
| அறிவு | அறியாமை |
| ஒளி | இருள் |
| சீதளம் | உஷ்ணம் |
| ஆகர்ஷணம் | நிகர்ஷணம் |
| பக்ஷம் | பக்ஷமின்மை |
| சௌக்கியம் | சௌக்கியமின்மை |
| பிறப்பு | இறப்பு |

என்றிப்படி ஒவ்வொன்றும் இரு எதிரிடையான பதங்களோடு அதற்குற்ற செய்கைகளோடு கூடியனவையாகவிருப்பதைக்காண்கிறோம். இவற்றுள் ஒரு சாரான் நன்மை, புண்ணிய காரியம், குணம், அறிவு, பக்ஷம், முதலியவைகளைக்கா

ணும்போதோ நாமேயடையும்போதோ வெகு சந்தோஷத்துடனிருக்கிறோம். இதற்கு மாறாக தீயசெயலைச் செய்யுங் காலத்தோ, செய்வதைக்கண்டோ நாம் அஞ்சுகிறோம். தீய செய்கையையோ கஷ்டத்தையோ அனுபவிக்கும்பொழுதும் கண்ணுறும்பொழுதும் இவ்வுலகமே, அதாவது ஈசுவர சிருஷ்டியே கெடுதிக்கேற்பட்டதென்றும், கர்த்தாவே கெட்ட காரியத்திற் பிரவேசிப்பவரென்றும் சொல்லும்படி தூண்டப்படுகிறோம்.

தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனார் தீவினையச்சமென்ற அதிகாரத்தே "தீவினையாரஞ்சார் விழுமியாரஞ்சுவர் தீவினை யென்னும் செருக்கு" அதி ௨௧ என்றார். அதற்குரைகண்ட பரிமேலழகியார் "தீவினை மேற்றொட்டுச்செய்து கைவந்தமையான் அஞ்சா"ரென்றார். அதாவது பூர்வ சன்மங்களில் பாவத்தொழிலைச்செய்து, அது மறு சனனங்களிலும் அனுபவிக்க ஏற்படுவதால்; அது முடியுங்காறும் இவன் பிறர் அறவருக்கும் தீய தொழிற்களிற் பிரவேசிக்கத் தூண்டப்படுகின்றனமையாம்.

இனி நம்மைப்படைத்த கடவுள் அப்படித் தீய தொழிலைச் செய்யத் தூண்டுவானேனென்றாலோ கடவுள் நம்மைத் தீய தொழிலைச்செய்யும்படி ஒருபோதும் தூண்டினாரில்லை. நமக்குப் போதிய பகுத்தறிவின்மையான் இது நல்வினை இது தீவினை யென்றறியாது செய்துவிடுகிறோம். 'அறிந்து செய்தாற் பாவம். அறியாது செய்தாற் பாவமில்லை' என்பது உலக வழக்காயினும் 'மறந்து செத்தாற் பிராணன் வாராது' என்பதுபோன்று ஒரு தீய காரியத்தைச்செய்தால், அதனாலுண்டாகும் பிரயோஜனத்தையும் நாம் அனுபவித்தே தீர வேண்டும்.

நாயனார், "பயனில் சொற்பாராட்டுவானை மகனெனல் மக்கட் பதடியெனல்" திருக்குறள் 20-6 என்றாராகலின் பிரயோ



சனமற்ற வார்த்தைக்கே அவ்வளவாயின், செய்கைக்கு எவ்வளவெனக் கண்டறிவீர்களாக. அன்றியும், சொல்லி வருதலாலே எண்ணமுண்டாகி, அதனின்றும் காரியம் வசப்படுதலாற்றான் சொல்வதே கூடாதெனத்தடுத்ததோடு, அதிகாரமுறையும் பயனில் சொலாமை என்பதற்குப்பின்னர் தீவினையச்சமும் ஏற்பட்டது.

இனி தீவினையென்பது சொற்றொடர். தீமை வினை என்னும் இருமொழிகளாலாகிய ஒரு சொற்றொடர். அஃதாவது கெடுதியை விளைக்கக்கூடிய செய்கையென்பது பொருள்.

தீவினை, தீமை, கேடு, பாவம், முதலியவைகளெல்லாம் ஒரு தொழிலைக்குறிக்கும் பலபொருட்சொற்களாம். ஆயினும், அவற்றுள் கெடுதிக்குத்தக்கவாறு பாகுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. கொலையும் பயனில் சொற்சொல்வதும், தீயவையாயினும் இரண்டும் சமமாகப்பாவிக்க முடியாதன்றோ? ஆகையான் அவற்றுள் பாகுபாடுகள் ஏற்படவேண்டியதவசியமாகின்றது. அவையாவன 1 மகா பாதகம், 2 அதிபாதகம், 3 பிரசாங்கிதம், 4 உப பாதகம், 5 கவுணபாதகம். 6 தாபானுபவப்பிரங்கியம், 7 சங்கிரணம், 8 ஆபாத்திரம், 9 மலவகம், 10 பிரகீரணம்.

இவற்றுள் மகா பாதகமென்பது, பஞ்சமகா பாதகமெனவும் படும்.

"மறையவர்தங்கொலைகள்ளுண்டல்மற்றவர்பொன்முதற்கைக்கோடல், முறைபெறுமன்னையுடன்கூடல்முற்றுமவர்களுடன்கூடற், பறைபடுமித்தொழிலைந்தேமாபாதகமென்பர்படித்தோர்மேற், சிறைபடுவெந்நிரயஞ்சேருந்தீவினை யாளர்கள்செய்வாரே."

ஐயாற்றுப்புராணம்.

காதல் கவருடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்.
ஈதன் மறுத்தலிவைகண்டாய்—போதிற்

சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. புகழேந்தியார்.

" அணங்குநோயெவர்க்குஞ்செய்யமனங்களுலைப்புண்டாவி, யுணங்கிளை நள்ளஞ்செல்லுமிடனறிந்தோடிச்செல்லா, குணங்குலனொழுக்கங்குன்றல்கொலைபழிபாவம்பாரா, விணங்குமின்னுயிர்க்குமாங்கேயிறுதிவந்துறுவதென்னை. "

"கள்ளுண்டல்காமமென்பகருத்தறைபோக்குச்செய்வ, தெள்ளுண்டகாமம்போலவெண்ணினிற்காணிற்கேட்கிற், நள்ளுண்டவிடத்தினஞ்சந்தலைக்கொண்டாலென்னவாங்கே, யுள்ளுண்டவுணர்வுபோக்காதுண்டபோதழிக்குங்கள்ளுண்."

" காமமே கொலைகட்கெல்லாங் காரணங் கண்ணோடாத
காமமே களவுக்கெல்லாங் காரணங்கூற்றமஞ்சுங்
காமமே கள்ளுண்டற்குங் காரணமாதலாலே
காமமே நரகபூமி காணியாக்கொடுப்பதென்றான். "
பரஞ்சோதி திருவிளையாடல் 26-உரு-உஎ

காமமாவது சிற்றின்பம். ' இன்பமோ சிறிதாகுமிதில் வருந்துன்பமோ கரையில்லாத் தொடுகடலே ' னப்படும் என்பதையோராது அதனில் விழைவான் புகுந்தார்க்கு, கொலை முதலியன ஓர் தடையாகாது. ' காமாதுராணாம் நபயம் நலஜ்யா ' என்பது நீதிவாக்கியம். ' அரிது அரிது மானிடராதலரிது ' என்ற மூதாட்டி வாக்கியப்படி நால்வகைத்தோற்றத்தில் முக்கியமானதாகிய மக்கட் பிறவியையடைந்தார் இவ்விழி தொழிலைச்செய்ய முன்வருவது என்ன மதியீனம். இன்னும்,

அந்தணர் முதலியோரைக் கொன்றோரை பிரமகத்தி தொடருமென்றும் ஈடேற்றமில்லையென்றும் சொல்லும்.



" ஆவவென்னுமழுஞ்சிவதாவெனும்
பாவம்பாவம்பழியிதுவோவைய
கோவெனுங்கைகுலைத்தெறியுங்கிழற்
பாவைபோலவிடாதுபின்பற்றுமால். "

" நல்லதீர்த்தஞ்சிவதலநலோர்பக்கமுஞ்
செல்லவொட்டாதரன்சீர்த்திநாமஞ்செவிப்
புல்லவொட்டாதுளம்புகுதவொட்டாதுநாச்
சொல்லவொட்டாதுகண்டுயிலவொட்டாதரோ. "

" சுற்றுமுன்பின்புறச்சூழ்ந்துதன்கொடுக்கிற
பற்றிநின்றீர்க்குமாபாதகத்தாலலைந்
தெற்றினிச்செய்வதென்றுற்றலாதிடருழந்
துற்றுவேறலகெலாமச்சமுற்றுழலுமால். "
பரஞ்சோதி திருவிளையாடல் 26-மஎ-மகூ

அறியாது செய்தாலும் பழி ஏற்படுமென்பதற்கு,

"காலிற் கடும்புரவி மேலிற் கடிந்து வருகாலக்கடன் தனிலோர் மறையோன்-மாலுற்றயர்ந்து முகம் வேர்வைக் குறுந்தி வலைவீரக்கிடந்து விழி துயில்வோன்-மேலக்கடும் புரவி கால் வைப்ப வந்தணனும் வீவுற்றவிந்தனனதறியான்-கோலிற்செலும் பரியின் மீனத்தனுந்தனது கோயிற் புகுந்தனனவளவே."
பரஞ்சோதி திருவிளையாடல் 40-ரு.

சடை மறைத்து, கதிர் மகுடந்தரித்து, நறுங்கொன்றையந் தார் தணந்து, வேப்பந்தொடை முடித்து, விடநாகக்கல்ன கற்றி, மாணிக்கத்தாலாய பிரகாசிக்கின்ற செங்கோலையேந்தி, தமக்குரிய விட பத்துவசத்தைவிட்டு, கயலேந்தி, செழியர் பிரான் றிருமகளாயுதித்த பெண்ணரசியை மணந்து, உலக முழுதும் ஒப்பற்ற ஒருகுடை நீழலிலாண்ட சுந்தரனையே தெய்வமாகக்கொண்ட கூடலம்பதியிற் கோலோச்சிய வரகுண

பாண்டியன் வேட்டைக்குச்சென்று மீளுங்கால், அவனது தாரகம் அயர்ந்து நித்திரை போவான் பார்ப்பனொருவனை மிதித்ததால் அவன் உயிர் துறக்க, அதனையறிந்த பாண்டியன் வரகுணன் 'அகமருடனைத்தாலோம மாற்றியும்' செய்வனசெய்தும் பல கொடுத்தும் நீங்காவலியதாயிழுது பெய்த புகையழலென மேலிட்டுப் புலப்படலனைந்ததன்றே.

ஆகலான் அறிந்து செய்யினும், அறியாமற் செய்யினும் பழியஞ்சாது பற்றுமென்ப.

இன்னும் இவற்றினைச் செய்தார் பெறும்பயன் யாதோவெனின், அறையக்கேளி.

"அந்தணர்க்கொன்றதீங்காலளற்றிருள்விதித்தகால, நொந்தனர்மூழ்கியெழுந்துநொசிவுறப்பிறப்பர்கண்டாய், நிந்தனை கழுதைபன்றியொட்டகநிரலைநேமி, தந்திநாய்கொக்குநீசர்தாமெனவடைவரென்றான்."

"கள்ளுண்டுகளிக்குங்கையர்கால்தண்டங்கணீங் ந
நள்விருட்கூகையாயுநலியுமேற்குணங்கள்யாவுஞ்
சுள்ளெறும்பாயுமுசிச்சுழல்சிறுகொசுகுமாகிப்
புள்ளெரும்பிணஞ்சுட்டெண்ணும்புலையருமாவரந்தோ."

ஐயாற்றுப்புராணம்.

"உட்கப் படாஅரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகுவார்."

குறள் 93-௧.

"எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்,
கள்ளாமை காக்கதன் னெஞ்சு."

குறள் 29-௧.

விரிக்கிற் பெருகுமாகையாலும் இன்னும் ஒன்பதுவகைப் பாதகங்களை நாம் விளக்க வேண்டியிருத்தலின் விரிவஞ்சி விடுத்தாம். இனி அதிபாதகமாவது,



"ஓதிமகத்திலுய்ந்தோரையோடியடைக்கலமென்றோரைக், காதிவருத்தமிழைத்தாலுங்கண்டகரிபொய்யுரைத்தாலு, மாதியரிக்கயனுக்கிசர்க்காகுமுருக்களலைத்தாலுமதித்தி, பாதகமென்பார்முன்றிண்ணிய நூல்கடெரிந்தோரை."

"தாதைமணர்தமுறைத்தாய்தன்றனிமகன்மகனில்லாடன் சோதரியோடுபுணர்ந்தாலுஞ்சூலியைமேனியிளைத்தானை, போதுமலர்ந்ததுடக்கானைப்பொன்றவதைத்தாலு, மாதிருமன்னனை நட்டோரைவணிகனைக்கொலைசெய்தாலும்."

அதிபாதக மென்பவைகள், தன்றகப்பன் கல்யாணஞ்செய்த முறையில் வரும் சிற்றன்னை, பெரியன்னை முதலானவர்களைக் காமத்தாற்றழுவுதலும், தன் மகள் தோணயத்தலும், தன் புத்திரனது பாரியையைக் கலைத்தலும், சகோதரிகளோடு சேர்தலும், கர்ப்பிணி, பலமில்லாள், இவர்களைக்கூடுவானும் தன்னைக்கொடுமை செய்தோனாயினும், அவன் அரசனாயினும் சரி, சிநேகனாயினும் சரி, வியாபார முறைமையுடையோனாயினும் சரி, இவர்களை தன்னைக்கெடுத்தானென்னுங் கோபத்தாற் கொலை செய்தாலும், யாக யாகங்கள் செய்தோரையும், அடைக்கலம் புகுந்தோரையும், பொய்ச்சாக்ஷி சொல்லுதலும், அரி, பிரும்ம, விஷ்ணு ருத்திரர் உட்காரும் சிலை முதலியவற்றிற்குக் கேடுண்டாக்கினலும் அதிபாதக மென்னப்படும்.

தொடரும்.

சோமசுந்தர தேசிகன்.

---

## தமிழபிமானிகளுக்கு ஒரு விண்ணப்பம்.

சகோதரர்களே; சகோதரிகளே!

தமிழ் இலக்கணங்களுக்கு மூலமாயுள்ளது தோல்காப்பியம் என்பதையும், தமிழ் இலக்கியங்களில் தலைமை வாய்ந்தது

திருக்குறள் என்பதையும், இவ்விரண்டு நூல்களும் மனிதர் இகத்திலும் பரத்திலும் அடையக்கூடிய உந்நத நிலைகளையும் அவற்றிற்சேர்க்கும் நெறிகளையும் கூறுகின்றனவென்பதையும், இவ்விரண்டும் இதுவரை வெளிப்பட்டுள்ள சகல பாஷா நூல்களிலும் ஒப்புயர்வற்றவை யென்பதையும் நீங்கள் அறிவீர்கள். இந்நூல்கள் அச்சிடப்பட்டுப் பல வருஷங்களாகியும் இவற்றைத்தமிழ் மக்களிற் பெரும்பாலார் கைக்கொண்டு கற்கவில்லையென்பதும், அதற்குக்காரணம் இவற்றின் விலைகளும் உரைகளும் சொற்பப்பொருளுடையாரும் கல்வியுடையாரும் இவற்றை வாங்கவும் இவற்றின் பொருள்களை உணரவும் முடியாத விதத்தில் உயர்ந்தனவாயிருக்கின்றன வென்பதும், இவற்றுள் தொல்காப்பியம் கிடைப்பது அருமையென்பதும் நீங்கள் அறிந்தவையே. இவ்விரண்டு நூல்களையும் தமிழ் மக்கள் அனைவரும் கைக்கொண்டு கற்கும்படி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு இவ்விரண்டையும் குறைந்த விலைகளுக்குக் கொள்ளத்தக்கவாறும் யாவரும் எளிதில் உணரத்தக்க உரைகளோடும் அச்சிட்டு வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளேன்.

தொல்காப்பிய மூலம் தொன்னூல் ஆராய்ச்சி மிக்குடைய தமிழ்ப்பண்டிதர் இருவரால் பல ஏட்டுப் பிரதிகளைச் சோதனை செய்து எடுத்தெழுதப்பட்டது. இதில் தற்கால அச்சுப்பிரதிகளிற் காணப்படும் எழுத்துப்பிழைகளும் சொற்பிழைகளும் களையப்பட்டும் பாடபேதங்கள் காட்டப்பட்டுமிருக்கின்றன. இதன் உரை இதுவரை அச்சுக்கு வந்துள்ள உரைகள் பலவற்றையும், அச்சுக்கு வராத உரைகள் பலவற்றையும், இலக்கண நூல்கள் பலவற்றையும் ஆராய்ச்சிசெய்து தள்ளவேண்டியவற்றைத் தள்ளிக்கொள்ள வேண்டியவற்றைக்கொண்டு யாவர்க்கும் விளங்கத்தக்க செந்தமிழ் நடையில் என்னால் எழுதப்பட்டு வருகிறது. திருக்குறள் மூலம் அச்சுப்பிரதிகள் பலவற்றையும் ஏட்டுப் பீரதிகள் பலவற்றையும் சோதனைசெய்து என்னால் எடுத்தெழுதப்பட்டது. இதில் தற்கால அச்சுப்பிர



திகளிற் காணப்படும் எழுத்துப்பிழைகளும் சொற் பிழைகளும் களையப்பட்டும் பாடபேதங்கள் காட்டப்பட்டுமிருக்கின்றன. இதன் உரை இதுவரை அச்சுக்கு வந்துள்ள உரைகள் பலவற்றையும் மொழி பெயர்ப்புக்கள் பலவற்றையும், அச்சுக்கு வராத உரைகள் பலவற்றையும் மொழிப்பெயர்ப்புக்கள் பலவற்றையும், குறள்கள் எடுத்தாளப்பட்டுள்ள நூல்கள் பலவற்றையும் ஆராய்ச்சிசெய்து பழையன விலக்கிப் புதியன தழுவி யாவர்க்கும் விளங்கத்தக்க செந்தமிழ் நடையில் என்னால் எழுதப்பட்டு வருகிறது.

தொல்காப்பியத்தில் ஆயிரம் பிரதிகளும் திருக்குறளில் ஆயிரம் பிரதிகளும் அச்சிட்டுக்கட்டி முடிப்பதற்குச் சற்றேறக்குறைய மாதம் ஆறும் ரூபா மூவாயிரமும் செல்லும். தொல்காப்பியம் பிரதி ஒன்றற்கு ரூபா நான்கென்றும், திருக்குறள் பிரதி ஒன்றற்கு ரூபா இரண்டென்றும் விலைகள் ஏற்படுத்தியுள்ளேன். ஆனால் வருகிற ஆடிமாத முடிவுக்குள் பணம் தருவோர்க்கு இவை முறையே ரூபா மூன்றற்கும், ரூபா ஒன்றரைக்கும் கொடுக்கப்படும். இந்நூல்களின் வேலைகளைத் திருப்திகரமாகச் செய்து முடித்தற்குக் கல்விமான்களுடைய உதவியும் செல்வவான்களுடைய் உதவியும் இன்றியமையாதவை. நீங்கள் எனக்கு அளிக்க விரும்பும் மதியுதவியையும் பொருளுதவியையும், புத்தகங்களின் விலைகளுக்காக அளிக்க விரும்பும் முன் பணங்களையும், சென்னை, மயிலாப்பூர், பரிபூரண விநாயகர்கோயில் தெரு, 40-ம் இலக்கக் கட்டடத்தில் வசிக்கிற எனக்கு அனுப்பவேண்டுமெனப் பிராத்திக்கிறேன்.

உங்களன்புள்ள,

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

## சமயம்.

(முன் தொடர்ச்சி)

சிவசங்கிராந்தவாத சைவம்:— அது விதுவென்னும் சுட்டறிவு ஆன்மாவிற்கில்லை; கத்தாவொன்றையுமறியவேண்டுவதில்லை; ஆன்மாவிகாரமற நிற்கவதன் சந்நிதியிலே பிராண வாயுவுடலைத் தொழிற்படுத்தும்; இன்னண முடலியங்குழியதன் கணின்று கருவிகளே விடயங்களையநுபவிக்கும்; இந்திரியங்கள் சத்தாதி விடயங்களையறிதற்கு முன்னரே யந்தக்கரணங்களறியா நிற்கும்; இக்கரணங்கள் நீங்குழி விடயங்கள் இந்திரியங்களோடு பொருந்தா; அநாதியாகிய ஆணவமலம் நீங்கியிருவினை யொப்புஞ் சத்தினி பாதமும் வந்தவிடத்துக்கத்தாவின்தருள் கிட்டும்; அவ்வழி விறகிடை நெருப்பைக் கொளுத்த விறகினுண்மைகெட்டு நெருப்பாதல் போலவும் உப்பளத்திலிட்டவை யெல்லாமுப்பாமாறு போலவும் ஆன்மாச்சிவமேயாய்ப் பசு கரணங்களுஞ் சிவ கரணங்களாய் மாறிச்சிவத்தையறியும் என்பதாம் இதன் கொள்கை.

ஈசுவரவவிகாரவாத சைவம்:— பலத்துவாரங்களையுடைய குடத்துக்குள்ளிருக்கிற விளக்கைப்போன்ற நவத்துவாரங்களையுடைய சரீரத்திலே நிற்கிறவான்மாக்கள் அறிவாய் நிற்கும்; நிற்பினும் அவ்வப்பொறிகளளவாய் அவ்வவற்றைக் கூடியறியும்; ஆணவமலம் நீங்கிப் பாகம் வந்தகாலத்து ஞான தீபத்தைச் சிவனநுக்கிரகத்தாற்பெற்று வெய்யிலிற்றிரிந்தாரொருவன் மர நிழல் கண்டாறுவதுபோல முதல்வன்றிருவடி நீழல் சேர்ந்து கருவுறு துயரங்களைந்திருந்திடும் என்பதாம்.

சிவாத்துவித சைவம்:— சித்தாந்த சைவரோடு பதி ப பாசங்களினியல்பு, தத்வங்களின் தோற்ற வொடுக்கங்கள் இவை முதலியவைகளை யொப்பக்கொண்டு, பசு பாசங்கள் பதி



வியாபகத்தின் வியாப்பியமாய் நிற்பனவன்றித் தனித்த முதலன்மையினால் முப்பொருட்குந் தம்முள் வேற்றுமை உட்பேதமேயன்றி புறப்பேதமன்று; ஆகவே சதசத்தும் அசத்துமாகிய வனைத்தும் சத்தெனவேபடும்; படவே, பசுவுக்கறியுந்தன்மை பதித்தன்மையின் வேறாயுண்டெனில் தனித்த முதலெனப்பட்டுப் பிழைப்படுமாகையால் சத்தாகிய பதிப்பொருளே ஆன்மாவினிடத்து நின்றறியும்; யாவுஞ் சத்தான விடத்துச் சத்தின் வேறான பொருளொன்றின்மையால் அஃது அறியும் விதமெப்படி? யெனக் கேட்போர்க்குப் புறப்பேதமாய் இன்றாயினும் அகப்பேதமாகி, அசத்தாகிய பாசமுண்மையின் அதனை அஃதறிதல் கூடும் என்பதாம்.

இனிச் சித்தாந்த சைவத்தினையாராய்தல் தகுதி. இதற்குச் சித்தாந்த சாத்திரங்களும் சிவப்பிரகாசக்கட்டளை முதலியனவுமே முக்கியசாதனமாம். இவைகொண்டு இதனை ஈண்டெழுதப்புகின் மிகுதியும் விரியுமாதலின் விடவேண்டுவதாயிற்று.

இது நிற்க இவ்வுலகின்கண் அவதரித்த அனைவரும் பல்வேறு விதமான குணாதிசயங்களைப் பொருந்தியவர் என்பது நிதரிசனம். இவர்களுள் ஆஸ்திகர்கள் யாவரும் கடவுளையடையவேண்டிய விருப்பமுடையவர்கள் எனினும் அவர்கள் ஒரே பரிபாகமுடையவர்கள் அல்ல என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததொன்று. ஆகவே பல்விதப்பட்ட பரிபாகங்களுக்குத் தகபல மார்க்கங்கள் (சமயங்கள்) இருந்தாலன்றி ஒன்றாகிய கடவுளையடைதல் எங்ஙனம் இயலும்? இதுபற்றியென்க நம்பெரியோர் பல மதங்களை நம்பரிபாகங்களுக்குத் தக ஏற்படுத்தியது. ஆயின் ஒவ்வொரு மதங்களைச்! சொல்ல வந்தவிடத்து ஏனைமதங்களை யிகழ்ந்தும் எடுத்துக் கொண்ட மதத்தைப் புகழ்ந்தும் இப்படிப் பக்ஷப்பிரதிபக்ஷம் செய்தல் எதுபற்றியெனின் நாம் நமக்கு ஏற்பட்டுள்ள மதங்களில் அதிகப்பற்றுதல் அடையு நிமித்தமேயாம். ஏதேனுமொன்றிற்பற்று

தல் உண்டானாற்றான் ஒன்றைச்சாதித்தல் இயலும். அங்ஙனமின்றி எம்மதத்திலும் பற்றேயின்றி எல்லாமதங்களும் சரியென்று "வாசா கயிங்கரியம்" செய்து கொண்டிருப்பானாயானால் ஒருவன் தான் அடையவேண்டிய இலாபமொன்றையிழத்தல் நிச்சயம். அதில் எள்ளளவும் ஐயப்பாடின்று. ஆதலின் நாம் நமக்கென ஏற்பட்டுள்ள மதங்களினின்றும் வழுவாதொழுகி ஆன்மலாபத்தையடையவேண்டும் என்னும் கருணைமிகுதியினாலே நம்பெரியார் இவ்விதம் மதங்கள் ஒவ்வொன்றையும் உயர்த்தியும் அவ்விதம் உயர்த்தியபிரகாரமே ஏனையவற்றைத் தாழ்த்தியும் கூறினர். நாம் முதலிற்கூறியபடி எந்த மதத்தினின்றும் நாம் ஒழுகினாலும் எய்தும் பயன் இறுதியில் ஒன்றே.

"ஆவேறுருவின வாயினு மாபயந்த
பால்வாறுருவின வல்லவாம் — பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறியாபோ
லுருவுபல கொளலீங்கு."

ஆகவே நமது சமயத்தின் முதற்பகுப்பாய மதம் என்பது ஒருவாறு முடிந்தது. இனிமறுபகுப்பாம் காலத்தைப்பற்றி மறுமுறைவரைவாம்.

ஜீ இராஜகோபாலன்.

## சச்சிதாநந்தம்

சில உபநிடதங்களும் ஆகமங்களும் கடவுளுக்கு இலக்கணம் கூறுமிடத்து "சச்சிதாநந்தம்" என்று கூறுகின்றன. இவ்வுபநிடத ஆசிரியர்களும் ஆகம ஆசிரியர்களும் சுருதி, யுக்தி, அநுபவம் நிறைந்தவர்களென்றே நாம், கொள்ளுதல் தகுதி. அவ்வாறு நாம் கொள்ளின் அவர்கள் கடவுளுக்குக்



கூறியுள்ள சத், சித், ஆநந்தம் என்னும் இலக்கணங்கள் மனிதர் சுருதி, யுக்தி, அநுபவங்களாற் கடவுளுக்குக்கூறக்கூடிய சகல இலக்கணங்களையும் உட்கொண்டும், மனிதர் சுருதி, யுக்தி, அநுபவங்களால் மறுக்கக்கூடிய எவ்வித இலக்கணத்தையும் னுட்கொள்ளாதும், நிற்றல்வேண்டும்.

நான்கு மகாவேதவாக்கியங்களில் ஒன்று "பிரஹ்மம் பிரஜ்ஞானம்" என்கின்றது. 'பிரஹ்மம்' கடவுள் எனவும், 'பிரஜ்ஞானம்' அறிவு எனவும் பொருள்படும். இம்மகா வாக்கியம் தோன்றியதற்கு நீண்டகாலத்திற்குப் பின்னரே கடவுளுக்குச் "சச்சிதாநந்தம்" என்னும் இலக்கணம் கூறப்பட்டிருத்தல் வேண்டும். வேதங்கள் 'பிரஹ்மம்' என்பது அறிவு, அஃதாவது சித்து, என்று கூறி நிற்கவும், அதற்குப் பின்னர்த்தோன்றிய உபநிடதம் முதலியவை சத் ஆநந்தம் என்பவற்றை சித் என்பதற்கு முன்னும் பின்னும் சேர்த்துக்கூறியதற்குக்காரணம் சித் என்னும் பதம் கடவுளது பூரண இலக்கணங்களையும் விளக்கத்தக்கதாயில்லையென்று அவ்வுபநிடதம் முதலியவற்றின் ஆசிரியர்கள் கருதியதே என்று நாம் கொள்ளுதல் மிகையாகாது.

உபநிடத ஆகம உரையாசிரியர்களுள் பலர் சத் என்பதற்கு 'நித்தியம்' எனவும், சித் என்பதற்கு 'அறிவு' எனவும், ஆநந்தம் என்பதற்கு 'சுகம்' எனவும் பொருளுரைத்திருக்கின்றனர். இவர் உரைத்த பொருள்களே சரியான பொருள்களென்று இவருக்குப்பிற்பட்ட பலரும் கொண்டனர். ஆயினும் இவரில் ஒரு சிலர் "அகண்ட பரிபூரணம்" என்பதைச் "சச்சிதாநந்தம்" என்பதன் பின்னர்ச்சேர்த்துக்கடவுளை அகண்ட பரிபூரண சச்சிதாநந்தம் என்று கூறினர். சத், சித், ஆநந்தம் என்பன கடவுளது முழு இலக்கணத்தையும் விளக்கி நிற்கவில்லையென்று இவர் கருதியதே அவற்றின் பின்

னர் ‘அகண்ட பரிபூரணம்’ என்பதைச் சேர்த்ததற்குக்காரணமாயிருத்தல் வேண்டும்.

இவ்வான்றோர் “சச்சிதாநந்தம்” என்பதற்குக் கொண்ட பொருள் “நித்தியத்தன்மையும் சுகத்தன்மையும் பொருந்திய அறிவு” என்பதே. இப்பொருளைக்கொள்ளும் எவரும் “சச்சிதாநந்தம்” என்பது “சர்வவியாபகம்” என்னும் கடவுளிலக்கணத்தைக்கொண்டு நிற்கவில்லையென்று கருதாதிரார். இவ்விலக்கணக் குறைவை நிவர்த்திக்கவே “அகண்ட பரிபூரண” என்பது “சங்சிதாநந்தம்” என்பதற்குப் பின்னர்ச் சேர்க்கப்பட்டதென்றறிக. ஆன்றோரிற் சிலர் நித்ய வஸ்து (என்றுமுள்ளது) வியாபக வஸ்தாக (எங்குமுள்ளதாக) வேயிருக்குமென்று விவகரித்து “சச்சிதாநந்தம்” என்பது கடவுளது சர்வவியாபக இலக்கணத்தையும் விளக்கி நிற்கிறதென்று கூறுகின்றனர். ‘என்றுமுள்ளது’ ‘எங்குமுள்ளது’ என்று விவகரித்தல் பிழை, நித்தியத்திற்கும் வியாபகத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லையாகலான்.

உதாரணமாக வாயுவை எடுத்துக்கொள்வோம். அது நித்தியப்பொருளென்பது வெள்ளிடைமலை, அஃதில்லாமல் உலகம் இல்லையாகலான். அவ்வாறே வாயு சர்வ வியாபகப் பொருளன்றென்பதும் வெள்ளிடைமலை அது வைரம் முதலிய கடினப்பொருள்களுள் இல்லையாகலான். உலகப்பொருள்களிலிருந்து எடுத்துக் காட்டப்படும் உதாரணங்களெல்லாம் “உலகம் மித்தை” என்னும் கொள்கையாலும், சத் என்பதை நித்தியப் பொருளைக் குறிப்பதன்றி சர்வ வியாகப் பொருளைக் குறிக்கமாட்டாதென்பது “நித்தியமாயுள்ள பிரஹ்மம் சர்வ வியாபகப் பொருளாயுமிருக்கின்றது” என்னும் உண்மையாலும் மறுக்கப்பட்டுப் போனதாக் கூறுகின்றனராம் சிலர். மேற்சொல்லிய உதாரணமும் பத அர்த்தமும் மேற்சொல்லிய



கொள்கையாலும் உண்மையாலும் மறுக்கப்பட்டுப் போனதாகக் கருதுகின்ற முதுமக்களை நோக்கி இவ்வியாஸம் எழுதப்படவில்லையென்று அவர்கள் அறிவார்களாக.

நமது முன்னோர் தமது முன்னோர் கூறியவற்றைச் சரியென்றே கொள்ளும் சுபாவத்தைக் கொண்டிருந்தாரென்பதும், தமது முன்னோர் கூறியவை சரியானவையா பிசகானவையா என்று விசாரிக்கும் சுபாவத்தைக்கொண்டிருக்கவில்லையென்பதும் நம்மில் ஒரு சிலர் அறிந்தவையே. நமது முன்னோர் கூறியுள்ளவற்றில் ஒன்று சரியானதா பிசகானதா என்று நம்மில் ஒருவர் விசாரிக்கப்புகின் அவரைப் புரட்சிக்காரரென்றும், ஆன்றோரை நிந்திப்பவரென்றும், ஆன்றோரினும் அறிவுடையவரென்ற பெயரைக்கொள்ளக் கருதுபவரென்றும் பலவாறாக நிந்திக்கின்றனர் நம்மிற் பலர். அப்பலரையும் தாமே முற்றுமுணர்ந்தவரென்று தருக்கித்திரிகின்ற சிலரையும் கருதியதன்று, முழு நடுவு நிலைமையோடும் யுக்தியோடும் மெய்ப்பொருளை ஆராய்வாரையே கருதியது, இனி இங்குக்கூறப்படுவது.

சத், சித் என்னும் இரண்டு பதங்களுக்கும் நமது முன்னோர் உரைத்துள்ள பொருள்கள் எனக்கு உடன்பாடானவையே. ஆநந்தம் என்பதற்கு நமது முன்னோர் உரைத்துள்ள பொருளே எனக்கு உடன்பாடற்றது. சுகமும் அதற்கு மறுதலையாய துக்கமும்மனத்தின் அநுபவங்களேயென்பதுயாவருக்கும் நேரில் தெரிந்ததொன்று. இவ்வுண்மையை மறுக்க எவரேனும் முற்படுவாராயின் அவர் முன்னர் யான் மௌனம் சாதிப்பதன்றிச் செய்யத்தக்கது பிறிதொன்றில்லை. கடவுள் மனத்திற்கு அப்பாற்பட்ட பொருளென்பது அறிஞர் பலர்க்கும் ஒப்பமுடிந்த ஒரு முடிவு. அம்முடிவைக்கொண்டும் மனத்தின் ஓர் அநுபவமாகிய சுகத்தை மனத்தைக்கடந்த கடவுளது வடிவமாகவோ இலக்கணமாகவோ கூறுதல் இழுக்கினுள்ளெல்லாம் பெரிய இழுக்கு.

சில சுருதிகள் "பிரஹ்மம் சுகம்" எனக்கூறுகின்றனவேயெனின், வேறு சில சுருதிகள் "பிரஹ்மம் சுகமன்று" எனக்கூறுகின்றனவென்றறிக. சுருதிகள் ஒன்றற்கொன்று மாறாக ஒரு பொருளைக் கூறுமிடத்துச் சுருதிப்பிரமாணத்தை எடுத்துக்கூறாது விடுதலே முறைமை. ஒருகணமேனும் தான் தானாக நின்றவர் சுகமும் துக்கமுமற்ற நிலையே தனது நிலை, அஃதாவது ஆத்மநிலை, அஃதாவது பிரஹ்மநிலை என்று அறிவர். தான் தானாக நின்றறியாதார் அந்நிலையில் நிற்றற்குப்பயிலுவதே முறைமை. மற்றையோர் பால் அந்நிலையைப்பற்றி வினவப் புகுதல் முறைமையன்று, அம்மற்றையோர் தான் தானாக நின்றவரோ நில்லாதவரோ என்பதைப்பிறர் அறியமுடியாதாகலான். இனி நடுவு நிலைமையோடு நின்று ஆராயும் யாவர்க்கும் பொதுவாய் யுக்தி கொண்டே "பிரஹ்மம்சுகம்" என்பது சரியா, பிழையா, என்று விசாயுத்தல் வேண்டும். அவ்யுக்தியின் விசாரணையில் மனத்தின் ஓர் அநுபவமாகிய சுகத்தைக் கடவுளுக்கு இலக்கணமாகக் கூறுதல் இழுக்கென்று கண்டோம்.

ஆநந்தம் என்பதற்கு 'சுகம்' என்னும் பொருளைக்கூறுங் காலையில் "சச்சிதாநநதம்" என்பது கடவுளின் சர்வவியாபக இலக்கணத்தை விளக்கி நிற்கிறதென்று சொல்லமுடியாது, சத் என்பது நித்யத்துவத்தையே காட்டும்பதமாகலான். கடவுளை "சச்சிதாநந்தம்" என்று கூறிய ஆன்றோர் அத்தொடர் மொழிக்குப் பொருளுரைத்த ஆன்றோரினும் பெரியவரென்றே நாம் கொள்ளல் வேண்டும். அப்பெரியோர் 'கடவுளுக்கு இன்றியமையாத சர்வவியாபக இலக்கணத்தை விட்டிருக்கமாட்டாரென்று நாம் நினைத்து 'ஆநந்தம்' என்பதற்கு வேறு பொருளுண்டாவென்று விசாரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இங்கு விசாரிக்கப்படுவது ஆநந்தம்

(தொடரும்)

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

உ


# கமலாஸனி.

# KAMALASANI.

ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம் 3. } 1915ஸ்ரீ ஜூன்மீ { சஞ்சிகை 6


## காளமேகப்புலவர் சரிதம்.

(முன் தொடர்ச்சி)

"பொன்னனை நன்மகற்கா மன்னுகிரால் உரங்கீறி" என்பது:— பிரகலாதற்காக நரசிம்மகோலத்தோடு தூணிற்றோன்றிக் கூர்மை பொருந்திய நகங்களால் இரணியனை நெஞ்சம் பிளந்தென்றும், "வாளரக்கனைச் சுரர்க்காவடிக்கணையால் சிரங்கொண்டு" என்பது.— தேவர் துயர்தீர அரக்கனாகிய ராவணனை கொடிய ராமபாணத்தால் தலையைக்கண்டித்தென்றும்; "நூற்றுவரை ஐவருக்கா வளையால் அமரில் வீழ்த்தி" என்பது:— துரியோதனாதியரை பாண்டவர் பொருட்டு ரணகளத்தில் சங்கமுழங்கி வெற்றிபெறச் செய்தென்றும், "காவைக்காதனப் பிணைக்கா புள்ளால் முதலொடுங்கொண்டு" என்பது:— உருக்குமணி பிராட்டியாருக்காக தேவலோகத்துள்ள பாரிசாத விருக்ஷத்தை வேரோடுகளைந்துவர கருடனை ஏவினதென்றும், "பொருசிலையை சானகிக்கா வயங்குதோள் வலியால் இறுத்து" என்பது:— சீதாபிராட்டியாரை மாலையிட வலிமையுள்ள சிவதநுசை முறித்து தோள்வலி காட்டியென்றும், "கனைகடலை நடைவைக்காக வானரங்களாலும் அடைத்து" என்பது:—சிறையிருந்த ஜானகியை மீட்க கொ

ந்தமிழ்க்குக்கடலை மலைகளைக்கொண்டடைத்து குரங்குகளைக் கொண்டு வழியுண்டாக்கியென்றும் இயைத்துப் பொருள் கொள்க.

4.

## திருமாலிருஞ்சோலை.

திருமோகூரிலிருந்தபடி இத்தலம் வடக்கில் 7 மைலுக்கப்பாலுள்ளது. நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் முதலியோராலும் பாடப்பெற்றது. மாலலங்காரர் என்னும் திருநாமம் புனைந்து மலையத்துவஜ பாண்டியனுக்கும் தர்ம தேவதைக்கும் காக்ஷி தந்தருளிய தலம். பழமுதிர்சோலை, சோலைமலை என்னும் பெயர் பெற்றும் முருகக்கடவுள் படை வீடுகளில் ஒன்றாகவுமிருந்தது. தற்காலம் வைணவ ஆலமாய் கள்ளழகர் கோயிலென்று பெயர் வழங்குகிறது. இத்தலத்திற்குச் சென்ற போது திருமாலைப்பாடியது:—

“ மீனமுக மாமைமுக மேதினியெலாமிடந்த
ஏனமுகஞ் சிங்கமுக மென்னுமல்—ஞானப்
பழகரென்றுஞ் சோலைமலைப் பண்பரென்று மும்மை
அழகரென்றும் பேரிட்டார் யார் ” (தனிச்செய்யுட்
சிந்தாமணி)

இ-ள் மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம் என்னும் பல அவதாரப்பெயர்களிருந்தும் அவற்றில் ஒரு பெயருமிட்டு அழையாமல் ஞானப்பழகரென்றும், சோலைமலைப்பண்பரென்றும்அழகரென்னும் உமக்குப்பெயர் வைத்தவரார்? என் வினைமுகத்தால் உயர்வு நவிற்சி தோன்றக்கூறும் பாடலழகு பெரிதும் பாராட்டற்குரியதே.



II.

“ சதுரரங்கர் சங்கத்தழகர் செங்கைச் சங்கை
அதரமிசை வைத்திலரே யாயின்—முதலை
வருங்குளத்தின் முண்டகைக்கை வைப்பரன்றே யன்று
பொருங்களத்தி னூற்றுவர்முன் போய் ”

(இ-ள்) சதுரப்பாட்டையுடைய திருவரங்கர், சங்கத்துக்குத் தலைவராயிருந்த அழகர், செவந்த தமது கையிலுள்ள “பாஞ்சசந்யம்” என்னும் சங்கைத்தமது திருவதரத்தின் மீது வைத்து முழக்கலாயின், அக்காலத்தில் முதன்மைபெற்ற ஐவரும் யுத்தகளத்தில் துரியோதனாதியாகிய நூறு பேருக்கெதிரே சென்று தம் நெற்றியில் தாமரை மலர்போன்ற தமது கையை வைத்துக்கொண்டழுவாரல்லவா என்பதாம்.

சங்கை அதரமிசை வைத்ததாவது பாரத யுத்தத்தில் அருச்சுனனுக்குச் சாரதியாயிருந்து பாண்டவர்க்கு வெற்றியுண்டாகவும், துரியோதனாதியர் மனங்கலங்கவும், தமது பாஞ்சசந்யமென்னும் சங்கை வாயில் வைத்தூதியது.

இது அழகர் தமது பாஞ்சசந்யத்தை முழக்காவிடின் பாண்டவரைவரும் தோற்பர். என்னும் கருத்தமைத்துப் பாடியதாம்.

5.

## வேம்பத்தூர்.

இவர் இங்கிருந்தபடி வேம்பத்தூர் சென்றிருப்பதாகத் தெரிகிறது. இவ்வூர்த் தமிழ் வித்வான்களுக்குப் பெயர் போனது. இவ்வூர் பிராமணச்சிறுவர் கவிபாடுவதில் மெத்த சமர்த்தரென்பது தமிழ் நாவலர் சரிதையாற்றெரிகிறது.

"வேம்பத்தூரென்னும்" "சதுர்வேதமங்கல"மென்னும் இவ்வூர்க்குப்பெயர் வழங்கும். இது இவ்வூர் பெருமாள்கோயில் கருப்பக்கிரகச்சுவரின் வெளியேயுள்ள சிலா சாஸனத்தால் அறியலாகும். "அகநானூறு" (156) ம் செய்யுளுக்கும் "புறநானூறு" (317) ம் செய்யுளுக்கும் உரிய ஆசிரியரின் பெயராகிய "வேம்பற்றூர் குமாரனார்" என்பதிலுள்ள "வேம்பத்தூர்" இவ்வூராகவே கருதப்படுகின்றது. "நிம்பை" (நிம்பம்—வேம்பு) பிரமோத்தரகாண்டத்தின் பாயிரத்தில் "தேசான்" என்னும் செய்யுளில் "நிம்பையீசான மாமுனிவன்" என இப்பெயர் வந்திருத்தல் காண்க. பண்டைக்காலத்தில் இப்பெயர் வேம்பற்றூரென்றே வழங்கி வந்ததாகவும் தெரிகின்றது. மணலூரிலிருந்த "குலசேகரபாண்டிய"னால் பிராம்மணர்க்கு முன்பு தானஞ் செய்யப்பெற்றதாதலின் இவ்வூர் "குலசேகர சதுர்வேத மங்கலம்" எனவும் பெயர் பெறும்.

இத்தகைய சிறந்த தலத்துக்கு நமது புலவர் சென்றபோது இவ்வூராரில் ஒருவர் சமத்தியாகக்கொடுத்த "கண்டங்கத்தரிக் கோத்துக்காய்" என்பதை இறுதியடியாக அமைத்துக்கொடுத்தவர் எண்ணியவண்ணமே ஒரு செய்யுளும் ஆங்கிருந்த வேறு சிலர் விரும்பியவண்ணம் அருமையான சில சிலேடை வெண்பாக்களும் வருத்தமின்றிக் குறித்த காலத்துட் பாடி முடிக்க இவர்கள் நன்கு மதித்து இவ்வூருக்குத் தெற்கேயுள்ளதும், "காளமேகர்தாறு" என்று இக்காலத்தில் வழங்குப்படுவதுமாகிய 12 மா. அளவுள்ள நன்செய் நிலத்தை அவருக்கு முற்றூட்டாகக் கொடுத்தனரென்பதும், கர்ணபரம்பரைச்செய்திகள் அச்சிலேடை வெண்பாக்களும், மற்றும் பாடல்களும் இப்பொழுது காண்பதற்காயில்லை. வைத்திருப்போர் தயவு செய்யின் வந்தனத்துடனேற்று மறு பதிப்பில் வெளியிடப்படும்.

* ஸமஸ்யா வென்னும் வடமொழி இங்ஙனம் சிதைந்து வழங்குகின்றதென்பர்.



MADRAS

## 6.

## கயத்தாறு.

நமது புலவர் வேம்பத்தூரிலிருந்தபடி தெற்கிலுள்ள "கயத்தாற்" றிற்குச் சென்றிருப்பதாகத் தெரிகிறது. கயத்தாறென்பது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கெங்கைகொண்டானிலிருந்து நான்கு மைலிலிருக்கிறது. கெங்கைகொண்டான் (S. I. R. ஸ்டேஷன்) இவர் அவ்வூரிலிருந்தபொழுது பெருமாள் கருடவுற்சவங் கொண்டுவர அதைப் பார்த்திருக்கையில் அவ்வூரதிகாரிகள் சுவாமி சுமக்க இவரையும் ஆளாகக்கொண்டனர். இவர் அதை மறுக்க வஞ்சியோ, மற்றெக்காரணமோ நாமறியோம். அதிகநேரஞ்சுமந்து அலுத்ததால் மனம் நொந்து:—

"பாளைமணங் கமழுகின்ற கயிற்றாற்றுப் பெருமாளே பழி
கர்ராகேள், வேளையென்று லிவ்வேளை பதினாறு நாழிகைக்கு
மேலாயிற்றென், றோளைமுரித்ததுமன்றி நம்பியானையுங்கூடச்
சுமக்கச் செய்தாய், நாளை யினியார் சுமப்பா ரெந்நாளு முன்
கோயி ஞ்சந்தானே"

என வசை பாடி அக்கோயிலை அன்றுமுதல் அடைக்கச் செய்தனரென்ப. அவ்வாக்கை மெய்ப்பிக்க இன்றளவும் அக்கோயில் ஜீர்ணதசையிலிருப்பதாகவே தெரிகிறது.

(இ-ள்) தெங்கு கமுகு என்பவற்றின் பாளைகள் மணம் வீசுகின்ற கயிற்றாற்றிலுள்ள பெருமாளே! பழிகாரனே! கேட்பாயாக. காலமோவென்றால் இந்தக்காலம் பதினாறு நாழிகைப் பொழுதுக்கு மேற்பட்டது. என் தோள்களை முறித்ததுமல்லாமல் நம்பியானையும் சுமக்கும்படி பண்ணினாய். இனி நாளையதினம் யார் உன்னைச்சுமப்பவர். எக்காலமும் உன் கோயில் நாசத்தையேயடைந்திருக்கும் என்பதாம்.

## 7.

### தஞ்சை (தஞ்சாவூர்)

இனிப்பாண்டி நாட்டிலிருந்து தமது யாத்திரையைச் சோழ நாட்டிற்குச் செலுத்துகின்றனர். இதனிடையில் அவர் தரிசித்த தல விபரங்களும், மற்றும் விசேடங்களும், போற்றி வைக்காத்தோஷத்தால் அந்தகாரப்பட்டதெனலாம். "தஞ்சைத்தமிழக"த்திற் காணப்படும் தனிப்பாடலொன்றால் இவர் தஞ்சை வந்ததாகத்தெரிகிறது தஞ்சாவூரிலிருந்தபோது அவ்விடத்திருந்திருந்த பிரபுக்கள் இவரைச்சரியாக மதியாமை கண்டு மனம் வருந்திப்பாடிய பாடல் அடியில் வருமாறு:—

" பிரம்பைக் கரம்பற்றிப் பின்னிபந்தக் கூடை
நிரம்பக் கவியை நிரப்பிச்—சிறம்பற்றிக்
கற்றாரில் தஞ்சைக் கடைத்தெருவெ லாங்கூறி
விற்றாலும் போமோ விலைக்கு "

என்பதாம். அப்பொழுது தஞ்சைமா நகரமானது நமது தாய்ப்பாஷையாகிய தனித்தமிழைத் தள்ளியொதுக்கி அன்னிய பாஷையை அபிமானிக்கும் அரசனது ஆட்சியிலிருந்திருக்கவேண்டும் ஒருகால் விண்ணன்போன்ற அநீதி அரசர் காலமாயிருந்தாலும் இருக்கலாம். இப்பொழுதொன்றும் உணர்வதற்கில்லை.

இத்தஞ்சைமாநகரம் விண்ணன் அரசாட்சிக்காலத்திற்கு முந்தி உச்சஸ்தானத்திலிருந்து வந்ததென்பது நிச்சயம். இதனைப் பொய்யாமொழிப்புலவர் தஞ்சைக்குச் சென்றகாலத்து அங்ககரிற் கண்ட சிறப்பை:—

திறையின் முறை கொணர்ந்து தெவ்வேந்தரெல்லா
முறையு மூறைகழிகக வொண்ணு—அறைகழற்காற்



*போர்வேந்தர் போர்மாளப் போய்வா ளுறைகழித்த
தேர்வேந்தன் தஞ்சைத் தெரு.

எனக் கூறுவதால் அறிக.

இதனைச் சோழமண்டல சதகமுடையாரும் வலியுறுத்துகின்றனர். அச்சதகம் அடியில் வருமாறு,—

திறையின்முறையின் றுலகரியச் செப்பும்பொய்யா மொழி
தமிழிக்காத்
துறையினளகை ராஜேந்திர சோழன்வரிசைதொகுத்தளித்தே
அறையும்பெருமைச் சீநக்கரசூர் முதலாவேழூரும்
மறுவிலாது விளங்கியது வளஞ்சேர் சோழமண்டலமே

இதில் பொய்யா மொழியாரை அபிமானித்த சோழன் இராஜேந்திரன் என்று அச்சதகமுடையார் கூறுதலால், அவர்க்கு அவ்விஷயம் ஏதோ ஓர் ஆதாரத்தின் மேலேயே தெரிந்திருக்கவேண்டுமென்று கருதவிடமுண்டாகிறது. இவ்விராஜேந்திரப்பெயர் கி. பி. 1012-ல் பட்டம்பெற்ற, இராஜராஜன் புத்திரனுக்கு முந்திய சோழ அரசர் தரித்திருந்ததாகச் சாஸனங்களாற்றெரியவில்லை.

மேற்கண்ட சதகத்தில் " துறையினளகை ராஜேந்திர சோழன் " என வருவதால் இத்தஞ்சைக்கு " அளகாபுரி " யென்னும் ஒரு பெயரிருந்ததாகத் தெரிகிறது. இதனை விளக்கப்பாடலொன்றும் காண்கிறது அதுவருமாறு:—

" அளகையென்பது மிகுபொரு ளுடையதே யானும்
பளகறப்பகுத்தீதா மையினுவர் பரவை

---

* நம்பியான் என்பது-இப்பாட்டில் வருந்தஞ்சையை மாறநாட்டுத் தஞ்சாக்கூர் என்று கருதுவாருமுளர்.

> தளர்விலா நிதிபடைத்த வின்னகரம் சார்ந்தோர்க்கு
> வளநிலாவுறக் கொடுத்தலால் வயங்குபாற் புரி."

என்றபடி, கொடைத்தன்மையாலுஞ் சிறந்ததினால் உலகத்தில் யாவரும் இதனை அளகாபுரியென்று பெயரிட்டனர்; அதுமுதல் இது *"அளகாபுரி" யென்று பெயராயிற்று. இரண்டாங்கரிகாலன் காலம்முதலாக இத்தஞ்சாவூரில் கோட்டைத்தொடங்கி நான்கு தலைமுறைவரையில் கட்டிமுடித்து "நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ நிறைநெடு மங்கல நாணோ" என்று சொல்லும்படி அலங்கரித்துச் சிறந்த இந்நகரம் நமது காளமேகர்காலத்தில் அநீதியிற்சிறந்தும் தமிழபிமானத்தில் குறைந்தும் நின்ற அரசரது ஆட்சியில் இருந்து வந்ததுதான் விசனிக்கத்தக்கது.

திருமழபாடி வயித்தியநாதரைத் தரிசித்தபோது பாடியது.

> "வலியமழ பாடி வயித்திய நாதற்குத்
> தலைவலியா நீரேற்றந் தானுங்—குலைவலியாம்
> கையோடு சூலையாங் கால்வாத மாங்கண்மேல்
> ஐயோ வெழு ஞாயிறும்."

(இ-ள்.) பெருமை பொருந்திய திருமழபாடியில் திருக்கோவில் கொண்ட வைத்தியநாதரெனும் சிவபெருமானுக்கு கையில் தலையோடும், சிரசில் கங்கையும், கண்டத்தில் விஷமும், கையில் சூலமும், தூக்கிய பாதமும், நெற்றிக்கண்ணும் அமைந்த சிறப்புடையாரென்னும் கருத்தை ஒரு வெண்பாவிலமைத்துப்பாடிய இவர் புலமைத்திறம் வியத்தற்குறியதே.

---

* கோட்டைகட்டி அளகாபுரியென்று பெயரிட்டு வழங்கி வந்ததாகவும் பிற்பட்டு தஞ்சாவூரென்று பெயரிட்டதாகவும் தெரிகிறது! முதலது உவமையாகு பெயராக இட்டிருக்கலாம்; பின்னதற்குக் காரணம் புலப்படவில்லை.



## சோழநாட்டின் தமிழபிமானம்.

நமது தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷை பரங்கருணைத் தடங்கடலாகிய பரமசிவன் பாற்றோன்றி ஆசிரியர் அகத்திய முனிவரால் வளர்க்கப்பட்டதாகும். "தழற்புரை நிழற்கடவுள் தந்த தமிழ்தந்தான்" (ஆரணியகாண்டம், அகத்தியப் படலம்-சக)

தெய்வத்தோற்றமுடையதாய்த் தெய்வத்தன்மை பொருந்திய மகரிஷியினால் வளர்க்கப்பெற்ற நமது செந்தமிழ்ப்பாஷை "வண்புகழ்மூவர் தண்பொழில் வரைப்பில், நாற்பெய ரெல்லையகத்தவர் வழங்கும் யாப்பின் வழியது" என ஆசிரியர் தொல்காப்பியனார் பொருளதிகாரச் செய்யுளியலிற் கூறியபடி, சேர, சோழ பாண்டியர்களாற் செங்கோல் செலுத்தப்பெற்ற வடவேங்கடம் தென்குமரி யென்பவற்றின் இடையிலுள்ள நிலவுலகில் அம்மூவேந்தர்களின் உத்தமோத்தம ஔதாரியங்களாற் பெருந்தமிழ்ப் புலவர்களாற் பெரிதும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தேறி வந்தது.

மூவேந்தரும் இப்புவியைப் படைப்புக்காலந் தொடங்கியே ஆண்டு வந்ததாக ஆன்றோர் கூறுவர். "வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற்றலைப்பிரித லின்று" என்னுங் குறட்பாவிற்குப் பழங்குடி தொன்றுதொட்டு வந்த குடியெனவும், தொன்றுதொட்டு வருதல்-சேர சோழபாண்டியர் போலப் படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டு வருதல் எனவும் ஆசிரியர் பரிமேலழகர் வரைந்திருப்பது அறிஞர்களறிந்ததாம். இவ்வரசர் மூவரிற் "பிள்ளைக்குந் தொட்டிலுக்குந் தான் பாத்தியம், செட்டிக்கும் தொட்டிலுக்கும் பாத்தியமில்லை." என்று சமீபகாலத்திருந்த சிலேடை பேசுவதிற்

சாமர்த்திய சாலியாகிய ஒரு வித்வான் கூறினாற்போலப் பாண்டியரசர்களுக்குந் தமிழ்ச்சங்கங்களுக்குந்தான் வெகு பொருத்தமென்று தெரிகிறது. எப்படியெனில் முதல் மூன்று சங்கங்களையும் இப்பொழுதைய நான்காஞ் சங்கத்தினையும் உண்டாக்கிப் பரிபாலித்தவர்களும், பரிபாலிப்பவரும் பாண்டியரசர்களும் ஸ்ரீமான்-பாண்டித்துரைச்சாமி யுள்ளிட்டவர்களுமே யென்பது உலகறிந்த விஷயம்.

இனிச்சோழரும் சேரரும் சங்கம் நிறுவாவிடினும், பாண்டியரைப்போன்றே தமிழை வளர்த்து வந்திருக்கிறார்களென்பதொருதலையாம். இவர்களிற் சோழநாட்டின் தமிழபிமானத்தைப்பற்றியே கூறப்புகுந்தது.

எல்லை.

“ கடல் கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக்கரையாம் வடதிசையி
லேணாட்டுப்பண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.” (என்பது
கம்பர் கவி)

சோழ அரசர்கள் இந்நாட்டுடன் புற நாடுகளையுங் கைப்பற்றி இராஜராஜர்கள் சக்கரவர்த்திகள் எனப்பெரும் பெயரெய்தி மிக்க வல்லமையோடு செங்கோல் செலுத்தியதாகப் பல நூல்களால் வெளியாகின்றது.

செந்தமிழ் நிலம்.

திராவிட மகாபாஷிய கர்த்தாவாகிய ஆசிரியர் ஸ்ரீ சிவஞான யோகீஸ்வரர் காஞ்சிப்புராணத்து,

“ காசியி னின்றும் போந்து கம்பர் தாமருளப்பெற்று
மாசிலாக் கச்சி மூதூர் மன்னிவீற் றிருந்து பூமே



லாசில்லாத் தமிழ் பரப்பி யருந்தமிழ்க் குரவு பூண்ட
தேசிகன் மலைய வெற்பிற் குறுமுனி திருத்தாள் போற்றி.”

என்று செந்தமிழ் நிலம் தொண்டை நாட்டுக்கஞ்சி நகர் வரைப்பென்று உணர்த்துகிறார்கள்.

நன்னூல் விருத்தி உரைகாரர் செந்தமிழ் நிலம்.

“ சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சௌந்தர பாண்டிய னெனுந் தமிழ்நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி தோங்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப ” என்றுரைப்பர்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் செந்தமிழ் நிலம்.

“ வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் றெற்கும் கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம்” என்பர்.

இதனாற் செந்தமிழ் நிலம் சோழநாடு என்பதாயிற்று. அமிழ்தினுமினிய தமிழ்மொழியைச் செம்மையாக ஆராய்ந்தறியும் ஆன்றோர் நிறைந்த இடமே செந்தமிழ் நிலமாகும் என்பது அறிஞர் கொள்கையாம். இவ்வாறு சோழநாட்டிற் செந்தமிழ்ப் பரிபாலனஞ் செய்துள்ளவர்கள் பல்லாயிரவர்களென்பதே இங்குக் கூறத்துணிந்தது.

“ மன்ற வாணன் மலர்திரு வருளாற்
றென்றமிழ் மகிமை சிவணிய செய்த
வடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின் மாப் பெருமை பரவுறு சோழனுஞ்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கு
மையறு சோழ வளநா டென்ப.”

என்ற ஆன்றோரது இச்செய்யுளால் சோழநாட்டில் ஆதியில் ஒரு சங்கமிருந்ததாக வெளியாகிறது. அஃது இன்ன இடத்தில் இன்ன சோழனால் நிறுவப்பெற்று இத்தனை காலமிருந்ததென்று விளங்கவில்லை. ஆனாலும் திருவாரூரில் ஒரு சங்க மிருந்ததாகக்கேள்வி.

சோழ அரசரிற் பலர் "இருவே றுலகத் தியற்கை திருவேறு, தெள்ளியராதலும் வேறு" என்னும் பொய்யில் புலவர் திருவாக்குப் பொய்யாகும் வண்ணம் திருவுடையராகவும் தெள்ளியராகவு மிருந்திருப்பது எட்டுத்தொகை, பத்துப்பாட்டுமுதலிய சங்கநூல்களால் அறியப்பெறும். சோழன் செங்கணான் என்பவன் சேரமான் கணைக்காலிரும்பொறையுடன் போர்புரிந்து அவனைப் பிடித்துக்கொண்டு போய்ச்சிறை செய்திருந்த காலத்திற் பொய்கையாற் என்னும் புலவர் பெருமான் களவழி நாற்பது பாடி மீட்டதும், இன்னுஞ்சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் மலயமான் மக்களை யானைக்கு இட்டகாலத்திற் கோவூர் கிழார் என்னும் வித்துவான் பாடல் பாடிப்பிழைக்கச்செய்ததும் இவ்வரசர்கள் தமிழில் வைத்த பேரன்பைக்காட்டும்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் பெரும்புலவர் கரிகாற்பெருவளவன் என்னும் சோழன்மேல் பட்டினப்பாலையென்னும் பிரபந்தம் பாட அவ்வரசன் அப்புலவருக்குப் பதினாறுநூறாயிரம் பொன் பரிசளித்துப்பிரபந்தத்தைக்கொண்டான் என்பர். இவற்றைத் திரிபுவன சக்கரவர்த்தி யெனப் பட்டந்தரித்து வேங்கைநாடு, சோழநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு பாண்டிநாடு என்ற ஐந்து மண்டலங்களுக்கும் அரசனாக இருந்த குலோத்துங்க சோழன்மேல் சயங்கொண்டாரென்னும் புலவர் பாடிய கலிங்கத்துப் பரணியில்,



" தளவழிக்குநகை மேல்விழி பிலத்தில் வழிபோய்
தனிநடந்துரகர் தங்கள்பதி கொண்டவனும்
களவழிக்கவிதை பொய்கையுரை செய்ய வுதியன்
கால்வழித்தளையை வெட்டியர சிட்டவனும்" என்றும்

" தத்து நீர்வரால் குருமி வென்றதுந
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

என்று கூறியிருப்பன கவனிக்கத்தக்கன.

இன்னும் உறையூரிலிருந் தரசியற்றிய கரிகாற்சோழன் அறுபத்துநான்கு கலைகளையுங் கற்றிருந்தானென்றும், இராஜசேகரனென்னும் பாண்டியன் 63 கலைகள் கற்றிருந்தானென்றும், சோழதேசத்துப் புலவனொருவனாற் றெரிந்து பின்னர் அவ்வொன்றையுந் தெரிந்துகொண்டானென்றும் திருவிளையாடற் புராணங்கூறும்.

கம்பர் சோழநாட்டுத் திருவழுந்தூரி லவதரித்துச் சோழவரசராலுந் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளலாலும் அன்பும் ஆதரவும் பெற்றுக் கவிச்சக்கரவர்த்தி யென்றுலகு கொண்டாட "இராமாயணம்" பாடி "இன்று இவ்வுலகங்கள் இராமன் பாக்குந் தொல்புகழமுதினைப்பருகுகின்றனவே" யென்று அவர் கூறியபடி உபகரித்திருப்பது உலகமறிந்த விஷயம்.

" பெற்று வளர்த்தும் வித்தைதனைப்
பேணிக் கொடுத்தும் பெயர்கொடுத்தும்
பற்ற வரும்பா லமுதளித்தும்
பகைத்த வறுமைப் பயந்தீர்த்தும்

கற்ற மூதனூர் திருவழுந்தூர்க்
கம்பன் றனையக்கருணை செய்தோர்
மற்றும் புலவோரையும் வாழ
வைத்தார் சோழ மண்டலமே ''

" குணங்கொள் சடையன் புதுச்சேரிக்
கொடையன் சேதி ராயன்முதற்
கணங்கொள் பெரியோர் பலர் கூடிக்
கம்ப நாடன் களிகூர
விணங்கும் பரிசி லீந்துபுவி
யேழும் புகழே ரெழுபதெனும்
மணங்கொள் பெருங்காப் பியப்பனுவல்
வகித்தார் சோழமண்டலமே ''

என்று கூறியதனாற் கம்பர் ஏரெழுபதென்னும் பிரபந்தம் பாடிச் சடையப்பவள்ளலுஞ் சேதிராயனும் ஏனைய பெரியோர்களும் நிறைந்த சபையில் அறங்கேற்றியது விளக்கமாம்.

இன்னும் சிங்களதேசத்தரசனாகிய பராராஜ சிங்கப்பெருமான் என்பவன் சுழநாடு பஞ்சத்தால் வருந்திய காலத்தில் சடைய வள்ளலைப்பாட்டாற் றுதிக்க இவர் ஆயிரம் (1000) கப்பலில் நெல் நிறைத்தனுப்பியவன் நாடு முழுதையும் பாதுகாத்ததாகவுந் தெரிகிறது.

தவிரவும், ஒட்டக்கூத்தர் சடையவள்ளலின் தந்தையாகிய சங்கரன் என்பவருக்கு உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தாரெனவும், காங்கேயன் என்னும் உபகாரியொருவன் அவருக்குக் கல்வி பயில்வித்து நல்லறிஞராக்கிக் கவிராட்சதன் எனவும் கௌடப்புலவனெனவும் பெயர் கொடுத்துச் சிறப்பித்தானெனவும், அவர் அந்நன்றி பாராட்டிக் காங்கேயன்



மேல் நாலாயிரக்கோவை பாடினதாகவுந் தெரிகின்றது அன்றியும், ஒட்டக்கூத்தர் குலோத்துங்கசோழன் ஆசிரியராகவும் இராஜாங்க நிர்வாகராகவுமிருந்ததும், உத்தரகாண்டம் பாடியதும் பிறவும் யாவரும் நன்கறிந்த விஷயங்களாம்.

இவை நிற்க, பிறக்க முத்திதரும் திவ்ய ஸ்தலமாகிய திருவாரூரிலரசியற்றிய ராஜராஜ அபயகுலசேகர சோழமகாராஜாவாற் சமயகுரவர் மூவர் அருளிச்செய்த திராவிட வேதத்திரு முறைகள் வெளியேற்றப்பெற்றுத் தமிழுலகம் இன்றும் என்றும் பிறவிப்பெருநோய் தீர்க்கும். பேரமுதாகக்கொண்டு வாழ்வது எல்லோருக்கும் அனுபவசித்தமாம். தற்காலம் இம் மூவர் முதலிகளின் தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் இருநூற்றெழுபத்துநான்காம். இந்த இருநூற்று எழுபத்துநான்கிற் சோழநாட்டிற் பாடல்பெற்ற ஸ்தலங்கள் (190) நூற்றுத் தொண்ணூறாம்.

விஷ்ணு மகா ஸ்தலங்கள் நூற்றெட்டில் நாற்பது திவ்ய தேசங்கள் சோணாட்டில், ஆழ்வார்களால் மங்களாசாஸனம் பெற்றுள்ளன. சமயாசாரியர் மூவரைத்தவிர அறுபத்துமும்மை நாயன்மார்களில் ஒருவராகிய திருமூலநாயனார் திருவாவடுதுறையில் அரசவிருக்ஷத்தின்கீழ் மூவாயிரம் வருஷம் சிவயோகத்தமர்ந்து வருஷம் ஒவ்வொரு திருப்பாடலாக மூவாயிரந் திருப்பாடல்களாற் சைவாகமங்களி னுணர்த்தப்பெற்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் உணர்த்துகின்ற செந்தமிழ் நூலைத் தந்தருளியிருப்பதும், காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி முதலிய நூல்களை யருளியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாம். அம்மட்டோ! இம்மை மறுமை வீடு மூன்றும் பயக்கும் பெரிய புராணத்தை அநபாய சோழமகாராஜாவால் ஸ்ரீ சேக்கிழார்

திருவாய் மலர்ந்தருள அது சைவ சிரோபூஷணமாக விளங்கி வருவதும் அறிஞர்களறிந்ததே.

காவேரிப்பூம்பட்டினத்தில் குபேரனார் திருவவதாரமாகத் திருவெண்காடனாரென்னும் பட்டினத்தடிகள் திருவவதாரமாகிப் பெருமான் சந்நிதியில் அன்பு பெருக உரைதடுமாறி யுரோமஞ்சிலிப்பக் கரமலர் குவித்துக் கண்ணீர் ததும்ப ஆனந்த பரவசராய் மனங்குழைந்து குழைந்துருகம் பாடிய பாடற்றிருமுறைகளைப் பதினோராந்திருமுறையிற் படித்துப் படித்துப் பரமானந்தங்கொள்ள நின்று நிலவி வருவதை அறியாதார் யார்? சந்தானசாரிய பீடமாக விளங்குந் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனம், தருமபுரவாதினம், சொக்கபுரவாதினம் முதலிய ஆதீனாதிபதிகளாலும், அவ்வாதீனங்களின் சிஷ்ய கோடிகளாலுந்தோன்றிய பைந்தமிழ்ப் பனுவல்களும், உரைகளும் பலவாம். அவற்றில் திருவாவடுதுரையாதினம் மாதவச் சிவஞானயோகிகள் செய்திருக்கும் பேருபகாரம் பாருள்ளளவும் பாராட்டத்தக்கதேயாம்.

"பேனமார்ந் தொழுகும் பெண்ணை சூழ்வெண்ணைப் பெருநகர் வாழும்மெய் கண்ட, ஞானமார் குரவன் நவின்றிடு நூற்கு நன்மைசேர் பாடியமியற்றி, யூனமார் பிறவிக் கடலுழல் வோர்கட் குறுபுணை யாகவே யளித்த, ஞானயோ கிகடர் திருவடிக் கமல நாஞ்சிரத் தணிந்துவாழ்த் தெடுப்பாம்"

இது திருப்பனந்தாளாதீன கர்த்தவாயிருந்த காசிவாசி ஸ்ரீ குமாரசுவாமிச் சுவாமிகள் ஸ்ரீ சிவஞான யோகிகள் மேற் செய்த தோத்திரமாம். இவ்வாறே ஸ்ரீ சிவஞானயோகிகள் மேல் நமது சங்கத்தின் அக்கிராசனாதிபதியும் அருங்கலை விநோதருமாகியிருந்த ஸ்ரீமான் பாண்டித் துரைச்சாமி அவர்கள் இரட்டை மணிமாலை முதலிய பாமாலை அணிந்து பாராட்டியிருப்பது பாராட்டத்தக்கதே.



இன்னும் ஸ்ரீ மெய்கண்ட சந்ததியில் வந்து சீர்காழியிலிருந்த சிற்றம்பலநாடிகள் என்னும் சிவானுபூதிச்செல்வரால் துகளறுபோதம், சதமணிக்கோவை, ஞானசாகர வெண்பா; முதலிய சைவ சித்தாந்த நூல்கள் வெளியேறி இருப்பனவும் பிறவும் கவனிக்கத்தக்கன.

திருவாரூர் ஸ்ரீ வைத்தியநாத நாவலரால் இலக்கண விளக்கம். வெளிப்பட்டு குட்டித் தொல்காப்பியம் எனப்புகழ் பெற்று விளங்குவதும் ஸ்ரீ தாயுமான சுவாமிகளால் மதுரம் பழுத்துத்தேன்றுளிக்கும் வளச்செம்பாகைக் கவிகளாய்த் தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் அமைந்து கர்த்தாவர்கு பெயராய் ஜெகஜோதியாய் விளங்குவதும் எல்லாரும் அறிந்ததாம். திரிசிரபுரத்தில்,

"தேனாட்சி செயும் கொன்றைச் செஞ்சடையான் றிருவடிக்கே சிந்தையாவும் தானாட்சி செயக்கொடுத்த தகைமையினான் றமிழ்த்தெய்வமாகி வந்த மீனாட்சிசுந்தரப்பேர் நாவலன்."

அவர்களால் எத்தனையோ சிறு பிரபந்தங்களும் வெளியாகிக்கற்பவர் நெஞ்சைக் காமுறச்செய்து வருவனவற்றை யறியாதார் யார்? அவர்கள் மாணாக்கராகிய

"கலைநாதன் குலநாதன் கற்றவழி நிற்பதற்குக் காட்டாய்க் காட்டும், நிலைநாதன் குணநாதன் நேயமிகு கலையமுதை நேசித்தூட்டும், நலநாதன் நயவசன நன்னாதன் நாவலர் கடங்கெட்கெல்லாந், தலைநாதன் தவநாதன் சாமிநாதப் பெயர்கொள் தமிழ்வலோனே"

என்றபடி ஸ்ரீமத் மகா மகோபாத்தியாயர் சாமிநாதய்யரவர்கள் "முன்னவர்கள் புதைத்துவைத்த முழுப்பொருளை யெடுத்தீயு முறைமைபோலத், தன்னிகரில் முன்னூலைத் தமிழுலகங்களிதுரும்பத்தந்து" வருவனவற்றையுமறியாதார்யார்?

ஆகையால் சோழ அரசர்களுஞ் சோழ நாட்டுப் பிரபுக்களுஞ் செந்தமிழ்ப்புலவர் பாலன்பும் அருமையும் பாராட்டிச் செந்தமிழணங்கைச் சுந்தரமாக வளர்த்து வந்திருக்கிறார்களெனத் தெரிய வருகிறது. அத்தகையவன்பு மருமையுந்தளராமல் வளருமேயானால் நமது தமிழணங்கிற்கு எவ்வளவோ அதிகச் சிறப்பாயிருக்கும்.

ஜி. சதாசிவம் பிள்ளை.

---

## ஒட்டக்கூத்தர்

### புலவர் சிரங்களைச்சேதித்தது உண்மையா?

நமது பழைய புலவர்களின் அரிய குணானுபவங்களை நாம் ஆராய்வோமாயின் அவர்கள் பெருந்தன்மை, ஜீவகாருண்யம், தேசாபிமானம், நடுவுநிலைமை, நற்புத்தி போதகம், இனிய வசனம், பரிந்துருகும் தயாளம், விரிந்த சிந்தனை, மேலான செல்வாக்கு, வறுமையிற் செம்மை, முதலிய நற்செயல்கள் நன்கு காணலாம். பிற்காலங்களில் தோன்றிய வித்வான்கள் பலர் ஏதோ சில காரணங்களால் மேற்காட்டிய சில குணஞ்செயல்களில் சிறிது தவறியிருக்கக்கூடுமாயினும் கொடுமைக்குணமுடைய கொலைத்தொழிலைக் கொண்டிருக்கமாட்டார்களென்பது மறுக்கக்கூடாத விஷயம். இன்சொல்லும் இனிய குணமே படைத்துத் தமிழரசர் பெருஞ்சபையில் மேம்பட வாழ்ந்திருந்தார் புலவரெனச்சரிதம் பல கூறுவதிருக்கத் தீயகுணம் படைத்திருந்தாரெனக் கதை கற்பித்து வழங்குகின்றது தகுதியோ? புலவர்கள் தன்மைகளை விளக்கவந்த "புறநானூறு" "அகநானூறு" "சிறுபாணாற்றுப்படை" முதலிய நூல்களெல்லாம் அவர்கள் அரிய குண சீலங்களையே புகழ்ந்து கூறியிருக்கின்றன. உதாரணத்திற்கும் இதன்கீழ் ஒன்று தருகின்றோம்:-



"வள்ளலாயுள்ளவர்களை நினைத்துப்பழுத்த மரங்களை நோக்கிச்செல்லும் பறவைபோலச்சென்று கடத்தற்கரிய வழிகளையெல்லாம் தூரமென்று கருதாமற் கடந்து திருந்தாத நாவால் தம்மாற் கூறியபடி பாடி அங்கே பெற்ற சம்மானத்தால் மகிழ்ந்து தம் சுற்றத்தை உண்பித்தும், தாமும் பொருளைப்பாதுகாவாமல் உண்டும், உண் மகிழ்ச்சியுடன் பிறர்க்குக் கொடுத்தும் தம்மை ரக்ஷிக்குஞ் செல்வரால் பெருஞ்சிறப்புக்கு ஏதுவாகவிருந்தும் இப்பரிசிலான் வாழும் வாழ்க்கை பிறர்க்குக் கொடுமை செய்தலை அறிந்ததோ? இல்லை. இவ்வாழ்க்கை தம்மோடு எதிர்த்தோரைக் கல்வியால்வென்று அதனால் செருக்குதலுடையதேயன்றி உங்களைப்போன்ற அரசருடைய பெருமையையுமுடைத்து" என்பது. (புறநானூறு 47-வது)

இதனால் புலவர்கள் கல்வி மதமடைந்து செருக்குற்றுப் பெருமையில் இறுமாந்திருந்தனரென விளங்குவதன்றி எவரும் வெறுத்தற்குரிய கொலையாதிய கொடுஞ்செயற்களைக்கொண்டிருந்ததாகக் காண்பதாயில்லை. இங்ஙனமிருக்க, ஒட்டக்கூத்தர் மட்டும் அமிழ்தினுமினிய அருந்தமிழை இனிமையாய்க்கற்று அதன் பயனை நன்குணர்ந்து களித்தவரெனக்காண்பதாயிருக்க அரச சபையில் தமது கல்வித்திறங்காட்டிப் பரிசு பெற வருகிற பெரும்புலவர்களைக் குடுமியுடன் குடுமி முடியிட்டு இரங்கி நிற்பத் தலைவெட்டும் கொடிய வழக்கத்தை மேற்கொண்டிருந்தாரெனக்கூறியும் விநோதரசமஞ்சரி முதலிய நூல்களில் அச்சிட்டு வழங்கியும், புலவரை வசைமொழிந்தும் மகிழ்ந்ததின் காரணந்தான் இன்னதென அறியக்கூடவில்லை.

தமது பெருவாழ்வால் அகம்பாவங்கொண்டு ஒருகால் கூத்தர் கொலைத்தொழிலைக் கொண்டிருந்தாரென வைத்துக் கொண்டாலும் இவரை ஆதரிக்கத்தோன்றிய அரசன் உடம்படுவானோவென்பது யோசிக்கவேண்டிய விஷயம். தன்னுயி

ராங்கு மன்னுயிரைக்காக்கவேண்டிய மன்னன் தர்ம சாஸ்திர விதியுங்கடந்து ஜீவகாருண்யத்தையும் மறந்து ஒரு புலவர்க்காக மிருகத்தன்மையுடைய கொலைத்தொழிலைச்செய்யும்படி விட்டிருப்பானோவென்பதும் கவனிக்கவேண்டுவதே? ஒரு சமயம் தன் சமஸ்தானப்புலவரும், தனக்காசிரியரும் முக்கிய மந்திரியுமாகவிருந்த கூத்தர் வாக்கை மறுத்தற்கஞ்சித் தமிழை வளம்படுத்தக்காரணமாயுள்ள செயலுக்குப் பாதகமேதேனு அரசன் சம்மதித்தானென்னில், சாதுக்களும், பிரபுக்களும், மற்றுள்ள நகர மாந்தர்களும் அவன் பேதைமைக்குணத்திற்கு இடித்துரைத்து அறிவு புகட்டாது வாளா விருப்பரோ? தமிழை வளர்க்கத்தோன்றிய செயல் குளிக்கப்போய்ச்சேறுபூசிக் கொண்ட கதையாகவல்லவோ முடியும். கல்வியை அபிவிருத்திசெய்ய அனந்தமார்க்கங்களிருக்க கொலைத்தொழிலை முன்வைத்துப்படித்த வகுப்பாரை வதை செய்தனரென்றால் தமிழ் அபிவிருத்தியடைவதெங்ஙனம்? அன்றே தமிழ் மடந்தையின் வாழ்வு ஒருவாறு முடிந்திருக்குமல்லவா? அல்லாமல் அக்காலத்தில் அடிக்கடி வேற்றரசர் படையெடுப்பும் இராஜாங்க நிலைமையும் ஒருவாறு ஸ்திரமற்றதாயிருக்க இக்கொலைத்தொழிலைக்கொண்டிருந்த புலவரும், அவரை ஆதரிக்கத்தோன்றிய அரசனுடைய கதியும் யாதாயிருக்குமென்றெண்ணுவது? இவ்வசம்பாவிதத்தை நாகரீக மிகுந்த இக்கால மனோதருமமிகுந்தவர் ஒப்புவரோ? அந்தோ! இதனை ஆராயாது புத்தங்களில் பதிப்பித்து வெளியாக்கிய அறிவாளரின் செயலுக்கு மெத்த வருந்துகிறோம்.

மற்றொன்றையும் கவனிப்போம். சொற்பிழை, பொருட்குற்றம், எதுகைப்பிறழ்வு, சந்திதோஷம், இவைகட்கு மரணதண்டனையானால், மற்றுள்ள குற்றங்கட்கு யாது தண்டனை விதிப்பதோ? சுருதியுக்தி யனுபவங்கட்குப் பொருந்தாததொரு உத்திரவை, கூத்தர் கட்டளையிடக் கவனியாமல் அரசனும் அதனையேற்று அநுஷ்டானத்திற்கொண்டு வருவானேன்?



அங்ஙனமாயின், அவன் நாடு கடும்புலி வாழும் காட்டினும் கொடியதாமன்றோ? இச்செயலின் உண்மையை எம்மட்டும் நம்புவது?

சோழர்களின் அரசாட்சியின் பெருமையை வியந்தோதுகின்ற "கோவை" "உலா" "அந்தாதி" "மடல்" "பரணி" "மெய்க்கீர்த்தி" முதலிய பிரபந்தங்களெல்லாம் அவன் சிறந்த புகழையும், விரிந்த கீர்த்தியையும், சிறப்பித்துக் கூறுகின்றனவே. செப்பேடு சிலா சாஸனங்களிலும், ஒரு வரியாவது அவனை இகழ்ந்து கூறுவதாகக் காணப்படவில்லையே. அங்ஙனமிருக்க இவ்வகோரச்செயல் நடந்ததாகக் கற்பித்துக்கூறிய நூல்களின் கொள்கையை என்னென்று கொள்வது?

ஆனால், முன்னாளில் எத்தனையோ புலவர்கள் இத்தமிழ் நாட்டில் சிறந்து புகழ்பெற்று வாழ்ந்திருக்க அவர்கள் மீதெல்லாம் இவ்வசையேறாது "பிள்ளைப்பாண்டியன்" "வில்லிபுத்தூரர்" "ஒட்டக்கூத்தர்" ஆகிய இம்மூவர் மீதும் சில பழிகள் சுமந்திருப்பது யாது காரணமென ஓர் கேள்வி உதிக்கும்? பிள்ளைப்பாண்டியனும், வில்லிபுத்தூரரும், ஒட்டக்கூத்தரும் சமகாலத்தவரன்று. வெவ்வேறு காலத்தில் வாழ்ந்திருந்தவர். ஆனால், இம்மூவரில் ஒருவர் புலமைமிக்க அரசரும், மற்றிருவர் சிறந்த புகழ், நிறைந்த கல்வி, மேம்பட்ட பெருமை பெற்றவரும் ஆவர். வில்லிபுத்தூரரைவிட செல்வத்தில் எத்தனையோ பங்கு சிறந்தவர் கூத்தர். அரசனே வணங்கும் தாளுடையானென்னின் வேறு கூறுவானேன்? இத்தகைய செல்வாக்குப்பெற்ற புலவர் சிறந்த குணசீலராய் நடந்து கொள்வதைத்தவிர்த்து அகங்காரமென்னும் பாழ்ப்பேயின் வசப்பட்டு எவரையும் மதித்தலின்றிக் கருவித்து அரச பேட்டிக்கு வருவோர்களையும், புலவர்களையும், கவனியாமலும் சன்மானம் செய்விக்காமலும், அசட்டை பாராட்டியதால் பலரும் மனம் நொந்து பல்வாறு இகழவும் தூற்றவும் தொடங்கி முடி

வில் கொடுஞ்செயல் புரியும் கொலைகாரனென்றும் வதந்தியைப் பரவச்செய்திருக்கவேண்டும். இதனைப்பலர்வாய் கேட்டாரும், உண்மையென நம்பி அவரைத்தூஷிக்கும் பாடல்களைக் கற்பனை வாயிலாகப்புனைந்து உலகும் நம்புமாறு ஓதி வைத்தனர் எனலாம். பிற்காலத்து வந்தவரும் இச்சம்பவத்தின் உண்மையைச்சிறிதும் கவனியாமல் முன்னோர் முதுமொழி தேவவாக்கெனக்கொண்டு அவரும் அதனை ஸ்திரமென நம்பிக்காலாந்திரத்தில் வாழைபடி வாழையாய் அப்பிரஸ்தாபப்பலப்பட்டு அச்சியந்திரம் நிலவத்தொடங்கிய இக்காலத்தில் நாகரீக மும்நுண்ணறிவும் மிகுந்தவரும் ஆராய்ந்துபாராமல் அச்சுவாகனத்தில் ஏற்றி வெளியிடத்தொடங்கினர். இதனால்முன்னினும் பலமாக இப்பிரஸ்தாபம் வேரூன்றத் தலைப்பட்டதெனக்கூறலாம். நகங்கொண்டு களையவேண்டியது கோடரி கொண்டு வெட்டுவதற்கானதால் ஜனங்கள் லகுவில் நம்புவது அசாத்தியமாய் முடிந்தது. "குட்டுதற்கோ" என்னும் தொடங்குஞ் செய்யுளில் காணப்படும் கருத்தைக் கூத்தராவது பிள்ளைப்பாண்டியனாவது, வில்லிபுத்தூராராவது நடத்தியதாக யாதோர் சரிதமும் இதுவரையும் காணப்படவில்லை. இங்ஙனமிருக்கப் பெரியார் சரிதங்களைப் பிழைப்படக்கூறி உலகினரை மயங்கச்செய்வதென்னே? இதனால் நேர்ந்த பிரயோஜனம் அறிவின்மையும், ஆராய்ச்சிக்குறைவுந் தாமெனன அறிஞர் பழிப்பதொன்றேயாம்.

முடிவாக எவரும் தம் வாழ்நாளில் கர்வம் என்னும் பாறையில் தாக்காது நல்வழிப்பட்டாலன்றி உலகோரால் போற்றப்படுவது அரிதேயாகும். பல கற்றும் உலக நடையினைப் பின்பற்றி நடவாதான் செயல் பேதைமையின்பாற் பட்டதாகுமென்று கூறி இவ்விஷயத்தை முடித்தாம்.

சி. கு. நாராயணசாமி முதலியார்.

---



## செல்வத்தி னிலக்கணம்.

செல்வம் என்ற பதம் பல அருத்தங்களைத்தந்து எவற்றினுக்கும் பொதுவாக வழங்குவதாயினும் அது பொருளுக்கே சிறப்புப்பெயராயிருந்து வருகிறதென்பதியாவரும் அறிந்ததாம். உலகத்திலொருவனடையவேண்டிய எப்பெரும் பொருள்களையும் லேசாக வெய்துதற்கு இப்பொருட் செல்வமே முதற்காரணமாயிருக்கின்றது. இதன் துணைப்பற்றியே உலக வியவ்காரங்கள் யாவும் முற்றுற நடைபெற்று வருகின்றன. இதன் துணையாருக்கு மட்டுப்பட்டிருக்கின்றதோ அவரைத் தாய் தந்தை பெண்டிர் பிள்ளை பந்து மித்திராதி எந்த ஜனங்களும் வெறுப்பார்களேயன்றி யொருநாளும் விரும்பி யுறவு கொண்டாடமாட்டார்கள். இதற்காகவே நம் முன்னோர்கள் 'திரைகடலோடியும் திரவியந்தேடு' என்றும், 'பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும்' பொருளல்லதில்லை பொருள் என்றும், இவ்வாறு பொருள் தேடுவதில் ஊக்கமும் அதன் அருமையும் தோன்ற வெடுத்துரைத்திருக்கின்றார்கள்.

ஆகவே பெறுதற்கரிய சரீரத்தைப்பெற்ற ஒருவன் அதற்கியைந்தபடி அடைதற் றகுதியாகிய தருமார்த்த காமமோக்ஷமென்ற நான்கு புருஷார்த்தங்களையும் எய்தல்வேண்டும். அந்நான்கினுள் இறுதியாயுள்ள மோக்ஷமென்பதைக் கடைசிகாலத்திலே நல்வினைக் கீடாயடைவதுபற்றியே அதனை நான்காவதாக அமைக்கப்பட்டது மென்க, அந்நல்வினையும் பொருளான் எய்தலாகுமெனப் புலப்படுத்தவே மோக்ஷ நீங்கலாக மற்றைய மூன்றன் மத்தியில் அர்த்தம் (பொருள்) நாயகமாக அமைத்திருப்பதாயறியவேண்டும். இப்பொருளின்சகாயத்தை ஒருவன் மிகவா யடையப்பெறுவானேயாயின் அவனை ஏனைய அறமும் இன்பமும் தாமே வந்து சேருமென்பது குறிக்கவே இவகப்பொருளா யமைந்திருக்கின்றதறிக, இன்னுந்தருமஞ்செய்யாதவனுக்குமோக்ஷமில்லையென்பது நூற்றுணிபாம். அத்தருமத்திற்குச் சாதகமாயிருப்பது பொருளாதலால் பொருள்

வீட்டுக்குத் துணையாயிருக்கின்றதென்று சொல்லாமலேயமையும். இதனால் ஒருவன் மோக்ஷம்பெறவேண்டுமாயின் செல்வம் அவசியம் வேண்டற்பாலதாகின்றது. இச்செல்வமும் புண்ணியஞ் செய்தவர்களுக்கன்றோ கிடைக்கும் பாபிகளுக்கெங்ஙனம் கிடைக்குமெனில் உண்மையே. புண்ணியம் இரண்டு வகையான் ஈட்டப்படும். (அதாவது) முதலாவது மனோவாக்குக் காயங்களானும், 2-வது பொருளானும், இப்பொருளாற்றேடும்போதும் மேலே கூறிய மனோவாக்குக்காயங்களும் ஒத்தேயிருத்தல்வேண்டும். இதில் முதலாவது கூறிய மனோவாக்குக் காயங்களான் பூர்வம் தேடிய அறத்தின் பெருக்கம் எவ்வளவுள்ளதோ அவ்வளவுக்குத் தக்க பொருளுடையவனாகின்றான் இப்போது நம் கண்ணுக்குக் காணப்படும் ஒவ்வொரு எளியவனும் மேலே கூறிய முதலாவது தருமத்தைச்செய்யாது யாவற்று சீவன்களுக்கும் மூன்று காரணங்களாலும் செய்த தீமையின் பயனையென்று நிச்சயமாய்க் கொள்ளல்வேண்டும்.

ஆனால் பொருள் எவ்வகையினாலாவது சம்பாதித்துவிட வேண்டியதுதானேயென்றுக் கருதிப் பிறரை வஞ்சித்தும் கொலைகொள்ளைகளாதி புரிந்தும், களவாடியும், பொய்சாக்ஷிக் கூறியும், மானத்தை விற்றும், இச்சகம் பாராட்டியும், பெரிய மனிதரென்று நம்பிக்கொடுத்து இதை வைத்திருங்களென்று சொன்னவர்கள் பின்னால் வந்து அதைக்கேட்டால் ஏது என்ன சங்கதி? எப்போது கொடுத்தீர்? நன்றாயிருக்கின்றதேயென்று தனது வாசாலத்தால் மோசித்தும், தன் நாணயத்தின் பெருமையை நாலுபேருக்கும் நம்பும்படியாக நடித்துக் காட்டிக்கொண்டுவந்து சமயம் வந்தபோது பெருந்தொகைகள் கடன் வாங்கிக்கொண்டுபோய்ப் பெண்டாட்டிபிள்ளை சுற்றத்தாரிவர்கள்பேரில் பூஸ்திதிகளாகவும் நகைகளாகவும் வைத்துவிட்டுக் கடன்காரன் வந்து கேட்டால் அவனுக்கு ருசிப்பான பதில் சிலநாள்வரைக்கும் சொல்லிவந்து பின்னர் அந்தியத்தில் நான் என்ன செய்வேன் வியாபாரத்தில் பெரு



நஷ்டம் வந்துவிட்டது கையிலொரு காசுமில்லை என்பேரில் ஏதேனும் சொத்துக்களிருந்தால் நீதியிற்றொடர்ந்து பெற்றுக் கொள்ளுங்களென்று வெட்கம் சிறிதுமின்றிச்சொல்லி ஏமாற்றியும், ஒருவனிடத்தில் குமஸ்தாவாயிருந்து பொய்க்கணக்கெழுதி எஜமானனை மோசஞ்செய்தும் ஏழைகள் வயிறெறியும்படியாக மாறுபாடுகள் பல செய்தும், இன்னுமிதுபோன்ற உலகத்திற்கொவ்வாத பல தீயதான காரியங்களைச் செய்தும், சம்பாதிப்பதென்றல்ல. அங்ஙனம் தேடும் பொருள்கள் தற்சமயம் பிரகாசித்தாலும், தேடியவனுக்குப் பின்னொரு சமயத்தில் அது மீளாத்துயரையும் பழிப்பும் பாபமும் தருமேயன்றி நன்மையொரு சிறிதும் அளிக்காதென்பது சத்தியமாம். குற்றமில்லாத வழியாற்றேடிய பொருளொன்றே தருமமும் இன்பமும் தந்து இறுதிக்கண் வீட்டையு மளிப்பிக்குமென்பது திண்ணம்

பொதுவாகப் பொருளையும் பொதுமாதரையும் சமமாகச் சொல்லலாம். பொருளின் சுபாவம் ஒருவனிடத்திலேயே எக்காலத்துமிருக்குந் தன்மையுடையதல்ல. இதனை நம்பி ஒரு காரியத்தை நாளைக்குப்பார்த்துச் செய்யலாமே நம்மிடத்தில் தான் பொருளிருக்கின்றதே அது எங்கே நம்மையறியாது ஓடிப்போகப்போகின்றது என்றெண்ணக்கூடாது. அது உடையவன் பார்த்திருக்கும்போதே பிறரனுபவிக்கச் சென்றுவிடும். அது முன்னே நம்மை வைத்துப் பாதுகாத்து வந்தவனச்சுதே அவனை நாமிப்போது வருத்துகின்றோமேயென்ற இரக்கமான வெண்ணங் கொஞ்சமுமின்றிப் பிறனிடத்திற் சென்றுப்பலரும் பார்த்து அவமதிப்பாய்த் துன்பத்தை விளைவிக்கும். அவ்வளவு நன்றி கெட்டதாகும். அதனிடத்திற் பழகுவது நஞ்சினிடத்திற் பழகுவது போலாம். நம்மிடத்தில் பொருள் வந்துவிட்டால் அந்த நேரத்திலேயே அது வேறொருவனிடத்தில் செல்லுவதற்குத் தயாராகவேயிருக்கும். அது விஷயத்தில் எவ்வளவோ ஜாக்கிரதை இருக்கவேண்டும்.

அங்ஙனஞ் சாக்கிரதையில்லாமல் எந்த சமயத்தில் ஏமாறுகின்றானோ அந்த சமயத்தில் கட்டாயம் பழியும் பாபமும் கொண்டுவந்து சேர்த்துக் கலங்கவைத்தகன்றுவிடும்.

இத்தகைய ஆபத்திற்குரிய செயல்களிதனிடத்திற் பிரத்தியக்ஷத்தில் இருத்தலைக்கண்டே மனோபலத்தா லிருவகைப் பற்றுமற்ற பெரியோர்களெல்லா மிப்பொருட் செல்வத்தைத் துர்ச்சமா யெண்ணித் தூறிப்போட்டு வேறுவழியில் அவ்வின்பங்களையடைய முயன்று போயிருக்கின்றார்கள். இப்பெரியோர்களால் வெறுப்பது பற்றியே இப்பொருளுக்கு 'வெறுக்கை' யென்றோர் பேருமிருக்கின்றது. அங்ஙனம் பொருளை வெறுத்துச் செல்லுவோர் கோடிக்கொருவரேயாகும். எஞ்சிய மனச்சரிப்புடைய ஏனைய மாந்தரனைவரும் என் செய்வார்கள் ஒருவரிடத்தும் க்ஷணமுந் தரித்து நிலைக்காத இவ்வனித்திய பொருட் செல்வத்தின் உதவியாலேயே எவ்வகைப்பட்ட பொருளையும் பெறவேண்டியிருக்கிறது. இதனாலேயே இதனிடத்தில் அவாமிகுதியுந் தோன்றலாயிற்று. எந்தப் பொருள் ஒருவனிடத்தில் நீடித்திருக்குமோ அதனிடத்தில் பற்றுதல் அவனுக்குக் குறைந்தேயிருக்கும். சீக்கிரத்தில் உடையவனை நீங்கும் பொருளிடத்தில் மோகமும் நோக்கமும் அதிகமாகவேதானிருக்கும். இது உலகத்தியல்பாகும். இது போலவே சிற்றின்பத்தைப் பெரிதாய் நினைத்து அடிக்கடி ஆசிக்கச்செய்வதின் காரணம் அவ்வின்பம் நிலைக்காமல் அந்த நேரத்திலேயே யொழியுந்தன்மையால் அதனை மீண்டும் அடைய அவாத்தோன்றுகின்றது. இங்ஙனமே செல்வமுமென்றறிக. இதன்தொழில் நோக்கியே யாரிடத்துந் தங்காது செல்லுவோமென்பதாய்ப் பிரிதொரு பொருள்தோன்ற இதற்குப்பெயர் செல்வமென்றமைந்ததுபோலும்; தரித்திரத்திற்கு மிங்ஙனமே கொள்க.

இப்பெற்றிச் செல்வமெய்திய காலத்தை வீணாக்காமல் என்னிடத்தில் வந்தது என்னதுதானென்று செறுக்கி யெண்



ணுவதற்கொப்ப அதனைப் பிறருக் குதவும்படிச்செய்யும் சுதந்தரம் பெற்றவனே அப்பொருள் தன்னதென்று நினைக்கக்கடவன். அங்ஙனம் பிறருக்குதவாது சேமிக்கும் அப்பொருள் மற்றொருவன் தன்னதென்றே யெண்ணக்கிடந் தழியுமென்பதை யூகித்துக்காலத்தோடு கிடைத்த பொருளைக்கொண்டு பல ஜீவன்களுக்கும் ஆதாரமாகிய அழியாப்புண்ணியம் புரிந்து அதனாற் புகழும் இன்பமும் அனுபவித்து முடிவில் வீட்டையும் அடைந்து சுகம்பெறவேண்டியது ஒவ்வொரு மனிதனுக்கும் பொறுத்த கடமையாகும்.

சுகாபி விருத்தினி.

## சச்சிதா நந்தம்.

(முன் தொடர்ச்சி)

என்னும் பதத்தின் அர்த்தமேயன்றி பிரஹ்மத்தின் சர்வவியாபக இலக்கணமன்றென்பதையும் சத்தாயுள்ள பிரஹ்மம் சர்வவியாபகமாயிருத்தலால் சத் என்னும் பதம் சர்வவியாபகப் பொருளையும் குறித்து நிற்கின்றதென்றல் வெண்மையின் காரியமேயன்றி வேறன்றென்றும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

“சச்சிதாநந்தம்” என்பது ஆன்றோருரைப்படி கடவுளது சர்வவியாபக இலக்கணத்தைத்தாங்கி நிற்கவில்லையே யென்று வினவுவார்க்குச் சமாதானமாக 'ஆநந்தம்' என்பது (ஆ-எங்கும், நந்தம்-சுகம்) எங்கும் நிறைந்த சுகம் எனப் பொருள்படுமென்று சென்ற சில மாதங்களாகச் சிலர் கூறத்தலைப்பட்டிருக்கிறதாகக்கேள்வி, 'நந்தம்' என்பதற்கு 'சுகம்' என்னும் பொருளில்லையென்றும், 'சுகித்தல்' என்னும் பொ

ருளே உண்டென்றும், அப்பொருளைக்கொள்ளுங்கால் "கடவுள் "சுகிக்கின்றவர்," என்று ஒப்புக்கொள்ள நேரிடுமென்றும், அவ்வாறு ஒப்புக்கொள்ளின் "கடவுள் செயலற்றவர்" என்னும் கோட்பாட்டிற்குக் கேடுநேரிடுமென்றும் அவர் அறிவாராக. அன்றியும் சித் என்பதற்கு முன்னுள்ள நந்தம் எங்கும் நிறைந்ததென்றால் அதற்குப்பின் எங்கும் நிறையாததென்று கூற நேரிடுமென்றும் அவர் அறியக்கடவர்.

இனி 'ஆநந்தம்' என்பதற்கு யான் கூறுகிற பொருள் 'எங்கும் நிறைந்திருத்தல்' என்பதாம். ஆ என்பது எங்கும் என்று பொருள்படுமென்று மேலே கூறப்பட்டுள்ளது. நந்தம் என்பது நந் என்னும் தாதுவினின்று வந்தது. நந் என்னும் தாதுவுக்கு இரண்டு பொருள்களுண்டு. ஒன்று 'சந்தோஷ' என்பது மற்றொன்று 'நிறைந்திருக்க' என்பது. முந்திய பொருளைக்கொள்ளாது பிந்திய பொருளைக்கொள்ளின் 'ஆநந்தம்' என்பது எங்கும் நிறைந்திருத்தல்' அஃதாவது 'சர்வ வியாபகம்' என்று பொருள்படும். அப்போது 'சச்சிதாநந்தம்' என்பது 'நித்தியமாகவும் சர்வவியாபகமாகவும் நிற்கின்ற அறிவு' என்னும் பொருளைத்தரும். அப்பொருளைக் கொள்ளுங்காலையில் மனத்தின் பல அநுபவங்களில் ஒன்றாகிய சுகத்தைக்கடவுளுக்கு இலக்கணமாகக்கூறி இழுக்குப்படுதலும், கடவுளுக்கு இன்றியமையாத சர்வவியாபக இலக்கணத்தை "சச்சிதாநந்தம்" என்பது கொண்டு நிற்கவில்லையென்னும் கூற்றுக்குட்பட்டு இடர்ப்படுதலும் நீங்கி ஒழியும்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை.



## சமயம்.

(முன் தொடர்ச்சி)

காலம். இதைத் தத்வமறிந்த விவேகிகள் வித்யா தத்வத்திற் சேர்ப்பர். கழிகாலத்தெல்லையும் நிகழ் காலத்துப்பலத்தையும் எதிர் காலத்துப் புதுமையும் பொருத்துவிக்கும் இத்தத்வம் என அதற்கு இலக்கணங்கூறுவர். இலக்கண நூலுடையாரும் "இறப்பு நிகழ் வெதிர் வெனக்காலம மூன்றே" எனச் சொல்லுவர்.

"ஆட்டுவிப் பாரொருவனது சத்தியால் ஆன்மாக்கள் சுக துக்கங்களையநுபவிக்கும் தமது கர்ம வினைக்கு ஈடாய்" என்பது உண்மையாயினும் இக்காலம் அதனுடன் சேருவதும் உலகத்தில் பிரத்யட்சம். விவேகியொருவனை கேட்பினும் அல்லது மூடனொருவனை வினவினும் யாவரும் "காலபலம் என்பது ஒன்று உண்டு அதனால்தான் உலகம் நடக்கிறது" எனக் கூறுகின்றனர். "இதற்கு உதாரணம் சூரிய சந்திரர்கள் இராகு கேதுக்களால் பீடிக்கப்படுதலே" என மெய்ப்பிப்பர். இக்காலம் நவக்ரகங்கள் மூலமாய் ஜீவர்களை உபாதிக்கிறது. இதற்கு ஜோஸ்யக்காரரொருவரைக்கேட்டால் அவர் உடனே இன்ன இன்ன கிரகங்கள் இந்த ஜாதகனுக்கு இன்ன இன்ன மடத்திலும் இன்ன இன்ன பார்வையிலும் இருப்பதால் இன்ன இன்ன பலன் என்று கூறி சில சமயங்களில் ஒரு சாந்தி செய்யும்படி சொல்லுவர்.

இது நிற்க Fine is flight of moments என்று சொல்லுகிறபடி காலம் அநேக விநாடிகள் கூடியுண்டாகிறது. இக்காலம் தனது ஒரே தொழிலாகிய செல்லுதற்றொழிலையே செய்து கொண்டிருக்கிறது. ஆகவே சென்றகாலம் சென்றதேயாகிறது. திரும்ப அக்காலத்தைக் கொண்டுவருதல் முடியாது.

மேலும் காலமானது ஏதேனுமொரு விகாரத்தைச்செய்து கொண்டேதான் இருக்கிறது. ஒரு பொருள் என்றும் ஒரே

தன்மையாயிராததே இதற்குச்சான்றுமென்க எப்படியெனின் நாம் இளமையில் இருந்தவிதம் முதுமையிலிருக்க இயலுகிறதா? நரை திரை மூப்பு பிணி என்பன வந்து விடுகிறதே! புல்லறிவாளர் எப்பொழுதும் அப்படித்தங்கள் புன்மைத்தனத்தையே காட்டிக்கொண்டிருக்கிறார்களா? நற்குணத்திலொருவன் என்றும் இருப்பதை நாம் பார்த்திருக்கிறோமா? கோபமூண்டவன் பிறகு சாந்தனாகிறதைப் பார்த்திருக்கிறோம். உடம்பு வலிமையென்றும் இருக்கிறதா? இதையெல்லாம் உற்றுநோக்கும்போது காலம் என்பது மேற்கூறியவாறு ஏதேனுமொரு விகாரத்தைச்செய்துகொண்டிருக்கிறது. அதை தெள்ளிதின் விளங்குமன்றே! அது பற்றியே Fine is Change என்று மேனாட்டுப்பாடைகளும் இக்கருத்தையொத்துக்கொள்ளுகின்றன. மேற்கூறிய சக்தி இதனிடை இருக்கின்றமையினன்றோ மரஞ்செடி கொடிகளும் தாந்தாம் துளிர்க்குங்காலத்தில் துளிர்த்துப் புஷ்பிக்கும் காலத்தில் புஷ்பித்துக் காய்க்குங் காலத்தில் காய்த்துப் பழுக்குங்காலத்தில் பழுக்கின்றன.

இனி நாம் இக்காலத்தினதருமையைப் பற்றித்தெரிந்து கொள்ளவேண்டும். இதற்கு என் அருமையையறிந்தவர்களிடம் பழகுதலே முக்யசாதனம் எனலாம். அப்படி இதைத் தெரிந்தவர்களாயுள்ளவர்கள் வக்கீல்களும் வியாபாரிகளும் மாணாக்கர்களுமே. இவர்களுள் முற்கூறிய இருவரும் சற்றுக்காலந் தாழ்த்துத் தம் வேலையைச்செய்ய முற்பட்டால் பெரியதொரு பொருள் நஷ்டத்திற்கு ஆளாவர். இறுதியிற்கூறிய மாணாக்கர்களோ (அதிலும் இக்காலத்துக்கலா சாலைப் பிரசங்கங்களைக்கவனிக்கும்) தமது அறிவைப்பெருக்கும் பாடங்களையே இழப்பர்.

நாம் இன்று செய்யக்கூடியதொரு காரியத்தை நாளையாகட்டும் என்போமேல் அக்காரியம் என்றும் நிறைவேறுகிறதே இல்லை. மறுநாளும் அந்தச்சோம்பலே நம்மைக்குடிகொண்டு



மறுபடியும் நாளையென்று சொல்லத்தூண்டுமேயன்றி செய்யச் சொல்வதில்லை.

Procrastination is the thief of time.

" நெருந லுளனொருவனின்றில்லை யென்னும்
பெருமையுடைத் திவ்வுலகு "

என்னும் தமிழ் வேதத்தைச்சற்று ஆராய்ந்து பார்த்தால் சற்றுக்காலந் தாழ்த்து எக்கருமத்தையுஞ் செய்ய மனம் வருமா?

என்றும் பழமொழி பொய்யோ?

கபிலர்

" நாளை நாளை யென்பீராகில்
எப்போதாயினுங் கூற்றுவன் வருவான் "

என்று கூறியுள்ளார்.

மேலும் காலம் என்பதுதான் என்ன? மேற்சொன்ன கூற்றுவனன்றோ? காலம் என்பது " மகாவிறுதியஃறிணைப் பெயர்முன்னகர மோடுறழா நடப்பனவுளவே "

என்றபடி 'காலன்' என இறுதிப்போல பெற்று இயமன் என்னும் பொருளிலும் வரக்கூடுமல்லவா?

ஆகவே எக்கருமத்தையும் எண்ணித்துணிந்து காலத்தில் செய்துவிடவேண்டும்.

(தொடரும்)

ஜி. இராஜகோபாலன்.

## சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்.

(இது பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்கத்தின் ஐந்தாம்
வருடநிறைவுக்கொண்டாட்ட காலமாகிய 7-3-15ல் சென்னைப்
பிரஸிடென்ஸிக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மஹாமஹோபா
த்தியாய ப்ருஹ்ம ஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் அக்கிராசனத்
திற் கூடிய வித்துவான்களும் பிரபுக்களும் நிறைந்த மஹா
சங்கத்தில் மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச்
செட்டியாரவர்களால் உபந்யாஸஞ் செய்யப்பெற்றது)

அறிவிற்சிறந்து விளங்கு மாட்சிமிக்க அக்கிராசனாதிபதியவர்களே!

இவ்வவைக்கண் விளங்கும் அன்புமிக்க ஆன்றோர்களே!

பெரியோர்களாகிய நுங்கள் அன்புரிமைசான்ற ஆணை
யைக்கடக்க வஞ்சியொல்லும் வகையான் மேற்கொள்ள விரும்
பியும், திருவருட்டுணைகொண்டும் இப்பொழுது செயக்கடவ
தாகிய என் கடமையை நிறைவேற்றத் துணிகின்றேன்.

யான் மேற்கொண்ட "சிவபிரான் கருணையுஞ் சீவர்கள்
கடமையும்", என்னும் இவ்விஷயத்தை விரித்துக் கூறற்கு இட
ந்தருந் தேவாரத் திருப்பாசுரம் வருமாறு:—

நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே.

இப்பாசுரத்தின் அருளொலியும் பொருளுமே இவ்விஷயத்தைத
விளக்கற் குதவியாயின வைன்பதை யிறுதியிற் கூறப்படுந்
தொகை யுரைக்கண்முடித்துக் காட்டுவேன்

(தொடரும்)

மு. கதிரேசன்.

# KAMALASANI

OFFICE OF THE REGISTRAR ... 13 SEP 1915 MADRAS

**Advertiser.**

## கையொப்ப கனவான்கட்கு விண்ணப்பம்.

அன்புடைச் சந்தாநேயர்கட்கு அறிவிப்பது யாதெனில்
நாம் சென்ற மூன்று மாத காலங்களாய்ப் பிணிவாய்ப்பட்டிருந்
தமையாலும், பத்திரிகையை நடத்தத்தக்க வேறு யாருமடக்
கினியாராய் இல்லையானதாலும், நமது கமலாஸனி காலந்
தாழ்ந்து வெளிவர நேர்ந்தது. அதுபற்றி அன்பர்கள் மன்
னிப்பார்களாக. இனியவ்வாறின்றி, மாதா மாதம் வெளிவரும்
என்பதையுமறியவும். நமது பத்திரிகை யாரம்பித்து ஆறு
மாதத்துக்கு மேலாகியும் அனேகர், சந்தாவைச் செலுத்தா
திருக்கின்றனர். அவர்களுக்கு அடுத்த பத்திரிகையை வி. பி.
யிலனுப்பப்படும், தயவுசெய்து பெற்றுக்கொள்வார்களாக.

## சகோதரப் பத்திராதிபர்களுக்கு விக்ஞாபனம்.

சென்றஜனவரி மாதமுதல் நமது பத்திரிகையை வரிசை
யாகப்பெற்றுவரும் நமது சகோதரர்களில் அனேகர் தங்கள்
பத்திரிகையை யனுப்பாதிருக்கிறார்கள். சிலர் எப்போதாவ
தனுப்புகிறார்கள். இனியேனு மவ்வாறின்றிச் சரியாய் அனுப்பி
வரும்படி பிரார்த்திக்கின்றோம்.

## நன்கொடைகள்.

திருக்கைலாய பரம்பரை திருப்பனந்தாளாதீன கர்த்த
ரவர்களாய் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத்தம்
பிரான் ஸ்வாமியவர்கள், நமது பத்திரிகையையபிமானித்து
ரூ. 25 இருபத்தியஞ்சும், தேவிகோட்டை சிவநேயபூதிச்செல்வ
ரான, வைசிய சிவானந்த சபைத்தலைவர் ஸ்ரீமான் பி. சு. அ. ரு.
அருணாசலம் செட்டியாரவர்கள் ரூ. 10. பத்துமனுப்பியுப
கரித்திருக்கிறார்கள். இவர்களது பாஷாபிமானமும் மதாபி
மானமும் பாராட்டற்பாலதே. ஏனையோரும் இவ்விஷயத்தில்
முந்துவார்களாக.

பத்திராதிபர்.

முறையில் உதித்து ஆயிரம் வருஷம் தேவேந்திரனாக இருந்த நகுஷனது 11-வது தலைமுறையில் உதித்த ஆக்ரீட மகாராஜனது புத்திரர்கள் பாண்டியன், கேரளன், சேரன், சோழன் என நால்வர் எனவும், அவர்களால் ஆளப்பெற்ற தேசங்கள் பாண்டியதேசம், கேரளதேசம், சேரதேசம், சோழதேசம், என்னும் பெயர்களையடைந்தனவெனவும், யயாதி சாபத்தால் அவர்கள் அரசுரிமையிழந்தார்களெனவும், கூறப்பெற்றுள்ளன.

அச்சோழனை இங்கிலீஷ் சரித்திர நூலாசிரியராகிய டாக்டர் பர்னல் பேலியாக்ரபியிலும், மிஸ்டர் வெங்காசாமி ராவ் தஞ்சை ஜில்லா மான்யூலிலும், கள்வர் குலத்தவரெனக் கூறுகின்றனர்.

தஞ்சையையாண்ட பெரும்பிடுகு முத்தரையன் என்னும் சோழனை, தஞ்சைக்கோன், வல்லக்கோன், கள்வர் கள்வனெனச்செந்தலை சிலா சாஸனத்தில் சிறப்பித்துள்ளது.

செம்பிய முத்தரசு என்றும், வல்லத்தரசு என்றும், பட்டம் வகித்த கள்வர் குலமக்கள் பலர் இன்றும் இந்நாட்டுப்பக்கத்தில் வசிக்கின்றனர்.

சோணாட்டின் தலைநகராகிய தஞ்சையைச்சார்ந்து தற்காலத்தும் குறுநில மன்னராயிருக்கும் பல ஜமீன்தார்களும், பிரபல மிராசுதார்கள் பலரும் இக்குடிப்பிறப்பினரே. இவர்கள் பூர்வீக அரசர்களாலும் ஆங்கிலேய அரசர்களாலும் நன்கு மதிக்கப்பட்டு பல பட்டங்கள் பெற்றிருக்கின்றனர்.

மருதக்கிழவனாகிய இந்திரனை, புனல் நாடனாகிய சோழன் விழாவெடுத்து வழிபட்டமை, சிலப்பதிகாரத்தும் மணிமேகலையிலுமுள்ள இந்திர விழாவெடுத்த காதைகளானும், மகாபாரதத்தானும் அறியக்கிடக்கின்றது.

இந்திரனுக்குக் கரியோன் என்னும் பெயர் உண்மையா



னும், அந்நிறம்பற்றியே சோழன்மாலென அழைக்கப்படுதலானும், ஆரியர் இவர்களைக் கரியவரென ரிக்வேத மந்திரத்தில் கூறலானும், "கள்வனென் கிளவி கரியோனென்ப" எனத் திவாகரம் கூறலானும், கருநிறமுடைமை புலனாம்.

இனி, கள்வர் என்னும் பெயரின் இலக்கணத்தை விசாரிப்பாம். கள் என்னும் பகுதியடியாகக்கள்ளல், கட்டல், கள்ளம், களவு, முதலிய பல தொழிற் பெயர் பிறக்கும். கள் என்னும் முதனிலைக்குக் களைதலும், வெளவுதலும், வஞ்சனையும், என்றற்றொடக்கத்தன பொருளாம். கட்டான், கட்டாள், என்பன முதலிய கள் என்னும் முதனிலையடியாகப்பிறந்த இறந்தகால வினைகள். கட்கின்றான், கட்கின்றாள், என்பனவாதிய நிகழ்கால வினைகள். கள்வான், கட்பான், கள்வாள், கட்டாள், என்றற்றொடக்கத்தன எதிர்கால வினைகள். இவற்றுள் இறந்தகால நிகழ்கால வினைகளுக்கு மேற்சொல்லிய பல பொருள்களும் செய்யுள்களில் வழங்கி வருகின்றன. எதிர் காலத்தில் பகரவிடை நிலைபெற்ற வினைகட்குக் களைதற் பொருளொன்றே செய்யுள் வழக்கு. வகரவிடை நிலை பெற்ற வினைகள் பெரும்பான்மை களைதற் பொருளுஞ்சிறுபான்மை பிற பொருளுந்தரும். இவ்வேதுக்களைக்கொண்டு கள்வர் என்னும் ஜாதிப்பெயரின் பொருளை யாராயப்படும். சங்க நூல்களில் "கள்வர் கோமான் புல்லி" என்றற்றொடக்கத்தன வழங்குதலாலும், அப்புல்லி முதலிய பல கள்வர்குல மக்கள் அரசராயும், சிற்றரசராயும், படைத்தலைவராயும், இருந்தமையாலும் கள்வர் குலத்தவதரித்த திருமங்கையாழ்வார் சோழனுக்குப் பகுதி செலுத்திவந்த குறுநிலமன்னரென்பது பிரசித்தமாதலாலும், திருவேங்கடத்தையாண்ட முனித் தொண்டமாற்குத் திருவேங்கடமுடையான் சங்காழி நல்கியதாயும், அத்தொண்டைமான் திருமகளாராகிய அலர்மேலுமங்கையாரைப் பாணிக்கிரகணஞ் செய்ததாயும், திருமலை மகாத்மியம் கூறலானும், அக்குலத்தார் இன்றும் புதுக்கோட்டை அரசராயிருக்கின்றமையாலும், குறுநில மன்னரெனக் கூறப்பெற்ற நாயன்மாருள்

சிலரும், திருக்கண்ணபுரம் ஆழ்வார் திருநகரி சிலா சாஸனங்களில் குறிக்கப்பெற்ற முனையதரையன், அப்பாண்டான் மழவராயன், இவர்களும் கள்வர் குலத்தவரேயாதலானும், கள்வரென்னும் சொல் களைதற்பொருளே கொடுத்து பகைவரைக் களைவோரெனக் காரணப்பெயராதல் தேற்றமே.

சிறுபான்மை கள்முதனிலை பிறபொருளுந்தருதல் பற்றிக்களவு செய்வோரெனப் பொருள்கோடல் கூடாதோவென்றால், அத்தொழில் செய்வோரை மநுநீதி தவறா மாக்ஷிமையுடைய அரசர் தண்டித்துத் தன்னாடு துறக்கச்செய்தலேயன்றி, அக்களவினோரை படையாளராகவும் படைத்தலைவராகவும் குறுநில மன்னராகவும் அமைத்துக்கோடல் உலகியற்கு மாறுகமுடிதலானும், கள்வனென்பது நண்டைக்குறிக்குமிடத்துக் களைதல் காரணமாகவே வந்ததென ஐங்குறுநூறு கள்வன்பத்தால் அறியக்கிடத்தலானும், கள்வர் என்னுஞ்சாதிப்பெயர் களவுப்பொருள் பயவாமையும், பகைவரைக்களைதல் என்னும் பொருளையே தருதலையுங் கண்டுகொள்க.

இதுபோலவே மறவரென்னுஞ் சாதிப்பெயருள், மறம் என்னும் முதனிலைக்குப்பாவம் வீரம் என்னுமிரு பொருளுமுளவாயினும், சாதிப்பெயரைக் குறிக்குமிடத்துப் பாவிகள் எனப்பொருள் பயவாமல், வீரரெனவே பொருள் பயத்தலை நூல் வழக்கானும் உய்த்துணர்ந்து கொள்ளத்தக்கது.

இதுவன்றிக் கொல்லரென்னுஞ்சாதிப்பெயருள் கொல் என்னும் முதனிலைக்குக் கொற்றொழிலும் கொலைத்தொழிலுமென இருபொருளுமுளவெனினும், கொலையாளரென யாண்டுங்கொள்ளாது கம்மியரெனவேகொள்ளும் உலகியலும் நோக்குக.

இன்னும், பொல்லார் என்னுஞ்சொல் தீயோரெனவும் கருவியால் துளைக்கப்படாதோரெனவும், பொருள் பயக்குமாயினும் “பொல்லாரிணைமலர் நல்லார்புனைவரே” என்றவிடத்து



மலைவில்லாரருளிய என்ற அடையால் பொல்லாப்பிள்ளையாரையுணர்த்தலின் அவ்விடத்துத் தீமைப்பொருள் ஒருவாற்றானுமேலாமைபோலக் கள்வர் என்ற சாதிப்பெயர்க்கண்ணும் அக்குலத்தோர் பலர் பகைவரைக் களைதல்மேற்கொண்டிருக்குஞ் சார்பு பற்றியும், பண்டைக்காலந்தொட்டே அரசர் தண்டனை பெறாமல் அவராலாதரிக்கப்பட்டு அச்சாதியார் தமிழ்நாடெங்கும் பரந்து வாழ்ந்து வருதலானும், அவருட் பலர் முடி மன்னராகவும், குறுநிலமன்னராகவும், படைத்தலைவராகவும், படையாளராகவுமிருந்தமை நூல்வழக்கால் அறியப்படுதலானும், இன்னும் சிலர் குறுநிலமன்னராயிருத்தலானும், திருடற்பொருள் ஏலாமை கண்டுகொள்க.

அச்சாதியாருட் சிலர் அரசர் தண்டனைபெறுதல் கூடுமாயினும், அது சாதிபற்றி நிகழாது கொலை களவு முதலாய தீய தொழில்பற்றி மற்றைச்சாதியாருக்குமொப்பநிகழ்தலின் அது கடாவன்மை தெளிக.

இவ்விந்திரகுலாதிபர் சங்கம் தஞ்சைஜில்லா பாபநாசம் தாலுக்கா நீடாமங்கலம் ரயில்வே ஸ்டேஷனையடுத்துள்ள அரித்துவாரமங்கலத்தில் 1912௵ மே௴ 31௳யில் ஸ்தாபிக்கப்பெற்றது.

இக்குலத்தவரை நாகரிகக் கல்விமுதிர்ச்சியும், நல்லொழுக்கப் பயிற்சியும், ஜீவனத்தொழில் முயற்சியும், ஆஸ்தியக புத்தியும், ராஜபக்தியும், சர்வஜன சகோதரத்வமுமுடையராய்ச் செய்தற்குத் தனிக்கலாசாலைகள் ஸ்தாபித்தும் உபந்நியாசகர்கள் நியமித்தும், கற்பிப்பதும், தர்மபரிபாலனஞ் செய்வதும் இச்சங்கத்தின் நோக்கமாகும்.

இதற்கு வருவாய்:—

இந்திரகுலாதிபருள் இச்சங்கவிதிகளுக்கிணங்க மனமுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் எவரும் இச்சங்கத்தின்

அங்கத்தினரெனினும், அவருள் பிரவேசக்கட்டணம் ரூ. 4-ம் வருஷ சந்தா ரூ. 1-ம் கொடுக்கும் வருஷச்சந்தாதாரும், ரூ. 25 கொடுக்கும் ஆயுள்காலச் சந்தாதாரும், இச்சங்கத்திற்கு ரூ. 1000-க்கு குறையாமற் கொடுக்கும் முதல் வகுப்புக் காப்பாளரும், ரூ. 500-க்குக் குறையாமல் கொடுக்கும் இரண்டாவது வகுப்புக் காப்பாளரும், ரூ. 250-க்குக் குறையாமல் கொடுக்கும் மூன்றாவது வகுப்புக்காப்பாளரும், ரூ. 200-க்குகுறையாமல் கொடுக்கும் முதல் வகுப்புக்கொடையாளரும், ரூ 100க்கு குறையாமல் கொடுக்கும் இரண்டாவது வகுப்புக் கொடையாளரும் ரூ. 50-க்குக் குறையாமல் கொடுக்கும் மூன்றாவது வகுப்புக்கொடையாளரும் குடவோலை கொடுக்கும் அதிகாரமுடையார். இதை அபிமானிப்பவர் எக்குலத்தவரெனினும் அபிமானிகளாவார். இவர்கள் காப்பாளராகவும் கொடையாளராகவுமிருக்கலாம்.

சென்ற ஜனக் கணிதப்படி கள்வரின் சங்கியை:—

| | | | | |
|---|---|---|---|---|
| தஞ்சைஜில்லாவில் | ஆண் 97240 | பெண் 104660 | ஆக | 201900 |
| திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் | ஷை 13486 | ஷை 14244 | ஆக | 27730 |
| மதுரைஜில்லாவில் | ஷை 94409 | ஷை 97537 | ஆக | 191946 |
| ராமநாதபுரம் ஜில்லாவில் | ஷை 26637 | ஷை 30761 | ஆக | 57398 |
| புதுக்கோட்டை ஜில்லாவில் | ஷை 24194 | ஷை 26495 | ஆக | 50689 |
| ஆக | ஷை 255966 | ஷை 273697 | ஆக | 529663 |



இவ்விராஜதானியின் இதர ஜில்லாக்களிலுள்ளவர்களின் சங்கியை குறிக்கப்பெறவில்லை. இவர்களில்,

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் படித்தவர்கள் | ஆண் 40689 | பெண் 1129 | ஆக | 41818 |
| இங்கிலீஷ்படித்தவர்கள் | ஷை 705 | ஷை 14 | ஆக | 719 |

இவர்களில் பாலர் வகுப்பில் படிக்கும் பிள்ளைகளும் படிக்கத் தெரிந்தவர்களாகக் கணக்கிடப்பெற்றிருக்கிறார்களெனின் இவர்கள் படிப்பில் எவ்வளவு பின்னடைந்தவர்களென்பதும், எவரும் முன்னேற்றமடைவதற்குக் கல்வியே காரணமென்பதும், மற்றவர்கள் முன்னிற்பதும் அதனாலென்பதும், வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றதல்லவா? பொய்யில் புலவரால் புகழப்பெற்ற புல்லிமுதலாய நல்லரசர் பலர் தோன்றிப் பார் புரந்து பகைவரைக்களைந்ததும், அணிமணிவண்ணனும், அலர்மேல் மங்கையும், ஆழ்வாரும், ஆசாரியரும், நாயன்மாரும், அவதரித்ததும் இக்குலத்திலல்லவா? இத்தகைய பெருமைவாய்ந்த தமிழ்ப்பழங் குடிகளுள் அரசர் வகுப்பைச்சார்ந்த கள்வர்குலமக்களுள், செல்வத்தாலும் கல்வியறிவொழுக்கங்களாலும் சிறந்திருக்கும் பலரும், " தாமின்புறுவதுலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார் " என்னுந் தமிழ்மறையைக் கடைப்பிடித்துக் காலதேச வர்த்தமானத்தாற் றாழ்நிலையெய்திய தம் குடிப்பிறப்பினர் பலரையும் மேல்நிலை அடையச்செய்தல் கடமையென நினைத்து, அந்நோக்கத்தையே கொண்டு எழுந்த இச்சங்கத்தையாதரித்து இம்மை மறுமைக்குறிய புகழையும் புண்ணியத்தையும் அடைவார்களென வேண்டுகின்றேன்.

பத்திராதிபர்.

## * ஜீவகாருண்யம்.

அஃதாவது பல்வேறு விதப்பட்ட ஜீவராசிகள் அனைத்துமாட்டும் நாம் இயல்பாய் வைக்குந் தயையாம்.

ஜீவராசிகள் என்பன இவ்விசித்திர பிரபஞ்ச சிருட்டியில் காணப்படுகின்ற உயிருள்ள வஸ்துக்கள் யாவுமாம். இவ்வுயிருள்ள ஜீவன்கள் எல்லாம் சர்வேஸ்வரனாகிய சிவபிரானது சந்நிதியாகும். இதற்குத் திருட்டாந்தம்,

“ எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்” என்று தொடங்கும் சிவஞான தீபச்செய்யுளே.

இன்னோரன்ன ஜீவராசிகளிடத்து நாம் நமது இரக்க குணத்தினால் விசுவாசம் பாராட்டுதல் மிகுந்த அவசியமாம். ஏனெனிற் கூறுதும்.

இப்பிரபஞ்சத்தில் நால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதம் என்னுமிவற்றுள் அடங்குவனவான எல்லா ஜன்மங்களுள்ளும் நமது மனித ஜன்மமே மிகு மேன்மையுற்றது. இதற்குச்சாட்சியம் மிகுதியும் உளவாயினும் ‘அரிது அரிது மானிடராதல் அரிது’ என்னுமிவ்வொரு ஆப்தமொழியே போதுமானது. ஆகையான் இவ்வரிய மானிட‘சரீரம் நமக்கென இப்போது கிடைத்தது நாம் நமது பூர்வ ஜன்மங்களில் மிகுதியும் இழைத்த புண்யத்தின் பரிபாக காலம். ஏனெனில் இகத்தில் நல்ல அறிவுடனே சத்கர்மாக்களைப்புரிந்து மேலைக்கும் நன்னெறியிற் செலுத்த இஃதே உரியதாயிருக்கின்றதாதலின் என்க.

* இது திருவாரூர் கமலாஸனிப்பத்திராதிபர் ஸ்ரீமான் டி. எஸ். தியாகராஜ ஞானியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் 27-6-15 ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற நாகூர் சைவப் பிரகாச சபையின் ஜூன் மாதத்திய கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.



இல்லறத்தானாயினும் துறவறத்தானாயினும் யாவரும் சர்வத் ஜீவன்களிடத்தும் தயையாயிருந்து அவற்றினைப்பட்சமொடு நடத்துதல் வேண்டும். நமது புருஷார்த்தங்களைத்தேடுவதற்குத் தர்ம மார்க்கமே முக்ய சாதனம். தர்மங்களுள் முக்யமானது ‘அஹிம்ஸா பரமோ தர்ம:’ என வேதங்கள் முழங்குகிறபடி ஒரு பிராணிக்கும் யாதொரு விதமான ஹிம்சையையும் (துன்பத்தைத் தரத்தக்க செயலையுஞ்) செய்யாதிருத்தலாகிய அறச்செய்கையாம். இதுவே சர்வ சமய சம்மதமாகும்.

இதையே நமது தமிழ்வேதம்.

“ அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல், பிறவினையெல்லாந்தரும்” என்று கழறும். அதன்றியும், இத்தருமத்தை மேற்கொண்டு செய்து வருபவன் ஒருவனுக்கு உண்டாகும் நன்மையைச் சொல்லுமிடத்து நமது நாயனார்,

“கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாணான்மேற்-செல்லாது யிருண்ணுங்கூற்று” என்கிறார். இதற்கு உரை கூற வந்த பரிமேலழகியார் “மிகப்பெரிய அறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பரென்றும் அறநூற்றுணிபுபற்றி இப்பேரறஞ் செய்தான்றானுங் கொல்லப்படான். படானாகவே அடியிற்காட்டிய வாழ்நாள் இடையூறின்றி எய்துமென்பார் வாழ்நாண் மேற்கூற்றுச் செல்லாதென்றார். செல்லாதாகவே கால நீட்டிக்கும். நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறும் என்பது கருத்து” என்று கூறுகிறார். இதனானே நாம் புருடார்த்தங்களையடைய ஏதுவிருக்கிறது என்பது விளங்கும்.

தலையறம் எனக்கூறிப் புகழப்பெறும் பெற்றிபொருந்திய கொல்லாமையென்பதை இரக்கம் என்னும் பண்பு ஒன்று இருந்தாலன்றோ இயற்ற முடியும்? இவ்விரக்கமில்லா வழ்

இவ்வறஞ்செய்தலியலாது. ஆகவே இரக்கமே முக்யம் என்பதாயிற்று. எனவே இஃதிலாதான் மனித வர்க்கத்திற் சேர்த்து எண்ணப்படான். மேலும் இக்குணமில்லாதவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் மிகுந்த கஷ்டங்களையநுபவிக்க நேரும். இக்கருத்தை விளக்கப் பதி பசு பாச விளக்கத்தில் ஓர் செய்யுள் பிறந்திருக்கின்றது.

"கலையெலா முணர்ந்தானேனுங் கரிசறத்தெளிந்தானேனு
மலையெனவுயர்ந்தானேனு மன மயலகன்றானேனு
முலகெலாம் புகழப்பல்லோர்க்குதவிய கையனேனு
மிலகிய விரக்கமின்றே லெழுநரகடைவனன்றே."

ஆயின் உண்மை. பிராணிகளிடத்து இரக்கமாயிருந்து அவற்றிற்கு யாதொரு ஹிம்சையையுஞ் செய்யாதிருத்தல் தான் நன்று. அவற்றைக் கொல்லாமையே பேரறம். இது எப்போதும் அநுட்டிக்க முடிகிறதா ? நமக்கே இடையூறு விளைக்குஞ் சமயத்தில் பிராணிகளை நாம் கொல்லாமல் விடுதல் கூடுமோ? என வினவின் அஃது அறியாமையானன்றி வேறன்று. ஏனெனின், முற் கூறியபடி நமது ஜன்மம் புண்யத்தைச்செய்து நல்வழியையடைதற்கேயன்றி பாபத்தைச் செய்து துன்பமடைதற்கன்று. கொல்லாமையே முக்ய தர்மம். அதுபற்றி இத்தர்மத்தையே நாம் அநுட்டித்தல் அதி அவசியம். இதைவிட்டுவிட்டு ஏதேனுமொரு ஜீவனை நாம் கொல்வோமேயாயின் அக்கொலைப்பாவம் பிறவினைகளெல்லாஞ் சேர்ந்து நமக்குச்செய்யக்கூடிய துன்பத்தைத்தரும் என்றல்லவோ நமது நாயனார் கூறுகின்றார். அது மட்டுமோ அதற்குப்பரிமேலழகர் உரைகூற வந்தபோது "பாவம் கொலையுண்ட வழித்தேய்தலும் கொன்றவழி வளர்தலும்" எனச் சொல்லுகிறார். இதை நோக்குமிடத்து இக்கொல்லாமைத் தருமத்தினால் அதிக பாபத்திற்கு நாம் ஆளாகமாட்டோமென்பது வெளியாம். இவ்வுண்மைபற்றி நாம் நம்மைக்கொல்ல வந்ததொரு பிராணியையுங் கொல்லலாகாது.

இம்மட்டோ! இலக்கண மேதாவிகள் சீவன்களையெல்லாம்



அறுவகையாகப்பிரிக்கின்றனர். அவற்றின் அறிவுத்திட்பத்திற்குத்தக. அவை ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் இறுதியாகவுள்ளவை. அவைகளுள் நாம் பஞ்சேந்திரியவுணர்வோடு பகுத்தறிவு என்னுமொன்றை ஆறாவதாகக் கொண்டுள்ளோம். இது ஏனைய பிராணிகளிடத்திலில்லை. இவ்வரிய அறிவுக்குப் பகுத்தறிவு என்னும் பெயரைப் பெரியார் நிறுவியது இவ்விஷயம் நல்லது இவ்விஷயம் கெட்டது எனப்பகுத்தறிதற்கு இது காரணமாயிருக்கின்றமையின் என்க. இவ்வறிவு அப்பிராணிகளிடத்தும் உளதாயின் அவை நம்மைத்துன்புறுத்துமா ? தமது அறிவீனத்தால் தீங்கிழைக்கும் அற்பப்பிராணிகளைக் கொல்லவா கருணை மிகுந்த கடவுள் நமக்கு இவ்வறிவை அளித்துள்ளார் ?

சிலர் பிராணியினது அற்பத்தனத்திற்காக அதனை வெறுக்கின்றனர். காலால் மிதிக்கின்றனர். ஐயோ, பாபம் ! அது உடனே இறந்துவிடுகிறதே! அப்போது இவர்கள் அநியாயமாய் நமது அறியாமை காரணமாய் இதைக் கொன்றுவிட்டோமே! இழந்தவுயிரைமீட்டும் அதற்கு அளிக்கவல்ல சத்தி நம்மிடம் இருக்கிறதா !' என வருந்துகிறதில்லை. அப்படி வருந்தித்தான் ஆவதென்ன ?

அரசநீதி வழுவாது ஆரூரில் அரசாண்ட மனுநீதிச்சோழன், தன் தவப்புதல்வன் மணி நெடுந்தேரூர்ந்து வருகையில் தெய்வச்செயலாய் ஓர் ஆன்கன்று இரதத்தினுருளையொன்றினிற் பட்டுக்குடல் சரிந்திறந்ததைக்கண்ட தாய்ப்பசுமனமுடைந்து வருந்தி அரச அவையில் கட்டிவைக்கப்பட்டிருக்கும் ஆராய்ச்சிமணியைக்கொம்பினால் அடித்ததைக் கேட்டவுடனே, அதற்குப் பரிகாரமாகத்தனது அரசுரிமைக்குரிய ஒரேபுதல்வரான வீதிவிடங்கரை அத்தேரினாலேயே அரைத்துவிடவேண்டும் என மந்திரிகள் சொல்லையும் கடந்து தீர்மானித்து அவ்வண்ணமேசெய்து விடவில்லையா ? இச்சோழ அரசர் கொலைப்பாபம் மிகவும் பெரிதெனை நன்குணர்ந்தவர். அப்படிச்செய்த பிறகு தானே அவருக்குத் தெய்வ அருள் கிட்டிற்று.

ஒரு காரணமுமின்றிப் பிராணிகளைக்கொல்லும் விவேகிகளா அப்பாபத்தை ஈடுசெய்யத்தங்களது ஆருயிரைப் பிரதியாகக் கொடுப்பர்? ஒருபோதுமில்லையாம். அவர்களது பாபபரம்பரைகளாகிய மூட்டைகள் அவர்களைப் பிறவித்துன்பத்தினின்றும் நீக்குதலும் ஒருபோதுமில்லை. அந்தோ! அவர்கள் தமது மதியீனத்தால் புருடார்த்தங்களையடையாமற் போகிறார்களே என விசனிக்கவேண்டியிருக்கிறது. கொலைப்பாபமே பஞ்சமஹாபாதகங்களுள் முந்தியது எனின் வேறென் வேண்டும்?

படித்தறிந்த ஞானிகளே இப்படிச் செய்வார்களாயின் அவர்களுக்கு என் சொல்வது. ஆனதுபற்றியே சிவஞான தீபத்தில்.

"கொலையாதி நெறியகன்ற ஞானந்தானே
கூறரிய மேலான ஞானமாகுங்
கொலையாதியகன்றொழுகுந் தவங்கடாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்குநூலுங்
கொலையாதியகற்றியநல் லறங்கடாமே
குவலயத்தி லொப்பரிய வறங்களாகுங்
கொலையாதியகன்றுபெறுஞ் செல்வந்தானே
கூறினுயிர்க்கிதமான வாழ்வதாமே."

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஒருயிரையுங் கொல்லாதிருத்தலே போதுமானதா? இல்லை. நமது மிக முக்கியமானவேலைகளை முட்டின்றிச்செய்துவரும் மிருகங்களான மாடுகுதிரை முதலிய பிராணிகளிடத்து மிகுந்த பட்சங்காட்டி நடத்துதல்வேண்டும். அவ்வறிவுடைப் பிராணிகளை யடித்துத் துன்புறுத்தல் எவ்வாற்றானும் ஒண்ணாது.

பிராணிகளைத் துன்புறுத்தலும் கொல்லுதலுமே இத்துணைபாபத்திற்கிடமாயின், ஜீவஜெந்துக்களைக்கொன்று தின்று ஜீவிக்கும் மனிதர்களுக்கு எப்படி சர்வேஸ்வரனது அருள் கிட்டும்?



அதுபற்றியே தெய்வநூலில் அருளுடைமை யென்னும் அதிகாரத்தின் பின் புலான் மறுத்தல் என்னும் அதிகாரத்தில்,

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பா
னெங்ஙன மாளுமருள்"

என இகழ்ச்சிக்குறிப்பாய் ஆளமாட்டான் என்பது தோன்றக் கூறப்பட்டிருக்கிறது.

ஆயின் வேள்விக்கண்மாத்திரம் ஊனுண்ணல் பாபமாகாதோவெனின், ஆதியில் மனிதர்கள் நாகரீகமற்றவர்களாய் ஜீவனோபாயங்கூடத்தெரியாதிருந்தகாலத்துக் காட்டில் மிருகத்துடன்மிருகமாய்த் திரிந்துகொண்டு பசியெடுத்தபோது ஓர் மிருகத்தை கூரியகற்களைக்கொண்டு எறிந்தும் குத்தியும் கொன்று அதனிறைச்சியினைப் பக்குவமாக்காமல்கூடத் தின்று வந்தனர். இவ்வியல்புபற்றி மனிதர்களுட்சிலர் இன்றும் அப்புலாற்போஜனத்தையே கையாடிவருகின்றனர். பிற்காலத்து அறிவுமேலிடச் சுருதிகள் யாகங்கள் செய்கிறதென்றும் அப்போது அது பாபமில்லையென்றும் கூறியிருக்கலாம். பொதுவாகப் பார்க்குமபோது மாம்ஸவுண்டியைத் தொலைக்கவே எழுந்த மார்க்கங்கள் இவையெனவூகிக்கலாமென எண்ணுகிறேன். விவேகிகள் மன்னிப்பார்களாக.

இக்கருத்துப்பற்றி நந்தமிழ்வேதத்தில்,

"அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்ற னுயிர் செகுத்துண்ணாமை நன்று." என நாயனார் கூறியிருக்கின்றார். இதன் பொழிப்புரையாங்ஙனமெனில் ஒருவன் அவிபொழிந்து பல்லாயிரமகங்களை முடித்தலினும் எச்சிறு பிராணியெனினுங் கொன்றருந்திருப்பானெனில், அத்தருமமே அன்னானுக்குச் சீரிய நன்மை பயப்பதொன்றாகும்-

இனிக்கருத்துரை "மாமிசபோஜனத்திற் றின்முஞ்செல்லாது வேள்வியொன்றினிற் செல்லும் மனநலச் சீர்பாட்டினும்,

அன்னோன் அவ்வுணவை முற்றுந்துறந்துளன் என்னும் தன்மையே அவனது நன்மைப்பேருங்குணக்குன்றில் ஏற்றிவைக்கும் சுடர் என்க. அதுவன்றி ஓமம் ஓம்புஞ் சமயத்தில் ஊனுணவு செய்தலினும் அதனை ஆக்கிராணித்தலே மிகப்புண்ணியம்.''

இவ்வேதக்கூற்றினையும் மற்றும்,

'' அம்மாவெனவலற வாருயிரைக்கொன்றருந்தி
யிம்மானுடரெல்லா மின்புற்றிருக்கின்றார்
அமமாவெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மாநிரயமென்றாற் புசித்தவர்க்கென்சொல்லுவதே. ''

'' கங்கையிற் படிந்திட்டாலுங் கடவுளைப்பூசித்தாலு
மங்குல்போற் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலுஞ்
சங்கையிலாத ஞானதத்துவமுணர்ந்திட்டாலும்
பொங்குறுபுலால்புசிப்போன் போய்நரகடைவனன்றே. ''

என்னும் பதி பசு பாச விளக்கமுடையார் வாக்குக்களையும்,

'' நட்பிடைக்குய்யம்வைத்தான் பிறர்மனைநலத்தைச்சேர்த்தான்
கட்டழற்காமத்தீயிற் கன்னியைக் கலக்கினானு
மட்டுயிருடலந்தின்றனமைச்சனுயரசுகொன்றான்
குட்டநோய் நாகந்தன்னுட் குளிப்பவரிவர்கள் கண்டாய்.''

என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுளையும் அனுசரித்து மாமிசம் புசித்தலையே விட்டுவிடல்வேண்டும்.

மேலும் மாமிசவுணவைக்காட்டிலும் தான்யாதி வகைகளையும் காய் கறி பதார்த்தங்களையுமே புசித்தல் பலத்தையும் மிகுந்த அறிவையுங்கொடுக்கின்றன என மேனாடுகளிற்கூட இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே ஜீவகாருண்யம் என்னும் இக்குணமே இகத்திலும் பரத்திலும் ஒருவனுக்குச் சுகத்தை விளைவிப்பது. இவ்வரிய தர்மத்தையே நாம் தர்மமாக மேற்கொண்டு சகல நன்மைகளையும் அடைவோமாக.

ஜீ. இராஜகோபாலன்.



## தீவினை.

(135-ம் பக்கத்தொடர்ச்சி.)

முன் மகாபாதகம் அதிபாதகமிவையென விவரித்தாம். இனி மூன்றாவதான பிரசாங்கிதம் இதுவாகுமெனக் காட்டுவாம்.

'' தந்தையுடன் பிறந்தாணற்றாய்தனைப்பெற்றான் கிழத்திதாயினொடு, வந்தவனுக்குரியாளைப் புணர்ந்தாலும் பேரரசன் மனைபுக்காலுஞ், சிந்தையுறு சலத்தாண்ட பாணிலங்கள் கவர்ந்தாலுஞ் சிலாதகேட்டீ, மூன்றுபிரசாங்கிதமாம் பாதகமென்றுரை தொகுத்தார் முதுக்குறைந்தோர் ''

ஐயாற்றுப்புராணப்

தந்தையுடன் பிறந்த அத்தை, பாட்டியார், அம்மான் றேவி, ராஜ ஸ்திரீகள், முத்து முதலான திருடுதல், பிரசாங்கிதமென்னும் பாவமாம்.

காமநோய் மகா பொல்லாததென்றுமேலே கூறியுள்ளாம். புணர்ச்சி விழைவது கொடுங்காரியமாகும்.

சாந்தி புராணமென்னுமொரு நூலில்,

'' பரவா வெளிப்படா பல்லார்கட் டங்கா
வுர வோர்கட் காம நோயோ ஒகொடிதே
விரவாரும் நாணுப் படலஞ்சி யாதும்
உரையா துள்ளாறி விடும் '' என்றும்,
அம்பு மழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிக் கூடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினும் அஞ்சப் படும்.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அஃதாவது, பாணங்களும் தீயும், பிரகாசிக்கின்ற கிரணங்களையுடைய சூரியனும் காய்ந்து மேற்பட்டாலும், நமது தேகத்தைத்தான் சுடக்கூடும், காம நோயானது வெதும்பி மனத்தையே சுடுதலால்.

அதாவது வேறொன்றிற் பிரவேசிக்கவொட்டாமற்றடுப்பதால் அவைகளைவிட இதனைப்பார்த்து அஞ்சவேண்டியது அவசியமென்பதாம். ஆகையாற்றானே தீயவினைகளிலெல்லாம் காம நோய் கெடுதலுடையதென வரிசைப்படுத்தினர்.

பாதகமாவது

தாய்தந்தையுடன் பிறந்தவையலாரையுந்தான்பெற்ற தடங்கணாளை
யாய்தந்தை நன்மாமன் மகளையவன் மகற்குரித்தா மழுதன்னாளை, வேய்
தந்த மணிமென்றோள் மகட்கொடுத்த மாமிதனை விழைந்துகூடிற்
காய்ந்த கொடுஞ்சினத்தோய் பாதகமாமின்னனங் கழறக்கேட்டி.

நுதற்றிரி புண்டர நீற்றுத்தாளணமில்லா திருக்கை நுதலின் வேறு,
மதத்துறு புண்டரத்திச்சை வைத்தல் புயஞ்சங்காழி மற்றூர் புண்பட,
வதைதுறல் பாசந் தோட்டி சக்கரத்தாலு டம்பினி லச்சினைகளேந்தல்,
பதப்பொருளின்மறை தெரிந்தோர் பாதகமாமது வென்பர் பகருங்காலே.

ஐயாற்றுப்புராணம்.

தாயுடன் பிறந்த சிற்றன்னை, பெரியன்னை, தன் பெண், தாய், தகப்பன் முறையில் வந்த மாமன் மகள், மருமகள், தன் மகனது மாமி, இவர்களைக்கூடுவதும் பாதகத்துள்ளாகும். இன்னும் நெற்றியிலே சிவபெருமானது சின்னமான விபூதியையணியாதிருத்தலும், வேறு மதவடையாளங்களை உடைமையும் பாசம்தோட்டி முதலிய குறியீடுகளை கையிற்பொறித்தலும்பாதகத்துள் அடங்குமென்பர் பெரியோர். நெற்றியிலே ஐசுவரியமெனப்பெற்ற விபூதி தரியாதிருப்பனாயின் அவன் நிரீசுவரவாதியேயாகும். இப்பொழுது பழக்கத்தில் திராவிடர்கள் திருமண்இடுபவர்களாயிருந்தாலுங்கூட காலையில் விபூதியை நெற்றியிலணியக்காண்கிறோம். விவிலியர்கூட,

Ash Wednesday என்னுநாளில் நீறிடுகின்றனர். திருநீற்றையேயிடாதபோதிலும் குருத்தோலையைக் கொளுத்தி அதனை நெற்றியிலணிகின்றனர். அவ்வாறிருக்க இந்து மதஸ்தர்களாகிய நாம் விபூதி தரியாதிருப்பது கொடும் பாவமென்றே கூறவேண்டும்.



கவுணப்பாதகமாவது.

எழு சீர்க்கழி நெடில்.

பிறன் பொருளைக்கவர்தல்
பிறர்மனை நயத்தல்
பிறரின்னா முண்டல்
பெற்றோர்.

அறந்தருவா டன்னைத் துறந்து வாழ்தல்
பிறாகம் பொய்த்தருந் தலருந்தவர் நூல்கள்
மறைந்தா மறந்துவிடல் சுருதி நிந்தை
மறைகூலி கொடுத்தோதல் கூலிவாங்கிப்
புறந்தர மற்றோது வித்தல் புல்லொழுக்
கந்தளுரைத்தல் பொய்மைகூறல்.

ஐயாற்றுப்புராணம்.

பிறனுடைய பொருளையபகரித்தல், பரஸ்திரீ கமனம், பிறன் வீட்டில் இலவசமாய் உண்டல், தாய் தந்தையர், இல்லற தருமம் வழுவாது நடத்துவதற்கு முக்கியமானவளாகிய தனது மனைவியை நீக்கி வாழ்தல், பிறர் வீட்டை மெய்யல்லாத காரணங்களால் அபகரித்துக்கொள்ளுதல், மிக்க பெரியோர்களால் நமது நன்மையின்பொருட்டு செய்யப்பட்டிருக்கும் நூல்களைக்கல்லாது மறத்தல், வேதாகம இதிகாசங்களை இழித்துக் கூறல், வேத முதலியவற்றைத்தாமே யோதாது பிறரைக்கொண்டு சொல்லும்படி செய்தல், அற்பமாகிய தீமைகளைச் செய்யக்கூடிய வழிகளில் நடத்தல், பொய் சொல்லுதலும்.

பிறனுடைய பொருளையபகரிக்கும் எண்ணம் ஒருவனுக்கு அவனது பொருளைத் தொட்ட மாத்திரத்திலுண்டாகிறது. அது வெஃகாமையென்று சொல்லப்படும் சொற்ப ஆசையை. அதற்கே நம் மனதிடத்து இடம் கொடுப்போமாயின்,

தானத்துக் குரித்து மன்று தானவி கழியற் சால
வீனத்து நரகத் தாய்க்கும் எச்சத்தை யழிக்கப் பண்ணும்
மானத்தை யழிக்கும் தய்த்தன் மற்றவர்க் கடிமை யாக்கும்
ஊனத்து நரகத் தாய்க்கும் பிறர்பொரு ளுலக்கில் வெஃகல்.

சாந்தி புராணம்.

என்றபடியாகும். இன்னும்,

மடங்கப் பசிப்பினும் மாண்புடை யாளர்
துடங்கிப் பிறருடைமை மேவார்—குடம்பை
மடலொடு புட்கலா மாக்கட சேர்ப்ப
கடலொடு காடொட்ட லில்.

பழமொழி.

என்றபடி பெரியோர்கள் இக்காரியம் செய்யார். அல்லது, அவ்விதமே செய்வதாலுண்டாகும் பயனை நீடிப்பதுமில்லை.

அல்லது செய்வாரும் பொருளாக்கத்தை
நல்லது செய்வார் நயப்பவோ—ஒல்லோலி
நீர்ப்பாய்வதே போலுந் துறைவ கேடெய்ன
லாவதே போன்று கெடும்.

பழமொழி.

இவ்விதமாய்ச் சம்பாதித்த பொருளெல்லாம் தீயெவ்வாறு பொங்கியெழுந்து பிரகாசித்து அடங்கிவிடுகிறதோ அவ்வாறே நம்பாகுமாம். ஆகையால் பிறன்பொருளையடைய எண்ணவே கூடாது. எண்ணத்திற்கு இடங்கொடுத்தால் அதுவே பேராசை எனப்படும். அவாவுண்டாகிவிட்டால் அதற்கு முன் மானம், வெட்கம் எல்லாம் தொலைந்துவிடும்.

ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகப்
போகா தெறும்பு புறஞ்சுற்றி—யாதுங்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர்.

நாலடி.

இவ்வாறு சுற்றும்படி செய்யும். ஆசையானது பாதகத்திற்கிடமாம். பரஸ்திரியைச் சேர்தலைப்பற்றியோ, சாதாரணமாக காமவிகாரனாய்த் திரிவதே கெடுதலைச் செய்யக்கூடியதென்று கூறினோம். கல்யாணம் செய்துகொள்வதே சிற்றின்ப நுகர்ச்சியின் பொருட்டன்று. குடும்ப விருத்தியின் பொருட்டு துறவற நிலையிலிருப்போரைக் காப்பதற்கு இல்லற நடாத்துதல்



அவசியமாதலான், இல்லற வாழ்க்கைக்கு வாழ்க்கைத்துணை அவசியமாகலின், கல்யாணம் அவசியமாகிறது. சமீபகாலத்திலிருந்து காலஞ்சென்ற ருஷியகோமானான கவுண்டு டால்ஸ்டாய் (Count Tol Stoi) என்பவர் இல்வாழ்க்கையின் நோக்கமின்னதெனக் காட்டவே நவீன (Novel) ஒன்று எழுதி வெளியிட்டிருக்கின்றார். நமது நீதி நூல்களில் புணர்ச்சி விழையாமைபற்றி,

பனிமதி பொழிகதிர் பருகுமாம்பல் போன்
முனிமதி முகத்தியர் முறுவலம் பனூர்
துனிவளர் கதிக்கட் டோன்றி நாடகங்
கனியன்ன ருவர் கடையில் காலமே.

சிந்தாமணி.

நிழுமிர் நெடுமதி நிகரில் தீங்கதிர்
பழனவண் டாமரை பனிக்கு மாறுபோற்
குழனிமிர் கிளவியார் கோல மஞ்சினூர்
தொழுநீமிர் தமராய்த் துறக்க மாள்வரே.

சிந்தாமணி.

காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா
காதல் கண்ணகத் தஞ்சனம் போலுமற்
றூது துற்றுபு தாங்கிய வண்டனூர்க்
கேதமிற்றென வெண்ணுமென் னெஞ்சமே.

சிந்தாமணி.

வகையெழிற் றோள்களென்று மணிநிறக் குஞ்சியென்றும்
புகையெழ விகற்பிக்கின்ற பொருளில் காமத்தைமற்றோர்
தொகையெழுங் காதன்றன்னாற் றுய்த்தியந் துடைத்துமென்பார்
நகையழ லழுவந்தன்னை நெய்பினு லவிக்கலாமோ.

குண்டலகேசி.

புணர்ச்சி விழைதலே இவ்வளவு கேட்டைத் தருமாயின் பிறர்மனை நயத்தல் எவ்வளவு துன்பஞ் செய்யுமென்பதைக் காட்டுதும்.

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றா ரநச்சுவார்ச் சேரா—பிறன்றார

நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

நாலடி.

புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சந்
துய்க்குமிடத் தச்சந் தோன்றாமற்—காப்பச்ச
மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல்.

நாலடி.

செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ—யும்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
யலியாகி யாடியுண் பார்.

நாலடி.

பெரியவாட் டடங்கண்செவ்வாய்ப் பிறர்மனை நயக்குமாந்தர்
அரியவாய்ப்பப் புறஞ்சொற்கூற்புண்ணத் திசைப்புடைப்புமன்றி
யொருவர்வாயு மிழப்பட்டகம்பலமொருவர் வாய்க்கொண்
டரியவைத்தாணுண் பிறந்தார்கட்கன்றே.

காதலாள் கசிந்துநையக் கடியவே களைந்துகன்றி
எதிலான் றாரநம்பி யெளிதென்ன விகந்து பாவத்
தாதுலே யுருகவெந்த வெள்ளழற் செப்புப்பாவை
யோதகா தென்னப்புல்லி யலறுமா லானைவேந்தே.

சிந்தாமணி.

பெண்ணினாகிய பேறிஞர் பூமியு
ளெண்ணமிக்கது வெண்ணினு மெண்ணிலார்
பின்னின்ற பெருவினை மேல்வரு
மென்னதாயினு மேதில்பெண் ணீக்குமின்.

வளையாபதி.

காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணின்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றச்சாரீ நீகண்ட
வின்ப மெனக்கெனைத்தாற் கூறு.

நாலடி.



ஆகையான் இவ்வளவுகேட்டைத்தருமொரு தீவினையைச் செய்வதெற்றுக்கு? மேலே காட்டிய பிறரன்ன மிலவசமாய உண்பதால் தாக்ஷிண்யத்திற்குட்பட்டுச் சில காரியங்களைச் செய்யவேண்டி வருமாகையான் கூடாதென்றார்.

பெற்றோரைப் பேணாது விடுவானாயின்

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு"

என்ற அருமைத்திருவாக்கு வேறு இடத்திற்குப்பொருத்தமாயினும், இருமுது குரவர்களைப் பேணாதார்க்கு மொக்கும்.

தனது அறந்தருவானைப் புறக்கணித்தல் மிக்க இகழ்ச்சியைத் தரக்கூடியதொன்றாம்.

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையுந்
தவமிலா ரில்வழி யில்லை—தவமும்
அரசிலா ரில்வழி யில்லை யரசனு
மில்வாழ்வா னில்வழி யில்.

நான்மணிக்கடிகை.

செல்வத்தைப்பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லன
தாமறவாத் தன்மையார்க் கலதென்ப
யாமே பெற்ற தவிசு.

பழமொழி.

மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லா—லொருவராய்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய சொற்கடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று.

அறநெறிச்சாரம்.

அற்புப் பெருந்தளை யாப்பு நெகிழ்ந்தொழுகல்
கற்புப் பெருமனை காதலியைக் கைவிடுதல்
நட்பி னயனீர்மை நீக்க லிவைமூன்றும்
குற்றந் தரூஉம் பகை.

திரிகடுகம்.

யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரோ வென்குதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதந்தனை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யாம் வாழு மூரே.

புறநானூறு

ஆகையால் இல்வாழ்க்கையைத் துறந்து வாழ்தலின்று வுடைத்து,

தானுண்கென்னச் சமைப்பித்த லபிசாரந் தானிழைத்தல்
வானந்தருகற்பிள்ளை யுண்டாக்காமலிருக்கை மரஞ்செடிபுற்
கானங்கொடிகொன்றவை விற்றுக்காலங் கழித்தற்கடுத்தேறற்
பானஞ்செய்வாட் யுணர்தலிவை கவுணவப் பாதகமாமே.

வந்த விருந்தினருக்கன்றி தான் மாத்திரமுண்டாற் போதுமென்று நினைத்துச் சமைத்தவனும், பெரியோர்களுக்கு அபசாரமிழைத்தவனும் மேலான பதவியைக் கொடுக்க வழியான பிள்ளைப்பேற்றைப்பெறுதவனும், மரஞ்செடி இவைகள் மூலம் சீவிப்பவனும், கட்குடித்த மாதை விழைவானும் இவர்கள் கவுணவமென்ற பாதகத்தைச் செய்தவராவார்.

5 தபொனுபவப் பிறங்கியமென்பது, அதன் பதப்பொருள்கொண்டே தாபத்தால் உண்டாகிய தீவினைகளென்றறியப்படும். அவற்றுள் மேவாத பொருள்மோத்தல், செந்துவர் வாயிற் புணர்ச்சி, தீம்பாலின் பசு முதரில் இந்திரியம்விடல், நீக்கி இருநிலத்திற் சிதறுதல்,

எண்ணுகலைதேயுந் தேரிரண்டொ விறுயிற்றிற்
கண்ணுறுமாதப் பிறப்பிற்காணும்விதி பாதமுதற்
புண்ணியஞ்சேர் நாட்டென்புலத்தார்க் கிடுநாட்டின்
பெண்ணணங்கைப் புணர்ந்தாலும் பிறங்கிய பாதகமே.



அமாவாசை, பௌர்ணமை மர்சப்பிரவேசநாள் விதி பாத முதலிய நாள்கள், பெற்றோர் கட்டிறக்குங் காலம், இவைகளிற்றன் பத்தினியையே சேர்தல் தோஷமுடைத்தாம்.

7 சங்கீர்ணமாவது,

ஊர்சுடுத லூர்கெடுத்த லூருளாரைப் பிழைசெய்து
சீர்கெடுத்தல் வேதியர்தந் திருமனையைக் கேடாக்கல்
நீர்கெழு நாட்டொடு காட்டினில் விலங்கின் முதலாப்
பார்கெழுவுமாதவத்தோய் பாதகசங்கீரணமே.

ஊரை நெருப்புவைத்துக்கொளுத்துதலும், ஊருளாருக்கு கேடுசெய்தலும், வேதியர் வீடுகளைப் பாழாக்கல், நாட்டுக்குத் தீங்குசெய்தலும் சங்கீரணபாவமாம்.

8. அபாத்திரகரணம் அதாவது செய்யக்கூடாதவர்கட்கு அப்படிச் செய்யக்கூடாத காரியங்களைச் செய்துவித்தல்.

கரவுரைத்து நிந்திக்க வாழ்கலவர் கையன்ன
மிரவுபெறல் வாணிகங்க ளிழைத்ததனலாங் குலத்தோர்க்
குரவிய தீவேட்பித்த லுள்ளிட்ட பிறவெல்லாம்
பரவும பாத்திரகரண பாதகமாய்ப் பகர்ந்திடுமே.

ஐயாற்றுப்புராணம்.

ஏதாவது பொருள்களையடைந்தால், அதனைத்திரும்பக் கொடாது, களவு சொல்லுதலும், வஞ்சனையாகப்பேசி நிந்திக்க வாழ்தலும், அவர் வீட்டில் இரவிற்கூட போஜனமருந்தலும், எல்லோரும் வாணிபஞ் செய்வார்களாகையால் அவர்களெல்லாம் வைசியரெனக்கொண்டு அவர்கட்குரிய கரும முதலியவை செய்துவித்தலுமுதலியவை அபாத்திரகாணமாகும்.

9. மலவகம் ஆணவ மலத்தினுடைய வகத்தால் வரும் காரியங்களாம்.

பாலர் புண்விலங்குமுதற் பல்லுயிர்க்கும் பற்பலவாஞ்
சாலப் புண்படு துயரந்தானிழைதல் சூதாடல்
ஏலாக்கள்ளுடன் கூடும் யாவையுமுரைத்தவிவை
மாலாக்கங் கடந்தோர்கள் மலவக மென்றோதுவரே.

ஐயாற்றுப்புராணம்.

பாலரும், புண், விலங்கு முதலியவைகளும் தன்னின் பெரியாரிடத்து, தன்னைக் காப்பாற்றச் சக்தியற்றவர்கள் அவர்களிடத்துத் துன்பத்தைச்செய்தல் ஆணவத்தாலன்றோ? இதுபற்றியன்றோ நாயனாரும்,

செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கிலென் காவாக்காலென் என்றார்.

எக்காரியமும் செல்லுமிடத்துச் செய்தல் ஆண்டன்மையாகாது. சூதாடுதலும், கூடாத கள்போன்ற பிற வஸ்துக்களும் மலவக பாவத்தின் பாற்படுமென்று பெரியோர் கூறுவர்.

10 பிரகீரணம் மற்றையக்காரியங்கள் அதாவது தாய் தகப்பனது ஆனியங்கண்டத்தாமை, எழுங்காலத்து எழாமை, சுருதிஸ் மிருதிகளிற் கூறியபடி சந்தி முதலியவை செய்யாதிருத்தல், ஒரு பந்தியில் முகத்தைப்பார்த்து படைத்தல், தீயவேள்வி செய்தல், சிவபெருமான் திருமால் முதலான தெய்வங்களை வழிபடாதிருத்தல் முதலியனவெல்லாம் அடங்கும்.

இவ்விதமாகப் பகுக்கப்பட்ட பத்துவித தீவினைகளைச் செய்பவர்கள் அவரவர் வினைக்கீடாக பலன்களை நுகர்வரென்பது திண்ணம். இப்போது மேனாட்டாரும், மறு பிறப்பு உண்டென்னுங்கொள்கையை ஒப்புக்கொள்ள வாரம்பித்திருக்கின்றனரென்றால், தொன்று தொட்டு மறு பிறப்பு உண்டென்று நம்பிவரும நம்மைப்பற்றிப் பேசுவானேன். தேகம் வேறு ஆன்மா வேறென்பது பல்லோரும் அறிந்த விடயமாதலின் அதனைப்பற்றி, ஈண்டு விவரித்தல் அமைவுடைத்தன்று.

(இன்னும் வரும்) சோமசுந்தர தேசிகர்.

உ


# கமலாஸனி.

# KAMALASANI.

ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம் 3. { 1915வருஷ ஆகஸ்டுமீ } சஞ்சிகை 8


-600 008.

## * அறம்.

அறமானது:— யாசகர்கள் வசிக்கச்சாவடி கட்டல், சோலை வைத்தெழுப்பல், பசுவிற்குப்புல்லிடல், கண்ணாடிஸ்தாபித்தல், பிரமசாரியர்களுக்கு அன்னமிட்டாதரித்தல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், முனிவர்கள் வசிக்க மடங்கட்டிவிடுதல், தடாகம் அமைத்தல், பசுக்கள் அரிப்பகல உரிஞ்சும்படி சொரிக்கல் நாட்டல், சுண்ணாம்பு கொடுத்தல், கொலை செய்யப்படும் பிராணிகளை விலைகொடுத்து வாங்கிவிடுதல், இடபம் விடுதல், தலைக்கெண்ணை கொடுத்தல், கண்ணோய்க்கு மருந்து நல்குதல், பிள்ளைக்குப் பால் கொடுத்தல், பசித்துவந்தோர்க்கு அன்னமிடல், அறுவகைச் சமயத்தோர்க்கு முண்டியளித்தல், கெட்டவை நன்னிலைமைக்குக் கொண்டுவருதல், தருமபோனகஞ் செய்வித்தல், பிறருடைய தருமத்தை அழியாது காத்தல், ஏற்றவர்க்கு இல்லையென்னாது கொடுத்தல், பெண்போகம் தவிர்த்தல், மகப்பெற இடமளித்துக்காத்தல், சிறு பிள்ளைகளுக்குத் தின்பண்டம் நல்கல், மிருகங்களுக்கு உணவுநல்கல், வேஷ்டி வெளுத்துக் கொடுக்கச் செய்தல், தலை சிரைத்துவிடச்செய்தல், சிறையி

* இது நாகை இந்து மதாபிமான சங்கத்தின் 24-ம் வருடக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

னுள்ளோர்க்கு உணவளித்தல், அறவைப் பிணஞ்சுடல், குளிருக்கு ஆடை நல்கல், நோய்க்கு மருந்து கொடுத்தல், காதோலை நல்கல், என முப்பத்திரண்டு வகைப்படும். அறம் முப்பத்திரண்டும், செல்வன் முதல் தரித்திரன் ஈறுகவுள்ள சகலருக்கும் செய்யக்கூடியதாக பெரும் பொருளைக்கொண்டு செய்யப்படுவனவும், பொருளின்றிச் செய்யப்படுவனவுமாக அமைந்திருக்கின்றன.

ஆதியில் கருணைசொரூபியாகிய உமையம்மை இருநாழி நெல்லைக்கொண்டு தன் புத்திரர்களான உலகினர்க்குச் செய்து காட்டிய அறம் இந்த முப்பத்திரண்டுமேயாகும். உமையம்மையின் திருநாமங்களுள் ஒன்றாகவிளங்கும் "அறம் வளர்த்தாள்" என்ற திருநாமமே இதற்குப் போதிய சான்றாம்.

உலகத்தில் தோன்றி விளங்கும் எழுவகைப் பிறப்பிலும் எண்பத்துநான்கு லக்ஷம் யோனி பேதத்திலும் முதன்மை பெற்ற மானுடயாக்கையைப்பெற்ற ஒவ்வொருவரும், இம்முப்பத்திரண்டு அறங்களுள் தத்தம் சக்திக்கு இயன்ற அறங்களை வழுவாது செய்யவேண்டும். அறம்புரிபவரே மனிதராகக்கொள்ளப்படுபவராவர்.

இவ்வறம்— இல்லறத்தையடைந்து கணவனைக் கடவுளாகக் கருதி நடக்கும் கற்புடை மனையாளோடுங் கூடிச் செய்யப்படுவதாகும். "அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை" என்று தேவர் தேற்றேற காரங்கொடுத்துக் கூறியதும் இதுபற்றியேயாகும்.

முதுமொழிக் கிழவியும்,

"இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
யில்லாளு மில்லாளே யாமாயி—னில்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்."



என்று கூறியதும் இங்கு உய்த்துணரற் பாலதேயாம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருஷார்த்தம் நான்கனுள் அறம் விதைபோலவும், பொருள் மரம் போலவும், இன்பம் கனிபோலவும், வீடு கனியின் சுவைபோலவும் விளங்குவதாகும்.

விதையின்றி மரமில்லை; மரமின்றிக் கனியில்லை; கனியின்றிச் சுவையில்லாத வாறுபோல அறமின்றிப் பொருளில்லை; பொருளின்றி இன்பமில்லை; இன்பமின்றி மோக்ஷமில்லையென்று உணர்ந்துகொள்க. ஆகவே அறம் ஒன்றே, ஒப்புயர்வற்ற மனிதப்பிறப்பையடைந்த நமக்கு இன்றியமையாத் துணையாக தலைமை வாய்ந்து நின்கின்றது. இது பற்றித்தான் புருஷார்த்தம் நான்கனுள் அறத்தை முன்னர் வைத்துக் கூறியதாஉமென்க.

அறமானது தன்னை விரும்பிப் புரிபவனுக்கு சித்தசுத்தியைக் கொடுக்கின்றது. சித்த சுத்தியானது யோகத்தைக் கொடுக்கின்றது. யோகம் ஞானத்தைக் கொடுக்கின்றது. ஞானம் மோக்ஷத்தைக் கொடுக்கின்றது இதனைக் காசி ரகசியமும்.

"சங்கையற்றறத்தினாலே யெய்திடுஞ்சித்தசுத்தி
யாங்கதுமேவின்யோக மாமதனாலின்பாகும்

என்று விதந்து கூறுநிற்கும்.

தொன்றுதொட்டு நம்மை விடாது பற்றிநின்று வருத்தும் பிறவிப் பிணியை நீக்குவதற்கு அறமானது சிறந்த ஔஷதமாக அமைந்திருக்கிறது. அறத்தைச்செய்து மோக்ஷத்தை அடைவதற்கு இன்றியமையாச் சாதனமாக எப்பிறவியினுஞ் சிறந்த மானுடப் பிறவியாகிய இப்பிறவி நமக்குக் கிடைத்திருக்கின்றது.

அறத்தைப் புரிந்து மோக்ஷத்தை அடைவதற்கு ஏற்ற தாக அமைந்திருக்கும் மானுடயாக்கையைப் பெற்றிருந்தும் அறத்தைப் புரியாது மண் பொன் பெண்ணென்ற மூவாசை யால் மயங்கி வாணாளை வீணாளாக்கி மாண்டொழிபவர், சிறந்த பசும்பாலை அதனை வைத்தற்கேற்ற பாத்திரத்தில் வைத்துப் பயனடையாது பூமியிலுள்ள கமரிற் கவிழ்த்து ஏங்கி நிற்கும் மதியிலிகளை ஒப்பாவர்.

இது,

" எய்தற்கரிய யாக்கைதனக் கெய்திற்றென் றுலகுகொண்டு
செய்தற்கரிய வரங்கள்பல செய்துதுயர் கூர்பிறவியினின்
றுய்தற்கொருமைபெறவொண்ணாதுழல்வோனுடம்புபொற்கலத்திற்
பெய்தற்குரிய பால்கமரிற் பெய்தொக்குமென்பரால்."

என்னும் பிரபுலிங்கலீலைத் திருவிருத்தத்தால் நன்குணரற் பாலதாம்.

வள்ளுவர் " அறத்தால் வருவது யின்பம் " என்று கூறி யதும் ஈண்டு கவனிக்கவேண்டியதொன்றாம்.

பொய்யுடம்பைக்கொண்டு புகழுடம்பை என்றும் அழியாது நிலைபெறுமாறு நிறுவிப்போன முழுமுட்சுகளாகிய நம்பெரியார் ஒவ்வொருவரது சரித்திரத்தையும் உற்று நோக்கினால் ஒவ்வொ ருவரும் அறத்தையே மேற்கொண்டு தன்னுயிரிழக்கினும் இழக் காது புரிந்தவர்களாகவே காணப்படுகின்றார்கள் என்பது அறி ஞர்களறியாததொன்றல்ல.

நாமும் நம்பெரியாராகிய மகான்களைப்போல விளங் வேண்டுமேயானால் அறத்தை வெறுத்தலின்றிப்புரிவதே நமது கடமையாகும்.

இதுபற்றித்தான் முற்றத்துறந்த பட்டினத்தடிகளும்,



" நாயாய்ப் பிறந்திடினல் வேட்டையாடி நயம்புரியுந்
தாயார் வயிற்றினரராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயாமரமும் வறளாங்குளமுங் கல்லாவுமென்ன
ஈயாமனிதரை யேன்படைத்தாய் கச்சியேகம்பனே."

என, பொருளைப்பெரிதென்றெண்ணி அறத்தைச் செய் யாத லோபியை உலகத்திலே மனிதனாக ஏன் படைத்தாய் என்று ஏகாம்பரரிடத்து வருந்தி முறையிடுகின்றார்.

மேற்கூறியவாற்றால் அறஞ்செய்யாத வழி மனிதப் பிறப் பால் பயனில்லை யென்பது வெள்ளிடைமலைபோல் விளங்குவ தொன்றாம்.

ஆனது பற்றித்தான், நமது மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியாரும் " அறஞ்செய விரும்பு " என்று தான் செய் தருளிய ஆத்திச்சூடியின் முதற்கண் கூறியருளியதூஉமென்க.

முடிபுரை.

அறமானது முப்பத்திரண்டு வகைப்படுமென்பதும், அறம் சகலருக்கும் செய்யக் கூடியதாகப் பலதிறப்பட்டு நிற்கின்ற தென்பதும், அறத்தை ஆதியில் உமாதேவியார் செய்துகாட் டினாரென்பதும், அறம் ஒன்றே ஏனைய புருஷார்த்தங்களை அளிக்கக்கூடியதென்பதும், அறத்தைப் புரிந்து மோக்ஷமடை வதற்கென்றே மனித சரீரம் நமக்குக் கிடைத்திருக்கிறதென் பதும் நாம் இத்துணைநேரம் கூறிய வாற்றால் தெள்ளிதிற் றெளியப்படுவதால் நாமும் நமக்கியன்ற தருமத்தைப் புரிந்து இக்காயத்தாலடையத்தக்க சகல இன்பத்தையும் அடைந் துய்வோமாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பத்திராதிபர்.

## புத்தக விமர்சனம்.

தசகாரியம்:— ... காலிகோ 1-0-0. ராப்பர் 0-12-0.

திருவாரூர் நகரமடத்துத்தெரு சுவாமிநாத தேசிகரிடம் கிடைக்கும்.

தசகாரியம் என்னும் பெயரானே, ஆன்மா, சகலாவஸ்தையைவிட்டு அத்தாவஸ்தையடையுங் காலத்துண்டாகும் காரியங்கள் பத்தொன்பது இனிது விளங்கும். அவை தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகமெனப் பெறும். அத்தாவஸ்தைகளாகிய நின்மல சாக்கிரத்தில் ஆன்மரூபம், தத்வரூபம், தத்துவ தரிசனமும், நின்மல சொப்பனத்தில் சிவரூபம், தத்துவ தரிசனம், ஆன்ம தரிசனமும், நின்மல சுழுத்தியில் சிவதரிசனமும், ஆன்ம சுத்தியும், சிவயோகமும் நின்மல துரியமும் ஒன்றாயும்; சிவபோகமும் துரியாதீதமும் வேறெனப்படாதபடி பற்றற்று நிற்றலுமியற்கையாம். இவ்வவஸ்தைகளெல்லாம் நாம் நித்திய வாழ்க்கையிற் பயிலும் சகலாவஸ்தையைவிட்டு, உலகப்பற்றற்று ஈசுவரனிடத்தே ஈடுபட்டு நின்ற காலத்து உண்டாகும் ஐசுவரியங்களாகும் இவ்வசாத்திய சாத்தியப்பொருளை விளங்கக்கூறியவர் ‘என்கண் காணத் திருவாரூரிற் சிறப்புற்றிலகும் வைத்தியநாத’ னென இலக்கணக்கொத்துச் சுவாமிநாத தேசிகரின் புத்திரர் ஐவருள் ஒருவரான சிதம்பரநாத தேசிகராம். சைவ சித்தாந்த வரலாறு ஆசிரியர் தசகாரியமியற்றினர் ? கோகழியாண்ட குருமணியைப்போற்றும் ஆதின தேசிகமூர்த்திகளேயென்பர். நமது பார்வைக்கு எட்டியிருக்கும் இத்தசகாரியத்திற்கு முகவுரை யெழுதிய சங்க வித்வான் ஸ்ரீமத், ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள் அக்கொள்கையைப்பரிகரித்தார்களாயினும், தசகாரியமியற்றிய மற்றொருவரையும் கூறாது போந்தார்கள்.



கண்ணிற்சிறக்குமாகமமுணர்ந்தினிய தசகாரியந் தமிழினிற்செய்
களந்தைவரு ஞானப்பிரகாசனுலகத்தவர்கள் கருதருசிவப்பிரகாசம்
பண்ணிற்சிறக்குமுரையெழுது மன்பூரவளிபரவு ஞானப்பிரகாசன்
பரகாரியவிருவருந் தலைவணங்கக் கருணைபாலிக்குமொருகுரவனே
யெண்ணிற்சிறக்குமுயர் முத்தலத்தினு முதன்மையீதெனவெடுத்திசைக்க
எவ்வுயிர்களெவ்வுரு வெடுக்கினுஞ்சாரூப மெய்துவிக்கும் பதுமைசேர்
மண்ணிற்சிறக்கும் புகழ்கமலை நகர்மேவுமானபூஷணன் வருகவே
வளவர்வளகாடவர சிவசமையபரிபால மாசிலாமணி வருகவே
[வாரானை—2.]

என்னும் சத்திய ஞானப்பிள்ளைத் தமிழால் களந்தை ஞானப்பிரகாசர் ஒன்று இயற்றியிருக்கின்றனரென்பது விளங்கும்.

இச்சிதம்பரநாததேசிகர் சிவஞான சித்தியாருக்கு ஓர் சிறந்த பொழிப்புரை இயற்றியிருக்கின்றாரென இற்றைக்கு 25-வருடங்கட்கு முன்னரே காலஞ்சென்ற மிஸ்டர், C. W. தாமோதரம் பிள்ளையவர்கள் இலக்கண விளக்கப் பதிப்புரையில் எழுதியுள்ளார்கள். இக்கிரந்த கர்த்தா ஆராய்ச்சியிலும் சிவாநுபவத்திலும் தேர்ந்தவர் என்பதற்கு இந்நூலைவிட வேறு சான்றுவேண்டா.

இத்தகைய நூலை நமது சந்தாநேயர்களும் வாங்கிவாசித்து ஆநந்தப் பேறடையும் உத்தேசத்தோடு, இதனையச்சிட்டாரிடத்து நமது நேயர்களுக்கு ராபர் 8-அணாவுக்குக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

---

## காளமேகப்புலவர் சரிதம்

(முன் தொடர்ச்சி)

இத்தலம் தஞ்சாவூருக்கு வடக்கு 7-மைல் தூரத்திலுள்ள திருவையாற்றுக்கு மேற்கு ஒருமைல் தூரத்தில் திருநெய்த்தானத்திலிருந்து வடமேற்கு இரண்டுமைல்தூரம் இடையில்

கொள்ளிடநதி ஓடுகின்றது. திருமாலும் தேவேந்திரனும் பூசித்த தலம்.

" பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக் கசைத்து
மின்னார் செஞ்சடை மேல்மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடி யுண் மாணிக்கமே
யன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே "

[சுந்தரர்]

என்பது தேவாரம். மூவர் பதிகமும், ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திர வெண்பாவும் ஓதப்பெற்றது. தேவர் பெயர்: வச்சிரதம்பநாதர், தேவியார் பெயர்: அழகம்பிகை.

## (9) திரு ஆலங்குடி.

### திருவாலங்குடியில் தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்தபோது பாடியது.

" ஆலங் குடியானை யாலால முண்டானை
ஆலங் குடியா னென்றார் சொல்வார்—ஆலங்
குடியானே யாயிற் குவலயத் தோரெல்லாம்
மடியாரோ மண்மீதிலே. "

(இ-ள்.) கல்லால மரநிழலை அழகிய உறைவிடமாகக் கொண்டவனை, ஆலால விஷத்தை யுட்கொண்டவனை, விஷத்தைப் பானம் செய்யமாட்டாரென்று சொன்னதார்? அந்த விஷத்தை அவர் உட்கொள்ளாதிருந்தால், மண்டலத்திலுள்ளாரெல்லாம் பூமியின்மீது மாண்டுவிடமாட்டார்களா? என்பதாம்.

ஆல் அம் குடியான் என்றது, சநகாதியர்க்கு அருள்செய்யும்பொருட்டுக் கல்லாலின் நிழலில் எழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தியை. ஆலாலமுண்டது, திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் அதிலுண்டாகிய நஞ்சைக்கண்டு அஞ்சியோடிய தேவர் முதலியோர் பயந்தீர்த்தற்பொருட்டு. ஆலங்குடியான் என்பது, திருவாலங்குடியிலுள்ளான் என்றும் பொருள்படுதல் காண்க.



இத்தலம் தஞ்சாவூருக்குக் கிழக்கே 18½-மைல் தூரத்திலுள்ள நீடாமங்கலம் ரெயில்வே ஸ்டேஷனிலிறங்கி அங்கிருந்து வடமேற்கே கும்பகோணம் போகும் பாதையில் 4-மைல் தூரஞ்சென்றால் இந்த ஸ்தலத்தை அடையலாம். விஸ்வாமித்திரர் முதலியோர் பூசித்த ஸ்தலம். சுவாமிபெயர் காசி ஆரணியேசுரர், தேவியார் பெயர், ஏலவார் குழலியம்மை, பூளை தல விருக்ஷமானதால், திரு இரும்பூளையென்று பெயர் வழங்கும். (காசியாரணியம்.)

" நச்சித்தொழு வீர்கண மக்கிது சொல்லீர்
கச்சிப்பொலி காமக் கொடியுடன் கூடி
யிச்சித்திரும் பூளை யிடங்கொண்ட ஈசன்
உச்சித்தலை யிற்பலி கொண்டுழ லூனே. "

என்பது தேவாரம்.

## திருக்குடவாயில்.

" செக்கோ மருங்குல் சிறுபயனோ தனம் சிக்களகம்
வைக்கோல் கழிக்கற்றையோ குழியோ விழி வாவிதொறும்
கோக்கேறி மேய்குடவாசல்விண் ணுள்வரைக் கொம்பியன்னீர்
எச்கோ பலடைத்து நீரேநெருப்பி லெரிந்தவரே "

[அபிதான சிந்தாமணி]

இத்தலம், தஞ்சாவூருக்குக்கிழக்கே 24-மைல் தூரமுள்ள கொரடாச்சேரியென்னும் ரயில்வேஸ்டேஷனில் இறங்கி வடக்கே 8-மைல் தூரத்திலுள்ளது.

திருணபிந்து முனிவர்பூசிக்க சுவாமி திருக்குடத்திலிருந்து வெளிப்பட்டு அவருடைய குட்டநோயைத் தீர்த்தருளியதலும் குடத்தின் வாயில் சிவபெருமான் தோன்றியதால், " திருக்குடவாயில் " எனப்பெயராயிற்று. சுவாமிபெயர், கோணேசுரர், தேவியார் பெயர், பெரியநாயகியம்மை. காவிரியின் தென்கரையிலுள்ளது. சம்பந்தப்பெருந்தகையால் பாடல் பெற்றது.

திகழுந்திரு மாலொடு நான்முகனும்
புகழும்பெரு மானடி யார்புகல
மகிழும்பெரு மான்குட வாயின்மன்னி
நிகழும்பெருங் கோயினி லாயவனே.

என்பது தேவாரம். இவர் இத்தலத்துக்கடவுளைக் குறித்துப் பாடியிருப்பதாகத் தெரியவில்லை.

## கும்பகோணம்.

### மங்களநாயகிசமேத கும்பேச்சுரரைத் தரிசித்தபோது காளமேகம் பாடியது.

" அம்பாகி னன்பாத மன்றுபிடித் தாயவற்குன்
செம்பாதங் காட்டாத் திறமென்னே—உம்பர்தொழும்
நம்பகோ ணத்தானே நாகச் சிலைவளைத்த
கும்பகோ ணத்தானே கூறு."

(இ-ள்) தேவர்கள் வணங்குகின்ற நம்பனே, குற்றமற்றவனே, மலையைச் சிலையாக வளைத்தவனே, கும்பகோணத்திற்கிறைவனே, திரிபுர சங்கார காலத்தில் பாணமாகவிருந்து உதவிபுரிந்த திருமாலுக்கு ஒப்பற்ற உனது திருப்பாதங்களைக் காட்டாது சமர்த்தாகவிருக்கும் காரணமென்னே? என்பதாம்.

பாணம் எய்வோர், அதன் அடியைப் பிடித்துதைவது இயற்கையெனினும், நமது புலவர் இக்கவியில் விம்மிதப்பொருள்தோன்றவும், அரிய கருத்தமையவும், பாடல் நயம் சிறக்கவும் விளக்கிய சமர்த்துப் பாராட்டற்குரியதே.

" கம்பணந்தந் தான்குடந்தைக் கார்வேளான் காசிதனில்
உப்பணந்தந் தான்கிரந்த மோதுவான்—முப்பணமும்
வப்பணமாய் மாற்றி மணிக்குழையிற் றூக்கினேன்
அப்பணம்போ லாவா ரவர்."

[தனிச்செய்யுட் சிந்தாமணி.]

இப்பாடல், அஷ்டாவதானம் காங்கயம், ஸ்ரீமான் சே



ஷாசலநாயுடு அவர்களின் பழங்கவித்திரட்டில் அடியில் வருமாறு காணப்படுகிறது.

" இவர் ஒரு காலத்தில் மதுரைமா நகரத்தின் கடைவீதி வழியாகச் செல்லுகையில் தமக்குப் பசியாக விருந்தளிமித்தம் "காத்தான்" என்னும் ஒரு பிரபுவைக் கண்டு சங்கதி தெரிவிக்க, அவர் ஒரு பணத்தைக் கொடுத்து விடுதியிற்போய் சாப்பிடும்படி சொல்ல அதுகண்ட அவர் தம்பியும், இவர் வாக்கைக்கேட்டு யாரோ வித்வான்போல் இருக்கிறாரென்றெண்ணி தாமும் இரண்டு பணம்கொடுத்துப் போசனஞ் செய்து விட்டு வரும்படி சொல்ல, இவர் அந்த மூன்று பணத்தையும் ஓர் அக்கிரகாரத்திற் கொண்டுபோய்க் கொடுத்துத் தமக்குச் சாதங்கொடுக்கவேண்டுமென்று சொல்ல, அவ்வீட்டுக்காரப் பார்ப்பான் இவருடைய பணத்தை எப்படியாவது அபகரிக்கவேண்டுமென்றெண்ணிக் காளமேகத்தை யாரோ பயித்தியக்காரன் என்று உட்கட்டுக்கு அழைத்துப்போய் அன்னம் இல்லாததால் தன் கூடையில் அடுக்கி வைத்திருந்த முறுக்குகளை யெடுத்து வளையல் மாதிரியாக இரண்டுகை நிறையப்பூட்டி வெளியிற்போகும்படிசொல்ல, இவர் அந்த முறுக்குகளை அப்படியே கையில் கோர்த்தவாறு கொண்டுவந்து அந்த வீட்டிற்கு முன்புறகத் தெருவில் நின்றுகொண்டு,

" கப்பணந் தந்தான் மதுரைக் காத்தான் அவன்றம்பி
உப்பணந் தந்தான் றமிழை யோதினேம்—முப்பணமும்
கப்பணமாய் மாற்றிக் கடையில் வளையவிட்டோம்
அப்படியே போவார் அவர். அப்படியே போவார் அவர்.
அப்படியே போவார் அவர்."

(கப்பணம்-ஒருபணம். உப்பளம்-இரண்டுபணம். அவர் என்பது-வளையிட்டவரை.)

என்றுகூறி ஒருகையை யெடுத்து மற்றைக்கையின்மேல் மோதி மோதிச் சுக்குச் சுக்காய் உடைத்தாராம். இது கண்ட

வர்கள் அஞ்சிக் காளமேகமென்று தெரிந்து அவரை யழைத்துப்போய்த் தக்கபடி உபசரித்தாரென்பதே."

முதற்கண்ட தனிச்செய்யுட் சிந்தாமணிப்பாடலில் கும்பகோணத்தில் மறையவரும், வேளாளரும் முறையே மூன்று பணம் காளமேகர்க்குத் தந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவது பாடலில், மதுரைக்கூத்தானும், அவன் தம்பியுமாக மூன்றுபணம் தந்ததாகக் காண்கிறது. இதில் எதனைத் தள்ளுவது. எதனைக்கொள்வது. உண்மையறியாது மயங்குகின்றேம். அறிஞர் பாடலின் நயம்கண்டு உறுதிகொள்வாராக.

"சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா—திருக்குடந்தை
நாயா நரியாவுன் னாய்முகமும் சேய்வடிவும்
தாயார் தான் தண்டிலளோதான்."

[தனிச்செய்யுட் சிந்தாமணி]

*  *  *  *  *
*  *  *  *  *

"கோட்டானே நாயே குரங்கே யுனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்"

[தனிப்பாடற்றிரட்டு]

எனவும் பாடபேதம்.

(இ-ள்) முடிச்சவிழ்ந்த முன் குடுமியையுடைய சோழியனே! சோற்றுப் பருக்கையுலர்ந்தொட்டி யிருக்கிறவாயை யுடையவனே! நீசனே! திருக்குடந்தையிலுள்ள நாயே! நரியே! உன் நாய்போன்ற முகத்தையும், குழந்தை வடிவத்தையும், உன்னைப்பெற்றவள் பார்த்திருந்தும் இன்னும் விலக்கில்லைபோலும் என்பதாம்.

போட்டாள் என்றது, பன்றி, நாய் முதலியவை குட்டிபோடுதல்போல் உன்னையும் போட்டாள் என்றிழித்துக்கூறியவாறு.



இப்பாடல் ஒருசமாராதனையில் இவர்சாப்பிடும்பொழுது தனக்கெதிரிலிருந்துண்ட சோழியன் ஒருவன் குடுமி அவிழ்ந்து இலையில்விழ அதனை அவன் எடுத்து உதறும்பொழுது அதிற்பட்டிருந்த எச்சிற் சாதம் எதிரிலிருந்த காளமேகப் புலவர் இலையில்விழக் கோபித்துப் பாடியது.

இது பழங்கவித்திரட்டில் அடியில் வருமாறு காணப்படுகிறது:

" இவர் ஒருகாலத்தில் தம்முடைய உருவத்தைக்கண்டு [சொருக்குலர்ந்தமுன்குடுமிச்சோழியா] என்று கூறியகவியாலும். கயத்தாற்றுக்கோவிலதிகாரிகள் பெருமாளை எழுந்தருளச்செய்யும் தட்டடையைச் சுமக்கும்படி இவரைப் பிடித்துக்கொள்ள இவர் பாளைமணங் கமழுகின்ற கயத்தாற்றுப்பெருமாளே பழிகாராகேள்" என்று கூறியவசைக் கவியாலும், ஷைமுறுக்குக் கவியாலும் ஆராயுமிடத்துத்தோற்றத்திற்குப் பயித்தியக்காரனைப்போல் விளங்கும் உருவமுடையவராகக் காணப்படுவார் என்பதாக ஊகிக்கவேண்டியிருக்கிறது என்பதே."

இத்தலத்திற்கு "திருக்குடமூக்கு" என்பது மற்றொரு பெயர். காவிரியின் தென்கரையிலுள்ளது ரயில்வே ஸ்டேஷன், ஏமரிஷி முதலியோர் பூசித்ததலம். பன்னிரண்டு வருஷத்திற்கொருதரம் மாசி மகத்தின்போது காசி கங்கைவரும் ஐதீகத்தால் அதிக சிறப்படைந்திருக்கும் மாமக தீர்த்தத்தை யுடையது. ஒரு முனிவர் தமது தாயின் அஸ்தியை யெடுத்துக்கொண்டு தீர்த்தங்கள்தோறும் சென்று நீராடி "சுவர்ண புஷ்கரணி" என்னும் மாமக தீர்த்தத்திலும் ஆடிக்கரையேறி அவ்வென்புப்பொதியை யவிழ்த்துப்பார்க்க அது பொற்றாமரைப் பூவாயிற்று. மூவராலும் பாடல்பெற்றது.

பிரமதேவன் ஜகத் சிருஷ்டி சம்பந்தமான சர்வமூலதிரவியங்களாலும் நிறையப்பெற்ற குடமொன்று தங்கச் சிவபெருமான் வேட வடிவுகொண்டு அக்கும்பத்தைப் பாணத்தாற் சேதித்து அதினின்று சரா சரங்களெல்லாம் உற்பத்தியாம்படி செய்து அமுதமும், ஐந்து குரோச எல்லைகோணமாகச் சூழும்படி செய்த தலம் கும்பகோணம். குடம் தங்கியதால்— குடந்தையென்னும் பெயர் வந்தது.

" காமியஞ் செய்து காலங்கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத்துணர் மினோ
சாமியொடுசே ரச்சுவ தியவள்
கோமி யும்முறை யுங்குட மூக்கிலே. "

என்பது தேவாரம்.

## திருவலஞ்சுழி
## வெண்ணைப்பிள்ளையாரைத் தரிசித்தபோது
## காளமேகம் பாடியது.

* " பறவாத தும்பி கருகாத வெங்கரி பண்புரண்டே
யிறுகாத தந்தி யுருகாத மாதங்க மிந்துநுதல்
நிறவாத செந்தூரம் பூசாக்களபம் நெடுஞ்சுனையிற்
மறவாத வாம்பல் வலஞ்சுழிக்கே வரப்பெற்றனனே. "

---

* " இம்பர்வா னெல்லை யிராமனையே பாடி
யென்கொணர்ந்தாய் பாணா நீ யென்றாள்பாணி
வம்பதாங் களபமென்றேன் பூசுமென்றாள்
மாதங்க மென்றேனும் வாழ்ந்தே மென்றாள்
பம்பு சீர்வேழ மென்றேன்றின்னு மென்றாள்
பகடென்றே னுழுமென்றாள் பழனந்தன்னைக்
கம்பமா வென்றே னற்களியா மென்றாள்
கைம்மா வென்றேன் சும்மா கலங்கினளே. "

'என்பதோடு ஒப்பிடுக.



தும்பி கரி, தந்தி, மாதங்கம், சிந்தூரம், களபம், ஆம்பல் முதலியன யானையின் மறு பெயர்கள்,

(இ-ள்) பறக்காத வண்டும், கறுக்காத வெப்பமாகிய கரியும், பண்கள் புரளப்பெற்று இறுகாத தந்தியும், உருகாத அழகிய தங்கமும், அஷ்டமீ சந்திரன்போன்ற மாதரது நெற்றியலணியப்பெற்று ஒளி செய்யாத சிந்தூரமும், பூசாத கலவைச் சந்தனமும், நீண்ட சுனைகளில் உண்டாகாத அல்லியும், திருவலஞ்சுழியில் கிடைக்கப்பெற்றேன் என்பதாம்.

இத்தலம் கும்பகோணத்திற்கு மேற்கில் நான்கு மைல் தூரத்தில் அரசலாற்றின் றென்கரையில், தஞ்சையிலிருந்து குடந்தைக்குப்போகும் பாட்டையின்மேல் இருக்கிறது. தேவர் பெயர். கபூரத்தீச்வரர், (கற்பகத்தீசர்) தேவியார் பெயர் ப்ருகந்நாயகி, (பெரியநாயகியம்மை) விநாயகர் பெயர் சுவேத விக்நேச்வரர், (வெள்ளையாரென்றும், வெண்ணெய்ப்பிள்ளையாரென்றும்) தமிழில் வழங்குவது. இத்தலத்தின் விசேடச்சிறப்பை அநுபந்தத்திற் காண்க.

## திருவிடைமருதூர்
## மருதீசர்மீது காமதகனத்தைக் குறித்துப்பாடியது.

" கண்ண னிடுங்கறியுங் காட்டுசிறுத் தொண்டரன்பிற்
பண்ணு சிறுவன் கறியும் பற்றாதோ—தண்ணிய
மட்டியையுஞ் சோலை மருதீசரே பன்றிக்
குட்டியையேன் தீத்திர் குறித்து "

(இ-ள்) வேடுவ அன்பனாகிய கண்ணனிட்ட கறியும், குறிக்கப்பட்ட சிறுத்தொண்ட நாயனார் அன்போடு சமைத்தளித்த சிறுவனாகிய சீராளன் கறியும், போதாதெனக்கருதியோ? குளிர்ச்சியாகிப் பெருகியோடுகின்ற தேன் பொருந்திய சோலைசூழ்ந்த திருவிடைமருதூரில் அமர்ந்திருக்கும் இறைவரே! பன்றிக்குட்டியையேன் நெற்றிக்கண்ணால் பார்த்து எரியச்செய்தீர்? சொல்வீராக என்பதாம்.

பன்றியென்றது:-வராகவுருவங்கொண்ட திருமாலை குட்டியென்றது:-அவர் புதல்வனாகிய மன்மதனை. கண்ணையிட்ட கறியென்பது:-கண்ணப்ப நாயனார் தமது வாயில் வைத்துத்தின்று சுவை பார்த்தூட்டிய மானிறைச்சி முதலிய கறியாம்.

இத்தலம் கும்பகோணத்துக்கு வடகிழக்கு 5 மைல் தூரம். ஸம்ஸ்கிருதத்தில் இதற்கு "மத்தியார்ஜுனம்" என்று பெயர் காவிரியின் தென் கரையிலுள்ளது. ரயில்வே ஸ்டேஷன் தைப்பூசஸ்நாநம் மிகு விசேஷம். மூவராலும் பாடப்பெற்றது. மருது தல விருக்ஷமாயுமுள்ள தலம் திருவிடைமருதூர். வரகுணபாண்டியருடைய பிரமஹத்தியைப் போக்கியருளிய ஸ்தலம். அவர் அநேகம் தொண்டுசெய்து முத்திபெற்ற அரும்பதி, உருத்திரர், உமையம்மை, விநாயகர், முருகர், பிரம விஷ்ணு, முதலியோர் பூசித்த தலம். மூகாம்பியம்மன் சந்நிதி பிரத்தியேகமாயிருக்கிறது. மவுனமாயிருந்து தபசு செய்தபடியால் இப்பெயருண்டாயிற்று. "திருவிடைமருதூர்த்தெரு வழகு" என உலகவழக்கு ஒன்றுளது.

"வருந்திய மாதவத்தோர் வானோரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூசமாடி யுலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீராலேத்த விடைமருதிற்
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே.
என்பது தேவாரம்.

தொடரும்,

சி. கு. நாராயணசாமி முதலியார்.

# KAMALASANI.

## Advertiser.

### மீண்டுமொரு வேண்டுகோள்.

செந்தமிழபிமானிகாள்!

சென்ற சில மாதங்களாய்த் திடீரெனக் கண்ணோய்கண்டு எழுதவும், படிக்கவும், பிழைத்திருக்கவுங்கூடாமையாயிருந்தபடியாலும், பத்திரிகைக்கு வேண்டிய காகிதங்கள் கிடைக்காமையாலும், பத்திரிகை கொஞ்சங் காலதாமதமாய் வருவதற்கு அன்பர்கள் மன்னித்துப் பத்திரிகையை யாதரித்து வரக் கோருகிறேன்.

பத்திராதிபன்.

### வெளியூர் கையொப்ப கனவான்களுக்கறிக்கை.

நம்து பத்திரிகையை பத்து மாதங்களுக்கதிகமாய்ப் பெற்றுவந்து, பணத்துக்கு வி. பி. யனுப்பியவுடன் திருப்பியனுப்புவது, பெருந்தன்மைக்கழகன்றே? இதுதான் தேசாபிமானமோ? இதுதான் பாஷாபிமானமோ? அறியக்கூடவில்லை பத்திரிகையின் வரவு செலவு கணக்கை வெளியிடுவதாக தீர்மானித்திருப்பதால், தங்கள் பெயர் பாக்கியாளர் ஜாப்தாவில் வெளியாகாமல் சீக்கிரம்செலுத்திவிடுவீர்களென்றுநம்புகிறேன்

மானேஜர்.

### உள்ளூர் சந்தாதாரர்களுக்கு விக்ஞாபனம்.

நமது கமலாஸனியின் 1915-ம் வருடத்திய சந்தாவை டிசம்பர்மீ த்துக்குள்குள் நமது கையெழுத்துள்ள ரசீதுகளைப் பெற்றுக்கொண்டு, காலை மாலை என்று காலம் போக்கி, பில் கலெக்டர்களின் காலை ஓடிக்காமல் சீக்கிரத்திற் செலுத்தியாதரித்து 1916-ம் வரு ஜனவரிமீ வெளிவரும் 4-வது தொகுதியின் முதற் பத்திரிகைக்குமுன், சில சந்தாதாரர்களைச்சேர்த்துக் கொடுத்து உதவுவீர்களென்று நம்புகிறேன்.

பத்திராதிபன்.

## சந்தா வரவு.

---

அடியிற்கண்ட கனவான்கள் நமது கமலாஸனி பத்திரிகையையபிமானித்து, உபகரித்த சந்தாத்தொகைகளை வந்தனத்துடன் வரவு வைத்துக்கொண்டோம். ஏனைய அன்பர்களு மிதுவிஷயத்தில் முந்துவார்களாக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீமான். | சுந்தரதேசிகர் அவர்கள் | ... | 2 | 0 | 0 |
| ,, | நடேச ஐயர் அவர்கள் | ... | 2 | 0 | 0 |
| ,, | டி. ஜி. விஜயரெகுநாத உடையாரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | சபாபதி முதலியார் அவர்கள் | ... | 2 | 0 | 0 |
| ,, | கி. வெ. ச. ஷண்முகமுதலியாரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | க. மு. சு. சுப்பராயமுதலியார்அவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | வீ. கு. ருமு. சுப்பராயமுதலியாரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | கு. வெ. அ. தி. சு. பழனியாண்டி முதலியார் அவர்கள் | ... | 2 | 0 | 0 |
| ,, | N. இராமநாதய்யரவர்கள் | ... | 1 | 1 | 0 |
| ,, | நகரம், ஜமீன்தாரவர்கள் | ... | 7 | 0 | 0 |
| ,, | முத்துக் காயாரோகணம் செட்டியார் அவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | டாக்கர். குமரசாமி செட்டியாரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | அ. மு. பொன்னுசாமிசெட்டியாரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | ரெங்கனாதராயரவர்கள் | ... | 1 | 0 | 0 |
| ,, | கயிலாசம்பிள்ளையவர்கள் | ... | 1 | 1 | 0 |
| ,, | பி. எஸ். சிவராமய்யரவர்கள் | ... | 2 | 0 | 0 |
| ,, | வி. கே. சுப்பிரமணியமுதலியாரவர்கள் | | 2 | 1 | 0 |
| ,, | யம். வி. மீனாக்ஷிசுந்தரமுதலியாரவர்கள் | | 2 | 1 | 0 |
| ,, | யே. வி. ராமய்யானாயுடுகாரு | ... | 2 | 1 | 0 |
| ,, | அ. ராம. இராமகிருஷ்ணசெட்டியார் அவர்கள் | | 4 | 0 | 0 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ,, | கலி குருசாமிசெட்டியாரவர்கள் | ... | 5 | 0 | 0 |
| ,, | சன்மார்க்க சபையார் (தாதம்பேட்டை பழூர்) | | 5 | 0 | 0 |
| ,, | குழந்தைவேல் உடையாரவர்கள் | ... | 2 | 1 | 0 |
| ,, | ராவ்பகதூர் சீனுவாஸபிள்ளையவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | ராவ்சாகேப் அபிரகாம் பண்டிதரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | சோமுச்செட்டியாரவர்கள் | ... | 2 | 0 | 0 |
| ,, | ரா. பழனியப்பனவர்கள் | ... | 1 | 3 | 0 |
| ,, | நடேசபிள்ளையவர்கள் | ... | 0 | 8 | 0 |
| ,, | நாக்லிங்கமுதலியாரவர்கள் | ... | 1 | 0 | 0 |
| ,, | முத்துரெத்தினமுதலியாரவர்கள் | ... | 2 | 1 | 0 |
| ,, | ராவ்பகதூர் சின்னசாமிபிள்ளையவர்கள் | | 2 | 1 | 0 |
| ,, | சோமசுந்தர தேசிகரவர்கள் | ... | 2 | 0 | 0 |
| ,, | அ. மு. முத்துச்செட்டியாரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | யஸ். சுப்பய்யா தேவரவர்கள் | ... | 2 | 1 | 0 |
| ,, | சீனுவாஸபிள்ளையவர்கள் | ... | 2 | 1 | 0 |
| ,, | இராமகிருஷ்ண நாயுடுகாரு | ... | 2 | 1 | 0 |
| ,, | அனந்தராமய்யரவர்கள் | ... | 2 | 0 | 0 |
| ,, | கோவிந்தசாமி சிந்துராயரவர்கள் | | 2 | 1 | 0 |
| ,, | யஸ். குமாரசாமி மேல்க்கொண்டார் அவர்கள் | | 2 | 1 | 0 |
| ,, | சிவஷண்முக மெஞ்ஞான சிவாசாரிய ஸ்வாமிகள் | | 2 | 1 | 0 |
| ,, | வெ பொன்னுசாமி நாடாரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | யன். யஸ் இராமசாமிபிள்ளையவர்கள் | | 5 | 0 | 0 |
| ,, | மெ. லெ. மெ. இராமனாதன் செட்டியார் அவர்கள் | | 3 | 0 | 0 |
| ,, | மாடி. வெங்கிட்டராமய்யரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | முத்து இருளாண்டி முதலியாரவர்கள் | | 2 | 0 | 0 |
| ,, | கோபாலகிருஷ்ணபிள்ளையவர்கள் | ... | 2 | 0 | 0 |
| ,, | சைவப்பிரகாச சபை நாகூர் | ... | 3 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| ” | வி. இராமச்சந்திர நாயுடுகாரு ... | 2 | 2 | 0 |
| ” | கோவிந்தசாமி நாயுடுகாரு ... | 2 | 2 | 0 |
| ” | வ. யி. நாகரம். இராமநாதன் செட்டியாரவர்கள் | 2 | 2 | 0 |
| ” | போரப்ப கவுடரவர்கள் ... | 2 | 2 | 0 |
| ” | மெ. அரு. நா. இராமநாதன்செட்டியார் அவர்கள் | 2 | 2 | 0 |
| ” | கோவிந்த வாணத்துரையரவர்கள்... | 2 | 2 | 0 |
| ” | கல்யாணசுந்தரம்பிள்ளையவர்கள் ... | 2 | 2 | 0 |
| ” | யன். கே. யஸ். ஆர் யம். பழனியப்ப செட்டியாரர்வர்கள் | 2 | 2 | 0 |
| ” | ராவ் பகதூர் அண்ணாசாமி தேவர் அவர்கள் | 2 | 2 | 0 |
| ” | யல். வி. ஆர். யம். மெய்யப்ப செட்டியாரவர்கள் | 2 | 2 | 0 |
| ” | யன். யே. யஸ். ஷண்முகம்செட்டியார் அவர்கள் | 2 | 2 | 0 |
| ” | கு. மு. கதிரேசன் செட்டியாரவர்கள் | 2 | 0 | 0 |
| ” | ஸ்ரீ திருஞான சம்பந்த சபையார் மஞ்சக்கொல்லை | 2 | 0 | 0 |
| ” | அருணாசலமுதலியாரவர்கள் ... | 2 | 0 | 0 |
| | ஆ | 135 | 5 | 0 |

குறிப்பு:— நன்கொடைகள் அவ்வப்போது வரவு வைக்கப்பட்டிருப்பதால், இப்போது வைக்கப்படவில்லை. சந்தாதாரர்கள் உதவியினாலேயே பத்திரிகை நடைபெறும்படியிருக்கிறது. மற்றவர்கள் கெவனிக்கவும்.

மானேஜர்.

உ

# KAMALASANI.

# கமலாஸனி.

ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம் 3 | 1915௵ செப்டம்பர்௴ | சஞ்சிகை 9, 10.

## பண்டைத்தமிழும் பரோடா மகாராஜாவும்.

"இனிமையும், நீர்மையும் தமிழெனலாகும்" என்பது பிங்கல நிகண்டுச் சூத்திரம். இதனால் தமிழ் எனும் மொழியின் பொருள் இன்பமென்றாகி அதனைத்தரும் பாஷையையுணர்த்துகின்றது. ஒரு பாஷையில் வல்லவர் அப்பாஷையையுணர்ந்த மற்றொருவரிடம் நாகரீகமாகப் பேசும்போது அவ்விருவருக்கும் சம்பாஷணை வகையால் இன்பமுண்டாமன்றோ? இவ்வகையின்பம் எல்லாப்பாஷைக்கும் பொதுவாயினும் அகத்தியர் முதலிய தமிழ் முனிவர்களால் சீர்திருத்தப்பெற்றதும், நம்மாழ்வார், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் முதலிய மகான்களால் அமுதினுமினிய பலதுறை வாய்ந்த இன்பப்பாக்களும், அளவற்ற வேறு துறைக்கடுத்த பல நூல்களும் இயற்றப்பெற்றதும், தொன்றுதொட்டு நெடுங்காலமாய் வழங்கி வந்ததுமாகிய தமிழ்ப்பாஷையின் மொழிகள் இன்பம் பயக்குமெனல் முதன்மையுள்ளதாம். இப்பாஷை வேறு பாஷையின் உதவியை வேண்டாது சுயஞ்சத்தோடு வழங்கும் பிரகாசமுடையதென்று கொள்ளலும் ஒரு படியாம். தமியேன் எனக் கல்வியிற் பெரியோனாகிய கம்பன் முதலினோர் வழங்குதலுண்மையால், தமியென்பது தனிமையெனும் பொருள்தரும் மொழியாகின்றது.

இத்தனிமைக்குச் சான்ருக எப்பாஷைகளிலும் காணப்படாத "ழகரம்" எனும் அழகிய ஒரெழுத்தும் தமிழிலுளதன்றோ? அமிழ்து, கமழ்தல், நிழல், மழை, தழை, வாழை, முதலிய பல சொற்கள், வழங்கிவருகின்றன. தனியான இன்பத்திற்கும், நல் வாசனைக்கும், உரித்தான பாஷையென்பதே தமிழாதல் காண்க. தமிழ் எழுத்துக்கள் தம்முள் எப்பாஷையிலுமிராத 'ழ" கர முடைமையால் தமிழாம். காரணப் பெயருதித்த தென்க மெய்யெழுத்தை யுச்சரிக்கையில் "இ"கரஞ் சேருதல் மரபு.

தேவ சேனுபதியாம் குகன் அகத்தியரை நோக்கி, அங்கு மணக்கும் புத்தகங்களைப்போய்ப் பார் என்று கூறி, அது தமிழென்றும் கூறி, அதை நீ தெற்குத்திக்கில் பரவச்செய்யென்று கூறிய கதையொன்றும் நம்மவருள் வழங்கிவருகின்றது வடமொழி தென்மொழி இரண்டிற்கும் முதற்காரணராய் நின்று பயன் பெறச்செய்தவர் சிவபிரான் என்பது சிவஞான முனிவர் முதலிய பலர் கொள்கை.

ஆரியர் கங்கைக்கரையில் வந்து நிலைக்கும் முன்பே தமிழ் தென்னுட்டில் வழங்கிவந்தபடியால் தமிழ் மொழிக்கு வடமொழிச்சொற்களை யொட்டிப்பொருள் கூறுதல் பெரும்பிழையாம். தமிழ் மொழிகள் விரவப்பெற்ற பஞ்ச திராவிடர்கள் வாசம் செய்த இடத்தைக்குறித்து ஆரியர் பின் காலத்தில் திரவிடம், திராவிடம், திரமிடம் என்று வழங்கினுரத்தனையே. தென்றல் காற்றில் சுகத்தை யாருமறிவர். வடதிக்கு உத்தமமாயினும் வடமுனையருகில் உறைபனியால் வருந்துன்பமும் ஆறுமாதகாலம் இரவு பகல்கள் நீடித்திருப்பதையும் யாரும் அறிவர். ஒவ்வொரு திக்கிலும் நன்மைக்கும் தீமைக்கும் காரணங்களுள. அரக்கர் குடிகொண்ட இலங்கையில் விபீஷணனும் நன்னடைகொண்டு விளங்கினனன்றோ.

தெற்குத்திக்கில் வழங்கிவருவதால் தமிழுக்குத் தென்மொழியெனும் பெயருமுண்டு. விந்திய மலைக்குத் தெற்கில்



ஐந்துவகைப் பிராமணர்கள் வசித்துவந்தாலும் தமிழ்ப்பிராமணர்கள் தவிர மற்றைய நான்கு பிராமணர்கள் வழங்கிவரும் பாஷைககளில் தமிழ்மொழியின் கலப்பிருந்தாலும் அப்பாஷைகளுக்குத் தென்மொழியென்று பெயர் வராமல் தமிழுக்கு மட்டும் தென்மொழியெனும் பெயர் வழங்கிவருவதாலும் தமிழின் சிறப்பும் முதன்மையும் விளங்குகின்றன. இதுபோலவே வடநாட்டிலும் வடமொழியும் அச்சொற்கள் கலந்துள்ள வேறு பாஷைகளும் வழங்கிவந்தாலும் வடமொழி என்பது தேவ பாஷைக்குமட்டும் பெயராய் வழங்கிவருகின்றது. வடநாடாம் கங்கைக்கரை முதலிய இடங்களில் வழங்கிவந்தபடியால் தேவபாஷைக்கு வடமொழியெனப்பெயர் வழங்கிவருகின்றது. பஞ்ச திராவிடராவார் பிராமணர்கள்:—

1. தமிழர் (தமிழ் பேசுவோர்)
2. தெலுங்கர் (தெலுங்கு பேசுவோர்)
3. கர்ணுடகர் (கன்னடம் பேசுவோர்)
4. மகாராஷ்டிரர் (மகாராஷ்டிரம் பேசுவோர்)
5. குர்ச்சரர் (குஜராத்திப்பாஷை பேசுவோர்)

கேரளர் என்போர் மலையாளம் பேசுவோர். இவர்களை ஐந்து திராவிடப் பிராமணர்களோடு சேர்த்தெண்ணப்படவில்லை. இவ்வகைப் பிராமணர்கள் வசிக்குமிடத்தையே ஆரியர் ஐந்து திராவிடமென்று குறியிட்டுக்கொண்டனர். இவ்வைவகைப் பிராமணர்களும், மாமிசம், மீன் இவைகளைப்புசியாதவர்கள். கேரளம் பரசுராமர் க்ஷேத்திரமாய் அந்தணர்களுக்கும் சந்நியாசிகளுக்கும் வாசயோக்கியமில்லாத நாடாதலால், அந்நாட்டுப் பிராமணர்களாம் நம்பூதிரிகள் ஐவகைத் திராவிடப்பிராமணர்களோடு சேர்த்தெண்ணப்படவில்லை. வடமொழி தென்மொழியாம் தேவ பாஷை, தமிழ்ப்பாஷை இவ்விரண்டு பாஷைகளுக்கும் ஏற்றமும் தாழ்வும் கூற நம்மால் முடியாது.

இவ்விரண்டு திக்கில் எது முந்தியதோ யாம் அறியோம். பாணினிமுனிவர் சிவபிரான் அடித்த "டமருக"ச் சத்தத்தின் வழியாயுதித்த பதினான்கு தொனியைக்கொண்டு சூத்திரம் செய்து வடமொழி யிலக்கணத்தைக் சீராக்கினர். சிவபிரான் தாமாகவே நேரிற்றோன்றித் தமிழில் அகப்பொருளிலக்கணங் கூறியருளினர். அகத்தியரைக்கொண்டு தமிழின் இலக்கணத்தையும் வெளிப்படுத்தினர். தெய்வலோகத்தில் வழங்கிய பாஷையை வடமொழியென்று வழங்குவதுண்மையானாலும், அது பூமியில் வழங்கிவந்து நிலைகெட்டுப்போனதைப் பாணினி சீர்திருத்தியதால் செம்மையாகச் செய்யப்பெற்ற பாஷையெனும் பொருள் கொண்ட "ஸம்ஸ்கிருதம்" எனும் பெயர் அதற்குண்டு. அப்படியே தமிழையும் அகஸ்தியர் சீர்திருத்தியுள்ளார். இவ்விரண்டு பாஷைகளும் சிவபிரான் சம்பந்தத்தால் சீரடைந்திருப்பதால் இவ்விரண்டும் தேவர் சம்பந்தமுடைமையால் தேவபாஷையெனக் கொள்ளுதலுசித முடையதேயாம். இவ்விரு பாஷைபோற் சிறந்த வேறு பாஷை இவ்வுலகிலில்லை.

இஃதன்றித் தேவபாஷையிலுள்ள வேதங்களை அந்தணரனைவரும் கன்ம ஞானகாண்ட வகையால் ஓதியுணர்ந்து யாகம், யஞ்யம் முதலிய கன்மங்கள் செய்து வருகின்றனர். ஞானவிசாரமும் செய்கின்றனர். இஃது அந்தணர்களின் பொதுவான ஆசாரம். வைணவப் பிராமணர்களோ வடமொழி வேதசாரமாய்த் தமிழில் ஏற்பட்டுள்ள தமிழ்வேதத்தை வடமொழி வேதத்தோடு ஏககாலத்தில் பாராயணம் செய்துவருவதில் புறப்பாட்டில் வீதிகளில் திருமாலெழுந்தருளுகையில் தமிழ் வேதத்தை அம்மூர்த்திக்கு முன்பாகவும், வடமொழி வேதத்தைப் பின்பாகவும் பாராயணம் செய்து வருகின்றார்கள். சைவப்பிராமணர்கள் தேவாரம், திருவாசகம் முதலிய பாடல்களை வடமொழி வேதத்தோடு சமமாகவாவது, தனித்தாவது, கோஷ்டியிலாவது, ஆலயங்களிலாவது, வீடுகளிலாவது பாராயணம் செய்கிறதில்லை. நான்காவது வருணத்திலுள்ள ஓதுவார்மார் முதலியோரே தமிழ் வேதத்தை ஆலயத்தம்பத்தடியில் நின்று ஓதி வருகின்றார்கள். எவ்வாறாயினும் தமிழ்ப் பாஷையில் சைவர் வைணவர்களுள் ஞானசம்பாதனம் பெற்று மோக்ஷமடையத் தமிழ்வேதம் ஏற்பட்டுள்ளது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆத்மநிஷ்டர்களாய்த் தங்கள் அனுபூதியைக் கடல்மடை திறந்தாற்போல் தமிழ்ப்பாக்களாகக் கசிந்துருகிப் பாடியுள்ளார். இவ்வகை நயம் மற்றைய நான்கு பாஷை பேசும் அந்தணர்களின் பாஷைகளிலின்மை தமிழின் மேம்பாட்டை இனிது விளக்குகின்றது. வடமொழி வேதத்தில் விளங்காத பாகங்கள் தமிழ் வேதத்தால் நன்கு விளங்குகின்றனவென்று தூப்புல் ஸ்ரீ வேங்கடநாதாசாரியர் கூறுகின்றனர். இவர் பிரபந்த சாரத்தில்:—



"செய்ய தமிழ்மாலைகள் நாம்தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே"

என்று கூறியிருத்தல் காண்க. தமிழ் மொழியால் விளங்கும் வேதம் நான்கு வருணத்தார்களுக்கும் பெண்கள் சூத்திரர்களுக்கும் சருவாதிகாரமுள்ளதாயிருப்பதால் பொன் குடம் போன்றதென்றும் வடமொழி வேதம் முதல் மூன்று வருணத்து ஆடவர்களுக்குமட்டும் உரித்தாயிருப்பதால் மண்குடம் போல் சருவாதிகாரம் பெறவில்லையென்றும் நம்மவர் கூறியுள்ளார். இக்கூற்று ஞானவழியால் வீட்டின்பம் பெறுதலைச்சுட்டிக் கூறியதாம். தமிழ் மொழியின் மகிமை இவ்விதமாக இருத்தலினாற்றான் இன்பந் தருமொழியாய் விளங்குதல் காண்க.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த பாஷையானது ஆதரிப்பாரின்றி மிகவும் மெலினமடைந்து வருகிறது. சிலகாலமாய் ஆங்கிலங்கற்று அருந்தமிழுணர்ந்தோர் இப்பாஷையின் பெருமையையறிந்து இதனை ஆங்கிலம் முதலிய பாஷைகளில் மொழிபெயர்த்து அன்னிய நாட்டாரும் அறிந்துகொள்ளத்தக்க சாதனங்களைச் செய்துவருகிறார்கள். இது நமது பாஷையின் விருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் ஹேதுவாய்க் காணப்படும்.

அறிகுறிகளாகும். இப்பாஷையானது மூவேந்தர்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்திருக்கிறது. மதுரையிலிருந்த முச்சங்கங்களாலும் நந்தமிழ்ப்பாஷையாதரிக்கப்பட்டு பாஷையின் பெருமையும், சிறப்பும், நயமும் வெளிவந்துள்ளன. அச்சங்க காலத்து அவர்கள் செய்து வைத்த இலக்கிய இலக்கண நூல்களே அதற்குப்போதிய சான்றாம். அத்தகைய பண்டைத்தமிழ் நூல்களில் தோல் காப்பியம் என்பது ஒன்றாகும். இது தமிழ் கற்கும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத துணைக்கருவியாக உள்ளது. இப்புத்தகம் காலகதியால் தமிழ்ப்பாஷையில் அச்சிட்ட பிரதிகள்கூட கிடைப்பதருமையாகிவிட்டது.

இவ்வரும் பெரும் நூலை மிகவும் பாராட்டி நமது பரோடா சமஸ்தானது மாக்ஷிமை தங்கிய வேந்தரவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க எற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டுக் களிப்படையாத்தமிழர் தானுண்டோ? தமிழரேயன்றி ஆங்கில நாட்டாரும் இவ்வருமை வாய்ந்த நூலினுண்மைகளை யறிந்துகொள்ள ஹேதுவாயிருப்பதால் அவர்களும் நமது அரசர் பெருமானிடத்து நன்றி பாராட்டுவார்கள் என்பது ஒருதலை. நமது அரசப்பெருந்தகையாரின் பாஷாபிமானமுந் தேசாபிமானமும் தாராள சிந்தையு மீண்டு கவனிக்கத்தக்க தன்றோ? இவ்வரும் பெரும் பணியை முடித்தற்கு இசைந்து முன் வந்திருக்கிற நமது டி. பொன்னம்பலம் பிள்ளை **M.R.A.S.** அவர்களின் உயர்ந்த குணமும் லோகோபகார சிந்தையும் மிகப்பாராட்டத்தக்கனவே. நந்தமிழ்த்தேசத்தில் எத்தனையோ தனித்தமிழரசர்களிருக்கின்றார்களே? இவர்களெல்லாம் பரோடாதேசத்து மன்னரவர்களைப்பின் பற்றுங்காலமெதுவோ அக்காலந்தான் நமது தமிழுலகம் பெருமையுமடையும். இவ்வரிய முயற்சி மிகச்செவ்வனே முடிதற்பொருட்டு நந்தமிழ்த் தெய்வத்தை மனமொழி மெய்களால் வணங்குகின்றோம். இப்பெருந்துறையிலிறங்கிய நமது வேந்தர் பெருமான் பல்லாண்டு வாழ்ந்து பண்டைத்தமிழேகளையவற்றையும் இவ்வாறேசெய்து உலகுக்களித்து ஒப்பிலாக்கீர்த்தியடையுமாறு பல்லாண்டு கூற நந்தமிழுலக மிகவுங்கடமைப்பட்டுளது. சுபம்.

பத்திராதிபர்.



## காளமேகப்புலவர் சரிதம்.

(முன் தொடர்ச்சி.)

### திருப்பனந்தாள்
### பட்டரின் ஊதாரகுணத்தைப் புகழ்ந்து பாடியது.

* "விண்ணீரும் வற்றிப் புவிநீரும்வற்றி விரும்புமழைத்
தண்ணீரும்வற்றிப் புலவோர் தவிக்கின்ற காலத்திலே
உண்ணீருண் ணீரென் றுபசாரஞ்சொல்லி யுபசரித்துத்
தண்ணீருஞ் சோறுந் தருவான் றிருப்பனந்தாட்பட்டனே.

(இ-ள்) விண்ணுலகத்திலுள்ள நீரும் சுவறி, மண்ணுலகத்திலுள்ள நீரும் சுவறி, யாவரும் விரும்புகின்ற மேகத்திலுள்ள குளிர்ச்சியாகிய நீரும் வற்றி, வித்துவான்கள் தவிக்கின்ற காலத்தில் உண்ணுங்கள்! உண்ணுங்கள்! என்று உபசார வார்த்தைகளைச்சொல்லி உபசாரஞ்செய்து தண்ணீரையும் சோற்றையும் உதவுவான். அவன் யாவனெனின் திருப்பனந்தாள் என்னும் ஊரிலிருக்கிற "பட்டன்" என்பவன்.

இத்தலம் கும்பகோணத்துக்கு வட கிழக்கு 10 மைலிலுள்ளது. இங்குள்ள ஆலயத்திற்குத் தாடகேச்சுரம் என்று பெயர். காவிரியின் வடகரையிலுள்ளது. சிவ பக்தியிற் "சிறந்த தாடகை" என்னும் பெண்மணியார் தாம் தொடுத்த மாலையை இங்குள்ள சிவபெருமானுக்குச் சாத்தப்போனபோது தமது ஆடை நெகிழ அதனை யிரண்டு முழங்கைகளாலும் இடுக்கிக்கொண்டு திருமாலைத்தொண்டுக்கு இடையூறு நேர்ந்ததேயென்று வருந்த சிவபெருமான் தமது திருமுடியைச்சாய்த்து மாலையேற்றுக்கொண்டதலம். இதனை,

* ஓர்தட்டிலே பொன்னு மோர்தட்டிலேநெல்லு மொக்கவிற்கும்.
கார்தட்டிய பஞ்ச காலத்திலேதங்கள் காரியப்பேர், ஆர்தட்டி
னுந் தட்டுவா ராமலே யன்னதானத்துக்கு, மார்தட்டிய துரைமால்
சிதக்காதி வரோதயனே.

* * * * முந்தத்
திருப்பனந் தாளிலிங்கந் திணசலேச் சிக்காக
விருப்பி னுடன் சாய்ந்த விதம்போற்.
திருப்பூவண நாதருலாவினும்,

"சிலைச்சிக்கு மதனெரிய விழிதிறந்ததிருப்பனத்தாட் சிவனேமாய
வலேசசிக்கு வடசினேயே னுமமையுசான்வயப்படுத்த மாட்டேனேந்தோ
குலேசசிக்கோ ரன்னமின்னுங் காளுதசடைமெளலி குலேந்துபோன
கலேச்சிக்கு வளேந்ததுவுங் கலயனுக்குநிமிர்ந்ததுவுங் கண்டுதானே.

என்னும் பழைய பாட்டிலும் இவ்வரலாறு அமைந்திருக்கும் அழகைப்பார்க்க.

சிவபெருமானின் சாய்ந்த தலையை நிமிர்த்த யானை சேனை முதலியவைகள் கயிற்றைக் கட்டிக்கொண்டு இழுத்தும், நிமிராமலிருந்ததால், குங்கிலியக்கலயநாயனர் அக்கயிற்றைத் தம்முடைய கழுத்திற் கட்டியிழுத்தவுடனே அவருடைய மெய்யன்பிற்காக நிமிர்ந்தருளிய தலமுமாம். கோயில் பெரிது கோபுரங்களும் பெரியன. பிரகாரத்தில் ஆண் பனைமரங்கள் இரண்டு இருக்கின்றன.

"குழ்கருவல் வினையுமுட ரேன்றிய பல்பிணியும்
பாழ்படவேண் டுதிரேன் மிகவேத்துமின் பாய்புனலும்
போழிளவெண் மதியும்மனல் பொக்கர வும்புனேந்த
தாழ்சடையான் பனந்தாட்டிருந்தாடகை யீச்சுரமே"
என்பது தேவாரம்.

## திருத்துருத்தி (குற்றாலம்)

இத்தலப்பெருமானைச் சேவிக்கச்சென்றபோது அங்கிருந்த குருக்கள் எங்கள் பரமசிவனுடைய ஆபரணத்தை விசேஷித்து "ஒரு வெண்பாப்"பாடவேண்டுமென்ன இவர் பாடியது:—

"காலயிலும் வேலே கடையக் கயிறாகும்
மாலயிலும் பூமுடித்து வாழுமே—சோலைசெறு
செய்யிலா ரம்பயிலுஞ் செந்துருத்தி மாநகர்வாழ்
பொய்யிலா மெய்ய ரிடும் பூண்."



(இ-ள்) மலர்க்காவினிடங்களிலும், வயலிடங்களிலும் முத்துக்கள் மலிந்த திருத்துருத்தியென்கின்ற நகரத்திலே திருக்கோவில்கொண்ட சிவபெருமானனவர் தமது திருமேனியில் அணியும் பூஷணமோ பிரசண்ட மாருதத்தையும் பட்சணம் பண்ணும் பாற்கடலைக் கடையக்கயிறுமாகும். திருமாலுண்ட பூமியையும் தன் தலையிலேந்தி வாழா நிற்கும் என்பதாம். பூண் சர்ப்பமானதால் இவ்வாறு கூறினர். காலையிலும், மாலையிலும் பூ முடித்து வாழும் எனச்சொன்னயங்காண்க.

திரும்பவும் அக்குருக்கள் புங்கங்கொம் பங்கிங்கொன்பது, புளியங்கொம் பங்கிங்கொன்பது, வெட்டி நறுக்கிய வேள் வேலங்கொம் பங்கிங்கொன்பது என்னுமிவற்றை ஒரு வெண்பாவில் அடக்கிப்பாடவேண்டுமென்ன இவர், "எங்கள் மடத்துக் கெரிகரும்பு கொள்வது" என்பதை முதலில் எழுவாயாகச் சேர்த்து நீங்கள் சொன்னவாறே சொல்லிப்பாருங்கள் வெண்பாவாய் முடிந்திருக்கின்றதென்ன அவர்கள் அந்தப்படி சொல்லிக்கண்டது:—

"எங்கண் மடத்துக் கெரிகரும்பு கொள்வதுபுங்
கங் கொம்பங் கிங்கொன் பதுபுளியங்—கொம்பங்கிங்
கொன்பது வெட்டி நறுக்கிய தோர் வெள்வே
லங் கொம்பங் கிங்கொன் பது." (வெளிப்படை)

தனிப்பாடற்றிரட்டில் காணப்படும் இப்பாடல் இரண்டாமடியிலும், மூன்று மடியிலும் வெண்டளை வழுவிருப்பதைக் காண்க.

இத்தலம் காவிரியின் தென் கரையிலுள்ளது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வட கிழக்கே மட்சாலை மார்க்கமாய் முக்கால் மைமேல். சுவாமி பெயர் வேதேச்சுரர். தேவியார் பெயர் அமிர்த முகிளாம்பிகை. மூவராலும் பாடப்பெற்றது. சிவபெருமான் ஆற்றிடைக்குறையில் தோன்றியதால் திருத்

துருத்தி, துருத்தி-ஆற்றிடைக்குறை. குற்றால் தல விருக்ஷமான காரணத்தால் " குற்றாலம் " என வழங்கப்பெறுகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலி நாச்சியார் பொருட்டுச்செய்த சத்தியம் தவறி, திருவொற்றியூரினின்றும் திருவாரூருக்குச்செல்ல எத்தனித்தபோது அவருடைய இரண்டு கண்களுக்கும் அபாவம் நேரிட்டதும் அல்லாமல் தேகத்திலும் கொடிய பிணியுண்டாயிற்று ஒரு கண்ணின் பார்வையைக் காஞ்சீபுரத்திலும், மற்றொரு கண்ணின் பார்வையைத் திருவாரூரிலும் பெற்று உடற்பிணி, திருத்துருத்தியாகிய இந்த க்ஷேத்திரத்தில் நீங்கப்பெற்றார். " என்னுடம்படும் பிணியிடர் கெடுத்தானை " என்பது ஸ்ரீ சுந்தரர் தேவாரம்.

" உன்னியெப்போது நெஞ்சுளொருவனை யேத்துமின்றே
கன்னியை யொருபால் வைத்துக்கங்கையைச் சடையுள்வைத்துப்
பொன்னியினடுவு தன்னுட்பூம்புனல் பொலிந்துதோன்றுந்
துன்னிய துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே ".

என்பது தேவாரம்.

## கங்கைகொண்ட சோளேச்சுரம்.

### சிவபெருமானைச் சிறப்பித்துப்பாடியது.

" காவலனெங்கள் கனவைப்பாஞ்சோளேசன்
மாவலி கங்கை மணிவாரி—ஆவனலென்
றப்புளங்கை தோய்க்க வதில்வாரியமுத்தைக்
கொப்புளமென் றாதுங் குரங்கு. "

(இ-ள்) அடைந்தாரைக்காக்குந் தொழிலில் வல்லவன், எங்களுக்குப்பெரிய நிக்ஷேபமாகிய கங்கைகொண்ட சோளேச்சுரத்தான் அவனது மிருந்த வலியுடன் பிரவேசிக்கும் கங்கையின் மாணிக்கங்களை சில குரங்குகள் அள்ளி ஆ! நெருப்பென்று நீரினுள்ளே அகங்கையைத்தோய்க்க சில குரங்குகள் அதில் அள்ளிய முத்துக்களைக் கொப்புளமென்று வாயிலூதின என்பதாம்.



இத்தலம் சோழநாட்டிலுள்ளது. இங்கெழுந்தருளிய சிவபெருமானுக்கு " கங்கை கொண்ட சோளேச்சுரத்தான் " என்பது பெயர். இத்தலத்துள்ள ஆற்றிற்கு " மாவலி கங்கை " யெனப்பெயர் பெறும். வாணசூரன் பூசித்ததும், " திருவிசைப்பா " பெற்றதுமாகிய தலமும் இதுவே.

" அன்னமாய் விசும்பு பறந்தயன்றேட வங்ஙனே பெரிய நீசிறிய,
வென்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த வெளிமையை யென்றுநான்
மறவேன்; முன்னமா லறியா வொருவனு மிருவா முக்கணு நாற்பெருந்
தடந்தோட், கன்னலே தேனே யமுதமே கங்கைகொண்ட சோளேச்
சுரத்தானே. "

என்பது தேவாரம்.

## மாயூரம் (மயிலாடுதிறை)

### மாயூரத்திற் சிவபெருமானைத் தரிசிக்கையிற் பாடியது.

" வள்ளலெனும் பெரிய மாயூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு மேயிருக்கத்—தெள்ளுமையாள்
அஞ்சலஞ்ச வென்றுதின மண்டையிலே தானிருக்க
நஞ்சுதனை யேனருந்தினார்.

(இ-ள்) வள்ளலென்று சொல்லப்பட்ட பெரிய மாயூரத்திறைவருக்கு வெள்ளி மலையாகிய கைலாயமும், பொன் மலையாகிய மேருவும் தமது சுவாதீனத்திலிருக்கவும் தெளிந்த அறிவினையுடைய உமாதேவியானவள் நாள்தோறும் அஞ்சாதே அஞ்சாதேயென்று அருகிலிருக்கவும், இவர் விஷத்தை என்ன காரணம்பற்றி உண்டார்? என்பதாம்.

இது வினாவாயிருப்பினும், இதில் விடையுமடங்கியிருக்கின்றது. யாதெனின், அஞ்சி முறையிட்ட தேவர்களைப்பாதுகாப்பது காரணமாக உண்டாரென்பது சுவாமி பெயர், மாயூரநாதரோர் தேவியார் பெயர், "அபயாம்பிகை" "அஞ்சோலுநாயகி"

## கோண்டத்தூர்.

### கோண்டத்தூர் தண்டக்காலம்மை சமைத்த பூசணிக்காய்க் கறியை வியந்து பாடியது.

"கண்டக்காற் கிட்டுங் கயிலாயங் கைக்கொண்டுட்
கொண்டக்கான் மோட்சங் கொடுக்குமே—கொண்டத்தூர்
தண்டக்கா லம்மை சமைத்து வைத்த பூசணிக்காய்
அண்டர்க்கா மீசருக்கு மாம்."*

(இ-ள்) கொண்டத்தூரில் வாழ்கின்ற தண்டக்காலம்மை யென்பவள் பாகஞ்செய்து வைத்த பூசணிக்காய் கறியைக்கண்டால் கைலாயவின்பம் கிடைக்கும். கையிலெடுத்து உண்டால் முத்தியின்பத்தைத்தரும். மேலும் தேவர்களுக்கும் உரியதாகும். சிவபெருமானுக்கும் உரியதாகும் என்பதாம்.

இத்தலம் மாயவரம் தாலூகாவிலுள்ளது. கெவர்மெண்டு சர்வே நெம்பர் 165.

* "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவேபுளித்த மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்." என்பதனோடு ஒப்பிடுக.

சி. கு நாராயணசாமி முதலியார்.



## தீவினை.

[முன் தொடர்ச்சி.]

குடம்பை தனித்தொழிய புட்பறந்தற்றே
வுடம்பொடு உயிரிடை நட்பு. என்றார்.

பொய்யாமொழியாரும்,

கேளாதே வந்து கிளைகளாய்த்தோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமரொழிய நீத்து. நாலடியார்.

நெருநலுளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. திருக்குறள்.

பிறந்துநாம் பெற்று வாழ்நாளித்துணையென்பதொன்று
மறிந்திலம் வாழ்துமென்னும் வாழ்வினு ளழுந்துகின்றுங்
கறந்து கூற்றுண்ணுஞான்று கண்புடைத்திரங்கினல்லா
லிறந்தநாள் யாவர் பொய்ப்பாலிற்றென விசைக்கலாமோ.

தொல்லை நம்பிறவி யெண்ணிற்றொடு கடன் மணலுமாற்றா
மெல்லைய வற்றுண் மேதினம்பிறந்து நீங்கி
செல்லு மக்கதிகடம்மிற் சேரலம் சேர்ந்துநின்ற
வில்வினுளிரண்டு நாளைச்சுற்றமே யிரங்கவேண்டா.

சிந்தாமணி.

பிறப் பிறப்பு மானிடப்பிறவிக்கு உற்றதேயாகலான், இந்தச் சன்மத்துச்செய்த தீவினைகள் வினைப்பயன்களை நுகர்ந்து தீரவேண்டும். அதுவும் வினைக்குத் தக்கவாறாகையால்:

முதற் பாதகத்தோ ரொருநூறு கற்பகால மூழ்குவர்பின்
விதப்பாதகத்தோர் தொண்ணூறுகாயம் படிவர் வீழ்நரகில்
மதப்பறமூன்றும் பாதகத்தோரொன்பான் கற்பம்வருந்துவர்பொய்த்
திதப்பாலாம் பாதகத்தோ ரெழுபான் கற்பந் தீதுறுவர்.

ஐந்தாறேழெட்டொன்பது பத்தாகும் பாவத்தவரெல்லாம்
முந்தாம்பவத்தைம்பது நாற்பது மூப்பஃதோரிருபான்பத்
தந்தாதியிலும் கற்பங்களமிழ்ந்தி யெழுவர் பொலிக்குஞ்
சந்தாபஞ் சொன்றொரிதனுக்கோர் கற்பத்துள்ளாகும்.

செய்த பாவ வினைக்கீடு சேருங் காலவரையறை யிவையாம். என்றபடி:

ஆகையான் தீவினை தெரிந்து செய்யினும், தெரியாது செய்யினும், கேடு செய்யும் என்பதும், அதனை யிழைத்தவரே நுகர்ந்து தீரவேண்டியது நிச்சயமென்பதானும், ஒரு பொழுதும் நல் வினையின்றி பிற செய்யற்க. இதனிற் சொற் குற்றம், பொருட் குற்றம் மலிந்திருத்தலியல்பாகையான் குற்றத்தை நீக்கிக் குணத்தைக்கொள்ள வேண்டுகிறேன்.

சோமசுந்தர தேசிகர்.

## அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

இது நமது ஔவைப்பிராட்டியார் அருளிய 'கொன்றை வேந்தன்' என்னும் நூலின் முதற்கட் பெய்து வைக்கப்பட்டிருக்கும் சூத்திரமாம். தாயாரும் தகப்பனாருமே ஒருவன் முதலில் தெரிந்துகொள்ளும் தெய்வம் என்பது இதன் பொருள். இச்சூத்திரத்தின் அமைப்பைச்சற்று உற்று நோக்கின் நமது ஔவைப்பிராட்டியின் அதி சாமர்த்தியம் விளங்கும். எவ்வாறெனில் அறியென்னும் பகுதியினடியாகப்பிறந்த ஏதேனுமொரு காலத்தைக்காட்டக்கூடிய வினையெச்சமாக வைக்காமல் காலங்காட்டாமல் வினைத்தொகையாக கற்றுத்தேர்ந்த நற்செய்கையுடைய மேலோரைக் குறிக்கும்போது அவர்கள் அன்னையும் பிதாவுமே முன்னறிந்த தெய்வமென்றும், அவர்கள் சன்மார்க்கத்தில் எப்போதும் நிற்பாராகையால் அறிகின்ற தெய்வம் என்றும், இறந்தகால நிகழ் காலங்களையும், ஏனோர் பிறகாவது தெரிந்துகொள்ளவேண்டும், என்னும் கருணையால் அறியுந்தெய்வம் என எதிர் காலத்தையும், முறையே குறிக்கும் வண்ணம் அமைத்திருக்கின்றனர். மேலோர் என்றும்



நல்லொழுககத்தை நாடுவர் எனவே அறியுந்தெய்வம் என்று எதிர்காலப்பொருள் படும்படி அவர்களைக்குறிக்கும்போதும் கூறிவிடலாம். இது மட்டுமோ! அன்னையும் பிதாவுமே, முன்—கண் முன்னே, அறி—யாவராலும் அறியப்படுகின்ற (கண் கண்ட) தெய்வம். ஆன்மாக்களாகிய நாம் நமது முழுமுதற் கருத்தாவான பரஞ்சுடரைக்காண முடியாதிருக்கின்றோம். ஆனால் நமக்குக் கண்கண்ட தெய்வமாயிருக்கிறவர்கள் நமது மாதாவும் பிதாவுமேயாம்.

இதன்படி யொழுக வேண்டியவர்களாகிய நாம், எத்தன்மையானவர் எனில் 'அரிது அரிது மானிடராதல் அரிது' 'எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதான் யாதினுமரிதரிதுகாண்' என்றும் பலவாறு பெரியோர் கூறியவிதம் எய்துதற்கரிய மானிடப்பிறவியை அடைந்திருக்கின்றோம். இம்மட்டோ! "அகன்ற ஆழியின் ஓர் கரையில் ஒரு நுகத்தடியையும் மற்றோர் கரையில் அந்நுகத்தடியில் மாடுகள் பூட்டப்படுவதற்குச் சாதனமாயுள்ள இரண்டு கடைக்குச்சிகளையும் போட்டுவிட்டால் அவை சமுத்திர அலையால் மோதப்பெற்று மோதப்பெற்று நெருங்கிவந்து நுகத்தடியில் கடைக்குச்சிகளுக்கெனப் பதிவு செய்யப்பட்டிருக்கும் துவாரங்களில் வந்து தாமே பொருந்துவது எவ்வளவு அருமையின் அருமையோ அவ்விதம் அருமையாகப்பெற்றது நம்முடைய இந்தமானிடப்பிறவி" என்றார் மற்றொருவர். இன்னோரன்னபெற்றி வாய்ந்த பிறவியைக் கருணா மூர்த்தியான கடவுள் நமக்கெனக் கொடுத்ததன் காரணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஆன்மாக்கள் சர்வேஸ்வரனைப்போலவே நித்யம். அவைகளுக்கு அநாதியே சகசமாக ஏற்பட்டுள்ள மும்மலக்கட்டை நிவர்த்திக்கவேண்டிய பெருங்கருணைத் திறத்தினாலேதான் இம்மானிட சரீரத்தை நமக்குக்கடவுள் கொடுத்திருக்கிறார் என்பது சாத்திர சம்மதம். இப்பிறவியில் நாம் வந்தவுடனே நமது நிலைமையை நாம் அறியாதவர்களாகி மதம் பிடித்த யானைகள் தங்கள் தலைமீதே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதுபோல உலக சம்பந்தமான

வியவகாரங்களில் மிகுதியுமுழன்று பாப மூட்டைகளை வெகு சிரமப்பட்டுத் தேடிக்கொள்கிறோம்.

‘ உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
திடம்பட ஈசனைத்தேடு. ’

என்னும் ஆப்த வாக்கியத்தையும் மறந்து விடுகிறோம். ஆகவே நமக்கு நல்லறிவுச்சுடரையொருவர் கொளுத்தவேண்டியதிருக்கிறது. இதன் பொருட்டே நமது கருணையங்கடல் தமது வாயாலும் தம் அருள் வழிப்பட்டோர் வாக்காலும் வேத சிவாகமங்களையருளி யிருக்கின்றனர். இவைகளை நாம் படித்துணர்தல் மிக அவசியமாக இருக்கின்றமையினன்றோ கல்வி கேள்விகள் என்பன ஏற்பட்டுள்ளன. ஆகவே இக்கல்வியினால் தான் நாம் நமது புருடார்த்தங்களை அடையக்கூடும். இக் கருத்துப் பற்றியே குமர குருபரனாரும்.

‘ அறம் பொருளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையுநாட்டும்—உறும்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க்குற்ற துணை ’

என்று கூறினார்.

எனவே கல்வியில்லாதானுக்கு இவ்வுலக இன்பமெல்லாந் துன்பமாயும் மேலைக்கும் நித்யானந்தத்தை யநுபவிக்க முடியாமலும் போகின்றது.

இவ்வுயர்தரக் கல்வியானது எங்ஙனமிருக்கிறது எனின், படிக்கப் படிக்க மென்மேலும் புத்தகங்களும் புத்தி நுட்பங்களும் புதிது புதிதாக விருத்தியாய்க்கொண்டே வருகின்றனவேயன்றி ‘ நான் இதை முற்றும் படித்துவிட்டேன் ’ என்று துணிவாய்க்கூற முடியாதபடி வெகு விரிவாய்க் காணப்படுகிறது. இதைக்கொண்டே ‘ கல்வி கரையில ’ என்னும் வசனமும் ஏற்பட்டிருக்கிறது போலும். இனி நமது வாழ் நாளோவெனின் வெகு அற்பமாயிருக்கிறது. அதுவும் இக்காலத்திலோ ‘ மனி



தற்கு வயது நூறல்லதில்லை ’ என்னும் வசனம் பொய்க்கும்படி ஒருவனது முடிவான ஆயுட்காலம் சராசரிப்படி பார்த்தால் ஐம்பதேயாகிறது. இதற்குள் அவன் படிக்கவேண்டிய கணக் கில்லாத புத்தகங்களைப்படிப்பது என்பது முயற்கோடேயாம். ஆகையால் சில நாட்களுள் அரிய பெரிய விடயங்களை எளிதில் உணர்ந்தாலன்றி உய்வகை வேறொன்றுமில்லை. இவ்வுண்மையை யறிந்தே நமது ஔவையாரும் சர்வ சாத்திரங்களினுடைய கருத்துக்களும் ஒருங்கே அமையும்விதம் சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளை விளக்கும்விதம் சிறு சிறு சூத்திரங்களால் இரண்டு சிறிய பெரிய நூற்களைச்செய்து முடித்தனர். அவையே ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும். இச்சிறு நூற்களை நமக்கு அதிகக்காலதாமதமின்றி உரிய அறிவைக்கொளுத்தி நன் மார்க்கத்திற் செலுத்துகின்றனவெனின் இந்நூற்களின் பெருமையை யார்தான் எடுத்துரைப்பது? இவ்வரிய உதவியை அவ்வம்மையார் நமக்கெனச்செய்ததுமழைநமக்கெனப்பெய்து நம்மால் யாதொரு பிரதிப்பிரயோஜனத்தையும்டையாமலிருத் தல் போலக் கைம்மாறு வேண்டாக் கடப்பாடு எனினும் நாம் அவர்களது பரோபகாரத்திற்குப் பிரதியாக என்ன செய்ய வேண்டுமெனில் அவர்கள் கூறியுள்ள நன் மார்க்கத்தைக்கடைப்பிடித்து ஒழுகல் வேண்டும்.

இது நிற்க, அடியேன் எடுத்துக்கொண்ட சூத்திரத்தை ஆராய்வேன். உலகத்தில் நமக்கு வேண்டியவர்களாகப்பலரு மிருக்க நமது அன்னையையும் பிதாவையுமே நமது தெய்வமா கப் பாவிக்கவேண்டிய காரணம் என்னையெனின் கூறுவேன். நாம் அவர்களிடம் பெற்றிருக்கும் நன்மைகள் அளவிறந்தன. அவைகள் யாவையும் ஈண்டு விவரிப்பது என்பது இயலாது. ஆயினும் முக்யமான சிலவற்றைச்சொல்லுவேன்.

நமது மாதாவானவள் நமக்கெனப்பட்டினியிருந்து விர தங்காத்து நம்மைக் கருப்பையிற்றாங்கிப் பத்து மாதஞ்சுமந்து வெகு கஷ்டப்பட்டுப் பின்னர் பெற்று அன்பாய் வளர்க்கிறாள்.

"முன்ன மென்னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச் சிந்திச், சின்னமுங்கிள்ளிய நாளல்லகாண் என்னைக்காப்பதற்கே, அன்னமு மந்தையும் போலிரு பெண்கொண்ட ஆண்பிள்ளை நீ, இன்னமுஞ் சின்னவன் தானோ செந்தூரிலிருப்பவனே."

என்று ஒருவர் கூறியபடி முலையூட்டி, மையிட்டு, மூக்குச் சிந்தி, நாசியூதி, செவியுருவி, நீராட்டி, நெற்றிக்கு திலக்காப்பிட்டு, விழிக்கு அஞ்சனந்தீட்டி, பல பணிகளும் பூட்டி, கன்னங்கிள்ளி, உச்சிமோந்து, கண்ணோடு கண் வாயோடு வாய் முகத்தோடு முகம் வைத்துக்கொஞ்சி, கூந்தாடி, அருந்தனம் போலப்பாவித்து, பொற்றொட்டிலிட்டுத் தாராட்டிச் சீராட்டித் தூங்கவைத்தும், வாயது கையது கொடுத்துப்போஷித்தும், தன் கன்றுக்கிரங்குங் கறவைபோல நெஞ்சிரங்கி நோயணுகாமல் காத்தும், ஒரு வேளை நோய் உண்டானால் அது தனக்கு வந்ததாகப்பாவித்து வைத்தியன் இருக்கச்செய்கிற பத்தியத்தில் தானிருந்து நோயைப் போக்குகிறாள்; கண்ணை இமை காப்பது போலும் அபாயம் வாராமற் காத்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருகிறாளே. குழந்தையாயிருக்கும்போதே நமக்கு அவளைத்தவிர வேறே பார்ப்பார் எடுப்பார் வேறு யார்? நாம் செய்யும் ஒவ்வொரு அசுசையான காரியமும் அவளை அப்போது சகிக்கிறாள். அதிகம் ஏன் கூறுவானேன். நமது சுகமே தனது சுகமென்றும் நமது துக்கமே தன் துக்கமென்றும் எண்ணிவிடுகிறாள். ஆதலினாலன்றோ அவளது அன்பே தலையன்பென எடுத்துக்காட்டாக இலங்குகிறது. 'தாயொக்கு மன்பில்' என்பதும், அன்னை தயையும் என்பதும் இவைபோல் வன பிறவுமே இதற்குத் தக்க சான்றாமென்க.

இனி, தந்தை செய்வதாவது. பசியாமல் ஊணும் உடையுந்தந்து துஷ்ட சகவாசம் செய்யவாவது ஓடியொளித்துத் தூர்த்தனாய்த் திரியவாவது சூதாடிப் பொய்பேசிப் புறங்கூறித் திரியவாவது காமதூரனாய் வேசி வீடு நுழையவாவது இன்னும் இனைய கொடுமைகளையிழைக்கவாவது தன்னிச்சையாய் விடாமல்,



"அள்ளிக்கொடுக்கின்ற செம்பொன்னும் ஆடையும் மாதாவாக்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கு மென்னைக்குறித்ததல்லால்
துள்ளித்திரிகின்ற காலத்திலேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே."

என்று நாம் நினைத்துப்பின்பு வியசனப்படுவதற்கு ஏதுவாக மூடர்களாய்ப் போகவொட்டாமல் நமக்குத்தக்க ஆசிரியனை நியமித்துப் பள்ளிக்குப் போய்ப்படித்து வரும்படித் திட்டஞ்செய்து, கல்வியையே பயிற்றுவிக்கக் காரணராயிருக்கின்றார் என்னில் வேறென்ன உதவிவேண்டும்?

இவ்விருவர்களும் செய்த நன்றியை நாம் எவ்வாறு மறக்கமுடியும்: 'தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்றெரிவார்' என்று சொல்லப்படிருக்கிறதே! இவர்கள் செய்த பெரிய நன்றியை நாம் என்னவென்று தெரிந்து, எப்படிக்கைம்மாறு செய்யப்போகிறோம். அவ்விருவரும் தங்களுதவிக்குக்கைம்மாறாக நம்மை செய்யவேண்டுவதுயாதெனின்,

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்"

என்று வள்ளுவர் கூறியபடியும்,

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ்சொல்"

என்று தமிழ்மறை முழங்குகிறபடிக்கும், நாம் அவர்கள் பேரை நமது கல்வியறிவொழுக்கமாகிய நற்செய்கைகளால் விளங்கவைத்தலேயாம்.

"வைகறையாமந்துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமுமொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந்தாயுந்தொழுதெழுகவென்பதே
முந்தையோர்கண்டமுறை." என்பதற்கேற்ப

காலையிலெழுந்ததும் அன்னையும் பிதாவுமாகிய தெய்வத்தை வந்தனை வழிபாடுசெய்து பத்திர புஷ்பங்கொண்டு அருச்சனை புரிந்து, நமஸ்கரித்தெழுந்து, அவர்களது ஆசியேற்றுப் பின்னர் செய்யவேண்டிய காரியங்களைச்செய்தலே முறையாம். அப்படி இப்போதுகூடச் செய்கின்றவர்கள் இருக்கிறார்கள். இன்னும் அவர்கள் சொல்லுக்கு எப்போதும் எதிர்சொல்லாமல் அவர்கள் இட்ட கட்டளையை சிரசாகவகித்து ஒழுகல் வேண்டும். ஏனெனில் நம்முடைய நன்மையே அவர்களது முழுமனதும். ஆகையால் நமக்குத் தீங்கொன்றும் நினையார். நினையாரெனவே ஒருபோதுஞ்செய்யார் என்பது பெறப்படும். ஆதலினாற்றான் "தாய்சொலிற் சிறந்த வாசகமில்லை" என்றும், "தந்தை சொன் மிக்க மந்திரமில்லை" என்றும் மூத்தோர் கூறிப்போந்தனர்.

"தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பதும் பழமொழியே! இதை ஒரு கதைமூலமாக விளக்குவேன்:— நாசிகதேசத்தனாகிய தத்தன் என்பவன் அன்னையை நோக்கி; யான் ஆசாரியனுடைய காரியமாக ஓரூருக்குப்போகிறேன் விடைகொடுத்தனுப்புங்கள் தாயே; என்று வேண்ட, அதற்கு மாதா "குழந்தாய் ஒருவனாய்ச்செல்லற்க," என்றாள். எனக்கேட்ட தத்தன் "தாயே வழியில் அபாயம் ஒன்றும் இல்லை" என்று சொல்ல, அவள் மீண்டும், "அப்பா எப்படியிருப்பினும் நீ வழித்துணையில்லாமல் செல்லலாகாது," என்றுரைத்து கிணற்றருகிலிருந்ததொரு நண்டைப்பிடித்து, ஒரு கலயத்தில் விட்டுக்கொடுத்து இதையேனும் துணையாகக்கொண்டு போ என்றாள். அவ்வாறே தத்தன் தாய்மொழியை மேற்கொண்டு செல்லும்போது வழியில் வெயிலால் வேசற்று, ஒரு மர நிழலில் படுத்துறங்கிவிட்டான். அப்போது எங்கிருந்தோ அவனைத்தீண்ட வந்த சர்ப்பம், அம்மட்கலயத்திலிட்டிருப்பது யாதென்றறிய அதனுள் தலையை நீட்டியது. உடனே அங்கிருந்த நண்டு இது ஒரு கிருஷ்ண சர்ப்பம் என்று தெரிந்துகொண்டு அதனைத் தன் கொடுக்காலிடுக்கிக்கொன்றது. பின்பு தத்தன் விழித்



தெழுந்து கருப்பாம்பைப்பார்த்து இஃதெவ்வாறு இறந்ததென யோசிக்கும்போது அதன் தலையை அந்நண்டு கத்தரித்திருப்பதைக்கண்டு "இவ்வளவு காரியமும் இதுவே செய்தது. மாதா தந்த வழித்துணையாற் பிழைத்தேன். 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை யென்பதும் பொய்க்குமா?" என்று இவ்வாறு தன் தாயைப் புகழ்ந்துகொண்டே அந்நண்டோடு வீடுவந்து சேர்ந்தான். சேர்ந்ததும், அன்னைக்கு அட்டாங்க நமஸ்காரம் பண்ணி, அவளை வாழ்த்தி நடந்த செய்தியைச் சொல்லி இன்புற்றிருந்தான்.

ஆங்கிலத்திலும் தன் தகப்பன் சொல்லே ஆணையாகக் கொண்டு எரிகின்ற மரக்கலத்திலிருந்து உயிர்விட்டு அதனால் மிகுந்த கீர்த்தி பெற்றிருக்கும் Casaliance என்னும் சிறுவனைப் பற்றிய பாட்டுகளும் இருக்கின்றன. நேரே கெடுதலென்று நமக்குத்தெரிந்த விடயங்களையே நம்மைச்செய்யவவர்கள் ஏவினார்களாயின் என்ன பண்ணுகிறது. ? போ! போ! வேலைஇல்லை அதனாலே வருகிறது உனக்குத் தெரியுமா. வயதாகியும் புத்தி இல்லை; என்று கடுகடுத்து உத்தரமுறைத்துப்போய் விடலாமா. எவ்வாற்றானும் ஒண்ணாது அப்படிச் செய்வதனாலும் ஏதேனும் நன்மையிருக்கக்கூடும் என்னும் முழு நம்பிக்கையே நமக்கு முதன் மந்திரியாக இருக்கவேண்டும். அப்படித்தடுக்காக என் ஸ்ரீ ராமபிரானனவர் தனது சிற்றன்னையும் கொன்றுழல் கூற்றமென்னும் பெயரினிற் கொடுமை பூண்டாளுமாகிய கைகேயி.

"ஆழிசூழுலகமெல்லாம் பரதனேயாளநீபோய்த்
தாழிருஞ்சடைகடாங்கித் தாங்கருந்தவமேற்கொண்டு
பூழிவெங்கானநண்ணிப் புண்ணியத்துறைகளாடி
ஏழிரண்டாண்டின்வாவென் றியம்பினனரசன்."

என்று சொன்னபோது "அரசனுஞ் சொல்லுவான், நீயுஞ் சொல்லுவாய். ஏது? மூத்த குமாரனாகிய எனக்கின்றி உன் குமாரனுககுப்பட்டம் எப்படி வரும்! போ! பயித்தியக்காரி!"

என்று சொல்லிவிட்டுப் பரதன் அரசனாக வரவேண்டாததற்கு வேண்டியவற்றைச்செய்யாது எனது தந்தையாரே யேவவும் அதைத்தாயாகிய தாங்களே யதனைக்கூறவும் நேர்ந்ததால் நான் பிழைத்தேன். என்னைப்போல் மக்கட் பிறப்பிற் பிறந்தவர் யார்? என்று புகழ்ந்துகொண்டு அவர் சிற்றன்னை கூறிய பிரகாரமே செய்து அதனால், "தந்தை தாய் வாக்ய பரிபாலனம் செய்தவன் றசரத குமார ராமன்" என்று பல்லோர் துதிக்கும்படி ஏன் நடந்துக்கொண்டார். சற்று கவனிப்போம்? நாமெல்லாம் நற்கதியடையவே. ஏனெனில் அவரே அவ்வாறு செய்துகாட்டுவாராயின் நாம் யாவரும் அதைப்பின்பற்றியொழுகி நற்கெதியடைவோமல்லவா? இக்கருணைத்திறம் பற்றியே அவர் அண்ணனிடம் ஒழுகினாரென்க.

இன்னும் நமது குழந்தைப்பருவத்தில் ஊண் உடை முதலிய கொடுத்துதவிய அவர்களுக்கு நாம்விருத்ததிசையில் அவ்விதமே உதவவேண்டுமென்றோ? இதுபற்றியே நமதௌவைப்பிராட்டியும் "தந்தை தாய்ப்பேண்" என்று பொதுப்படக் கூறியிருக்கின்றனர் என்க. அவர்கட்கு அவ்விதம் கொடுத்துபசரியாமல் தானே சுகித்திருப்பவன் பெரிய பாதகஞ் செய்தவனாக எண்ணப்பட்டு அவன் அதற்குத்தக; தீயெரி நரகிடை வீழ்வன் எனக் கம்பராமாயணம் பள்ளிபடைப் படலத்தில் கூறப்பட்டிருக்கிறது.

தாய்பசி யுழன்றுயிர் தளரத்தான்ற
யாய்பெரும் பாழ்வயிறளிக்குமாபாவியும்
நாயகன்பட நடந்தவனு நண்ணுமத்
தீயெரிநரகிடைவீழ்க யானுமே.

அஃதெல்லாம் சரியே பிதாவை முற்கூறாது அன்னையை யேன் முற்கூறியிருக்கின்றது? என்பார்க்கு, அன்னையே நமது சிறு பருவத்தில் நமக்கெனவேண்டியுதை அருகிலிருந்து செய்துவருகிறாளேயன்றி பிதாவானவர் அருகில்வருவதேயில்லை. அதனால் தான் வெகுநாள் வரைக்கும் நமக்கு நமது அன்னை



யே சரிவரத் தெரிகிறது. பின்பு தான் அவள் சுட்டிகாட்டத தகப்பனாரை யறிந்து கொள்ளுகிறோம். ஆகையால் தான் என்க.

இனி அவர்களது வார்த்திகத்தில் அவர்கள் வேண்டுவன கொடுத்து உபசரிக்கவேண்டும் என்பது ஒருகலை. அவர் இறந்த பின்னர் அவர்கட்குச் செய்யவேண்டிய கிரியைகளை ஒழுங்காக நடத்திவைக்கவேண்டும். இதன் பொருட்டே முற்றத்துறந்த பட்டினத்தடிகள்கூட அன்னையின் சவத்தை எடுத்து அடக்கஞ்செய்து பின்னுஞ் செய்வன செய்து போயினர் எனின் வேறென் வேண்டும்?

ஒருவன் தனது தாய் தந்தையர்களை கடவுளாக எண்ணித் துதிப்பானாயின் வீடுபேறடைவன் என்பதும் தொனிக்கவே ஆலயந்தொழுவது சாலவு நன்று எனப்பிறிதோர் சூத்திரத்தை அடுத்தாப்போல் வைத்திருக்கின்றனள் ஔவை. அன்னையும் பிதாவையுமே கடவுளாகக் கருதித் துதித்து வழிபட்டாலே போதுமோ என சங்கைகொள்வார்க்குப்போதும் எனவே உரைக்கினும் பொருந்துமானாலும் கோயிலுக்குப்போய்க்கடவுளைத்தரிசித்து பக்தி பண்ணுதலும் நன்று என்று கூறியிருக்கின்றனர்.

இதையெல்லாம் விட்டு அன்னையையும் தகப்பனையுஞ் சதா ஏசுதலும் அடித்தலுமே தொழிலாகப்பூண்டுள்ள சிலரும் இருக்கின்றனர். இவர்களும் மனிதர்களா?

ஆகவே நாம் நமது அன்னையையும் பிதாவையும் முன்னறி தெய்வகமாக எண்ணி ஏத்தித் துதித்து, எல்லா நலனையும் நலக்க நண்ணுவதற்கு சர்வேஸ்வரனது அருளைப்பிரார்த்திப்போமாக.

சுபம்.

ஜி. இராஜகோபாலன்.

## விசித்திர விநோத விகட மகா சமுத்திரம்.

(சூஸ்:) வெகு நோத்தியாச் சிவன்சரித்திரத்தை விகடமாய்ப் பேசினும், பக்தியைப்பெரிதாய்க்கொண்டே விளம்பிவந்தனை. தற்காலத் தரும கர்த்தாக்களில் ஒருவகையாரை எடுத்துக்கூறியது கவனிக்கத்தக்கதே. ஆயினும் பின்னால், பல கோயில்களிருந்தும், படைபடையாய்க் கவனிப்பாரில்லையெனக் கூறிக் கஜனி மாமூதையுங், கோரியையுங் கண்ட்ருக்ட் எடுக்கப் பேசியது விந்தையிலொன்றாகும். ஆகவே பிள்ளையாரைப்பற்றியும், குமரனைப்பற்றியும் பாட்டால் துதிக்க விரும்புகிறேன்.

(விதூ:) துதிக்கைதான் சிவனினும் பெரியன். ஆதலாலவனையும், அவன் தம்பி குமரனையுங் கூறியழைக்க வேண்டியதுதான். காவடிச்சிந்தாய்ப் பாரும்.

### தோந்தியுங் கந்தனுங் கதி.

குறிப்பு.

தனனத் தனன தந்த தனனத் தனன தந்த
தனனத் தனன தந்த தானனா தன
தனனத் தனன தந்த தானனா தன

தான தானன தான தானன தான தானன தான தானன
தனனத் தனன தந்த தானனா தன
தனனத் தனன தந்த தானனா.

பழகப் பழகவுந்த னழகைப்பெருக வின்று
பகரப் பெருமைதந்த யானையே சிறு
பதியைக் கொளவு மெங்கு மானையே குளம்

பாலுந்தேனொடு பாகுமாகிய நாளிகேரமு மாசையாலதை
பதியப் பதிய வுண்ட யீசனே நல
பரதைப் புகல சிந்தை வாசனே.

உ

KAMALASANI.

கமலாஸனி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் 3 1915ஆ அக்டோபர்மீ சஞ்சிகை 10.

கழகப் பதிவையுண்டு கமலைப் பதியிலிங்கு
கருதப் பெரிது மண்டி யேனையா பல
கருமப் பொதியு கந்து நானையா சில

காலமர்கவு மேலுமேலுமே காலைமாலையில் வேலையேநிலா
கனியக் கனிய நின்ற தேனையா வுன்
களியைத் தராவுமிங்கு தானையா.

குறிப்பு 2.

தத்ததன தத்ததன தானா தன
தத்ததன தத்ததன தானா தன
தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தானா தன தானா.

சித்தமது யித்தினமு மீசா யென
செப்புவது மிப்புவியி லேசா பல
சிட்டைகளை யொட்டி வெகு யிட்டமுள கட்டழகு
சிரே சில பாரே.

நத்திவிட பத்தியொடு தானே யென
தப்பனையு மிப்பொழுது நானே சொல
நட்டமில்லை முத்தமிழு கட்டமில்லை வித்ளதயினை
நாமே யறிவோமே.

குட்டியவ கிட்டியுனை கூவி மெல
தொட்டுவிட மட்டியவ லாவி சிவ
துட்டனுனை யிட்டுபல சொட்டுவர கெட்டியென
சொன்னா ளவ ளன்னாள்.

திட்டிடுத னத்தை மிக ஈய கலை
தெற்றெனவு முற்றெழுந்து பாய பொருள்
தெள்ளியெடு மெள்ளகவி விள்ளவது வெள்ளமிது
தில்லா திரி தில்லாள்.

(சூஸ்:) பலே! பலே! வெகு பேஷாயிருக்கிறதே! இன்னுஞ்சொல்லுங் கேட்போம்! ஏதேனுமுமதிஷ்டப்படி வெவ்வேறு விஷயங்களையுங் கேட்டுக்களிக்கலாம்.

(விது:) நிதானமாய்க்கேளும். படபடப்பே வேண்டாம். உமதாச்சரிய வார்த்தைகள் என்னை யதியாச்சரியப்படுத்துகின்றன. இருக்கட்டும், முன்னம் ஒருநாள் ஓர் தெரு வழியே போனகாலத்து இரண்டு பண்டிதர்கள் வாயடி யடிக்கக் கண்டேன். விந்தையை வந்து விண்டேன்.

அண்ணாஸாமி (பின் தெரியும்) வீடகன்று ஓர் தெரு வழியே நான் செல்லுகையில், அங்கு சில கோழிகள் அடிக்கடி தங்கள் கால் நகங்களாலும், மூக்குகளாலும் மண்ணைக்கிண்டிக்கொண்டிருக்கக்கண்டேன். ஓர் நாக்குப்பூச்சி தரைமேற் கிடந்தது. வேளை காலையாயிருந்ததால், சமீபத்திலிருந்தவோர் வீட்டார் இரவு முழுதுந் தூக்கமின்றிக் கஷ்டப்படுத்திய துரோகிகளைக் கொல்லவெண்ணித் தங்கள் தங்கள் படுக்கை தலையணை முதலியவைகளை வெளியிற் காயப்போட்டிருந்தார்கள்.

அப்பொழுது அதிலிருந்து வெளிப்பட்டு வந்தவோர் வித்வத் சிரேட்ட விநோத மட்குணமொன்று மேற்கூறிய படித்த பண்டிதனைத் தான் எத்திவிடவேண்டுமென்றெண்ணித் தான் சும்மாவிராமல் மெதுவாய் நாக்குப்பூச்சியினிடம் நகர்ந்து பின் வருமாறு கேட்கப் பார்த்து நின்றேன்.



மூட்டைப்பூச்சி வந்த அந்த சத்தங்கேட்ட முந்தின நாக்குப்பூச்சி ஒரு கேள்வி போட்டது.

முன்னழகு பின்னழகு மூட்டைப்பா வழகு
என்னழகு முன்னினுமே யீராறு மடங்கு
சின்னழகு போழகு சீரான தெந்தன்
நின்னழகு வன்னமொடு நேராத கூறுமே.

உடனே கோபமுள மூட்டை கொட்டியதிதுவே.

கட்டினை யுன்னழகு கருதினை யதனால்
எட்டினை யிப்பொழுது கிளறினை யென்வாயை
ஒட்டினை யதனைமுளரினை யிக்கதை
யெட்டினை யுதிரமும் என்றுமே குடியாதே.

நாக்குப்பூச்சிக்கு மூக்குப்போனதால் தூக்கிப்பாடிய தேக்குப்பாட்டு.

நித்திரையை நீக்கிபல நீள்ரோக மளிக்கு
முத்திரையை யாக்கியது மோதவுமுன் மக்க
ளத்திரையை சுத்திமெல வாதவன் முன்போட
சித்திரையை நத்திவிடச்சேர்வீ ரெமபுரீ.

மூட்டையின் மூட்டையின் பாட்டு.

சல்லாவும் வேறுபல் சட்டைமே லிட்டாலு
மெல்லாமு முள்வேயு மெள்ளவே சென்றிட
வல்லாம னென்னோர்மை நாற்காலி மேஜையுங்
குல்லாவு டன்டர்பன் குறிப்பி டென்னகமே.

மறுபடியும்,

வெளியிலே கிடந்தும் வெயிலிலே யுலர்ந்து
மொளியிலே யுனக்கோ ஒலியாத தம்பதிக்
களியிலே நடக்குங் காஸ்பாண்டென்லைதையும்
துளியிலே யானறிய தாபவுயதிலரீ.

அப்பொழுது ருசிபார்க்கு மாயுதப்பூச்சியார் சற்று நிதானித்து தங்களிருவருக்குஞ் சௌகரிய அசௌகரியங்களிருப்பதை யெண்ணியதுஞ் சில கோழிகள் நெருங்கி வருவதையுங் கண்டு பின் வரும் பாட்டைப்பாடித்தன் தலை, உடல் முதலியவைகளை மண்ணுக்குள் இழுத்துக்கொண்டது.

யாதொரு விதமான சந்தேகமுமில்லாத
நீண்ட நாக்குக்குரிய பா.

ரயில் வண்டியானகை ரயிட்டாய் நீயுமே
மெயில்வண்டி யோட்டமு மோட்டமாயோடவே
துயில்வண்டி போலவுந் தூங்குமென் மாந்தரும்
மயில்கண்ட நாகமாய் மதிக்க வுன்னையே.

மூட்டையும் பின் கூடு அதிகமாவதையுணர்ந்து மெல்ல ஒரு பாட்டோடு ஞானம் வந்து பாடித்தன் சிறு கால்களைக் கொண்டு கடிது சென்று ஒரு பாயின் இடுக்கில் ஒட்டிக்கொண்டது. ஆகவே மூட்டையின் ஞானப்பாட்டு தர்க்கத்தை முடிவுக்குக்கொண்டு வந்தது.

சுகமறியா சோகையே சொல்லவும் வந்தையே
யகமறியா தாத்தும யதார்த்த மிகவே
சகமறியா சூத்திரஞ் சாத்திர மேத்திய
மகமறியா தாயிடின் மாபுக ழிலையே.

(சூஸ்:) அவைகள் பேசிய விஷயங்கள் தங்கட் கெப்படித் தெரிந்ததோ?

(விதூ:) நாக்கு மூட்டைப்பாஷை நன்கறிந்த எனக்கு ஏன் தெரியாது. இப்போது பழக்கமில்லை. ஆயினுஞ் சிறிது சொல்லுவேன் ஒப்புக்கொண்டால்.

(சூஸ்:) அண்ணாசாமி யென்றது யார்? என்ன விசேஷம்?



(விதூ:) அவன் கதை வெகு களேபரம். அருளால் அபக் மகா முனியும், டபக்கேஸ்வரரும் அஞ்சிநின்றார்கள். வெகு விந்தை.

(சூஸ்திரதார்:) வஞ்சமிலா நெஞ்சுள்ளவனும், பக்தியிற் பெருத்தவனுமான, அபசுர அண்ணாசாமிக்கு, அருள் எவ்வாறு கிடைத்தது? அவன் சரிதையைக் கேட்டுக்களிக்கவேண்டியதும் அவசியமெனத் தோற்றுவதால், தயைகூர்ந்து மெந்தனுக் கெடுத்துரைக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(விதூ:) பெரியவரே! உமக்கும், அவன் சரித்திரத்தைக் கேட்டுக் களிக்கவேண்டுமென்னு மெண்ணந்தோன்றியது ஒரு வகையான பக்தியேயாகும். ஆதலாலோதி வருகிறேன். அவன் அடிக்கடி என்னிடங் கூறிவந்த ஓர் வண்ணத்தை முதன் முதலிற் காட்டிப் பின் அவன் விருத்தாந்தத்தைக் கூட்டுகிறேன். உமது கவனத்தை மாத்திரம், வேறெங்குஞ்செல்ல விடாதேயும்.

வண்ணக் குழிப்பு.

தந்தனந் தந்த தந்தனந் தந்த
தந்தனந் தந்த தனதானா

செந்தியுங்கொண்டு
விந்தையும் விண்ட
செங்கையுங் கண்டு
வெண்கையின் பண்ட
சிந்தையும் இன்று
விதமாலே,
சிங்கமும் அண்ட
மினிதாவா.

சுந்திரன் பங்கு
குந்தியும் வந்த
உந்தியும் இந்த
குந்தளம் பிந்தி
அம்பருன் சென்று
குணசீலா.
சந்தமும் தந்த
வரலாலே.

அந்தணன் பந்தி
அந்தகஞ் சண்டை
முந்தவும் அந்த
யறியேனே.

அங்கமுந் தங்க மெங்கிலுந் தொங்கல்
சங்கமுஞ் சொந்த மிசையோடே.

மந்தரம் பம்ப ரப்பருங் கந்தை
மந்தையும் வங்க மணிவோனே.
மங்களங் கங்கை சந்திரன் குஞ்சி
மங்கையுங் கொண்ட மகராஜே

“ அபசுர அண்ணுசாமியின் சரித்திரம். ”

நமதண்ணுசாமி குடும்பத்திற்கோரே பிள்ளை. இடும்பென்பது இவனிடமிலவேயில்லை. கடும் பகைமேயாரிடத்திலுங் கொடுமுகங்காட்டாதவன். இவனுக்கு மனைவிகளிருவர். மக்கள் பதின்மர். வறுமையின் பெருமைவாய்ந்த வாசஸ்தலம் இவனகமே. இவனிருக்குமூர் பொய்யூர். நிசம்பூரிற் கொஞ்சகாலந் தஞ்சமென வஞ்சமின்றி வசித்தவன். இவனது வித்தையினிலட்சணம் பேசுதலரிது. இவனுக்குக்கிடைத்த அடைமொழியால் யாவரும் நன்குணரலாம். ஆயினுமிவனும் ஓர் வாத்தியக்காரனெனப் பாதநியங்கொண்டாடலாம். என்ன வாத்தியமெனிலோ நாதஸ்வரமென்பதே முன்வந்து நிற்கும்.

இந்த அஸாமிக்குப் பொய்யூர்க்கோயிலில் டபக்கேஸ்வரஸ்வாமியின் ஊழியங் கிடைத்திருந்தது. அக்கோயிலும் இந்த அண்ணுசாமியை எதிர்பார்த்திருந்ததின் காரணம் டபக்கேஸ்வருக்கு ஐவேஜி கொஞ்சமாயிருந்ததனாலேயே ஆகையால் கோயிலிற் பாய்கூட உட்காருவதற்குத் தனக்குக் கொடுக்கவில்லையென அவன் என்னிடமொருநாள் தன் விருத்தாங்களைச் சொல்லி வரும்போது செப்பியது ஞாபகத்திற்கெட்டுகிறது.

இவன் தினந்தினம் தன் வாத்தியத்தைக் காற்றுக்கொண்டேதலூத அக்கோயிலின் முன் மண்டபம் ஒவ்வொரு கல்லையும் ஒருவருகருக் திங்கின்றிப் பாங்குடன் உதிர்க்க வாரம்பித்தது. வென்னென்று மியம்பவேண்டுமோ? அபசுரக்காடு அல்லவா?



எங்கு சென்றபோதிலும் எத்தொழிலின்மேற் கண்ணுயிருந்
தாலும் கோயிற்காலங்கள் நடக்கும்போது தவறாமல் அங்கு
வந்து தன் வித்தையைக் காட்டிக்கொண்டிருப்பது நிச்சயம்.
அவ்வூரார் அனைவரும் இவன் வித்தையை விரும்பினாரில்லையே
னும் இவன்மேற் பட்சம் மாத்திரமற்றவர்களாயில்லை. சிறு
குழந்தைகளும் இவன்மேல் பிரியமாகவேயிருந்தன. வேடிக்
கையாய் அனேகர் இவனை அந்தப்பாட்டை வாசித்துக்காட்டு.
இந்த நோட்டை வாசித்துக்காட்டு என்று சொல்லினும் உண்
மையாய் மதித்துத் தனக்குத் தெரிந்தவரையில் வாசித்துக்
காட்டி ஒவ்வொருவரையுந் திருப்தி செய்விப்பது வழக்கம்.

இவனிப்படியிருக்க, அக்கோயிலின் தெற்குப் பிராகாரத்
தில் ஒரு பூந்தோட்டமுண்டு. அங்கு அபக்கேஸ்வர முனி
யென்ற ஓர் பெருஞ் சடாமுனியொன்று இருந்ததாய்க்கூறுவர்.

இம்முனி அனேகரையடித்துக்கொன்றுபோட்டதாகவும்
இரவில் ஒருவரும் அத்தோட்டத்திற்கருகே செல்வது கூடா
தெனவுமனேகர் கூறி வந்தனர்.

ஆயினுமிவ்வரிய ஜடாமுனியும், டபக்கேஸ்வரரும் பக்தன்
அண்ணுசாமி வந்து ஆயுதத்தை வாயில் வைத்து ஒலி கிளப்ப
வும் இனி நம்மை எப்பொழுது உள்ளே வரவிடுவானோவென
அபசுரத்துக்கஞ்சி டபகெனப் புறப்பட்டுப் போய் விடுவது
வழக்கம். இப்படியே டபக்கேஸ்வரரும், அபக் மகாமுனியும்
ஒருவரையொருவர் சந்திக்காது அநேக நாட்களோடியொளித்
திருந்தனர். ஆனால் அண்ணுசாமியை அறைந்து எங்கேயாகி
லுந் தூக்கியெறிந்துவிடவேண்டுமென்ற எண்ணம் அந்த முனிக்
கிருந்தும் ஸ்வாமியின் ஊழியன் என்பதையும் கபடு முதலிய
வையில்லாதிருப்பதையுஞ் சிந்தித்துத் தினங்குறிப்பிட்ட காலத்
தில் ட்யூட்டி சரியாய்ப் பார்த்து வருவதையும் நிதானித்துந்
தான் ஓடியும் அண்ணுசாமியையணுகத் தனக்குச் சாத்திய
மில்லாதிருந்ததாயுந்தெரிகிறது.

இஃதிவ்வாறிருக்க ஒருநாள் நமது கதாத்தம்பி பக்கத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்திற்குத் தான் போய்வர வேண்டியதாயிருந்தமையால் அங்கு சென்று தன் காரியம் முடிவதற்குக் காலம் அதிகமாவதையும், அன்று பிரதோஷ தினமாகையால் மாலையில் கோயிற் சேவகத்திற்குத்தான் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேரமுடியாதிருப்பதையும் எண்ணியெண்ணி இடையிடையே ஒரு கண் தன் காரியத்தின்மேலும் மற்றொரு கண் டபக்கேஸ்வரன்மீதுமாகக்கொண்டு நின்றான். ஆயினுந் தன்னாலியன்றவளவு காரியத்தைத் துரிதப்படுத்திக்கொண்டும் இருந்தான். மாலை ஐந்தரை மணியாகவே காரியமும் ஒருவாறு கைகூடிற்று. உடனே வெகு வேகமாய்க் கோயிலை நோக்கிப் புறப்பட்டுத் தன் காரியத்தை வீட்டோர்க்குங் கை கூடியதாய்ச்சொல்ல நினையாது கோயிலையடைந்தான்.

(இன்னும் வரும்)

S. V. Nathan.

## பெண் கல்வியும், நம் குடும்பக் கிழவர்களும்.

ஓர் குடும்பக் கிழவர் தம் தௌகித்திரி (பெண் வயிற்றுப் பெண்) யாகிய கோமளம் என்னும் பெண்மணி தன் வீட்டிற்கு வந்தபோது அப்பெண்ணை நோக்கி,

கிழவர்: கோமளா, என்ன? ஒரு வாரமாய் நீ இங்கு வரக்காணோம்

கோமளம்: தாத்தா, வராமலென்ன, ஆனால் அடிக்கடி வருவதற்கு அவகாசம் நேரவில்லை.

கிழவர்: என்ன அம்மா அப்படிப்பட்ட வேலை உனக்கு?



கோமளம்: படிக்கிற வேலைதான்.

கிழவர்: ஆ! இப்போது உனக்கு வயது இருபது ஆகிறதே! இன்னமென்ன இழவு படிப்பு.

கோமளம்: தாத்தா, இருபது வயதானால் படித்தல் கூடாதா என்ன?

கிழவர்: ஆண்பிள்ளையானால் படிக்க வேண்டியதுதான். பெண்ணாய்ப்பிறந்த உனக்கென்னத்திற்குப்படிப்பு? படித்து உத்தியோகம் பண்ணப்போகிறாயோ? போ போ பயித்தியம் பிடித்தவளே! பெண்கள் படித்தால் புருஷனை மதிக்கிறதில்லை. கள்ள ஆம்படையானுக்குக் கடிதம் எழுதத்தான் பெண்கள் படிப்பு உதவும்.

(என்று மனம்போனபடி தாறுமாறாய்ப்பேசிவிட்டார் கிழவர். இதனால் மனம் மிகநொந்த கோமளம், தனது கல்வியாலமைந்த பொறுமை முதலிய சற்குணங்களால் மனதைத்தேற்றிக்கொண்டு கிழவரை நோக்கி,)

கோமளம்: தாத்தா, அவசரப்படாதேயுங்கள், சற்றுப் பொறுமையாய் ஆலோசித்துப்பேசுங்கள்.

கிழவர்: என்னடி ஆலோசித்துப்பேச. நீ எனக்குப்புத்தி புகட்டுகிறாயோ! அந்த கிழக்குவீதியில் லலிதா என்பவள் படித்துக் குப்பைகொட்டிய கதை தெரியாதோ! ஆம்படையானை விட்டோடிப்போய்விட்டாளே முட்டாளே!

கோமளம்: தாத்தா! நீங்கள் சொன்னது சரிதான். ஆனால் படிக்காத பெண்கள் ஒருவரும் லலிதாவைப்போல நடந்திருக்கவில்லையென்று உறுதியாய்ச் சொல்வீர்களா?

கிழவர்: சற்று யோசிக்கிறேன்.

கோமளம்: என்ன தாத்தா யோசனை. படித்தால்தான் பெண்கள் கெட்டநடத்தை நடக்கிறார்கள். படியாதவர்கள் அப்படி நடக்கிறதில்லை என்ற நியமமிருந்தால் கெட்டநடத்தைக்குப் படிப்பு காரணம் என்று சொல்லலாம். காரணம் உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் துணியப்பட வேண்டாவா?

கிழவர்: (தன் தௌகித்திரியின் வாக்குத்தாட்டிக்கும், பொறுமைக்கும் தனக்குள் மகிழ்வடைந்தும், தான்கொண்ட எண்ணத்தை மாற்றுதற்கு முடியாமையால் கோமளத்தைப் பார்த்து,)

கோமளா, என்ன! என்னென்னவோ சொல்லுகிறாய். எனக்கொன்றும் விளங்கவில்லை. உடன்பாடு என்றால் என்ன? எதிர்மறை என்றால் என்ன? அவ்விரண்டினால் எப்படிக்காரணம் துணியப்படுகிறது.

கோமளம்: தாத்தா, சொல்லுகிறேன் கேளுங்கள். "மண்ணிருந்தால் குடம் உண்டாகும்" என்பது உடன்பாடு "மண்ணில்லாவிடின் குடம் உண்டாகாது" என்பது எதிர்மறை. இப்படிப்பட்ட உணர்ச்சியால் குடம் செய்யவேண்டியவன் அதற்குக்காரணம் மண் என்று துணிந்து மண்ணைச்சம்பாதிக்கிறான். குடம் வேண்டாதான் மண்ணைத்தேடுவதில்லை. அதுபோல, படிப்பிருந்தால் கெட்ட நடத்தையுண்டாகிறது. படிப்பில்லாவிட்டால் அஃதுண்டாவதில்லை என்பது நமது அநுபவத்தால் நிச்சயிக்கப்பட்டால், கெட்ட நடைக்குக்காரணம் படிப்பு என்பதை நாம் தெரிந்து படிப்பைச்சம்பாதிக்க முயலாதிருந்துவிடலாம். அப்படியாதேனும் வெகுநாட்களாய் வாழ்ந்த உங்கள் அநுபவத்திலுண்டா தாத்தா! நன்றாய் ஆலோசித்துப் பார்த்துச்சொல்லுங்கள். அவசரமொன்றுமில்லை.

கிழவர்: என் கண்ணே! அப்படிச்சொல்ல என் மனம் துணியவில்லை. ஏன்? படிப்பில்லாத பெண்களிலும் கெட்ட



வர்களிருக்கிறார்கள். ஆனால் பெண்களுக்குப்படிப்பு அநாவசியம் என்பது மாத்திரம் என் மனதை விட்டகலாது.

கோமளம்: சொல்லுகிறேன் கேளுங்கள். ஒருநாள் என் தாயாராகிய உங்கள் மகள் உங்கள் மருமகப்பிள்ளைக்கு ஸ்நானத்துக்காகக் கிணற்றில் ஜலம் முகந்துக்கொண்டிருக்கையில் திடீரென்று தலைவலியும், மயக்கமுங்கண்டு நிற்கச்சாத்தியப்படாததால் உடனே தாழ்வாரத்திற்சென்று படுத்துக்கொண்டார்கள். அதை அவர்களுடைய மாமியாராகிய என் பாட்டியார் பார்த்து மருமகளை நோக்கிச்சொன்னது.

மாமியார்: என்னடி ஒரு சொம்புத்தண்ணி மொள்ரத்துக்குள் நொந்துபோனையோ? சரிதான் நீ என்ன செய்யப்போறே. 'அடிப்பானுக்கு வெளுப்பான் ஜாதிவண்ணான்' அம்மா அம்மா என்றால் சும்மா இருப்பவளும் சூது கற்றுக்கொள்ரா?

மருமகள்: 'தலைநோவுங் காச்சலும் தனக்குத் வந்தாத் தெரியும்' எருது வருத்தம் காக்காய்க்குத் தெரியுமா?

மாமியார்: என்னடி காக்கா சீக்கா என்று ஒளர்ரே.

மருமகள்: நீதான் ஒளர்ரே. நான் ஒளறலே; ஆங், ஆங், அப்பா, அம்மா, சாமிஇ, என் தலைவிதியா இது.

என்று தலையில் பலமுறை அடித்துக்கொண்டு அழத்தொடங்கினார்கள். இவைகளை ஸ்நானத்துக்காகக் காத்துக்கொண்டிருந்த உங்கள் மருமகப்பிள்ளை தெரிந்துகொண்டு ஸ்நானம் செய்யாமலே வெளியே போய்விட்டார்.

தாத்தா, இந்தச்சரித்திரத்தைக்கூர்ந்து ஆலோசித்துப் பாருங்கள். என் பாட்டியார் கல்வியறிவுடையவர்களாயிருந்தால தண்ணீர் முகந்துகொண்டிருந்த தன் மருமகள் திடீரென்று போய்ப்படுத்துக்கொண்டதற்கு யாதாவது காரணமிருக்கவேண்டுமென்று யோசிக்கவரும். பிறகு அக்காரணம்

சரீர சௌக்கியமின்மையாயிருக்கலாமென ஊகிக்கவ்ரும் வரவே மருமகளின் சமீபம்போய் இனியமொழிகளால் விசாரிக்கநேரும். உங்கள் மகளுக்காவது கல்வியறிவிருந்தால் மாமியார் அறிவின்மையால் பேசிய மட்டிவார்த்தைகளுக்கு மனஞ் சலியாமல் அவர்களது அறியாமைக்கு இரங்கி நயமாய்ப்பதில் சொல்வார்கள். இருவருக்கும் கல்வியறிவின்மையால் எத்தனை விபரீதம் நேர்ந்தது பாருங்கள். ஏன் "கல்வி இருந்தால்" என்று மாத்திரம் சொல்லாமல் "கல்வியறிவிருந்தால்" என்று சொல்லுகிறேனென்றால், சில பெண்கள் எழுத்தைக்கூட்டிப் படிக்கமாத்திரம் கற்றுக்கொண்டு அதோடு படிப்பு வந்துவிட்டதாய் நினைத்து மேலே அறிவை வளர்க்கக்கூடிய நூல்களைப் படிப்பதில்லை. அவர்களென்ன செய்வார்கள். மேலே இருக்கிற பெரியவர்கள் தங்கள் பெண்கள் படித்திருக்கவேண்டுமென்ற ஆசையுடையவர்களாயிருந்தும் நன்றாய்ப்படிப்பதில்லை. அதனால் அவர்கள் நன்னெறிக்குரிய நூலறிவை அடைகிறதில்லை. அதனால் சில பெண்களிடம் விபரீத ஒழுக்கங்காணப்படுகிறது. அதைப்பற்றி மற்றொரு சமயம் பேசுவோம்.

கல்வி கற்பது உத்தியோகம் பண்ணுதற்கல்ல. அறிவை விசாலப்படுத்திக்கொள்ளுவதற்கு. அவ்விசால அறிவைக் கொண்டு அவரவர்களுக்கு இஷ்டமான காரியங்களைச் செய்து கொள்ளுகிறார்கள். யாரோ சில பெண்கள் கல்வியைக்கெட்ட வழியில் உபயோகப்படுத்திக்கொள்வதைக்கொண்டு கல்வி கற்கக்கூடாதென்போமானால், புருடர்களிலும் சிலர் படிப்பைத் துர்மார்க்கத்தில் உபயோகிப்பதுகொண்டு புருஷருக்கும் படிப்பிப்பது கூடாதெனல் வேண்டும்.

இருளைப்போக்கிப் பதார்த்தங்களிலுள்ள குணதோஷங்களையறிந்துகொள்வதற்கு ஏற்றப்படுகின்ற விளக்கைக்கொண்டு ஒருவன் வீட்டை எரித்துவிட்டதால் விளக்கேற்றுவது பிழையென்பாருமுண்டா? தாத்தா, இன்னொரு சரித்திரம் சொல்லுகிறேன் கேளுங்கள்.



எங்கள் அடுத்த வீட்டுக்காரர் சுப்பண்ணு சென்றமாதம் காசியாத்திரையாகப் புறப்படும்போது செலவுக்குக்கொண்டு போகக் கையில் எடுத்த இரண்டு நூறுரூபாய் நோட்டுகளைக் கூடத்து மேஜையின்மீதிருந்த கெடியாரப்பெட்டியின்கீழ் வைத்துவிட்டு மூட்டை கட்டிக்கொண்டிருந்தவர் மறதியால் நோட்டுகளை எடுக்காமல் ரெயிலேறிப்போய்விட்டார். பிறகு நடுவழியில்போய் நினைத்துக்கொண்டு அந்நோட்டுகளை எடுத்துக்காசிக்கு ரிஜிஸ்டர் செய்தனுப்பும்படியாகத் தன் பத்தினிக்கு எழுதியனுப்பிவிட்டு, கையிலிருந்ததைக்கொண்டு காசிக்குப்போய்விட்டார். அந்தக் கடிதத்தைப்படித்துப்பார்க்க, சுப்பண்ணு பத்தினிக்குப் படிப்பில்லாமையால் தங்கள் காரியஸ்தரிடம் கடிதத்தைக்கொடுத்துப் படிக்கச்செய்தாள். அவன் விஷயத்தைத்தெரிந்துகொண்டு அதைச்சொல்லாமல் ஏதோ க்ஷேம சமாசாரம் எழுதியிருப்பதாய்ச் சொல்லிவிட்டு அந்தம்மாள் உள்கட்டிற்குச்சென்றதும் கெடியாரப்பெட்டியின் கீழிருந்த நோட்டுகளையெடுத்துக்கொண்டு ஊரைவிட்டே போய்விட்டான்.

இந்த விஷயம் யாவும் காசியிலிருந்து பிறகு வந்த கடிதத்தைக்கொண்டு விசாரிக்க விளக்கமாச்சுது.

தாத்தாவே, சுப்பண்ணு பெண்டாட்டி படித்திருந்தால் இந்தக்கஷ்டமும் நஷ்டமும் நேர்ந்திருக்குமா?

ஐயா, இன்னொரு சரித்திரங்கேளுங்கள். சில மாசங்களுக்குமுன் வீரபாளயத்தில் கனகம்மாள் என்னும் குணவதி தன் கணவன் இரங்காசாரி மதுரைக்குப்போனவர் சில மாசங்களாய் வராமையால் அவருக்கு ஒரு கடிதம் எழுதவேண்டி, தன் பந்து ஒருவரிடம் சொல்லிக்கடிதம் எழுதச்சொன்னாள். அப்படி எழுதச்சொன்னதில் இப்போது நமக்கு வேண்டிய அம்சம் யாதெனில்,

“அடுத்த சனிக்கிழமை இரவு 12-மணிக்கு இவ்விடம்

வரும் ட்ரெயினில் தாங்கள் அவசியம் வந்துவிட்டுப்போகவேண்டும்" என்பதே.

இந்தப்படி எழுதியதாய் அபிநயித்துவிட்டுத்தபாலில் கடிதம் போடுவதற்காக அரையணாவும் அந்தம்மாளிடம் வாங்கிக்கொண்டுபோன அந்த உறவினன் அதுபோல் செய்யாமல், கணவன் வருகைக்குக் கனகம்மாள் எதிர்பார்த்திருந்த அன்றையதினம் அவ்வுறவினன் தன் முகத்தில் கரியைப்பூசிக்கொண்டு வேறொருவனையுந் துணை கூட்டிக்கொண்டுவந்து கனகம்மாள் வீட்டின் கதவைத்தட்டினான். கனகம்மாள் தான் எழுதியபடி தன் கணவன்தான் வந்துவிட்டார் என்று, அவர் கண்டு களிக்கும்படி தன்னையலங்கரித்துக்கொண்டிருந்தபடி மிகக் குதூகலத்துடன் வந்து கதவைத்திறந்தாள். உடனே அவ்வஞ்சகன் அந்தம்மாளின் வாயில் துணியை அடைத்துவிட்டு எல்லா நகைகளையும் கழற்றிக்கொண்டதுமல்லாமல் வீட்டிலிருந்த சில சொத்துக்களையும் எடுத்துக்கொண்டு ஓடிப்போய் விட்டனன். பிறகு காலாந்தரத்தில் விஷயம் வெளிப்பட்டது.

ஐயா, கனகம்மாள் கல்வியில்லாத தன்மையால் அடைந்த லாபத்தைப்பாருங்கள். இதெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். எனது சொந்த அனுபவத்தைச்சொல்கின்றேன் கேளுங்கள்.

நான் கல்வியறிவுடைய மாமியாரைப்பெற்றிருப்பதால் உலகத்திலுள்ள பெண்களுக்குள் என்னைப்பாக்கியவதியாக நான் மதித்திருக்கின்றேன்.

அண்டை அயல்வீடுகளில் நடக்கும் சண்டை சச்சரவுகள் எங்கள் வீட்டில் எப்போதும் நடந்ததில்லை. நானும் உங்கள் மாப்பிள்ளையாகிய என் தகப்பனாருடைய விடா முயற்சியால் கொஞ்சம் படித்திருப்பதால் வீட்டு வேலை முடிந்தவுடன் நானும் என் மாமியாரும் உட்கார்ந்துகொண்டு நல்லொழுக்கத்துக்குரிய சரித்திரங்களையும் தர்மசாஸ்திரங்களையும் படித்துப் பார்ப்போம். எங்கட்குச் சந்தேகமானவைகளை என் மாமனாரி



டத்திலும் கணவரிடத்திலும் கேட்டுத் தெரிந்துகொள்வோம். சில பெண்களைப்போல, படிப்பு விஷயமாய் மாமனாரிடத்தும் புருஷனிடத்தும் கேட்டுத்தெரிந்துகொள்ள நானாவது என் மாமியாராவது பயமும் வெட்கமும் கொள்ளுகிறதில்லை. அவர்கள் எங்கட்குத்தெரிவிப்பது எங்கள் மனதுக்குச் சரிப்படாவிட்டால் தெளிவுண்டாகிறவரையில் அவர்களுடன் வாதிப்போம். அவர்களும் எங்கள் ஆக்ஷேபத்துக்குச் சந்தோஷமுடையவர்களாய்ப் பொறுமையாய் விஷயத்தைப்போதிப்பார்கள். கெட்ட காரியஞ்செய்வதில் மாத்திரம் பயமும் வெட்கமும் இருக்கவேண்டுமே தவிர, நல்லது செய்வதற்கும் தெரியாததை ஆக்ஷேபித்துத் தெரிந்துகொள்வதற்கும் பயமும் வெட்கமுங் கொள்ளக்கூடாதென்று எனது மாமனார் எங்கட்கு அடிக்கடி போதித்து வந்தமையால் நாங்கள் அவர்களிடம் எதையும் ஆக்ஷேபித்துத் தெரிந்துகொள்ளத் துணிவுடையவர்களானோம். இதனால் எங்கட்கு அறிவு விசாலப்படுவதை நாங்கள் அறிகிறோம்.

ஆகையால் நான் பாக்கியவதியல்லவா? தாத்தா! நீங்கள் சொல்லுங்கள். அன்றியும், எங்கள் ஸ்திதியும் வருமானமும் மிகக்குறைவாயிருந்தும் உள்ளதைக்கொண்டு சந்தோஷமாய் நாங்கள் காலக்ஷேபம் செய்கின்றோம். எதனால்?

"செல்வம் என்பது சிந்தையின் நிறைவு
அல்கா நல்குரவு அவா எனப்படும்"

எனக் குமரகுருபரர் கூறியதுபோன்ற அநேக வாக்கியங்களை நாங்கள் வாசித்திருப்பதால்.

கிழவர்: கோமளா, நீயே பாக்கியவதி. நீயே பாக்கியவதி. நீயே பாக்கியவதி. உன் அருமையான "பெண் கல்வி"யைப் பற்றிய பிரசங்கத்தைக்கேட்ட நானும் இன்று பாக்கியவானானேன் என்றால், நீ பாக்கியவதியென்பதில் சந்தேகம் யாது?

கோமளம்: தாத்தா! உங்கள் பௌத்திரியாகிய குமுத வல்லியை நன்ருகப் படிக்கச்செய்யுங்கள். படிப்பிக்காவிட்டால் நான் என் மகனுக்குக் குமுதாளை விவாகஞ் செய்விக்கச் சம்மதியேன். குமுதாளும் வாசித்திருந்தால், என் மாமியாரும் நானும் எப்படி யொருவர்க்கொருவர் மரியாதையாகவும் பக்ஷமாகவும் நடந்துகொள்ளுகிறேமோ அப்படி நானும் குமுதாளும் நடந்து உலகத்தில் இன்பத்தையும் புகழையும் பெறுவோம். ஆதலால் உங்கள் பௌத்திரியாகிய குமுதவல்லிக்கு நன்ருய்ப்படிப்பு சொல்லிவைப்பதாய் இப்போதே உறுதி சொல்லுங்கள்.

கிழவர்: என் கண்மணியே, உனது புத்தியைக்கேட்டபிறகுங்கூட எந்த முட்டாள்தான் தன் பெண்குழந்தையைப்படிப்பியாதிருப்பான். உன் மனம்போல உன் மருமகளைப்படிப்பிக்கின்றேன். உன் தமையனுக்கும் அதுதான் இஷ்டம். இஃதுண்மை.

விசேஷ கவனிப்பு:— அன்பர்களே, மேற்கண்ட சம்பாஷணைகளில் முக்கியாம்சங்களியாவும் உண்மையாய் நடந்தவைகளே. புனைந்துரையன்று. ஊர் பேர் முதலிய அமுக்கியாம்சங்கள் கவனிக்கத்தக்கதல்ல என்பதை நீங்கள் உணர்ந்து உங்கள் அருமைப் பெண்குழந்தைகளைப் படிப்பியுங்கள். சுபமஸ்து.

ஓர் இந்து.



## கடவுளுக்கும் இன்பதுன்பங்கள் உண்டா?

நம்முடைய சமய நூல்கள் சிலவிடங்களில் கடவுள் இன்பமே வடிவமாக இருக்கிருர் என்கின்றன. சிலவிடங்களில் அவருக்கு இன்பதுன்பங்களில்லை என்கின்றன. சிலவிடங்களில், அவருக்கு இன்பதுன்பங்கள் உண்டு, ஆகலால் அவரைப் பூசிப்பவர்களை அவர் நேசிக்கிருர் எனவும், பூசிக்காதவர்களை வெறுக்கிருர் எனவும் கூறுகின்றன. இவைகளை வாசிப்போர் சிலர் இவை யொன்ருேடொன்று முரணுவதாக மயங்கா நிற்பர். சிலர் கடவுளுக்கு இன்பதுன்பங்கள் உண்டு என்பதும், அவரைப்பூசித்தால் அவருக்குப் பிரீதியும் பூசிக்காவிட்டால் வெறுப்பும் உண்டாகும் என்பதும் அறிவீனமாமெனக்கூறி, கடவுள் வழிபாட்டைக் கைவிடுவர். சித்தாந்தஞான நூல்களை ஆராய்ச்சி செய்யாதவர்களே இவ்வாறு மயங்கி இடருறுவர். ஆராய்ச்சி செய்வோர்க்கு அவையனைத்தும் உடன்பாடேயாயிருக்கும்.

கடவுளுக்குச் சொரூப இலக்கணம் தடத்த இலக்கணம் என இருவகையான இலக்கணங்களுண்டு. இவற்றுள் சொரூப இலக்கணமாவது அவர் குணங்குறிகளின்றி பேரறிவு, பேரின்பம், பேரருள் ஆகிய இவைகளேயாயிருக்கும் நிலையாகும். தடத்த இலக்கணமாவது அவர் உயிர்கள்மீது வைத்த இயற்கைத்திருவருளையே திருமேனியாகவும், குணங்களாகவும், தொழில்களாகவும் கொண்டுநின்ற நிலையாகும். சித்தாந்த நூல்கள் அவருடைய சொரூப இலக்கணத்தைக்கூறுமிடத்து அவர் இன்பமுந் துன்பமுமில்லாதவர் என்று கூறும். தடத்த இலக்கணத்தைக்கூறும்போது அவர் இன்பமுந்துன்பமுமுடையவர் என்று கூறும். இவ்விருவகை இலக்கணமும் அவருக்கு எக்காலத்திலும் இருப்பதனுல் தமிழ்வேதம் அவரை "இன்பமுந் துன்பமும் இல்லானே யுள்ளானே" என்று தோத்திரஞ்

செய்தது. ஆனால் அவருடைய சொரூப இலக்கணத்தைக் கூறும்போது அவர் குணம் குறி யொன்றுமில்லாதவர் என்று சொல்லிவிட்டு, அதனோடு அவர் இன்பமயமாயிருப்பவர் என்பது ஒன்றோடொன்று மாறுபடாதோவெனில், மாறுபடாது. அவருடைய இயற்கையுருவமெனக் கூறப்படும் இன்பமானது உயிர்கள் வினைக்கீடாக அனுபவிக்கும் சடரூபமாகிய இன்பத்தைப்போல்வதன்று. அது இன்பமும் துன்பமும் அற்ற நிலையாகும். அது ஞானமயமாகவும் அருள் மயமாகவும் இருப்பது அவ்வின்பம்வேறு அவர் வேறு என்று சொல்லப்படாமல் அவ்வின்பமே அவர், அவரே அவ்வின்பம் என்று சொல்லப்படுவது அது எல்லையற்றது. தோற்றமும் ஈறும் இல்லாதது. சுட்டுவுணர்வுக்கெட்டாதது.

பட்டணத்தடிகள்.

அடிசார்ந்த வர்க்கு முடியா வின்ப
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ
மூலமு நடுவு முடிவு மிகந்து
கால மூன்றையுங் கடந்த கடவுள்
உளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறும்புத் துளையி னிருசெவிக் கெட்டா
துறுப்பினின் றெழுதரு முள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறுந் தெய்வத் தேறல்
துண்டத் துளையிற் பண்டை வழியன்றி
யறிவி னுறு நறிய நாற்றம்.
*                    *                    *                    *

தடத்த நிலையில் அவர் இன்பதுன்பங்களையுடையவராயிருத்தலும் அவர் பொருட்டன்றி ஆன்மாக்கள் பொருட்டேயாம். எல்லா உயிர்களும் அவருடைய சரீரங்களாயிருத்தலால், அவர் இயங்க எல்லாவுயிர்களும் இயங்கும். அவர் இன்புற எல்லாவுயிர்களும் இன்புறும். அவர் போகியாயிருக்க



எல்லாவுயிர்களும் போகத்தை நுகரும். அவர் யோகியாயிருக்க உயிர்கள் யோகமுத்திபெறும். ஆதலால் அவர் உமாதேவியாரைவிட்டுப்பிரியாத போகரூபியாயிருப்பினுமிருப்பர். சின் முத்திரை தாங்கி யோகுசெய்திருப்பினும் இருப்பர். பிரமாதி தேவர்களுக்கு அவர்கள் பதவியைக்கொடுத்தும் நீக்கியும் அருள்புரியும் தேவதேவராய் அரச வீற்றிருப்பினும் இருப்பர். மண்டையோட்டை மலர்க்கையிலேந்தி பிச்சையெடுத்துண்ணுங் கோலத்துடன் இருந்தாலும் இருப்பார். அவர் கற்பனை கடந்த தற்பரம்பொருளாகையால் அவர் எந்நிலையிலிருந்தாலும் "இந்திரசாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்குந் தந்திரத்திற் சாராது சார்வதுபோல்" சிறிதும் தாக்கற்று நிற்பர்.

சிவஞானசித்தியார்.

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லா மும்பரி லொருவ னென்பர்

திருவாரூர் நான்மணிமாலை.

ஆமையோ டணிந்து தலையோ டேந்தி
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்
பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனு
மிந்தி ராதியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கண் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்து முற்றவர்த் தாங்கியும்
பரசுநர் பரசப் பணிகுநர் பணிய
வாசுவீற் றிருப்பினு மிருக்கு முறைசெயின்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
யிடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலரும்

காமமீ தூரவே முற்றிருந்தவ
டாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கு மீதெழு
தபனிய மாடத் தமிய முற்றத்
தைங்கணைக் கிழவ னரிய னடாத்தக்
கொங்கைமால் களிறுங் கொலைக்கண்வாட் படையுஞ்
சில்கா ழல்குல் வெல்கொடித் தேரும்
பல்வகை யுறுப்பும் படையுறுப் பாகப்
பவக்குறும் பெறியுந் தவக்குறும் பெறிந்து
நுணங்கிய நுசுப்பி னணங்கனூர் குழுமிக்
கைவகுத் திருந்து கழங்கெறிந் தாட
மையுண் கண்கண் மறிந்தெழுந் தலமால்
செம்முகத் தாமரைச் சிறையளிக் குலங்க
ளம்மென் காந்தளி னளிக்குல மார்த்தெழக்
கலந்துமன் றழீஇக் காமுற னிகர்க்கும்
பொலஞ்செய் வீதிப் பொன்மதிற் கமலை
யண்ணன் மாநகர்க் கண்ணுதற் கடவுள்
கற்பனை கழன்று நிற்றலி
னிற்பதிந் நிலையெனு நியமமோ வின்றே.

அன்றியும் அரசன் சிட்டர்களை விரும்பியாதரிப்பதும், துட்டர்களை வெறுத்துத் தண்டிப்பதும், செங்கோன்முறைமை யாவதுபோலவும், பிதா தன்சொற்படி நடக்கும் பிள்ளைக ளிடத்தில் அன்புகூறுதலும், சொல்வழிவாராத பிள்ளைகளைத் தண்டித்தலும், கடமையாவதுபோலவும், சர்வான்மாக்களுக் கும் இறைவராகவும்' பிதாமாதாக்களாவும் இருக்கும் கடவுள் அவர்கள் உய்யும் பொருட்டுத்தாம் திருவாய்மலர்ந்தருளிய வேதாகமநெறியில் ஒழுகுவாரை விரும்பியருள் சுரத்தலும், அந்நெறியினின்றும் விலகித்தீநெறியில் ஒழுவாரை வெறுத்து நிரயங்களிற் செலுத்தித் தண்டனைபுரிதலும் முறைமையாகும்.



அவர் நல்லாரை யளித்தலும், தீயாரைத்தண்டித்தலும் ஆகிய இரண்டு தொழில்களும் ஒன்றுக்கொன்று மாறுபாடான விருப்பு வெறுப்பு என்னும் இருவேறு குணங்களால் உண்டா னவாகக்காணப்படினும், அவ்விரண்டும் அவருடைய கருணை யின் விளைவேயன்றி வேயன்று ஆதலால் அவர் தம்மை நேசி யாதவரை வெறுத்துத்தண்டித்தல் அவருடைய மறக்கருணை யென்றும், அவரை நேசிப்பாரை நேசித்து அருள்புரிதல் அவர் அறக்கருணையென்றும் சொல்லப்படும். அவருடைய அருட் சத்தியொன்றே இவ்வாறு அறக்கருணை மறக்கருணையென இருவகைப்பட்டு ஆன்மாக்களைப் பரிபாகப்படுத்திக்கொண் டிருக்கும்.

### திருவாசகம்.

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுறைத்தான் காணேடீ
யன்றாலின் கீழிருந்தங் கறமுறைத்தா னாயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ.

அவர் தம்மை வணங்காதாரைத் தண்டித்தலும் அவர்களை நல்வழிப்படுத்தற்கே யாதலினால் பெரியோர்கள் அவருடைய அறக்கருணையைப் போலவே மறக்கருணையையும் வேண்டித் துதித்தார்கள் நமது மாணிக்கவாசகப்பிரான் '' உடையாய் கூவிப்பணிகொள்ளா தொறுத்தாலொன்றும் போதுமே'' என்று மறக்கருணை கிடைத்தாற்போதும் என்றனர்.

### போற்றிப்பஃறொடை.

நஞ்சனைய சிந்தை நமன்றூதர்—வெஞ்சினத்தா
லல்ல லுறுத்து மருநரகங் கண்டுநிற்க
வல்ல கருணைமறம் போற்றி.

சூரியன் எல்லாப்பொருள்களிடத்திலும் ஓரேவிதமாய் ஒளி வீசிக்கொண்டிருந்தாலும், அதனைச் சமீபித்துள்ள பொருள் களே தூரத்திலுள்ள பொருள்களைக்காட்டிலும் அதனொளியை

யும் வெப்பத்தையும் அதிகமாகப்பெறுகின்றன. வெயிலிருக்கும் பூண்டு செழித்து வளர்வதுபோல் இருட்டிலிருக்கும் பூண்டு வளர்வதில்லை. அதுபோல் வழிப்பாட்டின் திறத்தால் மனிதர்கள் கடவுளுக்கு எவ்வளவு சமீபத்திலிருக்கிறார்களோ அவ்வளவு அவரருளுக்குரியராகின்றார்கள். சரியையென்னும் மார்க்கத்திலும் பார்க்கக்கிரியாமார்க்கம் அவருக்குச் சமீபமாயுள்ளது. கிரியாமார்க்கத்திலும் யோகமார்க்கம் அவருக்கதிகசமீபமாயுள்ளது. ஞானமார்க்கம் அவர் இருப்பிடமாயுள்ளது. ஆதலால் சரியையாளரைக்காட்டிலும் கிரியையாளரும், கிரியையாளரைககாட்டிலும் யோகிகளும், யோகிகளைப்பார்க்கிலும் ஞானிகளும் கடவுளின் அருளுக்கு அதிகமாக உரியராகின்றனர் இம்மார்க்கங்க ளெவற்றினும் ஒழுகாதவர்கள் கடவுளுக்கு வெகு தூரத்திலிருப்பவர்களாய் அவரருளைப்பெறுதற்குரியராகார்.

தேவாரம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே.

ஆனால், சூரியன் சடப்பொருளாகையாலும், அதற்குச் சர்வவியாபகமின்மையாலும், அதைச்சமீபித்துள்ள பொருள்களை அதன் ஒளியையும் வெப்பத்தையும் தூரத்திலுள்ள பொருள்களைக்காட்டிலும் அதிகமாகப்பெறும். கடவுள் ஞானமூர்த்தியாகவும், சர்வவியாபகராகவுமிருக்க, அவர் தம்மை வழிபடுவார்க்கு மாத்திரம் அருள்செய்து வழிபடாதார்க்கு அருள் செய்யாதொழிவது அவர்விருப்பு வெறுப்புடையாரென்பதைக் காட்டாதோவெனில், காட்டாது சூரியன் ஓரேவிதமாய் ஒளி வீசும் ஓரிடத்திலுள்ள பலபொருள்களுள் சிலபொருள்கள் அதன் ஒளியையும் வெப்பத்தையும் அதிகமாகவும் சிலபொருள்கள் குறைவாகவும் கிரகிக்கின்றன. வாழைத்தண்டின் மீதும் சூரிய காந்தக் கல்லின்மீதும் ஓரே விதமாய்ச் சூரியன் காய்ந்தாலும் வாழைத்தண்டு நெடுங்காலம்குளிர்ந்தேயிருக்கும். சூரிய



காந்தக்கல்லோ உடனே அக்கினியைக் கான்று அடுத்துள்ள பொருள்களையும் கொளுத்தும். அதுபோல் கடவுளுடைய திருவருள் எல்லா உயிர்களிடத்தும் ஓரே அளவாக வியாபித்திருந்தாலும் அது பக்குவப்பட்ட ஆன்மாக்களிடத்தில் மாத்திரம் விரைவில் வெளிப்பட்டுப் பிரகாசிக்கும். ஆதலால் பக்குவப்படாத ஆன்மாக்கள் அவரருள் வெள்ளத்தின் நடுவிலிருந்தும், ஆற்றுவெள்ளத்தின் நடுவிலிருந்தும் தாகத்தால் நாவறண்டு தபிப்பான்போல், அவரருளாரமுதத்தைப் பருகமாட்டாமல் வருந்துவர். அங்ஙனம் வருந்துதல் கடவுளின் குற்றமன்று; ஆன்மாக்களிடத்தில் அனாதியாகவே பொருந்தியுள்ள குற்றமேயாம்.

தேவாரம்.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலா
னலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

திருவருட்பயன்.

நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

* * * * *

பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வே
லமரர்த் தாங்குங் குமரன் றாதை
பொருந்திடங் கொண்ட பொன்னி புரக்கு
மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்ற முளதோ நின்னினைந்
தெண்ணருங் கோடி யிடர்ப்பகை கடந்து
தண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
திறப்பையும் பிறப்பையு மிகந்து சிறப்போடு

தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிக டமதே பாவம் யாதெனின்
முறியாப் பெறுக்கன் முப்பழங் கலந்த
வறுசுவை யடிசி லட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துத
லயினியின் குற்ற மன்றுவெயி லின்வைந்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ வொருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்ற மன்றுகண் ணகன்று
தேந்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வானுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
வடிபெயர்த் திடுவா னொருவ
னெடிது வருந்துத னிழற்றீங் கன்றே

கடவுள் கொண்டருளும் எவ்வகைத் திருமேனிகளும் செய்தருளும் எவ்வகைதொழில்களும் அருட்டிருமேனிகளும் ஆனந்த வடிவங்களுமாகவே யிருக்கும். இதுபற்றியே ஞானநூல்கள் அவரை சச்சிதானந்த ரூபியென்று கூறும்.

சிவஞானசித்தியார்.

உருவருள், குணங்க ளோடு முணர்வருள், உருவிற் றோன்றும்
கருமமு மருள் அரன்றன் கரசர ணாதி சாங்கம்
தருமருள், உபாங்க மெல்லாந் தானருள், தனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னமல னன்றே.

சிற்றம்பலநாடிகள்.

ஆனந்த மேசெவி யம்புயத் தாளிணை யங்கைகளும்
ஆனந்த மேதிருக் கண்ணுஞ்செவ் வாயருண் மேனியெல்லாம்
ஆனந்த மேதிருச் சிற்றம் பலவ ரருட்பொருளும்
ஆனந்த மேயவன் றில்லையுங் காழியு மானந்தமே.

OF THE ...

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவஞானபோத நூலுரைகள்

## வசனமாக்கப்பட்டன.

சைவசித்தாந்த மகா சமாசத்தினர் முதலிய சமாசீயர்
கள் வருடந்தோறும் கூட்டுஞ் சிறந்த பிரசங்க சபைகளிலும்
பிறசபைகளிலும் சைவமகோபந்நியாசங்கள் செய்தலினாலும்,
அவ்வுபந்நியாசங்களை அச்சிட்டு வெளிப்படுத்துதலினாலும்,
சிவஸ்தலயாத்திரைசெய்து சிவவழிபாடு இயற்றுதலினாலும்,
சிவஸ்தலபாத்திரைசெய்து சிவபூசை செய்தலினாலும், இன்ன
சைவதீக்ஷை பெற்றுச் சிவபூசை செய்தலினாலும், இன்ன
பிறவற்றாலும் சைவ சமயாபிவிருத்தி செய்தலையே பொழுது
போக்கும் விளையாட்டாகவுடைய சிவஞானச் செல்வியாரா
கிய ஸ்ரீமதி - ஆண்டாளம்மையார் எனப் பெயரிய மங்கை
யர்க்கரசியார், சிவஞானபோத மூலமும் உரையும் கற்றுவல்ல
விற்பனர் தாமும் உற்றுநோக்கினு முற்று முணரமுடியாத
வத்துணைக்காடின்னிய மேம்பாட்டு நடைத்தாயிருத்தலான்
நம்மவர்கள் தங்கள் சமய வுண்மையை அறியமாட்டாராய்
அருருறுதலைப் பலவிடங்களினும் பலவாற்றானுங் கண்டு
கேட்டு நன்கினிதறிந்து அக்குறைபை நீக்கி உபகரித்தல்
வேண்டுமெனத் தமதுள்ளத்தே யுதித்தூன்றி ஒருகாலைக்
கொருகால் வளர்ந்தோங்குங் கருணைமாண்பால், சித்தாந்த
ஞானபாநுவெனச் செகப்பிரசித்திபெற்ற காசிவாசி-ஸ்ரீலஸ்ரீ-
செந்திநாதையரவர்களைக்கொண்டு மேற்படி நூலுரைகளை
யாவரு மெளிதினுணருமாறு வசனநடையில் "சிவஞான
போத வசனாலங்காரதீபம்" எனப் பெயரிய நூலாக இயற்று

வித்துச் சென்னைச் சைவ வித்தியாநு பாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கின்றார். அந்நூன்மாட்சி அதன் பெயரானே விளங்கக் கிடத்தலின் ஈண்டு விரிக்காது விட்டனன். சைவசமயிகட்கெல்லாஞ் சிவரத்தினம்போன்ற இந்தச் சிவஞானசாஸ்திரத்தில் ஒவ்வொன்று ஆண்பாலார் பெண்பாலார் யாவரிடத்தும் இருக்கவேண்டும்; அவர்கள் எல்லாரும் ஒவ்வொன்று திருவருட்பேற்றிற்கிலக்காக வாங்கி இவ் அம்மையார் பிரகடனஞ்செய்ய உத்தேசித்திருக்கும் அரிய நூல்களெல்லாவற்றையும் அங்ஙனஞ்செய்விக்கும்படி ஊக்கஞ் செய்து புகழ்புண்ணியங்களை ஒருங்குபெற்றின்புறுவார்கள் என்று உறுதியாக நம்புகின்றேன். இத்தகைய அரும் பெருஞ் செயல்களை மனவாக்குக் காயங்களினாலும் பெரும் பொருளினாலும் சிறப்புற முற்றுவித்துச் சைவசமயிகட்கோர் மெய்வருநிதியாய் விளங்கும் இவ்வம்மையார் என்றும் நிலவி இத்தகைய நன்மைகளை எம்மவர்க்குச் செய்யுமாறு உத்தமத்தலைவராகிய அர்த்தநாரீசுரரது உபயபாதங்களைச் சிரமேற்கொண்டு சிந்தித்து வந்திக்கின்றேன். இதன்விலை அச்சிட்டு முடிந்தபின்னர் வேறுவிளம்பரவாயிலாகத் தெரிவிக்கப்படும். இந்நூல் முடிவெய்தியபின் அடியிற்குறித்தவரிடம் கிடைக்கும்.

இங்ஙனம்,

ஏழகரைநாட்டுநம்பி,

சதாசிவபண்டித சிவாசார்யர்,

மடாதிபதி - திருச்செங்கோடு.

---

☞ C. S. ஏகாம்பர முதலியார்,

44, சாமிநாய்க்கன் வீதி,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

The Vaijayanti Press, Madras.




# ஞ்மலாஸனி.

ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் 3 | 1915ஆு நவம்பர்மீ | சஞ்சிகை 11.


## திராவிட வேதப்பிரபாவம்.

திராவிடவேதம் என்பது, தேவராதி திருத்தொண்டர் புராண மீறாகவுள்ள திருமுறை பன்னிரண்டுமாம். திருமுறை பன்னிரண்டாவன:— ஸ்ரீ ஞானசம்பந்த மூர்த்திகள் அருளிச்செய்த தேவாரத்திருமுறை மூன்றும், ஸ்ரீ நாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத்திருமுறை மூன்றும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத்திருமுறை ஒன்றும், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையார் ஆகிய எட்டாந்திருமுறையும், திருமாளிகைத்தேவர் முதலாக ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பா திருப்பல்லாண்டு முதலிய ஒன்பதாந்திருமுறையும், திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரமாகிய பத்தாந்திருமுறையும், திருவாலவாயுடையார் பாணபத்திரரிடம் சேரமான் பெருமாணாயனாருக்கு எழுதிக்கொடுத்தனுப்பிய "மதிமலிபுரிசை மாடக்கூடல்" என்ற பாடல் முதலாக நக்கீரதேவர் பட்டினத்துப்பிள்ளையார் காரைக்காலம்மையார் முதலியவர்களால் அருளிச்செய்த பதினோராந்திருமுறையும், ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணமாகிய பன்னிரண்டாந்திருமுறையுமாம்.

இப்பன்னிரண்டு திருமுறைகளுமடங்கிய திராவிட வேதமானது வடமொழி வேதங்களைப்போல் ஒவ்வொரு மொழியின் முதலினும் இறுதியினும் மட்டில் ஓம் என்ற பிரணவத்தைக்

ணொண்டு நடவாது தன்னகமுழுதும் பிரணவ சொரூபமாகவே விளங்குகின்றது. அஃதெவ்வாறெனிற் கூறுதும். வடமொழி வேதங்கள் தன்னுட்புதை பொருளாக மறைத்துப் பாதுகாத்து வருகின்ற காயத்திரி மந்திரத்தின் முதலிலுள்ளதாகிய, த், என்ற அட்சரத்தின்மீது பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓ என்ற அட்சரம் ஏறத்தோன்றிய தோ என்ற அட்சரமானது திராவிட வேதத்தின் முதல் திருமுறையின் முதற் பதிகத்தின் முதற் பாடலாகவுள்ள (தோடுடைய செவியன்) என்றதின் முதலெழுத்தாக அமைந்திருக்கிறது. பிரணவத்தின் இரண்டாமட்சரமாகிய, ம், பன்னிரெண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணவீற்றுப்பாடலின் ஈற்றெழுத்தாக "நின்றதெங்கு நிலவியுலகெலாம்" என்று அமைந்திருக்கிறது. ஆகவே பன்னிரு திருமுறைகளும் அடங்கிய திராவிடவேதம் ஓம் என்ற பிரணவ மந்திரமாகவே விளங்குகின்றதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கக்கிடக்கின்றது கண்டுணர்க.

உலகத்தின் புறவிருளை அகற்றத்தோன்றி விளங்கும சூரியர்கள் பன்னிருவர்களாகும். அதுபோல உலகத்துள்ள ஆன்மாக்களின் அகவிருளை நீக்க குருமூர்த்தமாக எழுந்தருளியவர்களும், நந்தியம்பெருமான், பரஞ்சோதிமுனிவர், சனற்குமாரர், உபமந்யு முனிவராகிய ஞானசாரியர் நால்வர்களும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகளாகிய சமயாசாரியர் நால்வர்களும், மெய்கண்டதேவர், மறைஞானசம்பந்தர், அருணந்திசிவம், உமாபதி சிவமாகிய சந்தானசாரியர் நால்வர்களுமாகப் பன்னிருவர்களேயாகும். ஆசிரியர்களைப்போல ஆன்மாக்களின் அகவிருளை நீக்கத்தோன்றிய திராவிடவேதம் பன்னிரு திருமுறைகளையும், ஞான சாத்திரமாகிய சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களையுங்கொண்டு விளங்குவனவாகும். ஆரிய வேதங்களின் புதை பொருளாகவுள்ள காயத்திரி மந்திரமும் பன்னிரண்டு மதங்களையுடையதே. மேற்கூறிய



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED ... 1916 MADRAS.

காரணத்தால் திராவிடவேதம் அதிகப்பிரபாவத்தையுடைத்தென்பது விளக்கமாகிறது.

இனி வடமொழி வேதங்கள் இந்திராதிதேவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏனைப் பிரம விஷ்ணுகளுக்கும் பரத்துவம் கூறிக் கடைசியாகச் சிவபெருமானுக்குப் பரத்துவங்கூறுகின்றன. இவ்வாறின்றித் திராவிடவேதம் "நூறுகோடி பிரமர்கணொங்கினர்—ஆறுகோடி நாராயணரங்ஙனே—ஏறுகங்கைமணலெண்ணிலிந்திரர்—ஈறிலாதவ னீசனொருவனே." என்று சிவபெருமானொருவருக்கே பரத்துவங்கூறு நிற்கின்றது.

இதன்றி, வடமொழிவேதங்கள் பிராமணராகிய ஒருவகுப்பார்க்கே ஓதற்குரித்தாயிருப்பது போலிராமல் திராவிடவேதம் சகலருக்கும் ஓதற்குரித்தாய் விளங்குவதாகும். இக்காரணத்தால் ஒருவருக்கே உபயோகத்தை அளிக்கக்கூடிய மட்கலம் போன்றதாக விருக்கின்றன வடமொழி வேதங்கள். பலர்க்கும் உபயோகத்தை அளிக்கக்கூடிய பொற்கலம் போன்றதாக விளங்குகின்றது திராவிடவேதம். வடமொழிவேதங்கள் தன்னை ஓதுவார்க்கு புருஷார்த்தம் நான்கனுள் முதலாவதாகவுள்ள அறம் ஒன்றனை மாத்திரம் அளிப்பதாகவுள்ளன. திராவிடவேதம் தன்னை ஓதுவார்க்கு புருஷார்த்தம் நான்கனுள் கடைசியாகவுள்ள வீடு பேற்றை அளிப்பதாகவுள்ளது. இதற்குப் பிரமாணம்.

"திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல் வாயுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாகலின்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன்
வேதமோதின் மெய்ப்பய னறமே."

எனக் கூறியுள்ள நால்வர் நான்மணிமாலைப் பாசுரத்தால் அறிந்துகொள்க.

இனி, வடமொழி வேதங்களை ஓதக்கேட்பவர்க்கு கடவுளிடத்தில் பக்தி உண்டாகிறதில்லை. தென்மொழி வேதமோ அவ்வாறன்று ஓதக்கேட்டோருடைய கல் நெஞ்சையும் கரைத்து சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தியை உண்டாக்கவல்லது. இதற்குப்பிரமாணம்.

“ விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.”

எனக்கூறியுள்ள நால்வர் நான்மணிமாலைப் பாசுரத்தால் அறிந்துகொள்க.

வடமொழி வேதங்கள் நான்கனுள் கடைசியதாகவுள்ள அதர்வணவேதம் மூன்று வேதங்களின் பொருள்களையும் சுருக்கி விளக்கிக்காட்டி நிற்பதாதலால் அவை நீக்கி, வேதம் மூன்றேயாகும். இம்மூன்றனுள்; மத்தியிலுள்ளதாகிய யசுர்வேதம் கிரியாகாண்டம் என்றும் ஞானகாண்டம் என்றும் இரண்டு பகுப்பினையுடையது. மேற்கூறிய காண்டங்கள் ஒவ்வொன்றும் எவ்வேழு அத்தியாயங்களையுடையது. அதனுள் ஞானகாண்டத்து அத்தியாயம் எழனுள் முன்மூன்றும் பின்மூன்றும்



நீக்கி மத்தியிலுள்ள நான்காவது அத்தியாயம் நூற்றெட்டுச் சுலோகங்களைத் தன்னுள் கொண்டு விளங்கும். இந்நூற்றெட்டுச் சுலோகங்களுள் ஐம்பத்து நான்காவது சுலோகத்துள் ஸ்ரீ ருத்திரங் கூறப்படுகின்றது. ஸ்ரீ ருத்திரத்தின் மத்தியில் விளங்கிக்கொண்டிருக்கிறது ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரம். அது போல திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் ஆகிய மூவர்களினாலே அருளிச் செய்யப்பட்ட ஞானகாண்டத்தையேயுணர்த்தும் திராவிட வேதமாகிய தேவாரத்திருமுறைகள் ஏழனுள் முன்மூன்று திருமுறையும் பின்மூன்று திருமுறையும் நீக்கி மத்தியிலுள்ள திருமுறையில் முன்னும் பின்னும் சரியாகப்பதிகங்களை நீக்கி இடையிலுள்ள பதிகம் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திருப்பதிகம் விளங்கிக்கொண்டிருக்கிறது.

இனி வடமொழி வேதங்களை சிவபிரான் தன் வாக்கால் திருவாய் மலர்ந்தருளியதுபோல தென்மொழி வேதமும் சிவ பெருமான் திருவாக்கால் அருளிச்செய்யப்பட்டதே. ஐந்தாம் வேதமென்று விதந்து கூறப்பட்டுள்ள பரமேதி காசமாகிய சிவரகசியத்திலே ஒன்பதாம் அம்சத்திலே சிவபெருமான் திராவிட வேதத்தை திருவாய் மலர்ந்தருளினாரென்றும் அது பர்வதா, கிருதியாக வெள்ளிமலைக்கண் விளங்குகிறதென்றும், அதன் பாகங்களையே ஆன்மாக்கட்கு வேண்டிய அளவு ஸ்ரீ ஞானசம்பந்தாதி அருளாளர்கள் பின் சிவாக்ஞைப்படி வெளிப்படுத்துவார்களென்றும் கூறப்பட்டமையானும், அங்ஙனமே வெளிப்படுத்தின்மையானும் திராவிடவேதம் சிவபெருமானாலே பூர்வமே திருவாய் மலர்ந்தருளப்பட்டதென்பது துணிபாம்.

சிவபிரான் றிருவாக்கால் அருளிச்செய்த வடமொழி வேதங்களை பின்னர் கந்தசுவாமி, அதர்வமுனிவர், சுவேதர் சுவதரமுனிவர், பிரமதேவர், சனற்குமாரர், யாஞ்சவற்கியர், வியாசர், பிரசாபதி, வருணன், ஆசுவலாயனர், அநுமார், தாத்தாத்திரேயர் முதலிய பலரால் பின்னர் சொல்லியருளப்பட்

டதுபோல திராவிடவேதமும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், சேந்தனார், புருடோத்தமநம்பி, முதலாயினோராற் பின்னர் சொல்லியருளப்பட்டது.

பரந்துகிடந்த வடமொழி வேதங்களை வியாசமுனிவர் நான்காக வகுத்ததைப்போல விரிந்துகிடந்த திராவிடவேதத்தை நம்பியாண்டார் நம்பியென்ற முனிவர் பதினொன்றாக முறை வகுத்தனர்.

சிலபிராமணர்கள், வேதங்கள் ஆதியாகவுள்ள வடமொழியிலே சிவபெருமானால் திருவாய்மலர்ந்தருளப்பட்டு யுகா யுகங்களாகவுள்ளன என்றும், திராவிடவேதமோ கலியுகத்தில் மனுஷியர்களினாலே பாடப்பட்ட கலியுகப்பாட்டென்றும் நிந்தை கூறுவர். இவ்வாறு கூறும் பிராமணர்கள் உண்மை நூலுணர்ச்சி அணுவளவுமில்லாத பாவர்களாவார்கள்.

வியாசர், வேதங்களை நான்காக வகுப்பதற்குமுன் தமிழ்மொழியிருந்ததுண்மை என்பதை ஆசிரியர் தொல்காப்பியனார் செய்த இலக்கணப்பாயிரத்தில் மதுரையாசிரியர் நச்சினார்க்கினியர் நன்கு விளக்கியதைக்கண்டுணர்க.

வச்சிரசூசி கோபநிடதம் வியாசர் துபாரயுகத்திற்றோன்றினரென்று கூறுகின்றது. வியாசர் தன் குமாரரான சுகமுனிவருக்கு யசர்வேத பாகமாகிய சுகரகசியோபநிடதத்தை உபதேசித்ததாக வேதத்தாற்றெரிகிறது. அதற்குமுன் அப்பாகம் இல்லைபோலும்! அதர்வண வேதத்தில் ஒரு சாகை சீதாபிராட்டியின் பெருமையை அறைகின்றது. சீதாபிராட்டியார் துவாபரயுகத்தவராதலின் அதன் பின்னர்த்தான் அப்பாகஞ் செய்யப்பட்டதுபோலும்! இவ்விடயங்களை ஆழ்ந்து யோசிக்கும்போது பரமபதியினால் ஆதியில் அருளிச்செய்யப்பட்ட வேதங்களை பின்னர் வியாசர் முதலிய முனி சிரேட்டர்கள் ஒவ்



வொருகாலத்தில் உரைத்தருளினர் என்றே கொள்ளவேண்டியதாக வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. அதுபோலவே ஆதியிற்பரமபதியினால் உரைத்தருளியதிராவிடவேதத்தை திருஞானசம்பந்தமூர்த்தி முதலிய முனி சிரேட்டர்கள் ஒவ்வொரு காலத்தில் உரைத்தருளினார்கள். ஆனதுபற்றி திராவிடவேதம் கலியுகத்ததல்லாது அநாதியேயென்பது விளக்கமாகிறது.

இனி ஆரியவேதமும் தமிழ்வேதமும் அநாதியே சிவபிரானால் அருளிச்செய்யப்பட்டதென்பது, திருஞானசம்பந்தமூர்த்தி முதலாகவுள்ள சமயாசாரியர்கள் தேவாரத்தில் விளக்கிக் காட்டியிருக்கின்றார்கள். அது "தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற்சேர-வம்மலர்க்கொன்றையணிந்த வெம்மடிகள்" என்ற அச்சிறுபாக்கத்தேவாரத்தானும், "ஆரியந்தமிழோடிசையானவன்" என்ற திருக்கடம்பந்துறைத்தேவாரத்தானும், "செந்தமிழோடாரியனைச் சீரியானை" என்ற திருவாவடுதுறைத்தேவாரத்தானும், "முத்தமிழு நான்மறையுமானான் கண்டாய்" என்ற திருமறைக்காட்டுத் தேவாரத்தானும் நன்கு விளங்கப்படுவதொன்றும்.

இனி, எட்டாந்திருமுறையாக விளங்கும் திருவாசகமும் திருக்கோவையாரும் இரண்டாவதுயுகமாகிய திரேதாயுகத்தில் மணிவாசகப்பெருமானால் திருவாய்மலர்ந்தருளப்பட்டதென்று விளக்கமாகத் தெரியவருகிறது. எப்படியெனிற் கூறுதும்:—

ஸ்ரீ மணிவாசகப்பெருமான் இருந்தகாலம் அரிமருத்தன பாண்டியனுடைய காலமென்பது திண்ணம். மணிவாசகப்பெருமான் திருவாசகத்திலே "நரியைப் பரியாக்கி ஞாலமெல்லாநிகழ்வித்துப்—பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சேற்றும்" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். நரியைப்பரியாக்கிய இடம் சம்புகாச்வதம் என்று கூறப்படும். அங்ஙனம் சோமசுந்தரக்கடவுள் சம்பு (நரி)களை அஸ்வங்களாக்கிய திருவிளையாடல் இரண்டாவது யுகமாகிய திரேதாயுகத்தில் நடந்

ததாகப் பிரமகைவர்த்த மகா புராணங்கூறுகின்றது. எங்ஙனமெனில்,

"க்ருதே ப்ரஹ்மவநம் நாமத்ரே தாயாம் ஜம்புகாச்வகம்
த்வாபரேது ப்ருகத்கச்சம் சந்திரலேகா கலௌயுகே."

கலியுகத்திற் சந்திரலேகை எனப்படுமித்தலம் சந்தலையென வழங்கப்படுகின்றது. இத்தலமே திரேதாயுகத்தில் பிரமவனம் என்றும், திரேதாயுகத்தில் சம்புகாசுவதம் என்றும், துவாபரயுகத்தில் பிருகத்கச்சம் என்றும் பெயர்பெறும் என்றும் சொல்லப்படுகின்றது. இத்தியாதி காரணங்களால் தமிழும் தமிழ்மறையும் ஆரியம்போல அநாதியேயென்பது தேற்றமாகிறது. இத்தியாதி பெருமைகள் வாய்ந்தது திராவிடவேதம். திராவிடவேதத்தின் பெருமைகளை ஆயிரநாவையுடைய ஆதிசேடன் அகோராத்திரம் பலயுகங்கள்கூறினும் முடியக்கூடியதொன்றன்று. இதனை ஒருவாறு என்னறிவிற் கெட்டியவாறு சுருக்கிக்கூறி இத்துடன் முடித்தேன்.

ஆ. சத்திவேற் பிள்ளை.

---

## போதன மஞ்சரி.

1 அன்னைபிதாகுரு—ஆரணஞ்சொல்லனல்
2 ஆதியில்லாவிடில்—அந்தமுமில்லை
3 இருவினைப்பயனால்—எடுத்ததுஜென்மம்
4 ஈயார்கைப்பொருட்—கிங்கிதமில்லை
5 உற்றதுசொல்வோன்—உலகினிலொருவன்
6 ஊதாரித்தனம்—உள்ளவன்கெடுவன்
7 எளியோர்தமக்கு—இதஞ்செய்தல்சுகிர்தம்
8 ஏகசிந்தையுடன்—இருப்பதுபக்தி
9 ஐயமிட்டுண்பவன்—அரனுக்கடிமை
10 ஒற்றுமையுடையோர்க்—குலகமும்வசியம்



11 ஓரம்பேசியே—ஒழிந்தவர்கோடி
12 ஔதாரியஞ்செயில்—அவனியிற்புகழ்நிலை
13 கற்பசாதனையாற்—காலனுமனுகான்
14 காரணமிருந்தாற்—காரியமுண்டு
15 கிரமமின்றிச்செயுங்—கிரிகைகளபலம்
16 கீர்த்திக்கேற்றது—கெடுமதியின்மை
17 குருவுபதேசங்—கொடுப்பதுமுத்தி
18 கூட்டுறவில்லாக்—குடும்பங்கெடுறும்
19 கெருவத்தாற்குடி—கெட்டேயுலையும்
20 கேள்வியைநம்பிக்—கிளறுதல்மடமை
21 கைப்பொருளகன்றுற்—கவலைவந்தெய்தும்
22 கொற்றவர்பகையைக்—கொள்வதுதீமை
23 கோதையர்தலைமைக்—குடித்தனம்பயனிலை
24 கௌசிககானங்—கடவுட்பிரீதி
25 சத்தியமிருந்தாற்—சகலசித்தியுமுள
26 சாதனமின்றிச்—சாதிக்கமுடியா
27 சிவனைநினைந்தாற்—றீவினையில்லை
28 சிவகாலத்திற்—றேடுதல்புண்யம்
29 சுகம்வரும்போது—துக்கமொன்றில்லை
30 சூதும்வேதனை—தொல்லைவிளைக்கும்
31 செய்தவப்பலனால்—ஜென்மமீடேறும்
32 சேத்திரதரிசனஞ்—செய்யவூழகலும்
33 சைவசமயஞ்—சமணராற்பிரசித்தி
34 சொன்னவைரவனைத்—துதிப்பதுசெல்வம்
35 சோனைமழையினாற்—சோழஞ்செழித்தது
36 சௌமியகுணத்தாற்—சத்துருவில்லை
37 தந்தைதாய்மனது—சலித்திடலாகா
38 தாயுடன்பிறந்தோர்—தந்தைக்கொப்பினர்
39 திக்கற்றோர்க்குத்—தெய்வந்துணையுள
40 தீபனமின்றி—திரிபவன்யோகி
41 துர்ச்சனர்சிநேகந்—துறப்பதுபெருமை

42 தூலமுளவரை—சுகம்பலவேண்டும்
43 தெய்வசிந்தனையால்—ஜெகதலம்வழிபடும்
44 தேசவாசாரஞ்—சேமத்திற்குரியவை
45 தையலரெவருந்—தாயெனப்படுவர்
46 தொத்துவியாதியாற்—றுன்பம்விளைந்திடும்
47 தோழரினாலெத்—தொல்லையும்விலகும்
48 தௌகித்திரற்மேற்—றுதையர்க்கன்புல
49 நன்மையுந்தீமையும்—நடக்கையாற்றெரியும்
50 நாரியர்தமக்கு—நாயகன்றெய்வம
51 நிலமிசைபுண்யம்—நிலையுடன்விளங்கும்
52 நீதிமுறையிலா—நிருபனாலூர்கெடும்
53 நுண்ணறிவுடையோர்—நூல்சற்றபெரியோர்
54 நூதனவழியில்—நுழைவதுபழிப்பு
55 நெறிமுறையரசரால்—நீள்புவிசிறக்கும்
56 நேமநிஷ்டையினால்—நிலைப்பதுதபசு
57 நைடதகாவியம்—நாவலதக்கவசியம்
58 நொய்யசொல்லுரையால—நுணுக்கமாய்ப்பேசு
59 நோன்புகொண்டாடுதல்—நூன்முறையுளவழி
60 பசிதெரிந்தன்னம்—பகர்வதுதருமம்
61 பாரதியருளாற்—பாடுதல்கவிதை
62 பிரியமில்லாரொடு—பேசலாகாது
63 பீடனம்யோகாப்—பியாசத்திற்கழகு
64 புத்திரனிடத்திற்—புசிப்பதுகடமை
65 பூருவஞானம்—புலப்படில்முத்தி
66 பெற்றோர்க்குதவாப்—பிள்ளைமாபாவி
67 பேசரியாமறை—பேசும்மெய்ஞ்ஞானம்
68 பையரவத்தின்—பகைபழியெடுக்கும்
69 பொருநரைத்தெய்வம்—போற்பணிதனலம்
70 போஜனால்சமஸ்க்ருத—புலவர்க்குமகிமை
71 பௌத்திரன்சொத்திற்—பங்குபெறுபவன்
72 மக்களைப்பெற்றோர்—வறுமையடையார்



73 மாமியைமருமகள்—வணங்குதல்தகைமை.
74 மித்தைச்சடலம்—விழலாய்ப்போகும்
75 மீறும்பகைவரை—வெல்லுதல்கியாதி
76 முறைமுறைப்பதனால்—முளைப்பதுசண்டை
77 மூத்தோர்சொன்மொழி—மூர்க்கர்க்குதவா
78 மெல்லியர்தங்களால்—விளைவதுகலகம்
79 மேன்மையுந்தாழ்மையும்—விரைவினில்வரும்
80 மைக்கண்வேசையர்—மையலைநீக்கு
81 மொட்டைத்தலைச்சிகள்—மோகத்தையொழி
82 மோசம்நினைப்பது—முற்றிலும்நாசம்
83 மௌனபோதகத்தால்—வஸ்துவைக்கண்டறி
84 யக்கியஞ்செய்தால்—யமபயமில்லை
85 யாசகம்வாங்குதல்—யாவர்க்குமிழிவு
86 யுவதியைமணருதல்—உத்தமமாகும்
87 யூகிமந்திரியால்—உலகம்க்ஷேமமாம்
88 யோகஞ்செயமன—உறுதியும்வேண்டும்
89 யௌவனதிசையில்—அடைவதுநற்சுகம்
90 வஞ்சனைசூனியம்—வைப்பதுமலினம்
91 வாதவித்தையினால்—வருவதொன்றில்லை
92 விஞ்சைமந்திரஜெபம்—வினைபலவகற்றும்
93 வீணகங்கொண்டோர்—மிஞ்சுவதில்லை
94 வெஞ்சினத்தாற்றவ—வேடம்நிலைத்திடா
95 வேதமுடிவில்—விளங்குதல்பிரமம்
96 வைதிகமாதி—மறையவர்க்கொழுக்கம்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
EX. முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

## சுத்தப்பிரமத்துக்கு அக்கினியே மூலகாரணம்.

அக்கினியானது மூலகாரணமாக இருக்கின்றது. சூரியனும் அதுவாகவே இருக்கிறான். அந்தப் பிரகாரமே வாயு அதுவாகவே இருக்கின்றது. அப்பிரகாரமே சந்திரனும் அதுவாகவே இருக்கிறான். அதுவே சுத்த பிரமமாகவும் இருக்கின்றது. அந்த ஜலங்களும் சிருஷ்டிகளின் சர்த்தாவும் அதுவாகவே இருக்கின்றன. நிமிஷங்களும் மற்ற கால அளவுகளும் ஜோதி வீசுகிறவனிடத்திலிருந்து பிறந்தன. அவனை ஒருவனும் ஸ்பரிசத்தில் அகப்படுகிற ஒருபொருளைப்போல் மேலேயாவது மத்தியிலாவது கண்டுபிடிக்கக்கூடாது, யாருடைய மஹிமை அவ்வளவு பெரிதாயிருக்கின்றதோ அவரிலே உருவமொன்றில்லை. யார் அநேக திவ்ய கீதங்களால் துதிக்கப்பட்டிருக்கிறாரோ அவர் அதுவாகவே இருக்கின்றார். சகல மண்டலங்களிலும் வியாபகமாயிருக்கின்ற கடவுளாகவே அவர் இருக்கின்றார். முதற்பேராக அவர் இருக்கின்றார் எவர் கருப்பாசயத்தில் இருக்கின்றவராயும், பிறந்தவராயும், பிறக்கப்போகிறவராயும் இருக்கிறாரோ அவரே அதுவாகவே இருக்கின்றார். அவர் எல்லோரிலும் தனித்தனியாகவும் சருவமாகவும் இருப்பவரேயாம்.

யாருக்கு முன் ஒன்றும் பிறக்கப்படவில்லையோ. யார் எல்லா வஸ்துக்களுமாயிருக்கிறாரோ அவரே பதினாறு அவயவங்களோடாகிய சரீரத்துடன் சிருஷ்டி கர்த்தாவாகி சிருஷ்டியில் ஆனந்தங்கொண்டு சூரியன், சந்திரன், அக்கினியாகிய மூன்று ஜோதிகளையுண்டாக்கினார்.

எந்தக்கடவுளுக்கு நாம் நிவேதனம் செய்தாலும் அவருக்கேயாம். அவரே சலிலமுள்ள ஆகாயத்தையும் கெட்டியான பூமியையுப்செய்து சுவர் என்னும் சூரியமண்டலத்தையும் நாகம் என்னும் ஆகாயஉறையிடம், அல்லது பரமண்டலத்தையும் ஸ்தாபித்து வாயுமண்டலத்தில் மழைத்துளிகளையுண்டாக்கின



வராம். நாம் எந்தக்கடவுளுக்கும் நைவேத்தியஞ்செய்தாலும் அவருக்கேயாம். அவரை விண்ணுலகமும் மண்ணுலகமும் மனதினால் தியானிக்கின்றன. அவைகள் அவிர்ப்பாகங்களால் உறுதிப்பட்டு ஸ்தாபிக்கப்படுகின்றதுமல்லாமல அவைகளுக்குமேல் உதித்துவராநின்ற சூரியனால் பிரகாசிக்கப்படுகின்றன.

ஞானியானவன் இந்த இரகசியப்பொருளைப் பார்க்கிறான். அந்தப்பொருளினால் இந்தப் பிரபஞ்சமுழுதும் அந்த ஆதாவினால் நித்தியமாயிருக்கின்றது. அவனிலே இந்தவுலகம் அமிழ்ந்திருக்கின்றது. அவனிலிருந்து இந்தப்பிரபஞ்சம் உண்டாகின்றது. ஜீவப்பிராணிகளில் அவன் நானாவடிவங்களோடு புரிமுறுக்காகி நெசவாயிருக்கிறான். அந்தப்பெரியகாரிய அறிவிப்பின் கருத்தையறிந்திருக்கிற அறிஞர் அந்த நித்தியப்பொருளை, அந்த அந்தரங்கப்பொருளை அந்தப் பலவாகிய இருப்பிடத்தைத் தீவிரமாய்க் கொண்டாடக்கடவர். அந்தரங்கத்தில் அடங்கியிருக்கிற சிருஷ்டி திதி சம்மாரமாகிய மூன்று நிலைகளையறிந்திருக்கிறவன் தந்தைக்குத் தந்தையாக இருக்கிறான். யாராலே தேவர்கள் மூன்றாவது உலகம் அல்லது பரமண்டலத்திலிருக்கும்போது சாவில்லாமையைப்பெறுகிறார்களோ அந்தப்பிரமா நம்முடைய வணங்கத்தக்க தந்தையாகவும் எல்லாவுலகங்களையும் ஆளுகிற திருவுளச்செயலாகவுமிருக்கின்றார்.

ஐசுவரியத்துக்காகவும், ஞானத்துக்காகவும் இந்தவேதிகையின் ஆச்சரியமான இறைவனை, இந்திரன் சிநேகனை மிகவும் விரும்பத்தக்க அக்கினியை நான் வணங்குகிறேன். இந்த நிவேதனம் பிரயோஜனப்படுவதாக. ஓ! அக்கினியே எந்த அறிவினால் எந்த அறிவைக் கடவுளரும் பிதிர்களும் தொழுகிறார்களோ அந்த அறிவுள்ளவனாக இன்றையதினம் ஆக்குவாய்! இந்த நிவேதனம் பலிதமுண்டாகக் கடவது. வருணனே எனக்கு ஞானமளிப்பாயாக. அக்கினியே! பிரஜாபதியே! எனக்கு யூகம் அளிப்பீராக. இந்திரனே! வாயுவே! எனக்குக் கல்வியளிப்பீராக. திருவுளமே! எனக்கு அறிவு அளிப்பாயாக. இந்த

நிவேதனம் அதிட்டமாய்க் கொடுக்கப்படுகின்றது. என் சம்பந்தைக்குருவும் க்ஷத்திரியனும் பாகித்துக்கொள்வாராக. கடவுளர் மேலான பாக்கியத்தை யெனக்களிப்பாராக. அந்த சம்பத்தாயிருக்கிறவுமக்கு இந்த நிவேதனம் பிரயோஜனத்தோடு கொடுக்கப்படுவதாக. என்று எஜுர்வேதத்தின் நாற்பதாவதும் கடைசியுமான அத்தியாயமாகிய ஈசாவாசியமென வழங்கப்பட்ட உபநிஷத்திற் சொல்லப்பட்டிருப்பதாக வெளிவந்திருக்கிற வேதவசனங்கள் முறையிடுகின்றன.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
EX முனிசிபல்கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

## இயற்கைப்பொருள் விளக்க மஞ்சரி.

1. வித்தில்லாமரமுமில்லை விடையில்லாவினாவுமில்லை
சத்தில்லாப்பொருளுமில்லை ஜனமில்லாவூருமில்லை
சித்தில்லாஜீவனுமில்லை சிலவில்லாவரவுமில்லை
அத்தில்லாநிலமுமில்லை அணியில்லாப்படையுமில்லை

2. ஈசனில்லாவிடமுமில்லை எழிலில்லாப்பொருளுமில்லை
வாசமில்லாக்கதம்பமுமில்லை வட்டியில்லாக்கடனுமில்லை
கோசமில்லாப்பிரபுவுமில்லை கோளனில்லாவூருமில்லை
பாசமில்லாநீருமில்லை பாரமில்லாச்சுமையுமில்லை

3. வேதமில்லாச்சமயமுமில்லை விற்பனமில்லாவறிஞருமில்லை
நாதமில்லாவாத்யமுமில்லை நடுவனில்லாப்பஞ்சாயத்துமில்லை
வாதமில்லாச்சபையுமில்லை மந்திரியில்லாவரசனுமில்லை
போதமில்லாக்குருவுமில்லை புனிதமில்லாச்சிநேகமுமில்லை.

4. கோத்திரமில்லாக்குலமுமில்லை கூச்சலில்லாச்சந்தையுமில்லை
காத்திரமில்லாமலையுமில்லை கட்டளையில்லாவாக்யமுமில்லை
சூத்திரமில்லாப்பாவையுமில்லை சுக்கானில்லாக்கப்பலுமில்லை
சாத்திரமில்லாக்கிரியையுமில்லை தண்மையில்லாப்பெரியோரு
[மில்லை



5. ஆதியில்லாவந்தமுமில்லை ஆசியமில்லாக்கூத்துமில்லை
சோதில்லாக்கரும்புமில்லை கூக்குரலில்லாச்சண்டையுமில்லை
தோதில்லாவேலையுமில்லை தூக்கமில்லாச்சுகமுமில்லை
மாதில்லாமணமுமில்லை வருமையில்லாவெளியருமில்லை

6. சாட்டையில்லாப்பம்பரமுமில்லை சத்தியில்லாச்சிவனுமில்லை
பாட்டையில்லாநகரமுமில்லைபணிப்பெண்ணில்லாத்தலைவியுமி
[ல்லை
கோட்டையில்லாவரண்களுமில்லை குருவில்லாச்சீஷனுமில்லை
சேட்டையில்லாக்குரங்குமில்லை திருவருளில்லாச்செல்வமுமில்
[லை

7. சேனையில்லாவரசருமில்லை சித்தரில்லாக்குகையுமில்லை
மோனையில்லாக்கவியுமில்லை மூதறிவில்லாமுனிவருமில்லை
யானையில்லாச்சதுரங்கமுமில்லை யாதனையில்லாநரகமுமில்லை
சோனையில்லாமழையுமில்லை சூலமில்லாத்திசையுமில்லை

8. சுரமில்லாக்கீதமுமில்லை சுவையில்லாக்கனிகளுமில்லை
தரமில்லாத்திர்வையுமில்லை தானமில்லாவேள்வியுமில்லை
மரமில்லாமலைகளுமில்லை மணிமுடியில்லாவேந்தருமில்லை
உரமில்லாப்பயிருமில்லை ஊத்தையில்லாச் சடலமுமில்லை

9. பொருளில்லாவின்பமுமில்லை புதரில்லாவனமுமில்லை
அருளில்லாத்தெய்வமுமில்லை அகந்தையில்லாவசுரருமில்லை
தெருளில்லாஞானியுமில்லை ஜெபமில்லாமந்தரமுமில்லை
மருளில்லாவுலகமுமில்லை மகிமையில்லாமஹான்களுமில்லை.

(இன்னும் வரும்.)

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
EX. முனிசிபல்கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

## எந்நாட் கண்ணி.

கண்டோர் வியக்கக் கவினும்வளத் தாலோங்கிப்
பண்டுபோல் வாழ்ந்து பயன்பெறுவ தெந்நாளோ.

பொய்த்தொழிலிற் புக்குப் புலம்பித் தவிக்காமற்
கைத்தொழிலிற் புக்குக் கவின்பெறுநா ளெந்நாளோ.

பஞ்சைபோ லேங்கிப் பரதவித்து வாடாமல்
நெஞ்சம் மகிழ நிலைபெறுநா ளெந்நாளோ.

உத்தியோ கத்தா லுலைந்தலைந்து சோராமல்
நத்தியோ கத்தி னயம்பெறுநா ளெந்நாளோ.

அந்நியர்தே சம்போ யலைந்துமனம் வாடாமல்
தன்னியர்க ளென்னத் தனம்பெறுநா ளெந்நாளோ.

இந்தியர்தஞ் செல்வமிந்தி யாவைவிட்டுப் போகாமற்
சுந்தரமாய் வாழ்ந்து சுகிக்குநா ளெந்நாளோ.

வெள்ளைத்தோன் மாதை விரும்பிமணஞ் செய்யாமல்
உள்ள படிமணஞ்செய் தோங்குநா ளெந்நாளோ.

வேடர்தலை போன்மயிரை வெட்டிவிட்டுக் கொள்ளாமல்
ஆடவர்தங் குஞ்சிவளர்த் தார்க்குநா ளெந்நாளோ.

எந்தநா ளுந்த னெழின்முகஞ்சி றைக்காமல்
அந்த மிகவாழ்ந் தகங்களிப்ப தெந்நாளோ.

சாரமின்றித் தேகந் தளர்ந்துமிகச் சோராமல்
வீரர்களாய் நின்று விளங்கிடுநா ளெந்நாளோ.

அந்நியமா தின்பா லாசைகொள்ளா மற்சொந்தப்
பன்னியரோ டொன்றிப் பயனடைவ தெந்நாளோ.



பஞ்சப்பேய் பற்றப் பதறிமன நொந்துபெருஞ்
சஞ்சலஞ்சே ராவாழ்வு தானடைவ தெந்நாளோ.

வேசியர்தம் பற்றை வெறுத்துத் தொலைத்தேசு
தேசியப்பற் றோடுந் திகழுநா ளெந்நாளோ.

பித்தகங்கொண் டென்றென்றும் பேதுற்று நில்லாமல்
வர்த்தகங்கள் செய்து வளம்படுநா ளெந்நாளோ.

தப்புவழி சென்று தவிக்காம லேகடலிற்
கப்பல் செலுத்திக் கனம்பெறுநா ளெந்நாளோ.

அவத்தொழில்கள் செய்தே யநவரதம் வாடாமற்
றவத்தொழிகள் செய்து தலையெடுப்ப தெந்நாளோ.

வஞ்சகர்சொற் கேட்டு மதிமயங்கி நிற்காமல்
விஞ்சுபுக ழோடும் விளங்குவது மெந்நாளோ.

ஆ. சத்திவேற் பிள்ளை,
தமிழ் வித்துவான்.

## கமலாஸனிப் பத்திரிகையைப்பற்றி சில அபிப்பிராயங்கள்.

அன்பார்ந்த ஐயா!

தமிழ்மடந்தைக்குத் தற்கால நாகரீகப்படியலங்கரித்துப் பலரும் விரும்பும்படி புரியவல்லுநரி ரில்லாம லன்னவளியற்கையழகு விளங்காது குன்றுதலைக்குறித்துத் தீயிலிட்ட மெழுகென வுருகு நம்மனத்தைத் தேற்றவந்த கமலாஸனியைத் தமிழ்நாடு கைப்பற்றி நுண்ணறிவு கொண்டின்புற்றுவாழு மென்று பூர்த்தியாய் நம்புகிறேன்.

இங்ஙனம் தங்கள்,
நவநீதகிருஷ்ணபாரதி யென்னும்,
கண்ணபுரத்துக் கவுணியவெண்ணெய்க்கண்ணனூர்.

அன்பிலும், அறிவு ஒழுக்கங்களிலும் சிறந்துவிளங்கும் ஐயா!

அருமைமிக்க தங்கள் கமலாஸனிப்பத்திரிகையை சமயம் நேர்ந்தவிடத்தெல்லாம் கருத்தூன்றி நான் படித்து வந்திருக்கின்றேன்.

உண்மையில், அதன்கட் காணப்படும் விஷயங்களனைத்தும் நூல்வழக்கோடும், ஆன்றோர்வழக்கோடும் சிறிதும் முரணுவாருக. சமய சாத்திரம் ஞானபோதனை தெய்வபக்தி என்பன. போதிக்கும் புகழுருவாயதென்பது நன்கு புலனாகின்றது.



இச்சிரிய இப்பத்திரிகையை நம்மன்பர்களனைவரும் விருப்புடனேற்று நம்தமிழ்நாடெங்கணும் பரவச்செய்யுமாறு மறைவழிப்பட்ட இறைமுதற்பொருளை என்றும் போற்றுமாணக் கடவேன் யான்: சுபம்.

ரா. சந்திரகாசன் பிள்ளை,
உபாத்தியாயர்
எஸ். பி. ஜி. லோயர் செக்கண்டேரி ஸ்கூல்,
மேலஊர், தூத்துக்குடி.

மகா-ள-ள-ஸ்ரீ கனம் ஐயா!

"கமலாஸனிப் பத்திரிகைகள்" வரக்கண்ணுற்றுக் களித்தனன். அவற்றுட்கண்ட விஷயங்கள் அரிய பெரிய நுண்பொருட் பொலிவும், மக்கட்கின்றியமையாத புருஷார்த்தமும் மலிந்து கிடந்தன. பரக்கக்கூறல் மிகையெனவமைந்தேன்.

இளங்காடு, M. முருகைய வாத்தியார்,
B. E. ஸ்கூல், செங்கிபட்டி.

## சுகாதார ஜீவாட்சாமிர்தம்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தம் நான்கையும், புண்ணிய விசேடத்தால் வந்த அருமைவாய்ந்த மனித சரீரத்தால் அடையவேண்டுமென உபநிஷத் முதலிய அநேக கிரந்தங்களில் கூறப்பட்டிருத்தலால், அச்சரீர நிலைமையையும் அதனைப் பாதுகாக்கு முறைமையையும் தெரிந்துகொள்ளவேண்டியது இன்றியமையாததாகவிருக்கிறது. ஆதலால் சரீர சுகத்தையும், ஆயுள் பெருக்கத்தையும், அநேக அற்புத சித்திகளையும், மோட்சத்தையும் விரும்பும் ஒவ்வொருவரும் அவற்றைத்தெரிவிக்கும் நூல்களைக்கற்று அநுபவத்துக்குக் கொண்டுவந்து ஆனந்தமடையவேண்டும். இந்த சுகாதார

ஜீவரட்சாமிர்தம் என்னும் கிரந்தமானது, இதற்குப்பெரிய உபகாரமாகவும் அரிய பெரிய விஷயங்களையுடைய பொக்கிஷமாகவும் அமைந்திருக்கிறதென்றும், இது பெரும் பிரயோஜனத்தைத் தரத்தக்கதென்றும் அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இச்சாஸ்திரம் நோய் வருவதற்குமுன் சுகாதார தந்திரயுக்தி அப்பியாசம் முதலியவைகளால் நோய் வராமல் பாதுகாப்பதைப்பற்றியும், நோய் வந்தபின் ஔஷதம் முதலியவைகளால் எளிதில் நிவர்த்திசெய்துகொள்ளும் விவரத்தைப் பற்றியும், குடும்பத்தையும் குழந்தைகளையும் பெண்பாலரிகள் பாதுகாத்துவரும் விஷயங்களைப்பற்றியும், சுவானுபவமையுள்ள சித்து சாஸ்திரம் முதலிய அநேக கிரந்தங்களில் புதை பொருள்களாயுள்ள அநேக பரமரகசியங்களைப்பற்றியும், சிறுவர் முதல் யாவரும் எளிதில் வாசிக்கும்படி எளிய தமிழ் நடையில் என்னால் எழுதப்பட்டு, சிவானந்தயோகீஸ்வரர் என்னும் மகானாலும், இச்சென்னை ராஜதானியில் திலகம்போல் விளங்கும் மகா வித்வான்களாலும் பரிசோதிக்கப்பட்டு, அவசியமான தேசதத்துவ படங்களும் சேர்க்கப்பட்டு, கிளேஸ் கடிதத்தில் முத்துப்போல சுத்தமாக அச்சிடப்பட்டு வருகிறது. இந்தக் கிரந்தம் கூடிய சிக்கிரம் வெளிவரும்.

ஆகையால் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு புத்தகம் இருக்கவேண்டுமென்பது நான் சொல்லாமலே நன்கு விளங்கும். இப்புத்தகம் வெளிவருவதற்கு முன் தங்கள் பெயரை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுகிறவர்களுக்கு புத்தகம் 1-க்கு ரூ 2—0—0 வீதமும் புத்தகம் வெளிவந்த பிறகு விரும்புகிறவர்களுக்கு புத்தகம் 1-க்கு ரூ 3—0—0 வீதமும் விற்கப்படும்.

### இச்சாஸ்திரத்தில் அடங்கியிருக்கும் அவசியமான சில விஷயங்களின் சுருக்கம்.

1. குணபூஷணி அமிர்தவசனி முதலான அறுவர்களின் சம்பாஷணை.

2 பஞ்சபூத உற்பத்தியும் அதன் மகாத்மியமும்.



3. அண்டபிண்ட சராசரங்களின் உற்பத்தி.

4. நால்வகையோனி மூவகைஜாதி எழுவகைத்தோற்றம் எண்பத்துநான்கு லட்சம் ஜீவபேதங்களின் விவரம்.

5. மானிடதேக உற்பத்தி வரலாறு.

6. மானிட சரீர அங்க அமைப்பு.

7. இல்வாழ்க்கை.

8. சுகத்தின் பெருமை.

9. சுகாதாரமும் அதனாலடையும் சுக வாழ்வும்.

10. வசிக்கும் வீடு கிணறு முதலியவைகளைச் சுத்தமாய் வைத்தல்.

11. நித்ய கர்மானுஷ்டான விதிகள்.

12. போஜன பதார்த்தங்களின் விவரம்.

13. நித்திரைக்குரிய காலம் இடம் வசதி முதலியவைகள்.

14. அதி நித்திரையைப்போக்கும் உபாயம்.

15. சரீர சோம்பல் அசதி இவைகளை நீக்கும் தந்திரம்.

16. கடினவேலையால் களைத்த மனிதர்கள் உடனே தைரியமடைய மார்க்கம்.

17. பொய், கொலை முதலிய பஞ்சமா பாதகங்களின் கெடுதி, அவைகள் சாரா திருக்கவழி.

18. பொருள் சம்பாதித்தல்.

19. ஸ்திரியின் சாமுத்திரிகா லட்சணம்.

20. நல் மனைவியைத்தேடல்.

21. கற்பின் பெருமை.

22. நாயகன் நாயகி நடந்துகொள்ளும் அன்பின் முறை.

23. புத்திரபாக்கியமும் குழந்தைகளை வளர்த்தலும்.

24. விதவைகளின் ஒழுக்கமும் அவர்களைபரிபாலித்தலும்.

25. வியாதி உண்டாவதற்குக் காரணம்.

26. மனக்கிலேசத்தை மாற்றும் தந்திரம்.

27. குணவிசேடம்.

28. சர்வ பிராணிகளிடத்திலும் கருணை.

29. தாய் தந்தை முதலியவர்களை உபசரிக்கும் முறை.

30. சத்தியமும் அன்பின் பெருமையும்.

31. பெரியோர்கள் வழிபாடும், கடவுள் வழிபாடும்.

32. பக்தியும் அதன் பயனும்.

33. குரு சீடர் லட்சணம்.

34. ஆறுதாரம், பஞ்சகோசம், பஞ்சாவஸ்தை அந்தக்கரணபஞ்சகம் இவைகளின் விவரம்.

35 தசநாடிகளின் பெருமை.

36. யோகாப்பியாசமும், அணிமாதி சித்திகளும், நோயில்லாத பெரு வாழ்வும்.

37. மந்திரயோகத்தின் சக்தி.

38 இராஜயோகத்தின் பெருமை.

39. ஆக்கிரஷணசக்தி, உச்சாடன சக்தி, ஸ்தம்பன சக்தி, டெலிபாதி, (Telepathy) ஹிப்னொட்டிசம், (Hypnotism) அனிமல் மாக்னெடிசம் (Animal Magnetism) முதலியவைகளின் விவரம்.

40. மருந்தில்லாமல் சில வியாதிகளை குணப்படுத்தும் மார்க்கம்.

41. வைத்தியரில்லாமலே தாமே மருந்துகள் தயார்செய்து நோய்களை நிவர்த்திசெய்ய உயர்ந்த முறைகள்.

42. ஜீவாத்மா பரமாத்மா லட்சணம்.

43. ஞானம்—நித்தியமான மோட்ச சாம்பிராச்சியத்தை அடையும் வழி.

இப்புத்தகத்தின் பெருமையானது இதனை வாங்கி வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் தானே விளங்குமாதலின் இங்கு நான் விரித்தெழுதாது இம்மட்டோடு நிறுத்துகின்றேன்.

தந்தி விலாசம்:-
" பண்டிதர் "
கும்பகோணம்.

K. S. துரைசாமி பண்டிதர்,
ஆயுர்வேத டாக்டர்,
சர்வரோக நிவாரண வைத்தியசாலை கும்பகோணம்.



## கலித்தொகையிற் சில மேற்கோள் விளக்கம்.

| கலி, பக்க எண். | விளங்கா மேற்கோள். | சில விளக்கம் முதலியன. |
|---|---|---|
| 3 | "கொட்டி...துதிப்பே" | " |
| 4 | "ஏறமர்........கம்மே" | " |
| 33 | "சிறுபூளை.....ரைந்து" | " |
| 62 | "அவ்விரண்டினுட் கூர்ங் கோட்ட சுடர்வேல்" | " |
| 73 | "கண்ணிற்சிறந்த...பில்லை" | "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை" நான்மணிக்கடிகை, ருகூ0 |
| 135 | "தன்னையுள்ளி...யினேன்" | " |
| 150 | "பின்னீ தொடர் நிலை" | " |
| 170 | "மருந்து பிறிதில்லா...... துயர்" | " |
| 225 | "அஞ்சியச்சுறுத்தலும்" | " |
| 257 | "தண்டாக்கால்......பல" "தண்டா விருப்பினள்" | "தண்டா விருப்பினள்" புறப்பொருள் வெண்பா மாலை, வெட்சிப்படலம், கங0 |
| 264 | "இற்று சேலாடிய...... பதத்த" | " |
| 277 | "வந்தன்று" | "கடன்முகந்து வந்தன்றுகார்" முல்லைப்பாட்டு வெண்பா, 2. * "மிகுவளம் பழுநிய யாணர் வைப்பிற், புதுவது வந்தன்று" மலைபடுகடாம், கரு; கூசா. |

| கவி; பக்க எண் | விளங்கா மேற்கோள். | சில விளக்கம் முதலியன. |
|---|---|---|
| 279 | "நல்லெயிலுழந்த... தம்மின்" | "நல்லெயிலுழந்த செல்வர்த் தம்மின்" மதுரைக் காஞ்சி, வரி எஈக. |
| 288 | "நோன்புயர்ந்து" | " |
| 313 | "ஞெலிகோற்...ஞெகிழி" | "ஞெலிகோற்கொண்ட பெருவிறன் ஞெகிழி" பெரும் பாணாற்றுப்படை வரிகளஅ. |
| 315 | "நுதிக்கோல...தது" | " |
| 369 | "ஓங்குசினை...தன்றே" | " |
| 382 | "பகல்கான...பரிதி" | "பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி" பெரும் பாணாற்றுப்படை, வரி உ. |
| 409 | "நயனுநண்பு...தொழுகலும்" | " |
| 424 | "அயிற்கதவம்...துழக்கி" | "அயிற்கதவம் பாய்ந் துழக்கி" முத்தொள்ளாயிரம் கள. |
| 426 | "புள்ளிக்கள்வன்" "தண்பொன்" | "புள்ளிக்கள்வன்" ஐங்குறு நூறு, உக, உஉ, உச. |
| 449 | "உரவோரெண்ணினும்" | "உரவோரெண்ணினும்" பதிற்றுப்பத்து, அ-ஆம் பத்து, வரி க. |

இளங்காடு. M. முருகைய வாத்தியார்.
B. E. ஸ்கூல். செங்கிபட்டி.

* இது; புறப்பொருள் வெண்பாமாலை யெனக்காணப்பட்டது. அடியில் வருமாறு:— வெண்பா.

"புனையும் பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்
துனையுந் துனைபடைத் தன்னார்—முனையு
ளடன்முகந்த தானை யவர்வரா முன்னங்
கடன்முகந்து வந்தன்று கார்."

உ

# கமலாஸனி.

## ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் 3 | 1915ஞு டிசம்பர்மீ | சஞ்சிகை 12.

### திருஞான சம்பந்தசுவாமிகள் சரித்திரச் சுருக்கம்.

இவர், சைவசமயாசிரியர்களாகிய நால்வர்களுள் ஒருவ
ராவர். இவர் சீர்காழியென்னுந் திருப்பதியிலே திருவவதாரஞ்
செய்தார். இவருக்குத் தாயும் உண்டு. தந்தையும் உண்டு.
இவருடைய தந்தையார் பெயர் சிவபாதவிருதயரெனப்படும்.
இவருடைய தாயார் பெயர் திலகவதியம்மையாரெனப்படும்.
'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்றாற்போல சிறு
பிராயத்திலேயே இவர் உண்மையான ஞானவழியிலோங்கி,
தம்முயிருக்குறுதி பயக்கும் சிவபக்தி அடியார் பக்திகளிலே
சிறந்து ஒழுகுபவராயிருந்தார். உலக அல்லல்களைத் தம்மன
த்தே பொருந்தவாறு தடுத்து, கேட்போர் செவிக்கினிமை
பயக்கும். பல அரிய சிவநாம சங்கீதங்களையும் தமிழ்த்தேவா
ரங்களையுமட்டுமே தம் மனதினிடமாகப் பொருந்தவைத்து,
கன்னெஞ்சுடையாருங் கேட்டுக்கரைந்துருகும்வண்ணம் உள்ள
முருகப்பக்தி சுவையோடுங்கூட அவைகளையே சதாவும் பாடிக்
கொண்டேயிருப்பார். இவருடைய பெயராலேயே இவரு
டைய ஞானத்தின் உயர்வு தெற்றென விளங்குகின்றது. இவ
ருடைய பெயரையே பிரதானமாகக்கொண்டு விளங்கும். சில
பெற்றோர்கள் தம் அருமை மக்களுக்கு ஞானசம்பந்தன் என்ற
இப்பெயரையே சூட்டி பின் வருமாறாக அழைத்து வருகின்ற
னர். இன்னும் நம் நாட்டிலுள்ள பலவிடங்களில் அனேக

புண்ணியர்கள் இவருடைய பெயரையே பிரதானமாகக்கொண்டு தத்தமக்குரிய தொழிற்சாலைகள், சபைகள், மடங்கள், பாடசாலைகள் இவைபோன்ற இடங்களுக்கு இப்பெயரையே ஏற்றிப்புனைந்து பின் வருமாறாக அழைக்க ஆரம்பிக்கின்றனர். அதாவது (1) ஞான சம்பந்தசுவாமிகள் கரும்புச்சாலை (2) ஞானசம்பந்தர் நற்சபை (3) திருஞான சம்பந்தசுவாமிகள் மடாலயம் (4) ஞானசம்பந்தர் வித்தியாசாலை என்பவைகளே. இன்னும் சிலர் இவருடைய ஜனன நாளையே பிரதானமாகக் கொண்டு அந்நாளில் அவருக்கு மஞ்சன நீராட்டல் அபிஷேக முதலிய அலங்காராதிகளைச்செய்து அவரை உண்மையான அன்போடும் விசுவாசத்தோடும் வழிபடுகின்றனர். இன்னும் வேறு சிலர் அத்தினத்தன்று அவருடைய சரித்திரத்தைப புராணமாக வாசித்து பக்தியோடும் வழிபடுகின்றனர். இன்னும் இவரிடத்துள்ள இவைபோன்ற பல குணங்களையும்பற்றி ஒவ்வொன்றாக எடுத்துக்கூறப்புகுவது. பள்ளிக்கூடப்பையன்களில் அநேகர் ஒன்றுகூடி இராக்காலங்களிலே ஆகாயத்திற்றோன்றும் நட்சத்திரக்கூட்டங்களை ஒருங்கே எண்ணிக்கணக்கிடப்புகுந்தாற்போன்று நம்மாலும் கூறமுடியாதென்பது பெறப்பட்டது. ஆனதுபற்றி அவைகளின் சுருக்கங்களைப்பற்றியே இங்கு நாம் பேசுவோம். இவருடைய மூன்றும்வயதே இவரது ஞான உற்பத்திக்கும் பிரபஞ்ச ஆசை நீக்கத்திற்கும் மிகவும் ஏற்றதாயிருக்கின்றது. எங்ஙனமெனின், உலகிலே உள்ள ஆன்ம கோடிகளனைவரும் தாம் தாம் விரும்பற்பாலனவாகவுள்ள பொருள்கள் நான்காம். அவைகளே அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இந்நான்கனுள்ளும் தலைமையதான நான்காவது வீட்டையடைவதே மக்கள் தம் பெருநோக்கமும் உயர்மாட்சியுமாம். இவைகளை அடையவேண்டுமாயின் இகலோகப் பற்றுகளுக்கேதுவாயுள்ள முதன் மூன்றையும் அனுபவ வீரியத்தால் நீத்து விடுத்து பின்னர் பரலோக பற்றுக்களுக்கேதுவாயுள்ள பின்னைய ஒன்றைமட்டும் இவர்கள் அனுபவ வீரியத்தாற்றுங்கி அவ்வாறான இன்ப நிலையினையடைதலே மனிதப்பிறவியின் பெரும்பயனாகுமென்க.



இதனையே போதிய சான்றாக கடைப்பிடித் தொழுகிய பெரியோர்கள்.

"ஈதலறம் தீவினை விட்டீட்டல் பொருள்
காதலிருவர் கருத் தொத்து ஆதரவாய்ப்
பட்டதே இன்பம பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

என்றும் கூறியுள்ளார்கள்.

ஆகவே, ஆன்மாக்களெல்லாரும் விடவேண்டியமேலைய
மூன்றையும் முறையே விடுத்தல்வேண்டும். பின்னர் பற்றவேண்
டிய ஒன்றையும் அவர்தானே விரைவிற்பற்றவும் வேண்டுமென்
பதும் பெற்றாம். விடவேண்டிய மூன்றும் அறம், பொருள்,
இன்பம் என்பன, பற்றவேண்டிய ஒன்றுதான் வீடு என்பது.
இது நிற்க.

இக்கருத்தையே, தம்பாற் பொருந்தக்கொண்ட நமது
ஞானசம்பந்தப்பிள்ளையார் தமது மூன்றும் வயதிலேயே விட
வேண்டிய மூன்றையும் முறையே விட்டுவிட, பற்றவேண்டிய
அவ்வொரு பொருளையே இறுகப்பற்றினரென்பதும் ஒருவாறு
யூகித்தற்குரியதாம். இதுவே இவருடைய உயிருக்கு உறுதி
யைத்தரத்தக்கது. இவைகளால் இவருடைய, பால்யஞானம்
மிகமேம்பாடுடையதென்பது சொல்லாமலே விளங்குகின்றது.
நிற்க. தவத்தாலும், உயர்வுமிக்க அருட்பெருக்கத்தாலும் சிற
ந்துவிளங்கும் இப்பிள்ளையை, இவருடைய தகப்பனார், ஒரு
நாள் தமது தோள்மேற்பொருந்த தூக்கிச்சுமந்துகொண்டு
ஸ்நானஞ்செய்து திரும்பும் வண்ணம், தீர்த்தக்கரைக்குச்சென்
றார்கள். சென்றதும் தந்தையானவர் தமது குழந்தையை தீர்த்
தக்கரையில் உட்காரவைத்துவிட்டு தாம்மட்டும் ஸ்நானஞ்செய்
யும்பொருட்டுத்தீர்த்தஜலத்தினுள் இறங்கிமூழ்கிக்கொண்டிருந
தார். அச்சமயத்தில் தீர்த்தக்கரைமீது உட்கார்ந்துகொண்டி
ருந்த குழந்தையானது எதையோ நினைந்து வருந்துவதுபோல
திடீரென்று அழத்தொடங்கிற்று. இன்னும் நம்மாலே வீட்டில்
வளர்க்கப்பட்டுவருகின்ற நமது குழந்தைகள் சிலவேளைகளில்
அழுவதை நாம் காண்கின்றோம். இவ்வாறு இப்பிள்ளைக்கு.

அழுவதைக்கண்ணோக்கும் நம்மவர்கள் இதனை உற்றுநோக்குமிடத்து இது ஏதோ ஒருபொருளை நினைந்துதான் அழுதிருக்கக்கூடும், என்று நிச்சயிக்க இடனாகின்றது. அதுபோலவே இதுவும் அழவாரம்பித்ததோவெனின் அவ்வாறன்றென்றே நாம் கூறவேண்டியதுவரும். ஏனெனின் நமது குழந்தைகள் அழவாரம்பிக்கும்பொழுது ஏதேனும் தின்பண்டங்களையோ அல்லது விளையாட்டுப் பொருள்களையோ, அல்லது பாலையோ, அல்லது யாதாமொரு பொருளையோ, குறித்து அழுவது சர்வசாதாரணமாயிருக்கின்றது. இதுபோல இக்குழந்தையாதொன்றையும் நினைந்தவாறாக அழுதிருப்பதில்லையென்பதே முடிவாகும். அவ்வாறாயின் வேறு எதை நினைந்துதான் அழுதிருக்கக்கூடும் என்பது நன்கு கவனிக்கத்தக்கது. அதாவது, தாம் பூத உடலோடு பொருந்த எடுத்த முந்திய ஒவ்வொரு ஜன்மங்களிலும், தம்முயிருக்குக் கேட்டை விளைவிக்கும் தீமைகளை அகற்றி தம்முயிருக்கு நன்மை விளைக்கும் அறச்செயல் புண்ணியச்செயல்களையே மிகுதியும் செய்து வந்தனராதலின் இன்னோரன்ன இந்த ஞானமூர்த்தியை எல்லாம் வல்ல முழுமுதற்பெருமானை நமதாண்டவன், அவருக்கு சிவகிருபை பாலித்து தடுத்தாட்கொள்ள இவர் அவரது திருவடியார்களுள் ளொருவராகக் கருதப்பட்டு விளங்கினாரென்பதும் சித்திக்கின்றது. அப்போல்வதாய் அவ்வடியார் குழாங்களாய் திகழ்ந்து விளங்கும் நமதருட் பெருங்கடவுளரைப்பிரிந்த அவசரங்கருதி அதேயே நினைந்து வருந்தி அழ ஆரம்பித்தாரென்பதும் பெறப்பட்டது.

இதையே,

கூடிப்பிரிந்த வொரு கொம்பனையைக் காணாமல்
தேடித் திரிவான்போல் சிந்தைவைப்ப தெக்காலம்.

என்றார் பெரியோர். கூடிப்பிரியேல் என்பதும், சிறந்தவொரு நன்னீதியல்லவா? இவைகளின் உண்மைகளை உள்ளவாறே அறிந்த நமது பிள்ளையார் தம்முடைய சிவபெருமானை



தந்தையாரை விட்டுப்பிரிந்த உணர்வு இவருளத்தே தோன்றவும் அதைப் பொறுக்கமுடியாமல் அப்பெருமானை நினைந்து பின் வருமாறாக. அம்மே அப்பே வென்றழத்தொடங்கினர் போலும். இதையே பொருளாகக்கொண்ட இச்சரித்திர நூல்வல்லாரும், இவர் உள்ளத்திலே தோன்றிய இவ்வுணர்ச்சியையே பண்டைய உணர்ச்சியென்று எடுத்துக்காட்ட முன்வந்தனர். அது நிற்க, இனி இவ்வாறாக அழத்தொடங்கிய இப்பிள்ளையைக் கவனித்த வண்ணமாகவிருந்த தோணியப்பர் சுவாமிகள் அவருக்கு இரங்கினார். இரங்கி சிவபெருமானாகிய தாமும் தம் உமாதேவியாகிய பரமேஸ்வரியும் சகலமங்கள அருட்கோலந்தாங்கி ரிஷபவாகனரூடராய் எழுந்தருளிவந்து இப்பிள்ளையாருக்குக் காக்ஷி கொடுத்தார்கள். பின்னர் அப்பெருமானால் ஏவப்பட்ட நமது உமாதேவியாகிய அம்மை அரும்பனைய தமது திருமுலைகளினின்றும் வழிந்தோடிய பாலை பொற்கிண்ணத்திற் பெய்து கொடுக்க பிள்ளையார் அதனை உண்டு அழுகை தீர்ந்து சும்மா இருந்தார். இவ்வாறு தமது திருமுலைப்பாலை குழந்தைவாய் மடுத்து பல்கும்வண்ணம் செய்யாது மேற்கூறிய வண்ணம் தனிமையான பொற்கிண்ணத்திற் பெய்து கொடுப்பானேன் என்ற ஓர் ஆசங்கையும் உடன் நிகழற்பாலதாயிருக்கின்றது. அவ்வாசங்கைக்குப்பின் வருமாறாக நாம் உத்தரங்கூறுகின்றோம். அதாவது என்னவெனின்:-நமது அம்மையாருக்குப் பல பெயர்களிருப்பதோடு உண்ணாமுலையாள் என்ற பெயரொன்றிருப்பதாக நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது என்றும், அவ்வுண்ணாமுலையென்னும் பெயர் தம் கொங்கையினின்றும் சுரக்கும் பாலானது தேவரேயன்றி மற்ற ஏனையர் எவராலும் மடுத்துண்ணல் தகாதென்பது பொருந்த அப்பெயர் ஏற்பட்டதென்றும், பெரியோர்கள் நிச்சயஞ் செய்திருக்கிறார்கள். இக்காரணம்பற்றியே அம்மையானவர் அங்ஙனம் செய்து போந்தனள் என்பதும் புலனாகின்றது. இது நிற்க,

இனி தீர்த்த ஜலத்தினுள்ளிறங்கி மூழ்கிக்கொண்டிருந்த இவருடைய தந்தையான சிவபாதவிருதயர் ஸ்நானஞ்செய்த பின் கரைக்குவந்து பார்க்கவும் அழுதுகொண்டிருந்த குழந்தையானது அவ்வழுகை நீங்க சும்மாயிருப்பதைக்கண்டார். கண்டதும் உடனே அப்பிள்ளையை நோக்கி தந்தையானவர் குழந்தாய்! யார் உனக்குப் பால் கொடுத்தது என்று அச்சுறுத்திக்கேட்டார். இவ்வாறு இவர் கேட்பதற்கு நியாயமொன்று உண்டு. அதாவது எல்லாக்குலங்களிலும் மேம்பட்ட உயர் குலத்தில் ஜனித்த குழந்தையாக இது இருத்தலால் இவ்வுண்மையை அறியமாட்டாது குழந்தையினுடைய அழுகைக்கிரங்கி இக்குலத்தினும் தாழ்வடைந்த வேறு எக்குலத்தவராயினும் பால்கொடுத்து குழந்தையினுடைய அழுகையை நிறுத்த முயன்றிருப்பரோ என்ற சந்தேகத்தைப்பற்றிய நியாயமே இவர் அறியத்தக்கதாயிருந்தது. இவ்வுண்மையினை அறியும்பொருட்டே தம் குழந்தையை நோக்கி மேற்கூறியவாறு கேட்க ஆரம்பித்தனரென்க. கேட்டதும் குழந்தையானது முன் பின் யோசியாமல் ஆலயத்தில் வீற்றிருந்தருளுகின்ற தோணியப்பர் சுவாமிகளை நோக்கி, கை விரலாற் சுட்டிக்காட்ட இவர்தான் பால் கொடுத்தது என்று கூறி, பின் வருமாறான இனிய அருட் செம்பாடலையும் உடன்பாட ஆரம்பித்தனர். அப்பாடலானது தமிழ் வேதமாகிய நமது தேவாரத்தின்கண் முதல் முதல் இருக்க இடம் பெற்றுளது. அதாவது பின் வருமாறு:-

“ தோடுடைய செவி யன்விடையேறி யோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வ
னேடுடைய மலரான்முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுரமே விய பெம்மா னிவனன்றே .”

என்று பாட ஆரம்பித்தனர்.



ஐந்தும் இரண்டும் எத்தனை? என்பதைக்கூட நன்றாய் அறிய முடியாத இப்பாலப்பருவத்திலே இக்குழந்தையானது இவ்விதம் பாடநேர்ந்த அவசரத்தை நினைந்து நினைந்து இவருடைய தந்தையார் பெரிதும் ஆச்சரியப்பட்டார். அன்று முதல் அப்பிள்ளையாருக்கு திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் என்ற பெயர் வழங்கப்பெறலாயிற்று.

அதுமுதற்கொண்டு நமது பிள்ளையார் தாமும் தமது தந்தையுமாகக்கூடி சிவஸ்தலம் புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றிற்குச்சென்று ஆங்காங்கு பல அரிய அற்புதக்காட்சிகளை உலகத்தாருக்குக் காண்பிவித்தார். அதுவுமல்லாமல் பூலோகத்திலுள்ள நரர்களேயன்றி தேவருலகத்திலுள்ள தேவர்களும் களிமிக்கூர்ந்து அதிசயப்படும்வண்ணம் பல திருவிளையாடல்களைப்புரிந்தும் தம் வாணாட்களைச்சுகமே கழித்து முடிவில் இனிப்பிறவா நெறியாம் பேரின்பவீட்டினையடைந்தார். அதாவது சிவஜோதியாகிய சிதாகாசப் பெருவெளியிலே சிவபெருமானோடு இரண்டறக்கலந்தார். ஆனால், இவர் சென்ற ஸ்தலங்களும், செய்த அற்புதங்களும் கணக்கிறந்தனவேயாகும். அவைகள் பின் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விரிவாகவும் தெளிவாகவும் விபரமாகவும் எழுதப்பட்டிருப்பதைக் கண்ணுற வேண்டுகின்றேன்.

(இன்னும் வரும்)

ரா. சந்திரகாசன்.

## காளமேகப்புலவர் சரிதம்.

(முன் தொடர்ச்சி)

---

இத்தலம் காவேரியின் தென்கரையிலிருக்கிறது. ரெயில்வேஸ்டேஷன். பார்வதி மயிலாயிருந்து சிவபெருமானைப்பூசித்த தலம். இந்த க்ஷேத்திரத்திற் காவேரி நதியில் துலாமாசமாகிய ஐப்பசி மாதத்திற் செய்யும் ஸ்நாநம் மிகவும் விசேஷம்.

" வெஞ்சினக்கடுங் காலன் வினைகிலா
னெஞ்சி றப்பும் பிறப்பு மறுக்கலா
மஞ்சன் மாமயி லாடுதுறை யுறை
யஞ்சொ லாளுமை பங்க னருளிலே "

என்பது தேவாரம்.

### வழுவூர்.

இவரோவீ ரட்ட ரெனுநாம முள்ளோர்
இவரோ வழுவூரி லீசர்—இவரோ
கடத்தகூக்க தத்துறப்பி டித்திழுத்த முத்தி
அடித்தறுத்து ரித்துடுத்தவர்.

இ-ள். இப்பெருமானே "வீரட்டர்" எனும் பெயருள்ளவர். இப்பெருமானே வழுவூர்க்கு இறைவர். இப்பெருமானே ஆணவத்தால் மதம்பொழிந்து தம்மை எதிர்த்து வந்த யானையை அதன் மதமடங்க அடக்கி அதன் சிறத்தைக் கண்டித்து அங்கத்தையுரித்து தோலைப்போர்வையாகக்கொண்டவர் என்பதாம்

இத்தலம் மாயவரத்திலிருந்து திருவாரூருக்குச் செல்லும் ரயில்பாதையில் மங்கநல்லூர் ஸ்டேஷனிலிருந்து 1-மையிலிலுள்ளது.



" பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல் புரம் அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மா வழுவூர்
காமன் குறுக்கை யமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே "

எனவரும் அட்டவீரட்டதலத்துள்ளொன்று திருநாவுக்கரசு நாயனார் க்ஷேத்திரக்கோவையிலும், 8-வது பாடலில் " வழுவூர் வீரட்டமானதாம் " எனக் கூறப்பட்டிருக்கிறது. யானையுருக்கொண்டு செருக்கடைந்து தேவர்களை வருத்தித் தமை யெதிர்க்கவந்து தம்மை யெடுத்தும் விழுங்கிய கயாசூரன் யுடல்பிளந்து வெளிவந்து அவன் தோலை யுரித்துப் போர்த்தருளிய பராக்கிரமம்நிகழ்ந்த பெருமையாகிய திருவழுவூர் என்னுந்தலமும் இதுவே. இத்தலத்து மாதம் நடந்துவரும் பிக்ஷாடனவுற்சவத்தில்கூட இரவில் யானைகளை இவ்வூரில் கட்டுவதில்லை. இதுகாரணமே இவ்வூரில் திருக்கோவில்கொண்ட சிவபெருமான் யானையுரித்தது நிதர்சனமாம்.

என்பது தேவாரம்.

### திருக்கண்ணபுரம்.

### கண்ணபுரம் சவரிநாராயணப்பெருமான் திருநக்ஷத்திரத்தைக் குறித்துப்பாடியது.

" உத்திரத்துக் கோர்நா ளுரோகணிக்குப் பத்தா நாள்
சித்திரைக்கு நேரே சிறந்தநாள்—எத்திசையும்
காராரும் பூஞ்சோலைக் கண்ணபுரம் வாழ்சவரி
நாரா யணன்பிறந்த நாள் "

இ-ள். எந்தத் திக்கிலும் மேகமண்டலத்தையளாவிய பூஞ்சோலைகள் சூழ்ந்த கண்ணபுரத்தில் வசிக்கின்ற சவரிநாராயணன் ஜநிமித்தநாள், உத்திரத்துக்கு அடுத்த ஒன்றாவது நாள். உரோகணிக்குப் பத்தாவதுநாள். சித்திரைக்கு நேராய் மேலானநாள் என்பதாம்.

நாள்-நக்ஷத்திரம். உத்திரத்துக்கு அடுத்ததும், உரோகணிக்குப் பத்தாவதும், சித்திரைக்கு முப்பதுமாகிய நக்ஷத்திரம் அஸ்தம் என்றறிக. சவரிநாராயணன் பிறந்தநாள் அஸ்தம் என்பது கருத்து.

இவர் கண்ணபுரங்கோயிலுக்குச் சென்றபோது அங்குள்ள வைணவர்கள் கதவைச் சாத்திக்கொண்டு திருமாலைப்பாடவிட்டால் விடோமென்றார்கள் [கண்ணபுரமாலேயென்றார்] என்னவே கதவைத்திறக்க வெளியில் வந்து முன்சொல்லிய சீரைத் தொடங்கி:—

* "கண்ணபுர மாலே கடவுளிலு நீயதிக
முன்னிலுநா னேயதிக மொன்றுகேள்—பன்னரிய
வுன்பிறப்போ பத்தா முயர்சிவனுக் கொன்றுமில்லை
யென் பிறப்பிற் கெண்ணேயில்லை." (பரப்பிரமவிளக்கம்)

இ-ள். திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளிய திருமாலே! சிவபெருமானிலும் நீ உயர்ந்தவன். உன்னிலும் நான் உயர்ந்தவன். நான் சொல்வதாகிய ஒரு செய்தியைக்கேளாய். உயர்ந்த சிவபெருமானுக்கு ஒருபிறப்புமில்லை. முன்னே உன் பிறப்போ பத்தாகும். என் பிறப்பு அளவிடமுடியாது என்பதாம்.

ஒன்றுமில்லாதவனினும் பத்துள்ளவன் அதிகம். அவனினும் மிகப் பலவுள்ளவன் அதிகன். ஆதலால் இவ்வாறு கூறினர். இதில் சிவனுக்கு ஒன்றுமில்லையென்று இகழ்ந்தது போலக்கூறினும், பிறவியற்றவரெனப் புகழ்ந்ததாயிற்றெனக் கொள்க.

* "உன்னிலுமோ நானதிக" "முன்னமே" "எண்ணப்போகாதே"
எனவும் பாடம்.

இச்சம்பவத்தைப் பாவலர் சரித்திரதீபக ஆசிரியர் வேறு விதமாகக் கூறுகின்றனர். அது வருமாறு:—

* "கண்ணபுரங்கோயிற் கதவடைத்துத் தாழ்ப்பூட்டி
வெண்ணெயுண்ட மாயவனும் மண்ணையுண்டான்

* "மண்ணையுண்டார் வெண்ணெயுண்டமாயனூர்" எனவும் பாடம்.



என்றுபாட விஷ்ணுவிக்கிரகந் தரையிற் சாய்ந்தது என்றும்; மறுபடி அதற்குப் பரிகரிப்பாக. என்னையெனில்

சிரக்கப்பரை யேந்திச் செங்காட்டி லீசர்
இரக்கப் புறப்பட்டா ரென்று."

என்றுபாட அவ்விக்கிரகம் எழுந்துவிட்டதென்ப.

இ-ள். செங்காட்டில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானவர் யாவரும் மதிக்கத்தகுறிய தலையோடாகிய பாத்திரத்தையேந்தி இரப்பதற்கு வெளிப்பட்டாரென்று கண்ணபுரக் கோயிலின் கதவை மூடித்தாழிட்டார். வெண்ணெயுண்டதிருமாலானவர் மண்ணையுண்டனர் என்பதாம்

கண்ணபுரங்கோயிலில் இவர்போனபொழுது அடைக்கப்பட்டகதவும், திருமால் பூமியை உலக முடிவுகாலத்தில் உண்டருளுவதனையும், இவ்வாறு கற்பித்துக்கூறினர். திருமாலை மண்ணையுண்பதற்கும் காரணம் தன் மைத்துனனாகிய சிவபெருமான் கப்பரையேந்திப் பிச்சைக்குப் புறப்பட்டானென்று.

இதுபோலவே ஸ்ரீரங்கத்திலும், ஒருநாள் காற்று மழையும் கலந்தடித்தபோது காளமேகப்புலவர் பெருமாள் கோயிலிற் புகுந்தபோது சில வைஷ்ணவர்கள் அக்கோயிற் கதவைச் சாத்திக்கொண்டு இப்பொழுது நம்பெருமானைப் பாடினாலன்றி கதவு திறவோமென்றார்கள் அதற்கவர், அக்கோயிலினின்று வெளிப்படவேண்டுமென்னுங் கருத்தையுட்கொண்டு "செங்கண்மால்" என்றார். வைஷ்ணவர்கள் உளமகிழ்ந்து கதவு திறந்துவிட்டார்கள். உடனே புலவர் வெளிப்புறத்தில்வந்து முன்சொல்லிய சீரைத்தொடங்கிக் கூறியபாடல்:—

செங்கண் மால்சகத் திகிரியேந்து
சிவபிரானளித் திட்டதே.

"செருவில் வாணன்றோள் கொய்ததும் மான் றிருவருள் கொடன்
றோமல, ரங்கையார்கபா லந்நிறைத்ததா லன்றோ கேசவன் குருதியா,

லயன்குதத் துதித் தேயதொட்ச சஞமமுற்றகற் கென்சொல்வீ. ரெங்கன் சங்கரன் யாவுமாய்த்தகா ளெழில் வைகுந்த மன்றுள்ளதோ. விசைகொள் கங்கைதி ரத்தில்வியாசனீட் டிட்டசையசை யாதரெதன். பொங்கு நஞ்சமுண்டரியோ டண்டரைப் புரந்ததில்லையோ வாதலாந். பொன்னி னம்பலத் தாடுவோனலாற் புகழ்கொ டெய்வம் வேறில்லையே. ”

(பரப்பிரம விளக்கம்)

மாணப்பாடியதாகவும் சரிதம் வழங்குகிறது.

## கண்ணபுரத்துத் தீத்தாளைப்பாடியது.

“ சுந்த மலரயனுர் கன்னிமடவார்க் கெல்லாம்
அந்தவிள நீரைமுலை யாக்கினுன்—சுந்தரஞ்சேர்
தோற்றமுல தீத்தாட்குத் தோப்பை முலயாக்கினுன்
எற்றமிதில் யார்தா னியம்பு. ” (அபிதான சிந்தாமணி)

இ-ள். மணமுள்ள தாமரைமலரில் வாழ்கின்ற பிரமன், கன்னிப்பெண்களுக்கெல்லாம் அழகாகிய இளநீரை முலையாகப் படைத்தான். அழகு பொருந்திய காட்சியாற் சிறந்த தீத்தாள் என்பவளுக்கு தோப்பை முலைகளாகப்படைத்தான். இந்தப்பிரஸ்தாபத்தில் அதிகம் யாவர் நீ சொல்வாய் என்பதாம்.

“ தோப்பை ” தோற்பையெனவும் வேறு பொருள் தருதல் காண்க. பால் கமருக்கு உகுத்து என்பதை “ பாக்கமருக்கு உகுத்து ” என்றார் பிறரும். இருப்பூதெய்தும் இளமுலையிரண்டும் வெறும்பைபோல வீழ்ந்து வேருயின என்பதும் கவனிக்கத்தக்கது.

இத்தலம் நன்னிலம் ரெயில் ஸ்டேஷனிலிறங்கி கிழக்கே 3¾-மைல் தூரஞ்சென்று திருப்புகலூரையடைந்து அங்கு தெற்கே திரும்பி முடிகொண்டான் என்னும் ஆற்றைக்கடந்து 1 மைல் தூரஞ்சென்றால் திருக்கண்ணபுரத்தைத்தரலாம

* இது கம்பர் பாடியதாகத் தனிப்பாடற்றிரட்டில் காணப்படுகிறது. “ பிரமன் ” எனவும், “ வல்லிந்த ” எனவும் பாடபேதம்.



காவிரியின் தென்கரையிலுள்ள விஷ்ணு ஸ்தலம். பெருமான் பெயர் சவரிராஜப்பெருமாள் கண்ணபுரிநாயகி. கண்ணுவருக்குப் பிரத்யக்ஷம். நின்ற திருக்கோலம். 5 ஆழ்வார்கள் மங்களா சாஸனம்.

## திருச்செங்காடு.

## உத்திராபதீச்சுரரைத்தரிசித்து வசையாகப்பாடியது

“ காலனையுங் காமனையுங் காட்டுசிறுத் தொண்டர்கரும்
பாலனையுங் கொன்ற பழிபோமோ—சீலமுடன்
நாட்டிலே வாழ்ந்திருக்கு நாதரே நீர்திருச்செங்
காட்டிலே வந்திருந்தக்கால். ”

இ-ள். ஒழுக்கத்துடன் முன்பு நாட்டில் வீற்றிருந்த இறைவரே! நீர் இப்போது இந்தத் திருச்செங்காட்டில் வந்து ஒளிந்துக்கொண்டிருந்தால், முன்பு யமனையும் மன்மதனையும், உம்மால் சுட்டப்பட்ட சிறுத்தொண்டநாயனர் பெற்ற சிறுவனையும், கொலை செய்ததனுலுண்டாகிய பழியானது உம்மை விட்டு நீங்குமோ என்பதாம். காமனையெரித்தது—திருக்குறுக்கையிலும், யமனை உதைத்தது திருக்கடவூரிலுமாம்.

## தென்றற்காற்று வீசாமலிருந்தபோது பாடியது.

2

“ அம்பேந்து கையா னவன்பதியி *லம்மாவாம்
கொம்பேந்தி தக்கையணி கொண்டதோ—அன்பா
அரிந்த மகவை யழையென்று சொல்லி
இருந்தவன்றன் செங்காட்டிலே. ”

இ-ள். பக்த சிரோமணியாகிய சிறுத்தொண்டர் நமக்காக அரிந்து கறி சமைத்த பிள்ளையை நம்முடனே உண்ணுதற்கு அழைத்துவாருமென்று சொல்லி அப்பிள்ளை

* ஜம்மா-கால். இது இவ்விடத்தில் காற்றையுணர்த்தி நின்றது அம்புடர், அது இங்கு கடலுக்காயிற்று.

162013 600 008

யின் வரவை எதிர்பார்த்திருந்த சிவபெருமானுடைய திருச்செங்காடென்ற இந்த ஸ்தலத்தில் இதென்ன ஆச்சரியம்! காசிக்கங்கையைக் கமண்டலத்தில் முகந்து கையிலேந்திய அகஸ்திய முனிவனுடைய பொதியமலையிலிருந்து உண்டாகும் தென்றற்காற்றை ஒற்றைக்கொம்பினையேந்திய விநாயகமூர்த்தியின் பிதாவாகிய பரமசிவன் பூஷணமாகப்பூண்ட சர்ப்பந்தான் இப்பொழுது உணவாக உட்கொண்டுவிட்டதோ? எப்பொழுதும் இயங்குகின்ற காரணத்தாற் சதாகதியென்று பெயர்பெற்ற காற்று இயங்காததென்ன காரணம்? என்பதாம்.

இப்பாடல் அதிக வெப்பமாயிருந்த சித்திரைமாசத்தில் இவர் இவ்வூரில் தங்கியபொழுது இரவில் காற்றுவீசாமல் தமக்கு அதிகப்புழுக்கமாயிருந்ததுகண்டு பாடியதென்றுகூறுவர்.

இத்தலம் மேற்கூறிய திருக்கண்ணபுரத்திலிருந்து ஒரு மைல் தூரம். காவிரியின் தென கரையிலுள்ளது. விநாயகமூர்த்தி கஜமுகாசுரன் என்னும் அசுரனை சம்ஹாரம் செய்தருளிய ஸ்தலம். அவனது இரத்தம் பெருகி செங்காடாய் இருந்தமைப்பற்றி இந்த ஸ்தலத்துக்குத் திருச்செங்காட்டங்குடி என்னும் பெயருண்டாயிற்று. கஜமுகாசுரனைக்கொன்ற பழிநீங்கும்பொருட்டு விநாயகமூர்த்தி பரமசிவனைப் பூசித்த ஸ்தலம். அதனால் இங்குள்ள ஆலயத்துக்குக் கணபதீச்சுரம் என்று பெயருண்டாயிற்று.

சிறுத்தொண்டநாயனார் தமது ஒரே பிள்ளையாகிய சீராளன் என்னும் சிறுவனை வைரவவேடம் பூண்டுவந்த பரமசிவனுக்குக் கறியாக்கி அளித்தபின்னர் அவருடைய திருவருளால் அக்குழந்தை உயிர்த்தெழுந்த ஸ்தலம்.

பொடி நுகருஞ் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதிச் சுரத்தானே:—

என்னும் தேவாரமும்.



“ எடவி ழலங்கற் றிண்டோ ளிபமுகத்தவுணன் மார்பி
னீடிய குருதிச் செந்நீர் நீத்தமா யொழுகும் வேலைப்
பாடுற வருங்கா னென்றிற் பாத்தலி னதுவே செய்ய
நாடெனப் பெயர்பெற் றின்னுங் காண்டக இருந்ததம்மா ”
மீண்டுசெங் காட்டி லோர்சார் மேவிய மெய்ஞ் ஞானத்தும்பர்
தாண்டவம் புரியுந் தாதை தன்னுருத் தாபித்தேத்திப்
பூண்டபே ரன்பிற் பூசை புரிந்தனன் புவியு ளோர்க்குக்
காண்டகு மனையதான கணபதீச்சுரம தென்பர்.

என்னுங் கந்தபுராணச் செய்யுளுங் கவனிக்கற்பாலன.

பழைய திருவாத்தி விருக்ஷம், உற்சவர் சந்நிதிக்கெதிரிலிருக்கிறது. சிறுத்தொண்டர், அவர் பிள்ளை, அவர் மனைவி, சந்தன நங்கை இவர்களது சிலா விக்கிரகங்கள் பிரகாரத்திற் கீழ்ப்பக்கத்தில் உற்சவர் சந்நிதிக்கெதிரில் இருக்கின்றன. கோயிலுக்குத் தெற்கே சூரிய தீர்த்தம்.

“ கூரார விரைதேர்ந்து குளமுலவி வயல்வாழுந்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்றன் அருளொருநாள் பெறலாமே. ”

என்பது தேவாரம்.

(இன்னும் வரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்.

## இல்வாழ்க்கை.

திருநெல்வேலி ஜில்லா தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 32-வது ஆண்டு நிறைவு விழா நடைபெறும் காலத்தில் 19—12—1915 ஞாயிற்றுக்கிழமை மாலையில் மதுரை கவர்ண்மெண்டு பெண் பாடசாலை உபாத்தியாயனி ஸ்ரீமதி வேலுத்தாயம்மாளால் வாசிக்கப்பெற்றது.

கனம் அக்ராசனாதிபதி அவர்களே!
சகோதரர்களே, சகோதரிகளே!

இந்தச் சைவசித்தாந்த சபையிலே அறிவுடையோராகிய தங்கள் முன்னர் வியாசம் வாசிக்கும்படியான ஒரு பாக்கியத்தை நான் இன்று பெற்றதற்காக மகிழ்வடைகின்றேன்.

இது எல்லாம் வல்ல ஆண்டவன் கருணையினால் அல்லாமல் வேறு என்னுடைய விருப்பத்தால் அல்ல. என்னைச்சகோதரியாக அபிமானித்த சைவத்திருவாளராகிய பெரியார் ஒருவர். என்னுடைய அபிவிர்த்தியை மேற்கொண்டு என்னை இந்தச் சைவத் திருபணிசெய்ய ஏவினர். அவர்களுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டவளாய் தங்கள் முன்வந்து நிற்கின்றேன்.

“ என் சிறுமை நோக்காதெனக்கருளல் வேண்டுமென்றே
நின் பெருமை நோக்கி இங்கு நிற்கின்றேன். ”

என்று பெரியோர் சொல்லியவண்ணமாகவும், பெரியோர்களாகிய தாங்கள் என்னுடைய அறியாமை என்னும் சிறுமையைச்சிறிதேனும் நோக்காது தங்களுடைய பெருமைக்குணத்தினால் தாங்கள் எனக்கு அருள் செய்வீர்களென்ற முழு நம்பிக்கையோடு இவ்விஷயத்தை மேற்கொள்ளலானேன். நான் சொல்லுவனவற்றிலுள்ள குற்றங்களை நன்கு ஆராய்ந்து திருத்தி நல்லறிவுச்சுடர் கொளுத்துவீர்களென்று நான் நம்புகின்றேன்.

நான் ஒரு ஏரிக்கரைக்குச்சென்றேன். அங்கே பல பெண்கள் நீந்திக்கொண்டிருந்தார்கள். நானும் நீந்த விரும்பினேன். எனக்கு நீந்தத்தெரியாது. அங்கிருந்த ஒரு பெரியவள், பெண்மணியான தண்ணீரிலே நின்றுகொண்டு, தன்னிரு கைகளையும் அகலவிரித்து என்னுடைய சரீரத்தைத் தன் கைகளிலே அமரும்படியாகச்செய்வித்து என்னை நீந்தப் பழக்கினள்.

அங்ஙனமே இன்று நான் இந்தச்சைவ பெரியார் கூட்டமாகிய் பொய்கையைக்காண நேர்ந்தது. இப்பொய்கையில்



அறிவுடைய பெரியோர் தம்முடைய அறிவாகிய கைகளால் நீந்தி விளையாடக்கண்டேன். அங்ஙனம் கண்ட எனக்கு முன்னை ஞாபகம்வந்து தலைப்பட, எனது அறிவாகிய கைகளினாலே நீந்தி விளையாட யானும் ஆசைப்படுகின்றேன். அறிவுடையோராகிய நீங்கள் உங்கள் கருணைக்கைகளிலேந்தி என்னையும் நீந்தச்செய்வீர்களென்று பெரிதும் நம்பியுள்ளேன். இதனை நிறுத்தி எனக்குக்கட்டளையிட்ட இல் வாழ்க்கை என்னும் விஷயத்தைப்பற்றிச் சிறிது ஆராய்கின்றேன்.

## இல் வாழ்க்கை.

இல் வாழ்க்கை என்பது ஒரு ஆண்மகன், ஒரு பெண் மகளை வாழ்க்கைத்துணையாகச்சேர்த்துக்கொண்டு, அன்பும் அருளும் உடையவனாய், தன்னையும் மனைவி முதலிய மற்றவர்களையும் பாதுகாத்து, இன்பம் அனுபவித்து மகப்பேறுடையவனாய் வாழ்ந்து வருவதாம். இந்த இல் வாழ்க்கையைப்பற்றிப் பேசுமுன் வாழ்க்கை இன்னது என்பதைப்பற்றிச்சிறிது ஆராய்கின்றேன். ஒரு ஆன்மா இந்நில உலகத்தில் தூல உடம்போடு வெளிப்பட்ட காலந்தொட்டு, இவ்வுடம்பு நீங்கும்வரையில் செய்து வருகின்ற தொழிலின் தொகுதியை வாழ்க்கை என்று கூறுதல் பொருந்துமென்று நினைக்கின்றேன். இல் வாழ்க்கையை தனித்த வாழ்க்கை என்றும் கூட்டு வாழ்க்கை என்றும் இரண்டு பிரிவாக ஆராய்ந்து பார்க்கலாம். ஆன்றோர்கள் வகுத்த ஆச்சிரமங்கள் நான்கனுள் பிரமசரியமும் சந்நியாசமும் தனித்த வாழ்க்கையாகவும் கிரகஸ்தம் கூட்டு வாழ்க்கையாகவும் வானப்பிரஸ்தம் தனித்தும் கூடியும் வாழ்கின்ற வாழ்க்கையாகவும் எண்ணப்படலாம்.

“ தனித்தும் கூடியும் வாழ்வதற்கு ஒரு கருத்திருத்தல் வேண்டும். அந்தக்கருத்தாவது என்ன? அது இன்பம் தேடுதல் ஆகும். தனித்து இருந்து இன்பம் தேடினும் தேடுவர். எந்த வழியினும் இன்பம் தேடுதலே கருத்தாதலால், இன்பம் தேடுதற்குப் பலவழிகள் உளவாகலாம்.

அவ்வழியைக்கண்டவிடத்து அவ்வழியின்படி நடத்தல்
வேண்டும் நடந்து முடிந்தவிடத்துத்தேட நினைத்த இன்பத்
தின் பலனை அனுபவித்தல் வேண்டும் ஆகையால் வாழ்க்
கையை (கருத்து, நெறி, முயற்சி, பயன்) என்னும் நான்கு
வாயிலாகச் சோதித்துப் பார்க்கின்றேன். அவற்றுள் கருத்தா
வது எல்லா தேசத்தவருக்கும், எல்லா ஜாதியாருக்கும், எல்
லாச் சமயத்தவருக்கும் பொதுவாகச்சொல்லுமிடத்து, ஆனந்
தம் அல்லது இன்பமாகவே முடியும். இந்த இன்பமும் துன்
பங்கலவாதிருத்தல் வேண்டும். இன்னும் அஃது எப்பொழு
தும் நிலைத்ததாகவே இருத்தலும் வேண்டும். இப்படி இன்
பந்தேடுதற்கு வந்த அவசியம் என்ன? ஆன்மாக்கள் எப்பொ
ழுதும் மலத்தில் கட்டுண்டு தடைப்பட்டிருப்பதாகக் காணப்
படுகின்றன. எப்பொழுது ஆன்மாக்கள் தங்களைத் தடைப்
பட்டிருப்பதாகக்கண்டதோ, அப்பொழுதே அது தனக்குச்
சுவாதீனமில்லையென்றும் கண்டு கொள்கின்றன. இங்ஙனம்
சுவாதீனமில்லாதிருத்தலால், தாம் நினைத்தவழி செல்ல முடிய
வில்லை. ஆகையால் தாம் துன்பமடைகிறதாக நினைத்துக்
கொண்டு, அந்த துன்பத்தை நீக்க சுவாதீனம் வேண்டுமென்
றும் நினைக்கின்றன. இறைவன் திருவருளால் சுவாதீனம்
வந்துவிடின் ஆன்மாக்களுக்கு இன்பம் வந்து விடுகிறது. ஆகை
யால் இந்தச்சுவாதீனத்துக்கு இடையூறாக நிற்கின்ற ஆணவ
மலக்கட்டை ஒழிக்க முயற்சிக்கின்றன. பார்க்கும்பொழுது
தம்மால் அந்த ஆணவக்கட்டை நீக்கிக்கொள்ள சக்தியற்றதாக
இருக்கின்றன. அப்பொழுது தம்மிடத்திலுள்ள ஆணவத்தை
நீக்குவதற்கு தம்மினும் அதிக வல்லமையுள்ள ஒரு இறைவனு
டைய கருணையை அபேக்ஷிக்கின்றன. இறைவன் எந்த வழி
யில் இந்த ஆணவமலத்தை நீக்க வழி செய்திருக்கின்றானோ
அந்த வழியிலே நின்று இந்த மலத்தை நீக்க முயற்சி செய்ய
வேண்டும். இறைவன் இந்த ஆணவ மலத்தைப்போக்க மற்
றொரு மலமாகிய மாயா மலத்தை இயைத்து அதனால் தனு
கரண புவன போகங்களைக்கொடுத்து ஆணவமலத்தின் வலி
யைக் கெடும்வண்ணம் கருணை செய்துள்ளான். இங்ஙனம்



ஏற்பட்ட இந்த உடம்போடுகூடிய இல்வாழ்க்கை நமக்குக்
கிடைத்தது. இதனால் நாம் அடையும்பேறு, மலநீக்கமும்
இன்ப ஆக்கமுமேயாம். மல நீக்கமெனினும் துன்ப நீக்கமெ
னினும் ஒன்றேயாம். இனித்துன்ப நீக்கமும் இன்ப ஆக்க
மும் ஒரே நிலையாகக்கொள்ளலாகுமோ, வெவ்வேறு நிலையாகக்
கொள்ளலாகுமோ, என்பதைச்சிறிது ஆராய்வேன். இதனை
ஒரு உதாரண முகத்தால் விசாரிக்க முயலுகின்றேன். நம்மு
டைய உடம்பில் முக்கியமான அங்கமாகிய கண்ணை எடுத்துக்
கொள்வோம். கண்ணில் நோய் வந்தவிடத்துக்கண்ணில் வலி
உண்டாகிறது. இந்த வலியைப் பொருக்கமுடியாது அதனைப்
போக்க முயலுகின்றோம். எப்படியெனில், வைத்தியனுடைய
சகாயத்தைக்கொண்டு சிகிச்சை செய்யப்பெற்று வலி ஒருவாறு
நீங்குகிறது. இந்த வலி நீக்கமே நமக்குத் திருப்தியைத்தரு
கிறது. இது துன்ப நீக்கமும் ஆகின்றது. இனிச்சாதாரண
மாகச்சம நிலையில் இருந்த கண்ணை ஒரு அற்புதக்காக்ஷியின்
எதிரே நிறுத்தியைப்போம். இந்தக்கண் ஒரு பெரிய ஆனந்
தத்தை அடைகிறது. அந்தக்காக்ஷியில் இருக்கும்வரை ஆனந்
தம் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. அந்தக்காக்ஷி நீங்கிய
இடத்து ஆனந்த உணர்ச்சி நீங்குகிறது. கண் முன்னிருந்த
சமநிலை யெய்தியதேயல்லாமல், காக்ஷி நீக்கத்தால் கண்ணுக்கு
வந்தெய்திய துன்பம் ஒன்றுமில்லை. இந்த உதாரணத்தால்
துன்பநிலையொன்றென்றும், இன்ப நிலையொன்றென்றும் இன்
பமும் துன்பமும் நீங்கிய சமநிலையொன்றென்றும், நமக்குப்
புலப்படுகின்றது இருந்துவருத்துகின்ற துன்பமும் வேண்
டாம் வந்துபோகும் இன்பமும் வேண்டாம். இன்பதுன்ப
மில்லாத சமநிலை ஒன்றை, அடையபெறுதலே. வாழ்க்கையின்
அதிரகசியமான கருத்தென்பது பெரியோர்கொண்ட கொள்
கையாம். அங்ஙனமே, யானும் அக்கொள்கையைக்கடைப்
பிடித்து இங்கு சிறிது சொல்ல நினைக்கின்றேன். இந்த இடத்
தில் (கிறிஸ்தவருக்கு ஆதாரமாகிய விவிலிய நூலுள்) ஆதியாக
மத்தில் கூறியுள்ள நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனி
யைப்புசியாதே, என்று ஆதாமுக்குக்கட்டளையிட்ட [illegible]
[illegible]

யையும் இங்கு கவனிக்கத்தக்கது. இந்த இருவினையொப்பு என்னும் விஷயமாக இங்கே, குறித்த நன்மை தீமை அறியதக்க மரத்தைப்பற்றி இப்பொழுது நமக்கெல்லாம் தலைமை வகிக்கும் அக்ராசனாதிபதியவர்கள் எழுதியுள்ள, (Studies in Saiva Sithantha Philosophy) என்னும் ஆங்கில நூலில் விரித்துக் கூறியுள்ளார்கள். ஆண்டுக் கண்டுகொள்க.

## வாழ்க்கையின் நெறி.

ஆன்மாக்கள் எப்பொழுது, துன்பத்தில் கட்டுப்பட்டதாக காண்கின்றனவோ, அப்பொழுதே அத்துன்பத்தை நீக்கும்வழி இன்னதென்றுதேடுகின்றன. தாமே ஒவ்வொரு வழியையும் தேடித்தேடி எந்தவழி தனக்குப்பொருத்தமாகுமென்று தெரிந்துகொள்வதில் காலம் வீண்போகின்றது. ஆதலால் தனக்கு முன் இந்நிலவுலகத்தில் உடம்போடு காணப்பட்ட ஆன்மாக்கள் தாங்கள் சென்று சென்று அனுபவித்த, நெறிகளையெல்லாம் பின்னேவந்த நம்மனோர்க்கு எழுதி வைத்திருக்கின்றபடியால் அந்த வழியிலே பொருத்தமானவைகளைத் தெரிந்துகொண்டு அதன்படி ஒழுகுதலே தகுதியென்றுதோன்கிறது.

எல்லாதேசத்திலும் கஷ்டமடைந்த ஆன்மாக்கள் பலவுள அவர்களெல்லாரும், கஷ்டத்தை நீக்கும் வழிகளென்று எழுதி வைத்தவழிகளும்பல, அவைகளுள், நமக்குப்பொருத்தமானவைகளும் சில காணப்படும். சில ஆன்மாக்கள் தாங்கள் தாங்கள் கண்டவழியே உறுதியான வழியென்றும் நினைப்பது சகஜந்தான். அதைத்தவிர, வேறுவழி இல்லையென்றும் பிசால்லக்கேட்கின்றோம். ஆன்மாக்களும் பலவாதலால், வழிகளும் பலவாகும். எந்தவழி, எந்த ஆன்மாவுக்குப் பொருத்தமாகக் காணப்பட்டதோ அந்த வழியில் விசுவாசம்வைத்து அதையே தனக்கு உறுதிபயக்கும் வழியாகத் தெரிந்து நடந்துகொள்வது முறையாம் எல்லா தேசத்திலும் உள்ள, பொதுநோக்கமுடையவர்களுக்கு வழிகளும் பொதுவில்லாகவேதோன்றும்



ஆதலால் சாதாரணநிலையில் இருக்கும் ஆன்மாக்கள் சமீபத்தில் தமக்கு நல்லனவாகக் காணப்பட்ட நெறிகளைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டியதே அவசியமாகுமென்று தோன்றுகின்றது.

## வாழ்க்கையின் முயற்சி.

மேற்கூறியபடி ஆன்மாக்கள் எந்த வழியைக் கண்டதோ அந்தவழியிலே துணிந்துநிற்றல்வேண்டும் துணிந்தபின்னர் வழிகளை விட்டு விலகுதல் இழுக்காகும்.

> "எண்ணித் துணிக்கருமம் துணிந்தபின்
> எண்ணுவமென்பவதிழுக்கு"

என்னும் பொய்யில் புலவர் வாக்கும் நோக்கத்தக்கது. எண்ணியவழியில் விலகாது முயற்சிசெய்து வருதலே, முயற்சியின் பயனை அடைவதற்கு ஏதுவாகயிருக்கும். முயற்சிசெய்ய இடையூறுகள் பல உளவாம். எவ்வகையான வரும்போதும் இடையூறுகள் வந்தபோதிலும், தங்களுடைய தொழிலிலேயே கண்ணுங்கருத்துமாக இருத்தலோடு, அதனால்வரும் சிரமத்தையும், கவனியாது முயற்சிக்கவேண்டும்

> "மெய்வருத்தம்பாரார், பசிநோக்கார் கண்டுஞ்சார்
> எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும்பாரார் அவமதிப்புங்கொள்ளார்
> கருமமே கண்ணாயினர்."

என்று பொரியோர் கூறியதும் நினைக்கத்தக்கது.

முயற்சிசெய்யும்பொழுதும் சோர்ந்துவிட்டு விடலாகாது
நினைத்தகாலத்தில் நினைத்தபடி பயனில்லையே என்று ஆத்திரப்
படுதலும் ஆகாது. முயற்சி திருவினையாக்கும், என்ற உறுதி
யில் நின்றுகொண்ட முயற்சியைக்கைவிடாது வருதல்வேண்டும்.

## விசித்திர விநோத விகட மகா சமுத்திரம்.

(முன் தொடர்ச்சி)

இதுவிவ்வாறிருக்க, டபக்கேஸ்வரரும், அபக்மகாமுனியும், அண்ணாசாமி ஊரில் இல்லையென்றதால், மிகுந்த சந்தோஷங்கொண்டு, தங்கள் இடங்களில் ஒருவித கவலையுமின்றி இருந்தார்கள். அன்று கோயிலிற் பிரதோஷதினமாகையாற் கூட்டங் கொஞ்சம் அதிகமாகவேயிருந்தது. கோயிற் காலமுஞ் சற்று முன்னேரத்திலேயே நடக்கலாயிற்று.

வெளியூர் சென்றிருந்த அண்ணாசாமி வெகு கவலையோடு ஓட்டோடியும் வந்து அதிவிரைவிற் தன் வாத்தியப் பையை யவிழ்த்து ஆப்தவொலி கிளப்பவே, சுவாமி திடுக்கிட்டு நடு நடுங்கி ஜனக்கூட்டத்திற்போக முடியாது, கோமுனைவழியே நுழைந்து, தேகம் வியர்க்கத் தோட்டத்தைக் கடந்து செல்லுகையில், அதே நாதங்கேட்டு திகிலடைந்த அபக்முனியுங் கதிரவன் முன் பனியாய்ப் பறக்கக்கடைசியில், சுவாமியைக்கண்டு நமஸ்கரித்து, அவர் தேகங் கிடுகிடுப்பதைப் பார்த்துக் காரணம் வினவ, சுவாமியும் முனியோடி வந்தவாறேயெனக்கேட்ட முனிக்குத், தாங்கயாட்டாத கோபம்பிறக்கக் கடவுளை நோக்கி "அந்த அண்ணாசாமியை ஒரே அறையாயறைந்து, தூக்கியெங்கேயாகிலும் எறிந்துவிட எனக்கு உத்தரவளிக்க வேண்டுகிறேன்" என, தயாபரமூர்த்தியான டபக்கேஸ்வரர், "அவனைக் கொல்லக்கூடாது; ஒருவிதமான தொந்திரவுஞ் செய்யக்கூடாது; அவனை பக்தியிற் பெருத்தவன்; அவனை நட்டளைப்படி நடப்பவன்; கோபமேயில்லாதவன்; பிறர்க்குத் தீங்கிழைக்காதவன்; பொய், கபடு முதலியவைகளை விலக்கியவன்; பொதுவாய் நல்லவன். அயலூர் போய் வரமுடியாதென நினைக்காது பக்திப்பெருக்கால் சமயத்தில் வந்துவிட்டவன். அவனை சரியான ஊழியன். அவன் துன்புறக்கூடாது" என்று சொன்னார்.



அதற்கு முனி, சுவாமியை மறுபடியும் வணங்கி, "ஐயனே! தினமிப்படி, அவன் நம்மிருவரையும் ஓடச்செய்கிறனே! அவனையொழித்தாற்றானே நம் கவலை நீங்கும்! அவனுக்கோ அல்லது அவன் வாத்தியத்திற்கோ பயந்து எவ்வளவு காலம் இவ்வாறு கஷ்டப்படுவது" என்றார். உடனே கருணைக்கடலான டபக்கேஸ்வரர், "அன்பனைத் துன்பத்திற்காளாக்காது இன்பத்தை ஈய்ந்து, நமதெண்ணத்தைப் பூர்த்திசெய்துகொள்ள ஓர் வழியுண்டு அதன்படி நடப்பதே உசிதமாகும். ஆதலால், அவனுக்கு வேண்டிய பொருளைக்கொடுத்து அவன் ஆயுதத்தைத் தொட்டு வாசிக்கவேண்டாமென்று, அவனைக் கேட்டுக்கொண்டால், அவனும் அவ்விதமே நடப்பான் என்பதிற் தடையிராது. நாமும் ஓடவேண்டிய அவசியமவ்வளவில்லை. இது நமக்கும் ஓர் பெருங்காரியமல்ல. ஆதலால், சீக்கிரம் இதற்கோர் நல்வழி தேடவேண்டும்" என்று சொல்லி முடித்தார். முனியும் அவ்விதமே செய்வதாய்க்கூறி, நேரமும் அதிகமானதாலும், அண்ணாசாமி வாத்தியச் சத்தமிதற்கிடையில் நின்றுவிட்டதாலும், இருவருந் தங்கள் இருப்பிடஞ் சேர்ந்தனர்.

அன்று இரவு நமது கதாத்தம்பி வழக்கப்படி சேவித்து சில பிரசாதங்களையும் பெற்று வீட்டிற்கு புறப்பட்டான் வழியிற் கண்டார், சுவாமி சொற்படி கேட்டுநின்ற; அந்த அபக் மகாமுனி தன் உருவத்தை வெளிப்படுத்தினர்.

அவரைக்கண்டதும் நமது அண்ணாசாமி பயந்த பயத்திற்கு அளவு ஏதேனுமுண்டென யாருஞ்சொல்லார். அவன் அப்போது உளம்பதறி, "ஐயோ, எனது கையிலேந்திப்போகும் அன்னத்திற்கல்லவா அபாயம் வந்துவிட்டது. என்னைக் கொன்றாலும் பெரிய காரியமல்லவே. பிள்ளை, குட்டிகள் கதியாதாகுமோ! ஹா டபக்கேசா! இவ்வரிய ஆபத்தினின்று நீக்கிவைக்கவேண்டியது உன் கடனன்றோ! உனக்கு யான் செய்த தப்பிதமொன்றுமிலையே! இன்று சாயங்காலங்கூட

வளவு வேகமாய்ப்புறப்பட்டு வந்தேன்! இவ்வெல்லாம் நீயறி யாயோ! எனக்கு வேறு துணையாரேனுமுண்டெனக்கருதினே னில்லையே! இப்போது என்னைக்காப்பாற்றவேண்டியதும் உன் கடமையேயாதலால் எல்லாப்பாரத்தையும் உன்மேலே போட்டு விட்டேன். இனி நீ என்னை இரட்சித்தாலும் பட்சித்தாலும் மனங்கலங்கேன். எத்தனையோ நாட்களாய் இக்கோயிலி லேயே ஊழியஞ்செய்து முன்னருள் கிட்டாதோ! கருணைக் கடலே! நான் வேறு யாரை நினைப்பேன்! எல்லாம் உன் வல் லமையே! என்று உரத்த குரலோடும் பலவிதமாய் ஸ்தோத்த ரிப்பதை முனி கண்டு தன் கோரரூபத்தையடக்கி மெதுவாய் அண்ணுசாமி முன் சென்று அன்பனே! இன்று முதல் நீ உன் வாத்தியத்தைத்தொடாதே என அவன் முனியின் றணிக்காலில் விழுந்து கைகட்டி வணங்கி நின்று தேகம் திடுக்கிட்டு நடுங்க வாய் பொத்தி, வேறு யாதொன்றுஞ் சொல்லத்தோன்றாதவ னாய் உயிரோடு கூடியதோர் பிணம்போல் வாய் திறவாது நின்றான்.

அப்பொழுது அந்தமுனி "அண்ணுசாமி! நீ யாதொன் றுக்கும் அஞ்சவேண்டாம். உனக்கு வேண்டிய பொருளை நானே தருகிறேன். நீ டபக்கேஸ்வரர் மீதுகொண்ட பக்தி யின் பலன் ஒருவாறு விசேஷமாய்க் கூறத்தக்கதே.

ஆனால் உன் வாத்தியம் மாத்திரம் இனி வெளிப்படக்கூ டாது. வாசித்துக் காட்டவுங்கூடாது. இவைகளை நீ உறுதி செய்துகொண்டால் உனக்கு ஒருபோதுங் குறைவில்லை என்று சொல்லவே அண்ணு ஒருவாறு மனஞ்சிறிது துணிந்து ஐயனே! எனக்கெப்படிப்பொருள் கிடைக்கும்? கிடைத்தால் தங்களிஷ் டம்போல் நடப்பேன். இது உண்மை என்றான். உடனே மாமுனி சந்தோஷித்துப்பொருள் சேகரித்துக் கொடுக்கும் வகையை யுரைக்கலானார். அண்ணுசாமியும், டபக்கேசன் மேலேயே [illegible]த்தையும், மனத்தையும் நாட்டி நிர[illegible]

162013